
உன்னை
நேசித்தேன்
ரேவதி அஷோக்
நேசித்தேன் ✻ ரேவதி அஷோக் ✻
RA1
உன்னை
நேசித்தேன்
ரேவதி அஷோக்

## நூற்பதிப்பு

நூல் தலைப்பு : பூவே உன்னை நேசித்தேன்
ஆசிரியர் : ரேவதி அஷோக்
உரிமை : ஆசிரியருக்கு
பக்கங்கள் : 256
முதற்பதிப்பு : டிசம்பர் 2012
வெளியிடுவோர் : நித்திலா பதிப்பகம்
தாளின் தன்மை : 11.6 Kg வெள்ளைத்தாள்
கணினி அச்சு : சிருஷ்டி லேசர்
அச்சிடுவோர் : பாரதி அச்சகம்

Title : Poovey Unnai Nesithen
Author : Revady Ashok
Language : Tamil
First Edition : Dec - 2012
Published by : Nithila Publications
**Distributed by : Subam Publications,**
15, Manigandan 5th Street,
Old Washermenpet,
Chennai - 600 021.



© All Rights Reserved. This book or parts thereof, may not be reproduced in any means, electronic or mechanical, including photocopy, recording or any information storage and retrieval system now known or to be invented, without written permission from the author & publisher.


**விலை : ₹.110/-**

## பதிப்புரை

தமிழ் வாசக நெஞ்சங்களுக்கு, இளம் எழுத்தாளர்களின் வரிசையில் **திருமதி.ரேவதி அஷோக்** அவர்களை அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறோம்.

இந்த புதினத்தில் தாயும் மகளுமாக வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருப்பதை காண்கிறோம். அவர்கள் வாழ்க்கையில் காதல் என்ற விதியின் வலிய கரங்களால் இழுத்து செல்லப்பட்டதை இனிய திருப்பங்களுடன் எளிய நடையில் சுபமான முடிவுடன் படைத்திருக்கிறார்.

**"பூவே உன்னை நேசித்தேன்"** என்ற நாவல் மூலமாக உங்களின் நெஞ்சத்தை கொள்ளை கொள்ள வந்திருக்கிறார்.

உங்களின் மேன்மையான கருத்துக்களை பகிர்ந்து கொண்டு, அவரை ஊக்குவித்து அவரின் திறமையை மேலும் வெளிக்கொணர உதவுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் அவரது முதல் படைப்பை உங்களுக்கு அளிப்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

பதிப்பகத்தார்.

# பூவே உன்னை நேசித்தேன்

## 1

''கௌசல்யா சுப்ரஜா ராம பூர்வ
சந்த்யா ப்ரவர்த்ததே
உத்திஷ்ட நரசார்தூல கர்த்தவ்யம்
தெய்வ மஹ்நிகம்...
உத்திஷ்டோ உத்திஷ்ட கோவிந்தா
உத்திஷ்ட கருடத்வஜ
உத்திஷ்ட கமலா கந்த த்ரிலோக்யம்
மங்களம் குரு... ''

என்ற பாடல் ஹாலை கடந்து அவளுடைய அறைக்குள் மிதந்து வர, தூக்கம் கலைந்த மதுவதனா இரண்டு உள்ளங்கைகளையும் பார்த்துக்கொண்டே கண்ணைத்

திறந்து மூன்று தரம், ''ஈஸ்வரா..'' என்று முனகிக்கொண்டே, படுக்கையை விட்டெழுந்து ஏசியை நிறுத்திவிட்டு அறையின் ஜன்னல் கதவுகளை திறந்ததும் சூரியக் கதிர்கள் அவளின் அனுமதி இல்லாமலே அறைக்குள் சுதந்திரமாக நுழைந்தது.

கைகளை உயர்த்தி சோம்பல் முறித்துக்கொண்டே ஜன்னல் வழியாக தோட்டத்தில் மலர்ந்த மலர்களை ரசித்துவிட்டு வெளியே வந்தவளுக்கு, வீட்டையே நிறைத்துக் கொண்டிருந்த வெண்பொங்கலின் மணம் பசியை தூண்டிவிட தாயைத் தேடி சமையலறைக்கு சென்றாள்.

பின்னாலிருந்து அவர் கழுத்தை கட்டிக்கொண்டு, குட் மார்னிங் மஞ்சு... என்றாள் கொஞ்சலாக.

கை சமையல் வேலையில் மும்முரமாக இருந்தாலும் அவரின் உதடுகள் தன்னிச்சையாக சுபிரபா தத்தை முணு முணுத்துக்கொண்டிருக்க, மகளின் அழைப்பில் திரும்பியவர், ''என்ன மது, இப்பொழுதுதான் எழுந்தாயா? மணி என்ன ஆகுது தெரியுமா? காலேஜுக்கு போக வேண்டாமா? ஓடு ஓடு சீக்கிரம் குளிச்சிட்டு வா'' என்று அவளை விரட்ட,

அவரின் கழுத்தை விடாமல் பிடித்துக் கொண்டிருந்தவள், ''இன்றைக்கு காலேஜில் கல்சுரல்... அதனால் போகவேண்டிய அவசியமில்லை. சரி உனக்கு இன்றைக்கு காலேஜிருக்கா...?'' என கேட்டுக்கொண்டே சமையலறை மேடை மீது தாவியமர்ந்தாள்.

''என்னடி இது எப்பொழுது பார்த்தாலும் பேரை சொல்லியழைத்துக்கொண்டு...'' என்றார் அதட்டலாக.



அவரின் அதட்டலை காதில் போட்டுக்கொள்ளாமல், "நாங்கலெல்லாம் பேர் சொல்லும் பிள்ளைகளாக்கும்'' என்று லேசாக கண்ணடித்து அவளின் சிவந்த ரோஜா மொட்டு போன்ற உதட்டை சுழித்து, நீல நிறக்கண்களை உருட்டி சொன்னாள்.

மகளின் அழகில் சொக்கி..., இருந்த மெல்லிய கோபம் கூட பஞ்சாய் பறந்தோட, மனம் அவருடைய கணவரின் நினைவில் நழுவியோடியது.

சுருள் முடியும், நீல கண்களுமாக ஒரு வித்தியாச அழகோடு இருந்த ராஜேஷ்வருக்கு ஒரு சாதாரண வாத்தியார் வீட்டு பெண்ணான மஞ்சுவை பிடித்துப்போக, தான் பாரம்பரியமிக்க ராஜ குடும்பத்தை சேர்ந்தவன் என்பதை மறந்து பெற்றவர்களின் எதிர்ப்பை மீறிக் கைபிடித்தார்.

அவருக்கு அவர்களால் ஏற்பட்ட தொல்லைகளையும், கஷ்டங்களையும் தாங்க முடியாமல் கேரளாவிலே தங்கள் வாழ்க்கையை தொடர விருப்பமில்லாமல், சென்னைக்கு குடிபெயர்ந்து தனக்குத் தெரிந்த உரத்தொழிலை தொடங்கி வெற்றிகரமாக நடந்தி வந்தவரை இரண்டு வருடத்திற்கு முன் ஒரு கார் விபத்து பலி வாங்கிக்கொண்டது.

கணவருக்குப் பிறகு தொழிலை நடத்த முடியாமல் அதைக் கைமாற்றி அதில் கிடைத்த பணத்தை மகளின் பேரில் டெபாசிட் செய்ததோடு நில்லாமல், தான் படித்த படிப்பிற்கு கல்லூரி

விரிவுரையாளர் வேலையை தேடிக்கொண்டவர் மகளின் உருவில் கணவரை பார்த்து வாழ்ந்துக் கொண்டிருக்கிறார் .

'மஞ்சு...'' என்ற மகளின் அழுத்தமான குரலில் பழைய நினைவுகளிலிருந்து கலைந்து. ' சரி நீ போய்க் குளிச்சிட்டு வா... எனக்கு காலேஜுக்கு நேரமாச்சு...' என்று அவசரப்படுத்த, அதைக் காதிலேயே வாங்காமல் வெங்காயத்தை தூக்கிப் போட்டு விளையாடிகொண்டே,

''மஞ்சு, நீயும் இன்றைக்கு காலேஜ் மட்டம் போட்டுடேன்... இரண்டு பேரும் எங்கேயாவது வெளியில் போயிட்டு வரலாம் , ப்ளீஸ் '' என்று அவரின் தோள்பட்டையைப் பிடித்துக் கொண்டு கொஞ்சினாள்.

''ஐயோ இன்றைக்கு நிச்சயமா முடியாதுடா ... ஒரு முக்கியமான லெக்சர் இருக்கு். நான் நேற்றே என் மாணவிகளிடம் கட்டடிக்கக் கூடாது என்று சொல்லிய நானே அதைச் செய்யலாமா...?'' என்றார்.

'நீயும் நானும் காலேஜ்..., லேக்சர் என்று பிசியாகிவிடுகிறோம். இருவரும் சேர்ந்து வெளியே போயே ரொம்ப நாளாகுது...' என்று முனகியவள், 'இப்பொழுதெல்லாம் நீ என் பேச்சை கேட்கறதேயில்லை '' என்று அலுத்துக் கொள்பவளை புன்னகையுடன் நோக்கினாள்.

''இப்போ உனக்கு வெளியே போகணும் அவ்வளவுதானே...? மதியம் பர்மிஷன் போட்டுவிட்டு வருகிறேன். ரெண்டு பேரும் வெளியில் போகலாம்...' என்றார்.



'ஹையோ...! இப்போ தான் நீ என் செல்ல மஞ்சும'' என்று துள்ளி குதித்தவள், ' இன்றைக்கு நீ சமைக்காதே... நான் சமைத்து வைக்கிறேன்... நீ வந்து ஒரு பிடி பிடி என்ன...' என்ற மகளை உதட்டில் உறைந்த புன்னகையோடு வாஞ்சையாக பார்த்தார்.

''உனக்கு ஏண்டா சிரமம். ஏதோ ஒரு நாள் தான் லீவ் வருது. அதையே ஏன் வேலை செய்து கஷ்டப்படுகிறாய். ஏதாவது புக்ஸ் படி, நல்ல மியூசிக் கேளு, அப்படியும் போரடித்தால் உன் டான்ஸ் கிளாசில் சொல்லித் தந்த அடவுகளை ஒரு தரம் ப்ராக்டீஸ் செய்'' என வாஞ்சையாக சொல்வதைக் கேட்டு, மது தன் தெற்றுப் பல் தெரிய சிரித்தாள்.

'மஞ்சு, நீ சீரியஸா எடுத்துக்காதே... ஒரு நாளாவது உன் சமையலிலிருந்து தப்பிக்கலாம் என்ற ஐடியா தான்...' என்று கண்ணடித்து சிரித்துவிட்டு பாட்டை முணுமுணுத்துக்கொண்டே துள்ளியோட, அவளின் கேலிக்கு புன்னகைத்து விட்டு சமைத்தவற்றை டேபிள் மீது அடுக்கினார்.

குளித்து விட்டு புத்தம்புது மலராக வந்த மகளுடன் அமர்ந்து அரட்டை அடித்தபடியே சாப்பிட்டு முடிந்ததும், மகள் கன்னத்தில் முத்தமிட புன்னகையோடு விடைபெற்று சென்றார்.

மது தனக்கு பிடித்த ஹிந்தி பாடல்களை சிடியில் வழிய விட்டு எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து மதியத்திற்கும் சமைத்துவிட்டு டிவி முன்னால் அமர்ந்தவளுக்கு சிறிது நேரத்திலே போரடித்துவிட, பரத நாட்டிய வகுப்பில் கற்றுக்கொண்ட அடவுகளை

ஆடி பார்த்துக்கொண்டிருந்தவளை காலிங் பெல் அழைத்தது.

கல்லூரி விட்டு தாய் திரும்பியிருப்பதைக் கண்டு ஓடிப் போய் கதவை திறந்தவளின் முகத்தில் பூத்திருந்த வியர்வையை மஞ்சு முந்தானையால் துடைத்து, "டான்ஸ் ப்ராக்டிஸ் செய்தியா மது...?'' என்றவருக்கு புன்னகையுடன் தலையாட்டிவிட்டு மீண்டும் ஆடிக்காட்ட, ஒவ்வொரு அடவுகளிலும் தேவையான நவரசங்களை கொண்டு வந்து அசத்தியவளை கண்டு பூரித்துப்போனார்.

ஆடி முடித்ததும், "ரொம்ப நல்லா இருக்குடா..." என்றவர் அதோடு நில்லாமல் 'உன்னால் மட்டும் எப்படி எந்த டாபிக் எடுத்தாலும் அதை தீர்க்கமாக, தெளிவாக பேச முடிகிறது... அதே போல் எதிரெதிர் துருவங்களான கர்நாடிக் இசையையும், வெஸ்டேர்ன் இசையையும் ரசிக்கிறாய்... இதெல்லாம் எனக்கு உண்மையில் ஆச்சரியமான விஷயங்கள்..." என்று சிலாகிக்க சிறு புன்னகையோடு ஏற்றுக்கொண்டாள்.

"ஓகே மஞ்சு செவிக்கும் கண்ணுக்கும் உணவு கொடுத்தாச்சு, இப்போது வயிறுக்கும் கொஞ்சம் கொடுப்போம்... வா பசிக்குது'' என்று அவசரப்படுத்த, புன்னகையோடு சாப்பிட அமர்ந்தவருக்கு சாப்பாட்டில் கவனம் செல்லாமல் மனம் இன்று கல்லூரி முகவரிக்கு வந்த கடிதத்தில் உழன்றுக் கொண்டிருந்தது.

மகள் கவனிக்கும் முன் முகபாவத்தை மாற்றிக் கொண்டு சாப்பிட்டு முடிந்ததும் இருவரும் வெளியே செல்ல , புத்தகக் கண்காட்சியை கண்டதும் உள்ளே



நுழைந்து அவளுக்கு பிடித்த புத்தகங்களை வாங்கி குவித்ததும், அடுத்த மாதம் வரப்போகும் அவளின் பிறந்த நாளுக்காக டிரஸ் எடுக்க ஆர்.எம்.கே.வி சென்று டார்க் ரெட் வித் பர்பிள் சில்க் சுரிதாரை தேர்வு செய்தார்.

மதுவும் புடவை செக்ஷனில் தாய்க்காக செலக்ட் செய்துகொண்டிருப்பதை கவனித்துவிட்டு, 'இன்று எப்படியும் கடித விஷயத்தை பற்றி பேசிய ஆகணும், மதியமே என் முகம் சரியில்லை என்று யூகித்தவள் அனேகமாக கேட்பாள் என்று நினைக்கிறேன்... அப்படிக் கேட்டால் மனதிலிருக்கிற பாரத்தை இறக்கிவிடலாம்' என்று யோசித்தவராக நிமிர, சிறிது தூரத்தில் மதுவுக்கு நேரெதிராக ஒருவன் அலட்சியமான முகபாவத்தோடு உதட்டில் குறுஞ்சிரிப்போடு மதுவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

உயரமாக, அவன் அணிந்திருந்த நேவி சில்க் ஷர்ட் வித் மணல் வண்ண பேண்ட் அவனின் சந்தன நிறத்தை இன்னும் தூக்கி காட்டியது. வசீகரமும், கம்பீரமும் நிறைந்திருந்தவனை மஞ்சுவின் பார்வை அளவெடுத்தாலும் அந்த முகம் மிகவும் பரிச்சயமானதாகவும் இருக்க அவரின் மூளை அவசரமாக யோசிக்க ஆரம்பித்தது.

மதுவின் இதழ்கள் மெலிதாக, "நா நா கருத்தே ப்யார் ஹை மே கருகயே... கருகயே'' என்று ஹிந்தி பாட்டை முணுமுணுத்தபடியே அந்த இடத்தை சுற்றி சுற்றி வர, மெலிதாக பாடினாலும் அவளது குரலின் இனிமையில் தடுமாறிப் போக அவளையே விழுங்கிவிடுவது போல பார்த்துக் கொண்டிருந்தான்.

மஞ்சு அவசரமாக அவனிடமிருந்து பார்வையை விலக்கி மதுவை கவனிக்க ‘கண்டம்போரரி ஜியோமெட்ரிக் வொர்க் செய்த மயில் வண்ணமும் கோல்ட் கலரும்’ கலந்த சுரிதார் எடுத்துப் பார்த்து, "ம்ம் ஸோ பியுட்டிபுல்...'' என்று ரசனையுடன் முனகிவிட்டு எடுத்த இடத்திலே வைத்துவிட்டு வேறு ஆடையை பார்க்க நகர்ந்த மது எதேச்சையாக நிமிர, தாய் தன்னையே பார்த்துகொண்டிருக்கவும் புன்னகையுடன் அவரருகில் வந்தாள்.

"போகலாமா..." என்றதும் இருவரும் காஷ் கவுண்டர் பக்கம் நகர, அவளின் நீல நிறக்கண்களும், சுருள் முடியும் அவன் மனதில் பசை போல ஒட்டிக்கொள்ள, அவனால் மதுவின் மேலிருந்த பார்வையை அகற்ற முடியாமல் தவித்தான்.

அவளின் முகத்திலிருந்த சாயல் உனக்கு நான் மிகவும் வேண்டியவள் என்று கூறாமல் கூற, அவனின் விழிகள் அவளையே ரசித்தாலும் மூளை என்னவோ இந்த சாயலை எங்கோ பார்த்திருக்கிறோம்...? எங்கே? என்று ஞாபக அடுக்குகளை துழாவிக் கொண்டிருந்தது.

காஷ் கவுண்டரில் கூட்டமாக இருந்ததால் மது ஒதுங்கி விட, மஞ்சுளா மட்டும் செலெக்ட் செய்த பொருட்களை நீட்டி பில் போட சொல்ல, அதே சமயம் இன்னொரு கையும் மது விரும்பிய சுரிதாரை நீட்டி அவசரப்படுத்த, யாரது என்று எரிச்சலாக திரும்பியவரின் விழிகள் மதுவை ரசித்தவனை கண்டதும் ஆச்சர்யத்தில் விரிந்தது.



''சீக்கிரம் பில் போட்டு வா மஞ்சு'' என்ற மதுவின் சிணுங்கல் குரலை கேட்ட வினாடி திரும்பிய அந்த உயர்ந்தவனின் பார்வை அவளின் மேல் மீண்டும் சுவாரசியமாக படிந்தது.

# 2

பில்லை கட்டிவிட்டு வெளியே வந்ததும் மகளை வண்டியில் அமர சொல்லிவிட்டு மீண்டும் உள்ளே சென்றவருக்கு மதுவின் பார்வை அவளை சீண்டலாக பார்த்ததாக தோன்ற சிறு புன்னகையுடன் அந்த புதியவனை தேடி சென்றவர் அவன் அங்கேயே நிற்பதை கண்டு ஒரு நிம்மதி பெருமூச்செழ, ‘மன்னிக்கவும் ...‘ என்றழைத்தார் சம்ப்ரதாயமாக.

காரில் காத்திருந்தவள், வண்டியை ஸ்டார்ட் செய்து கடையின் வாசலில் கொண்டு வந்து நிறுத்தி, தாய் அந்த புதியவனுடன் எதையோ சீரியசாக பேசுவதை கண்டு என்னவாக இருக்கும் என்று யோசித்துக்கொண்டிருந்தாள்.

மஞ்சு விடுவிடுவென்று வந்து வண்டியில் ஏறி தன்னை ஆசுவாசபடுத்திக் கொள்வதை குறுகுறுவென்று பார்த்தவளின் இதழ்களில் சிறு சிரிப்பு மலர, வண்டியை எடுத்தாள் .

மஞ்சுவின் மனம் தற்காலிகமாக கடித விஷயத்தை விட்டுவிட்டு, கடையில் பார்த்தவனை பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது... பரிச்சயமான முகமாக

இருக்கிறதே... எங்கே பார்த்திருப்பேன்...? என்று ஞாபகமில்லையே... அவனின் பெயரும் நிறமும் கலரும் மலையாளி என்று பறைசாற்றுகிறதே...

'அப்படியே எனக்கு தெரிந்தவனாக இருந்திருந்தால் அவனின் பெயர் ராஜ பரம்பரையை சேர்ந்த மாதிரியல்லவா இருக்கவேண்டும்... இது அப்படியில்லையே' என்று குழம்பியவருக்கு விடை கிடைக்காமல், அலுத்து போனவர் மீண்டும் மனம் செக்குமாடாக கடித விஷயத்திலேயே வந்து நிற்கவும், எதுவும் பேசாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தவரை... மது ஆராயும் நோக்கோடு திரும்பி பார்த்ததை அவர் அறியார்

வீடு போய் சேர்ந்து சாப்பிட்டு படுக்கப் போகும் முன் வரை மது தன்னிடம் எதையும் கேட்காததால் நிலைகொள்ளா மனதுடன் தன்னறைக்கு சென்றவரை கவனித்துவிட்டு, வேண்டுமென்றே சிறிது நேரம் அலைபாய விட்டு அவரின் அறைக்குச் சென்று கட்டிலில் அமர்ந்தாள்.

''இப்போ சொல்லும்மா, உன் மனசில் எதுவோ இருக்கு. அதை சொல்ல தானே துடிக்கிறே...'' என்று கண்களில் ஒரு புன்னகையுடன் கேட்டதும், மதுவின் நேரடியான கேள்வியில் நெஞ்சு திடுக்கிட்டு கலவரத்துடன் நிமிர்ந்தவர், ஒரு முடிவோடு தயாராக வைத்திருந்த கடிதத்தை அவளிடம் கொடுத்தார்.

அதில் கண்களை ஓட்டிவிட்டு, 'இதிலென்ன இருக்கு...' என்று சர்வ அலட்சியமாக கேட்டாள்.



''இது உங்க பாட்டி, அதாவது உங்க அப்பாவின் அம்மா, அவர்களிடம் உன்னை ஒப்படைக்க சொல்லி அதிகாரமா கேட்டு இருக்காங்க. நீ என்னடாவென்றால் இந்த மாதிரி கேட்கிறாய்'' என்றார் அழாக்குறையாக .

கட்டிலிலிருந்து எழுந்தவள், "லுக் மஞ்சு... எனக்கு அவர்கள் யாராயிருந்தாலும் கவலையில்லை... உன்னை வெறுத்து ஒதுக்கியவர்கள் எனக்கும் வேண்டாம்... இதோடு இந்த பேச்சு அவசியமற்றது என்று நினைக்கிறேன்... தூங்கு..." என்று நிதானமாகக் கூறி அவரை படுக்க வைத்தவள், கழுத்துவரை போர்த்திவிட்டு கடிதத்தை சுக்கு நூறாகக் கிழித்து குப்பை கூடையில் போட்டுவிட்டு, "குட்நைட்'' என்று கதவை சாத்திக்கொண்டு சென்றாள்.

மஞ்சுவுக்கு மகளின் பிடிவாதத்தை நினைத்து கவலை ஏற்பட்டாலும் மனதின் ஓரம் சிறு நிம்மதி தோன்ற நிம்மதியாக உறங்கிப் போனார்.

முதல் நாளிலிருந்த மன உளைச்சல் காரணமாக அடுத்த நாள் எழுந்திருக்க நேரமாகிவிட, பதறியடித்து குளித்துவிட்டு சமையலறைக்கு சென்றார். அங்கே ஏற்கெனவே சமைத்துமுடித்து அவருக்கு பிளாஸ்கில் காபியும் தயார் செய்து வைத்துவிட்டு கல்லூரிக்கு சென்றுவிட்டிருந்த மகளின் சுறுசுறுப்பை மெச்சிக் கொண்டார். கடித விஷயத்திற்கு தீர்வு காணாமல் கல்லூரிக்கு போக பிடிக்காமல், லீவு சொல்லிவிட்டு மகளுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தார்.

மாலை கல்லூரியிலிருந்து திரும்பியவள் வீட்டில் தாயை கண்டதும் அவரின் உடல் நிலையை

விசாரித்தாள். முகம் கழுவி உடைமாற்றிக்கொண்டு வந்த மகளிடம் மீண்டும் கடித விஷயத்தை ஆரம்பித்தார்.

"அம்மா,அவர்கள் அன்புடன் என்னைப் பார்க்க வேண்டும் என்று கேட்டிருந்தால் ஒருவேளை இந்த கடிதத்தைப் பற்றி யோசனை செய்திருப்பேன்...ஆனால் அவர்களோ, ராஜ அதிகாரத்தை உன்னிடமே காட்டி, என்னை அனுப்ப சொன்னால் நான் எப்படி போவேன் என்று நினைத்தாய்? 'நோ வே..' எனக்கு உன்னை தவிர வேறு யாருமில்லை" என்று அழுத்தமாக கூறியவள் இடையிட்டு பேச முயற்சித்தவரை கையமர்த்தினாள்.

"இந்த டாபிக் போதும் ப்ளீஸ்..." என்ற பிறகு மேற்கொண்டு எதுவும் பேச முடியாமல் அமைதியானவரிடம், ஞாபகம் வந்தவளாக, "அம்மா, நீ யாரை பார்க்க திரும்ப கடைக்குள்ளே போனாய். நிச்சயம் உன் ப்ரெண்ட் யாரும் அங்கே இல்லையென்று மட்டும் எனக்குத் தெரியும்..." என்றாள்.

'ம்ஹீம்... இவள் கொஞ்சம் புத்திசாலியாக இல்லாமல் இருந்திருக்கலாம்' என்று சலிப்பாக நினைத்துக்கொண்டே, "என் பக்கத்தில் ஒருவன் நின்றிருந்தானே அவனை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே என்று அவனிடம் அவனின் பேரை கேட்க போனேன்" என்றவரிடம் குறும்பாக தலையை சரித்து பார்த்தாள்.

"சரி பேரை சொன்னானா அந்த வளர்ந்து கெட்டவன்?" என்று சற்று கேலியாக கேட்டதும், மஞ்சுவின் முகத்தில் தன்னையும் மீறி சிரிப்பு வர



"இதை எங்கேயிருந்து பிடித்தாய்" என்று கேட்டார் சிரித்துக் கொண்டே.

"ம்ம்ம்... சொன்னான்... முகுந்த் நெல்லிகாடன்... அழகா இருக்கில்லே" என்று அபிப்ராயம் கேட்டதும் , சிரிப்பை அடக்க முடியாமல் மது விழுந்து விழுந்து சிரித்தாள்.

"ஏய் மது சொல்லிட்டு சிரியேன்... என்று சிணுங்கியதும், "முகுந்த் நல்லாத்தான் இருக்கு. ஆனால் அதென்ன மஞ்சு..., வால் மாதிரி ஒரு நெல்லி காடன், மாங்காய் காடன், தென்னந் தோப்புகாரன் என்று ஒரு பெயர். இதற்கு வளர்ந்து கெட்டவனே நல்லாயிருக்கு" என்று மேலும் சிரிக்க, அவருக்கும் மகளின் சிரிப்பு தொற்றிக் கொண்டது.

"உண்மையில் சொல்ல போனால் இது பெயரே இல்லை. அவன் பெயர் வெறும் முகுந்த் தான். ஆனால் மீதி அவனுடைய குடும்பப் பெயராக இருக்கலாம். நாட்டாமையாகவோ, ஜமீனாகவோ இருக்கவேண்டும். நம்மூரில் ஜமீன் என்பதை கேரளத்தில் தரவாடு என்பார்கள். நெல்லிகாடன் என்றால் அங்கேயிருப்பவர் களுக்கு புரிந்துவிடும் அந்த குடும்பம் எந்தளவிற்கு பாரம்பரியம் மிக்கது...' என்று சொல்லிக்கொண்டே போக,

"தெரியாத்தனமாக கேட்டுவிட்டேன். எனக்கு அந்த ஊரும் தேவையில்லை... அதைப் பற்றி தெரிந்து கொள்ள ஆசையுமில்லை அவசியமுமில்லை. 'என்று பெரிதாக கையெடுத்துக் கும்பிட்டாள் மது.

# 3

ஆர்.எம்.கே.வி சில்க்கில் மதுவை பார்த்த முகுந்தால் அதன் பிறகு நிம்மதியாக இருக்கவே முடியவில்லை... ஒவ்வொரு நிமிடமும் மதுவின் முகமே அவன் கண் முன்னால் வந்து இம்சை செய்தது. பொதுவாகவே பெண்களைக் கண்டாலே நாலடி பின்னால் செல்கிறவன், இன்று அவளது ஒரே பார்வையிலே அவனது இதயம் அவளிடம் சரணாகதி அடைந்ததை எதிர்பார்க்காததால் மிகவும் தடுமாறிப் போனான்.

'ஒரு பார்பி டால் போலே இருந்தாளே அவள் பெயர் என்ன? எந்த ஊர்? அவளைப் பார்த்தாலே எனக்கேன் ஜென்ம சம்மந்தம் இருப்பது போல் தோன்றுகிறது? என்ன இது... இப்படி ஒரு தேவ கன்னிகை போல் வந்து காட்சியளித்து என்னை ஏங்க வைத்துவிட்டு சென்று விட்டாளே' என்ற எண்ண ஓட்டங்களிடையே தாத்தா விஷ்ணு பூபதியின் அழைப்பைக் கண்டதும் முகம் சந்தோஷத்தில் மலர நலம் விசாரித்தான்.

"அது சரி. நீ அங்கு போய் மூன்று நாளாகிறது. ஆனால் இதுவரை ஒரு போன் செய்யவே இல்லையே. வெளியூர் சென்றால் ஒரு நாள் கூட தவறாமல் போன் செய்வாயே... ஏன் இந்த தடவை இப்படி இருக்கிறாய்? போன இடத்தில் வேலை அதிகமா?" என கனிவாக



கேட்டவருக்கு பதில் சொல்ல முடியாமல் தடுமாறினான்.மனதில் பார்பி டாலின் நினைவே மீண்டும் மீண்டும் அவனை இம்சை செய்ய, மனதை ஒரு நிலைப்படுத்தி அவரது பேச்சை கவனிக்க முடியாதென்று தோன்றியதால் சுறுக்கமாக பேசி போனை வைத்துவிட்டான்.

'என்னாச்சு இவனுக்கு... இப்படி நறுக்கென்று பேசி வைத்துவிட்டான். இந்த மாதிரி அவன் பேசியதே இல்லையே? ஏதாவது மூட் அவுட்டா? பேரன் தனியாக போய் கஷ்டப்படுகிறானா? வேண்டுமென்றால் நாமும் போகலாமா?' என்று தோன்றிய அடுத்த வினாடியே, 'ச்சே... அவன் கில்லாடியாச்சே. அவனால் முடியாதது என்ன இருக்கு? இத்தனை வருடமாக அவன் தானே தொழிலை கவனித்துக் கொள்கிறான். அவன் என்ன சின்ன குழந்தையா? காலையிலிருந்து அலைந் திருப்பான் அதனால் டயர்டாக இருக்கிறான் போல்' என்று தனக்கு தானே சமாதானம் செய்துகொண்டார்.

அடுத்த நாள் வேலைகளை முடித்துக் கொண்டு ஊருக்கு கிளம்பியவன் சிக்னலில் தன் பக்கத்தில் வந்து நின்ற 'இன்னோவா' காரில் தாயுடன் சிரித்து பேசிகொண்டிருந்த மதுவை கண்டதும் விழிகள் பளிச்சிட அவளையே பார்த்துகொண்டிருந்தான். மகளிடம் பேசிக்கொண்டே எதேச்சையாக திரும்பிய மஞ்சுவிற்கு, முகுந்த் தன் பெண்ணையே கொஞ்சம் கூட திருட்டுத்தனம் இல்லாமல் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பதைக் கண்டு ஒரு நிமிடம் ஆச்சரியம் மேலோங்கியது. அடுத்த கணமே சுதாரித்தவள், ஒரு

தாயாக மாறியதில் அவர் பார்வையில் கடுமை குடியேறியது.

முகுந்த், மஞ்சுவை பார்த்து சிநேகமாக புன்னகைக்க, மஞ்சுவுக்கு சிரிக்கலாமா...? வேண்டாமா...? என்ற குழப்பமேற்பட்டது. பச்சை சிக்னல் விழுந்ததும் மது வண்டியை எடுக்க, அவளிடம் எப்படியாவது இன்று பேசிவிட வேண்டும் என்ற தீர்மானத்தோடு ஊருக்குப் போவதை தள்ளி போட்டுவிட்டு, அவர்களை பின்தொடர்ந்தவனை அம்மாவின் செல்போன் அழைப்பு குறுக்கிட்டது.

போனை எடுக்காமல் கவனமாக வண்டியை பின்தொடர்வதிலே இருந்தவனை, மீண்டும் மீண்டும் செல்போன் அழைத்தது. எரிச்சலுடன் ப்ளூ டூத்தை ஆன் செய்து பேசிக்கொண்டே காரை தொடர்ந்தான். அடுத்த ஒரு நிமிடத்திலியே அம்மாவின் பேச்சில் கவனம் ஈர்க்கப்பட்டதால் காரின் வேகம் தானாகவே குறைந்தது.

அடுத்து வந்த சிக்னலில் பச்சையிலிருந்து ஆம்பர் விழும்முன் மதுவின் கார் சீறிக்கொண்டு சென்று மறைந்தது. பின்னால் தொடர்ந்து வந்தவன் சிக்னலில் மாட்டிக்கொள்ள, எரிச்சலில் போனை ஆப் செய்துவிட்டு, "சே. அகைன் ஐ மிஸ்ட் ஹர்..." என்று ஸ்டியரிங் வீலில் கோபத்துடன் குத்தினான்.

காலையில் எதுவும் சாப்பிடாததால் பசி வயிற்றை கிள்ள, தற்காலிகமாக கோபத்தைத் தள்ளி வைத்துவிட்டு நல்ல ரெஸ்டாரெண்டிற்கு சென்று சாப்பிட்டுவிட்டு திரும்பிச் செல்லும் வழியில் ஸ்பென்சரின் உள்ளே



சென்றுகொண்டிருந்த மதுவை கண்டதும் அவன் உடம்பின் ஒவ்வொரு செல்களிலும் பூக்கள் மலர்ந்தது போல் இனிமையான ஓர் உணர்வு அவனை ஆட்கொள்ள அதே வேகத்தில் வண்டியை சடன் ப்ரேக் போட்டான்.

பின்னாலே வந்தவன் திட்டுவதை கூட பொருட்படுத்தாமல் ஒரு 'யு' டர்ன் எடுத்து ஸ்பென்சரில் வண்டியை நிறுத்திவிட்டு மின்னல் வேகத்தில் உள்ளே ஓடினான். ஒவ்வொரு மாடியிலும் உள்ள கடைகளில் அவசர அவசரமாக தேடிவிட்டு அவளைக் காணாமல் நம்பிக்கை குறைந்து கீழே வந்தவனுக்கு ஒரு 'புக்ஸ் ஷாப்'பில் அவளைக் கண்டதும் இதயம் ஆயிரம் இசைக் கருவிகளை ஒன்றாக இசைத்த மாதிரி அதிர்ந்தது. அவளருகில் செல்வதற்கு முன் சற்று நேரம் அங்கேயே நின்று ஆசுவாசப்படுத்திக்கொண்டான்.

புத்தகத்தை புரட்டும் அவளின் மெல்லிய விரல்களின் அழகையும், முகத்தில் விழுந்த முடியை ஒரு விரலால் லாவகமாக ஒதுக்கும் அழகையம், புத்தகத்தில் மேல் அலை பாய்ந்த அவளின் நீல நிறக்கண்களின் துருதுருப்பும் அவனது நெஞ்சை அள்ளியது.

அவன் மதுவை ரசித்துக் கொண்டிருப்பதை பார்த்துவிட்ட மஞ்சு, "மது உடனே திரும்பி பார்க்காதே. துணிக்கடையில் பார்த்தோமே முகுந்த், அவன் உன்னை தேடி வந்திருக்கிறான்... நீ உடனே நிமிராதே. அவன் உன்னிடம் பேச விரும்புகிறான் என்று

நினைக்கிறேன் . நீ அவனை கண்டுகொள்ளாமல் உன் வேலையை பார், என்ன நடக்குது என்று பார்க்கலாம்?'' என்று தாழ்ந்த தொனியில் சொல்லிவிட்டு கண்மறைவாக நின்றாள்.

'என்ன தைரியம் தொடர்ந்து பாலோ செய்கிறானா? கிட்டே வரட்டும் அவனை உண்டு இல்லை என்று செய்துவிடுகிறேன்' என்று மனதிற்குள் பொருமியவளுக்கு, அவனின் காலடி சத்தமும் கேட்டு இதயம் தாறுமாறாக துடிக்கத் தொடங்கியது.

அதற்கு மேலும் கட்டுப்படுத்த முடியாமல் அவனது முகத்தை பார்க்க நிமிர்ந்தவள் அவனின் பார்வையை நேராக சந்திக்க, அவளை யாரோ சிலையாக இரு என்று சபித்தவள் போல் அசையாமல் நின்றாள் .

அதே சமயம், ''ஹே முகுந்த்... இங்கே என்ன பண்றே...?'' என்ற குரல் கேட்டு தன் தவத்திலிருந்து அனிச்சையாக கலைந்து திரும்ப, தந்தை சுதிரின் நண்பரான மோகனும், அவரின் மகள் பீனாவும் வருவதைக் கண்டு ஒரு நிமிடம் குழம்பியவன், வலிய வரவழைத்த புன்னகையை முகத்தில்பூசி 'ஹலோ...'' என்றான் கடமையாக.

இந்த இடைவெளியில் மஞ்சு, மதுவை இழுத்துக்கொண்டு வேகமாக வெளியேறினாள். முகுந்தின் பார்வையோ மதுவிடம் போகாதே என்று கெஞ்ச அதை பார்த்துக்கொண்டே தாயுடன் வெளியேற, அவனுடன் பேசிகொண்டிருந்த பீனாவுக்கு இந்த மௌன நாடகத்தை கண்டு புகைந்தது.



முகுந்தை எப்படியாவது கல்யாணம் செய்து கொண்டு அவனுடைய சொத்தை அடைய ப்ளான் செய்தவள்,அந்த வீட்டிற்கு தினசரி சென்று 'அட்டெண்டென்ஸ்' போட்டு அவர்களை சம்மதம் சொல்ல வைக்க பாடாய் பட்டுக்கொண்டிருந்த சமயத்தில், திடீரென்று பூனை கண்ணி ஒருத்தியைப் பார்த்து முகுந்த் வழிவதை கண்டதும் ஆத்திரம் பொங்கியது.

முகுந்தை ப்ளேடே இல்லாமலே அறுத்துக் கொண்டிருந்த தந்தையிடம் தன் கோபத்தைக் காட்டி அவரை இழுத்துக்கொண்டு செல்ல, பெரிதாக கும்பிடு போட்டு விடைகொடுத்துவிட்டு, மீண்டும் பார்க்கிங்க்கு சென்று அவர்களின் காரை தேடினான். அது இல்லை என்றதும் மனம் சோர்ந்து போக கோபத்துடன் காலால் தரையை ஓங்கி மிதித்தவனுக்கு அவளது கார் நம்பர் நினைவில் வர முகம் மலர்ந்தது.

ஆழ்ந்த ஒரு நெடிய மூச்சை எடுத்து முடியை கோதிக்கொண்டே தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு காரை எடுத்தவனின் மனம் என்னவோ மதுவின் பார்வையையே ஆராய்ச்சி செய்தது.

அவளின் பார்வை அவனுக்கு தேவையான பதிலை கொடுத்த மாதிரி தான் இருந்தது. ஆனால் என் மனதிலிருப்பதை அவளிடம் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். 'ச்சே... அதற்குள் பூஜை வேளை கரடி மாதிரி பீனாவும் அங்கிளும் வந்து கெடுத்துவிட்டார்கள்' என்று அலுத்துக்கொண்டான்.

மஞ்சு அவளை மது என்று விளித்தது அவன் கருத்தில் பதிந்திருக்க, ஏதோ இவ்வளவு தூரம் தேடியதற்கு அவள் பேராவது தெரிந்ததே என்று சந்தோஷமேற்பட, ''மது... ம்ம் ஸ்வீட் நேம். பார்பிக்கு ஏற்ற பெயர் தான்..." என்ற அவளை பற்றிய நினைவிலே மாலை வீடு போய் சேர்ந்தான். அவனை எதிர்கொண்ட அம்மா பாரதி , அவனை விசாரித்து சாப்பிட அழைக்க ''ரெப்ரெஷ் செய்து கொண்டு வருகிறேன்ம்மா...'' என்று துள்ளலாக படியேறியவனை ஆச்சரியமாக பார்த்தார்.

அவரது அண்ணன் ராஜேஷ்வர் இறந்ததிலிருந்து மனதளவில் சோர்ந்து போய் இருந்ததார். அவர்களின் மூத்த மகனான முகுந்த் தான் தாத்தா பாட்டியின் மனதிற்கு இதமாக நடந்து சந்தோஷப்படுத்திக் கொண்டிருக்கிறான். பார்ப்பதற்கு விஷ்ணு பூபதியின் மறு உருவமாக இருப்பது மட்டுமில்லாமல், அவரின் பேச்சுத்திறன், எடுத்த காரியத்தை முடிக்கும் வரை ஓயாமல் உழைக்கும் பிடிவாதம் - இதெல்லாம் அப்படியே இருந்ததால் எல்லோருக்குமே அவனிடம் கொஞ்சம் மரியாதை கலந்த பாசம் இருந்தது.

பாரதியின் முதல் தங்கை பல்லவியின் கணவர் அவினாஷ், பெரிய தொழிலதிபர். அவர்களின் பிள்ளை அபினவுக்கு இருபது வயதே ஆகியிருந்தாலும் அண்ணனிடம் தொழிலை கற்றுக்கொண்டிருக்கிறான். திலீப்புக்கும், அபினவுக்கும் அண்ணன் முகுந்த் மேல் ஏகப்பட்ட மரியாதையும் பாசமும் உண்டு.



இரண்டாவது தங்கை பிரகதி பத்து வருடத்திற்கு முன் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவரை காதலித்தவள், அந்த காதல் கைகூடாததால் தன் உயிரை மாய்த்துக் கொள்ள, அண்ணனை தொடர்ந்து தங்கையும் தங்களை விட்டு போனதில் உடைந்து போன பாரதியின் பெற்றோர் விஷ்ணுவும், பிரபாதேவியும் இனியும் தாங்கள், காதலுக்கு எதிரியாக இருக்கக்கூடாது என்று தீர்மானித்து விட்டார்கள்.

மகள்களுக்கெல்லாம் ஆண் வாரிசு என்பதால் தங்கள் பரம்பரைக்கு ஒரு பெண் வாரிசு வேண்டுமென்ற எண்ணத்தில் ராஜேஷின் பெண்ணான மதுவை தங்களிடம் ஒப்படைக்கச் சொல்லி ராஜேஷின் மனைவி மஞ்சுவிற்கு தங்களின் ராஜ அதிகாரத்தை கடிதத்தில் காட்டி கட்டளையிட்டிருந்தார்கள்.

என்ன தான் பிடிவாதம் தளர்ந்தாலும் மஞ்சுவை ஏற்றுக்கொள்வதில் அவர்களுக்கு ஏகப்பட்ட எரிச்சல்... மஞ்சுவிடமிருந்து பதில் வராததால் அதை பற்றி பேரன் முகுந்திடம் விவாதிக்கலாம் என்றால், அவனுக்கு 'எக்ஸ்போர்ட்ஸ்' வேலையே பெண்டு நிமிர வைத்தது.

ஒரு தொழில் என்றாலும் ரெஸ்ட் எடுக்க கொஞ்ச நேரமாவது கிடைக்கும். ஆனால் முகுந்த் தன் அப்பாவின் தொழிலோடு தாத்தாவின் தொழிலையும் சேர்த்து கவனித்துக் கொள்வதால் எதையும் யோசிக்க கூட நேரமில்லாமல் ஓடியது.

வெள்ளிக்கிழமை இரவுதான் கொஞ்சம் மூச்சுவிட நேரம் கிடைக்க, தன் குடும்பத்தோடு அமர்ந்து இரவு

உணவை சேர்ந்து சாப்பிடும் போதுதான் முகுந்துக்கு, போன வாரம் அம்மா யாரையோ பார்க்கணும் என்று சொன்னாரே என்று ஞாபகம் வர, விசாரித்தான்.

'யாராவது ஒருத்தர் போய் பார்த்துவிட்டு அவரின் பெண்ணை அழைத்து வந்தால் நன்றாக இருக்கும் என அப்பா நினைக்கிறார். நீ போனில் சொன்ன மாதிரி திலீப்பை அனுப்பி இருக்கலாம். ஆனால் அவன் போவதை விட நீ போனால் நன்றாக இருக்கும்ம'' என்று இழுத்தார்.

"அவர்கள் ஏன் பதில் போடவில்லை...?" என்ற முகுந்தின் கேள்விக்கு, பிரபாதேவி முந்திக்கொண்டு, 'அப்போது அவளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை அல்லவா? இப்போது நாம் அவள் பெண்ணை அனுப்பு என்றதும் அனுப்பாமல், நம்மையே திருப்பி பழிவாங்குகிறாள்'' என்ற பதிலில் திருப்தியடையாமல் தாத்தாவின் முகத்தை கேள்வியாக நோக்கினான்.

''என் மகனின் மகள், எங்களின் வாரிசு. அதனால் அவளை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையென்றால் கோர்ட் மூலமாக சந்திக்க வேண்டி வரும் என்று கடிதம் போட்டிருந்தோம்... இதிலென்ன என்ன தவறிருக்கு..." என்று அலட்சியமாக சொன்ன மாமியாரின் பதிலில் முகம் சுளித்தார் சுதிர்.

"நமக்கு ஒரு பொருள் கிடைக்க வேண்டும் என்றால் நாம் கொஞ்சம் பணிந்து தான் போக வேண்டும் அத்தை... நீங்கள் கேட்பதோ அவர்களுடைய ஒரே பெண்ணை. எந்த அளவிற்கு கஷ்டப்பட்டு, அருமை பெருமையாக



வளர்த்திருப்பார்கள். இந்த மாதிரி மிரட்டி கேட்டால் எப்படி? அதுவும் நிரந்தரமாக அனுப்பி வைக்கணும் என்றால்..." என்றார் காரமாக.

''நான் கேட்டதில் என்ன தப்பு இருக்கு மாப்பிள்ளை? எனக்கு இருந்ததும் ஒரே பையன் தானே . அந்த பையனை எங்களிடமிருந்து பிரித்துக் கொண்டு போகவில்லையா? அப்போது எங்களுக்கும் இதே மாதிரி தானே இருந்திருக்கும். அவளை பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. ஒன்றுமில்லை என்றால் கூட திமிர் அதிகம் '' என்ற பாட்டியை யோசனையோடு பார்த்துகொண்டிருந்தான் முகுந்த்.

''பாட்டி நீங்கள் பேசுவது சரியா..., தவறா... என்று அலசி பார்க்கிற வயசில்லை எனக்கு. ஆனால் ஒரு விஷயம்... நாம் எடுத்தவுடனே அதிகாரத்தை காட்டியிருக்க வேண்டாம் என்று தான் தோன்றுகிறது'' என்றவன் அண்ணனை நோக்கினான்.

அவன் மெதுவாக தொண்டையை கனைத்துக்கொண்டு, "பாட்டி எனக்கு அப்பாவும் தீலீப்பும் சொல்றதில் எந்த தவறும் இருப்பதாக தெரியவில்லை. நீங்க மாமாவின் பெண்ணை மட்டும் இங்கு வர சொல்வது முதல் தவறு. இரண்டாவது அதையும் அதிகாரமாக கேட்டது. மூன்றாவது அதை வெறும் லெட்டர் மூலம் தெரியப்படுத்தியது'' என்று நிதானமாக சொல்லிக்கொண்டு இருக்கும் போதே பிரபாதேவி சற்று கோபத்துடன் ஏதோ சொல்ல முயல, விஷ்ணுபூபதி அவரை அடக்கினார்.

"பாட்டி நான் சொல்வதை கொஞ்சம் கோபப்படாமல் பொறுமையாக கேளுங்க... இப்போ நம்

குடும்பத்திற்கு மாமாவின் வாரிசான அந்தப் பெண் இங்கு வரவேண்டுமென்றால் நீங்கள் உங்கள் மருமகளையும், அதாவது ராஜேஷ் மாமாவின் மனைவியையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அதை விட்டு விட்டு அவர்களது பெண்ணை மட்டும் எப்படி அனுப்ப சொல்லி கேட்கிறீர்கள். அவர்கள் திருமணம் ஆனதிலிருந்து என்ன ஆனார்கள் என்று இதுவரை கண்டுகொள்ளாத நீங்கள், இப்போது திடீரென்று என் பேத்தியை என்னிடம் அனுப்பு. ஆனால் நீ வேண்டாம் என்றால்... யார் தான் ஏற்றுக் கொள்வார்கள்?'' என்று பாட்டியிடம் சொல்லிவிட்டு, விஷ்ணு பூபதியின் பக்கம் பார்வையை திருப்பினான்.

''ஏன் தாத்தா உங்களுக்கு உங்கள் பேத்தி வேண்டுமென்று தீர்மானம் செய்துவிட்டீர்கள். அதாவது எந்த பாரம்பரியமும் இல்லாத ஒரு பெண்ணுக்கும், பாரம்பரியம் மிக்க உங்க மகனுக்கும் பிறந்த பெண்ணை இந்த குடும்ப வாரிசாக ஏற்றுக்கொள்ள மனம் தயாராகிவிட்ட பிறகு, அந்த பெண்ணை பெற்ற அம்மாவை தட் மீன்ஸ் உங்கள் மருமகளை ஏற்றுக்கொள்வதில் என்ன தயக்கம் உங்களுக்கு? பாட்டி தான் உணர்ச்சிவசப்பட்டு முடிவு எடுக்கிறார்கள்.ஆனால் நீங்களாவது அதை நிதானமாக யோசித்து எடுத்து சொல்லலாமே'' என்றான் மென்மையாக.

முகுந்தின் பேச்சு மற்ற மூவருக்கும் திருப்தியாக இருக்கிறது என்பது அவர்கள் முகக் குறிப்பிலேயே தெரியவர, பேரனின் பேச்சை அலசி ஆராய தொடங்கினார் விஷ்ணுபூபதி.



''நீ சொல்றது தான் சரி முகுந்த் . உன் பாட்டி சொன்னபோது நான் யோசிக்கவே இல்லை. எப்படியோ நம் பேத்தி வந்து சேர்ந்தால் போதும் என்று தான் அவள் விஷயத்தில் நான் தலையிடாமல் இருந்தேன். சரி, நம் குடும்பத்தில் யாராவது ஒருத்தர் போய் நேரிலே பேசி அவர்கள் இரண்டு பேரையும் இங்கே அழைத்து வந்துவிடலாம். அது தான் சரியான முடிவு'' என்றார் தெளிவுடன்.

''ஓகே தாத்தா, யார் போய் பக்குவமாகப் பேசி, கூட்டி வருவது என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். என்னால் மட்டும் முடியாது'' என்று எழுந்து போய் கையை கழுவிக் விட்டு வந்தவனிடம் பிரபாதேவி கோபத்தோடு,

''நீங்க செய்யறது தான் சரி என்று என்னிடம் சொல்வாயே... இப்போ நீயே அந்த ஒன்றுமில்லாதவளுக்கு வக்காலத்து வாங்குகிறாயே. நீயும் அவள் பக்கம் சாய்ந்துவிட்டாயா?'' என்றார் ஆதங்கத்தோடு.

அவர் பக்கத்தில் அமர்ந்து அவரின் கையை தன் கைக்குள் வைத்து கொண்டவன், ''கண்டிப்பாக இல்லை... நான் இந்த மாதிரி பேசியதால் ,என் மனதில் அவர்களுக்கு இடமுண்டு என்று நினைக்க வேண்டாம். இந்த மாதிரி செய்தால் தான் உங்கள் பேத்தி உங்களிடம் வந்து சேருவாள்... அதற்காகத்தான் சொன்னேன்.

உங்க பேத்தியை இங்கே வரக்கூடாது என்று சொல்ல எனக்கு எந்த உரிமையுமில்லை . பார்க்கப் போனால் அவள் தான் இந்த வீட்டின் நேரடி வாரிசு.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். யார் மனது இளகினாலும் என் மனது மட்டும் இளகாது. என் மாமாவை காதல் என்ற பெயரில் பிரித்து, நம்மை அழவிட்டு அவர்கள் மட்டும் சந்தோஷமாக இருந்தார்களே...அதை என்னால் மறக்க முடியாது. மறக்கவும் மாட்டேன். என்றைக்கும் இந்த முகுந்தை அவர்களால் நெருங்க முடியாது'' என்று கொஞ்சம் கூட குரலை ஏற்றாமல், அதே சமயம் வார்த்தைகளில் கோபம் தெறிக்க, கண்கள் சிவக்க அழுத்தமாக சொல்லிவிட்டு அங்கிருந்து எழுந்து சென்றவனை பிரபாதேவி கண்களில் ஒருவித பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

வீட்டுக்கு வந்தும் மது அமைதியாக மேஜை மேலிருந்த ஆணும் பெண்ணும் கை கோர்த்து நடனமாடும் பொம்மையை ரசிக்க, 'மது நான் ஒன்று கேட்கலாமா...?'' என்றார் சிறு தயக்கத்துடன்.

தாயின் கேள்வியில் நிமிர்ந்தவள் அவரின் பார்வை தன் கையிலிருந்த பொம்மையில் பதிந்திருப்பதை கண்டு, ''என்னம்மா அந்த நெல்லிகாடன் பற்றி கேட்கணுமா..." என்று புன்னகைக்க, சிறு கூச்சத்துடன் தலையசைத்தார்.

"அவன் உன்னை பார்த்த பார்வையில் கண்டிப்பாக காதல் இருந்தது... ஆனால் அதில் கொஞ்சம் கூட திருட்டுத்தனம் இல்லை... அவனை நீ பார்த்த பார்வை கூட எனக்கு புதிதாக இருந்தது. ஆனால் அவனிடம் நீ பேசவில்லை... அப்படி பேசியிருந்தால் உன் ரியாக்ஷன் என்ன மது..." என்று



கேட்ட தாயை குறும்புடன் நோக்கிவிட்டு,

"ம்ச்ச்... நிச்சயம் பாசிடிவா இருந்திருக்காது..." என்று சிரித்தவள், "எனக்கு 'லவ் அட் பர்ஸ்ட் சைட்'டில் நம்பிக்கை இல்லை... காதல் வெளி அழகை பார்த்து மட்டுமே வரக்கூடாது... மன அழகை பார்த்து அப்போ தான் கடைசி வரை அந்த காதல் நின்று ஜெயிக்கும்...'' என்றவள் தொடர்ந்து,

''காதலை பற்றி உனக்கு நான் சொல்லவேண்டிய அவசியமே இல்லை... ராஜ பரம்பரையை சேர்ந்த அப்பா உன் காதலுக்காக, தன் சொத்து சுகம், எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுவிட்டு வந்து இங்கே கஷ்டப்பட்டு உழைத்து உன்னை அன்பாக வைத்திருந்தார்.

நீயும் அவருக்காக உன் பெற்றவர்களை தூக்கிப் போட்டுவிட்டே வந்தாய். அப்படிப்பட்ட உங்கள் இருவரின் உண்மையான காதலின் அடையாளம் நான். எப்படிம்மா பார்த்த உடனே ஒருத்தனை, அவன் எப்படிபட்டவன், உண்மையான காதலை தருவானா... இல்லையாஎ? என்று தெரியாமல் போய் காதலில் விழுவேன்.

அப்பா மாதிரியே காதலை மதிக்கிற, அதற்காக எதையும் தூக்கி போட்டுவிட்டு வரக்கூடிய ஒருத்தன் தான் எனக்கு வேண்டும் என்று நினைக்கமாட்டேனா? சொல்லும்மா...?'' என்ற அவளின் அழுத்தமான கேள்வி மஞ்சுவையே ஆமாம் என்று தலையாட்ட வைத்தது.

ஆனாலும் மதுவின் பார்வை முகுந்தின் முகத்தில் ஆணியடித்த மாதிரி நிலைத்திருந்ததே... அதற்கென்ன காரணம்... என்ற கேள்வி அவர் நெஞ்சில் பிறந்தாலும்

வாய்விட்டு அதை கேட்கத் துணிவின்றி, அங்கிருந்து அகல முயன்றவரின் கையை பிடித்தாள் மது.

'நீ ஏதோ கேட்கணும்னு நினைக்கிறே ... என்னென்று சொல்லும்மா...' என கேட்டாள். மஞ்சுவுக்கு மகளிடம் கேட்கலாமாம வேண்டாமா... என்ற தயக்கத்தை உதறி, ஒருவாறு நெஞ்சில் இருந்ததை கேட்டதும் வாய்விட்டு சிரித்தாள் மது.

"இதுக்கா இவ்வளவு தயங்கினே..." என்றவள் "நீங்க சொன்னதும் அவனை திட்டத்தான் நினைத்தேன். ஆனால் அவன் கண்களை சந்தித்ததும் அவன் பார்வையில் ஒரு அன்னியத்தன்மையே இல்லை. என்னமோ வருடக்கணக்காக பழகின மாதிரி ஒரு அன்யோன்யம் தான் தெரிந்தது. அது தான் என்னை கட்டிப் போட்டது.

அது மட்டுமில்லை இன்னொன்றையும் வெளிப்படையாகவே சொல்லிவிடுகிறேன். அவன் உயரமும், முகக்களையையும்... ஒரு நிமிஷம் நான் ரசித்தேன் தான்... இல்லையென்று சொன்னால் அது பொய்யென்று ஆகிவிடும் . முதன்முதலில் என் மனதை தொட்டவனும் அவன் தான் . அதற்காக காதலால் கசிந்து மெழுகாக உருக மாட்டேன்..." என்ற மகளின் தெளிவான பேச்சை கேட்டு மஞ்சுவுக்கு தன் மீதே கோபம் வந்தது.

அமைதியாக அமர்ந்தவரின் அருகில் வந்தமர்ந்தவள், "இன்னும் என்ன யோசனை... அந்த முகுந்தை பற்றி நினைத்து கொண்டிருக்கிறாயா? விடு மஞ்சு. அவன் யாரென்று கூட நமக்குத் தெரியாது அப்படிப்பட்டவனை பற்றி நினைத்து ஏன் நம்



நேரத்தை வீணாக்க வேண்டும்..." என்றாள் சற்று கோபம் இழையோட.

மகளின் பேச்சிலிருந்த உண்மை சுட இருவரும் எதுவும் பேசாமல் அவரவர் எண்ணங்களில் மூழ்கிவிட, மது ஏதோ நினைத்துகொண்டவளாக, "மஞ்சு நாம் இருவரும் எங்கேயாவது ஒரு விசிட் போயிட்டு வரலாமா? ரொம்ப போரடிக்குது. எனக்கு வருகிற வாரம் இல்லாமல், அடுத்த வாரம் முழுவதும் லீவு தான். போலாமா ப்ளீஸ், எனக்கு நேரமில்லை, லீவில்லை என்று காரணமெல்லாம் சொல்லாதே" என்று குழந்தைத்தனமாக கொஞ்சவும் ,மஞ்சுவும் மறுக்க முடியாமல் புன்னகைத்துக் கொண்டே சம்மதம் என்று தலையாட்டினார்.

எத்தனை நாள் என்று திட்டமிடத் தொடங்கி, ஒரு வழியாக ஐந்து நாள் பயணமாக திருநெல்வேலிக்கு போகலாம் என்ற முடிவுக்கு வந்தவர்களுக்கு, அதற்கு மேல் சுற்றுலா செல்லும் மூடு வந்துவிட அதை பற்றியே பேசிக்கொண்டிருந்துவிட்டு படுக்கச் சென்றாள்.

# 4

மூச்சு விட முடியாத அளவிற்கு வேலை நெருக்கடி இருந்தாலும் மதுவை கண்டுபிடித்தே ஆகவேண்டும் என்ற எண்ணத்தில் சென்னைக்கு சென்றவன், அவளின் கார் நம்பரை ஆர்.டி. ஓ ஆபிசில் கொடுத்து, தள்ள வேண்டியதை தள்ளி அவளது

முகவரியை வாங்கிக்கொண்டான். முகவரியைத் தேடி அவள் வீட்டை கண்டுபிடித்ததும் அவனின் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது.

அதுவும் அவளின் இன்னோவா காரைக் கண்டதும் அவளை உடனே பார்க்கப் போகிறோம் என்ற ஒரு வித இன்பமான பரபரப்பில், தன்னைக் கண்டதும் அவளின் நீல நிற அழகிய விழிகள் ஆச்சரியத்தில் விரியப் போவதை கற்பனையில் ரசித்துக்கொண்டே காலிங் பெல்லை அடித்துவிட்டு காத்திருந்தான்.ஆனால் யாரும் வந்து கதவைத் திறக்கவில்லை. பொறுமையிழந்து பலமுறை அழைப்பு மணியை அழுத்தியும் கதவு திறக்கவில்லை என்றதும் மனது சோர்ந்து போனது.

எங்காவது வெளியே சென்றிருப்பவர்கள், எப்படியும் இரவு வீடு திரும்பிவிடுவார்கள்... அதனால் நாளை வந்து பார்க்கலாம் என்று மனதை தேற்றிக்கொண்டு ஹோட்டலுக்கு திரும்பியவனுக்கு தந்தையிடமிருந்து அவசரம் என்றழைப்பு வந்தது. மதுவை மற்றொரு நாள் வந்து பார்த்துகொள்ளலாம் என்று தள்ளிப்போட்டுவிட்டு அன்றிரவே பாலக்காட்டுக்குத் திரும்பிவிட்டான்.

ஊருக்கு திரும்பியவனுக்கு கம்பெனியில் தொழிலாளர்களின் பிரச்சனை காத்துக் கொண்டிருக்க, 'ச்சே இந்த கேரளாவில் இது ஒன்று. எப்போ பார்த்தாலும் ஸ்ட்ரைக் செய்து கொண்டு' என்று எரிச்சல் வர அதை வெளிக்காட்டாமல் அவர்களிடம் சுமுகமாக பேசி, ஸ்ட்ரைக்கை வாபஸ் வாங்கும் முயற்சியில் இறங்கினான்.



அதிலேயே ஒரு வாரகாலம் ஓடிப்போனது. விஷ்ணுபூபதியும் மதுவின் வீட்டுக்கு செல்ல முடியாமல் முகுந்துடன் தொழிலாளர் பிரச்சனையைத் தீர்க்க உதவி செய்து கொண்டிருந்தார்.

எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்து தொழிலாளர்கள் ஒழுங்காக வேலைக்கு திரும்ப இரண்டு வார காலம் பிடிக்க, அதன் பிறகு தான் முகுந்தால் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது. இந்த இரண்டு வார காலமும் அவனால் மதுவைப் பற்றி நினைக்கக்கூட முடியவில்லை. அதன் பிறகு எந்த தொல்லையும் இல்லாமல் இருக்க, மீண்டும் அவனுக்கு மதுவின் நினைவு நீரில் அழுத்திய பந்து மேலெழுவது போல எழுந்தது.

**ச**னிக்கிழமை காலை.குருவாயூர் எக்ஸ்பிரஸ் கிளம்பியது. மது பிக்னிக் போகிற உற்சாகத்தில் அம்மாவிடம் பேசிக்கொண்டே வந்தவள் ரயில் நகர தொடங்கியதும், வெளியே தெரிந்த இயற்கை காட்சிகளைப் பார்த்து குழந்தைத்தனமாகக் குதூகலித்ததைக் கண்டு மஞ்சுவுக்கு ஆச்சரியமாகவும், அதே சமயம் வியப்பாகவும் இருந்தது.

அவள் தன்னை பரிவாக நடத்துகிற போது வெளிப்படுகிற தாய்மை உணர்வும், எந்த ஒரு விஷயத்தை அலசி ஆராய்கிற போது அதில் தெரிகிற முதிர்ச்சியும், சில சமயங்களில் தன்னை சீண்டுகிற குறும்புத்தனமும், வீட்டை நிர்வகிக்கிற குடும்ப பொறுப்பும், அவளுக்கு பிடித்த விஷயங்களில் ஈடுபடும்போது அவளுள் தெரிகிற குழந்தைத்

தனத்தையும் நினைத்துப் பார்த்து இவளுள் இன்னும் எத்தனை பரிமாணங்கள் தான் இருக்கிறது என்று தனக்குள்ளே வியப்பாக கேட்டுக்கொண்டார்.

நெல்லை ஸ்டேஷனில் இறங்கியதும் ஏற்கெனவே ரிசர்வ் செய்திருந்த ஓட்டலில் லக்கேஜை வைத்துவிட்டு ரெடியாகி சாப்பிட்டுவிட்டு கோவிலுக்கு சென்று திருப்தியாக சாமி கும்பிட்டுவிட்டு, பேசிக்கொண்டே கடைகளை சுற்றிக் கொண்டிருக்க, மது பாசி மணியில் செய்யப்பட்டிருந்த மாலையை ஆசையாக எடுக்க முயலவும், அதே மாலையை இன்னொரு கையும் எடுப்பதை கவனித்து விட்டு எரிச்சலுடன், ''இடியட்...'' என்று முணுமுணுத்துவிட்டு நகர்ந்தவளை அழைத்து,

"சாரி மிஸ், உங்களுக்கு இதைப் பிடித்திருந்தால் நீங்களே எடுத்துக்குங்க... எப்பொழுதுமே லேடீஸ் தான் பர்ஸ்ட்.'' என்று புன்னகையோடு அந்த இளைஞன் சொல்வதை கேட்ட மதுவிற்குள் கோபம் குமிழியிட்டது.

"சரியான வழிசல் பார்ட்டி'' என்று மனதிற்குள் திட்டிக்கொண்டே, பல்லை இளித்து, "நோ தேங்க்ஸ்...' என்றாள் கடித்த பற்களிடையே .

மதுவிற்காக காத்துக்கொண்டிருந்த மஞ்சு, மகள் யாரிடமோ நின்று பேசிக்கொண்டிருப்பதை கவனித்துவிட்டு, அருகில் வந்தாள். வந்தவரைக் கண்டு அந்த இளைஞனின் கண்கள் ஆச்சரியத்தில் விரிய, மஞ்சுவுக்கோ அவனின் முகம் மிகவும் பரிச்சயமானது போல தோன்றறியது. புரியாமல் அவனையே பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டு,



''வாம்மா போகலாம்...'' என்று தாயின் கையை பிடித்து இழுத்துச் செல்லாத குறையாக நகர்ந்த மதுவிடம் 'ஒன் மினிட் ப்ளீஸ்...மிஸ்' என்றான் வேண்டுதலாக.

''பெண்களை பார்த்துவிட்டாலே போதுமே, பின்னாலேயே வருவாங்களே... ச்சே... ஈர்க்குச்சிக்கு புடவை கட்டினால் கூட விட மாட்டார்கள் போலிருக்கு... பெரிய மன்மத ராசா என்ற நினைப்பு..." என்று கருவிக்கொண்டே, அவனின் அழைப்பைக் காதில் வாங்காமல் முன்னேறியவளின் முன் இரண்டு கைகளையும் விரித்தபடி வந்து நின்று, ' நீங்க மஞ்சுளா நாராயணி தானே...' என்றான் மூச்சிரைக்க.

அவனின் கேள்வியில் மஞ்சுவின் பார்வையில் ஆச்சரியம் குடிகொள்ள, பதில் சொல்லாமலே அவனை ஆராய்ச்சியாக நோக்க, அந்த இளைஞன் முறைத்துக்கொண்டிருந்த மதுவை புன்னகையுடன் நோக்கிவிட்டு தொடர்ந்து, ''உங்க அப்பா பெயர் காசிநாதன், அம்மா சாவித்திரி, அண்ணன் பெயர் தீனா...' என்று சொல்லி நிறுத்தியதும் இருவருக்குமே வியப்பு மேலோங்கியது.

''நீ யாரு என்று இன்னும் சொல்ல வில்லையேப்பா...'' என்றவரின் ஆர்வத்தை கண்டு சிரித்துவிட்டு, ''நான் ரிக்வித் அலைஸ் ரிக்கி..." என்றவன் சற்று குறும்புடன், ''உங்க மாமா பையனுக்கு ஒரு ஹாய் கூட சொல்ல மாட்டீங்களா...'' என்று மதுவிடம்சிநேகமாக சிரிக்க மஞ்சுவின் முகத்திலிருந்த குழப்ப ரேகைகள் துணி கொண்டு துடைத்தார் போல மறைந்து சந்தோஷ ரேகைகள் குடியேறியது.

"நான் அப்பவே நினைச்சேன்... உன்னை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு என்று... இப்போ தான் புரியுது...' என்று முகம் மலர சிரித்துவிட்டு, "இவள் என் பெண் மதுவதனா. பயோடெக் பிஜி கடைசி வருடம் படிக்கிறா...'' என்று அறிமுகப்படுத்தியதும் இருவருக்குமே சற்று முன் சண்டை கோழியாய்ச் சிலிர்த்துக்கொண்டு நின்றது நினைவில் வர, ஒரு சேர வாய்விட்டு சிரித்து தோழமையுடன் கைகொடுத்துக் கொண்டார்கள்.

அவனை பற்றி விசாரித்த அத்தையிடம், "நான் சொந்தமாக கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி வைத்திருக்கிறேன்... அதனால் ப்ராஜெக்ட் விஷயமாக இங்கே வந்தேன்..." என்று சுருக்கமாக தன்னை பற்றி கூறியவன், "தாத்தாவின் மறைவுக்கு பின் அப்பாவுக்கு எப்பவும் உங்கள் ஞாபகம் தான். ஆனால் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று தெரியாததால் உங்களை கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது. வீட்டுக்கு வாருங்களேன் அத்தை, மது நீயும் வாயேன், உன்னை பார்த்தால் பாட்டி ரொம்ப சந்தோஷப்படுவார்கள்'' என்றழைத்தான்.

அவனின் அழைப்பில் அதுவரை அவரின் முகத்திலிருந்த சந்தோஷம் மறைந்து முகம் மாற, ''இல்லை ரிக்கி, நான் அங்கு வர முடியாது. ஏனென்று கேட்காதே... சில காரணங்களைச் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறேன்..." என்றவர் சங்கடத்துடன், ''எல்லோரையும் அழைத்து கொண்டு நீ வீட்டுக்கு வா..." என்று கூறி தன் முகவரியை கொடுக்க, அதற்கு



மேல் வற்புறுத்தாமல் இங்கிதமாக, "இப்போது எங்கேயோ கிளம்பிக் கொண்டு இருந்தீர்கள் போலிருக்கு" என்றான்.

ரிக்கி தன் நிலைமையை புரிந்து கொண்டு அனுசரணையாக பேசியதும் மஞ்சுவுக்கு அவன் மேல் பாசத்தையும், மதுவுக்கு மரியாதையும் உண்டாக, தங்கள் பிளானை கூறி அவனையும் அழைக்க, கொஞ்சம் கூட பிகு செய்யாமல் அவர்களுடன் இணைந்து கொண்டவன், அவர்கள் அங்கிருந்த நான்கு நாட்களும் கூடவே இருந்து எல்லா இடத்தையும் சுற்றிக் காண்பித்தான்.

மதுவுக்கு கண்ணியத்தோடு பழகும் அவனது தன்மை பிடித்துப்போக, அவனை ஒரு நண்பனாய் ஏற்றுக்கொண்டாள். ரிக்கிக்கும் மதுவின் அழகு, அறிவு, துணிச்சலையெல்லாம் கண்டு அவன் மனம் கொள்ளை போனது.

மஞ்சுவுக்கு அண்ணன் மகனை சந்தித்த பிறகு அவருக்கு தன் குடும்பத்தைப் போய் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அதிகரித்துக்கொண்டே இருந்தாலும், அங்கே தானே ராஜேஷின் குடும்பமும் இருக்கிறது என்ற நினைப்பு அவரின் ஆசையை குழிதோண்டி புதைத்தாள். தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் அம்மா தவிப்பதைப் புரிந்துகொண்டாள் மது.

''உங்களுக்கு பிறந்தவீட்டை பார்க்க வேண்டுமென்ற விருப்பமிருந்தால் போய் பார்க்க வேண்டியது தானே. அதைவிட்டு மற்றவர்களுக்காக ஏன் உன் ஆசையை விட்டுக்கொடுக்கிறாய்... இது உன்

வாழ்க்கை. உன் ஆசைப்படி வாழு . அதை விட்டுட்டு உன் மேல் அன்பில்லாதவர்களுக்காக ,உன் ஆசையை ஏன் நசுக்குகிறாய்'' என்று மது கோபத்தில் பொரிந்தாள்.

ஒரு நெடிய மூச்செடுத்து, ''நீ சின்னப் பெண் மது... அதனால் இப்படி பேசறே... ஆனால் நான் வயசானவள். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று என்னால் எதையும் செய்யமுடியாது'' என்றார் விரக்தியுடன்.

“அடடா உனக்கு என்ன வயசாச்சு என்று இப்படி பேசறே, உன்னை எல்லோரும் எனக்கு அக்காவா என்று கேட்கிறார்கள். நீ என்னடாவென்றால் கே.பி சுந்தரம்பாள் மாதிரி பேசறே'' என்று அலுத்துக் கொள்ள, புன்னகையுடன் அவளருகில் அமர்ந்து முதுகில் செல்லமாக ஓர் அடி வைத்து அவளை தன் மடியில் சாய்த்துக்கொள்ள, மதுவும் அவர் மடியில் வாகாக படுத்துகொண்டாள் .

மஞ்சுவின் விரல்கள் மகளின் கூந்தலை அன்பாக வருடி கொடுக்க, கணவர் ராஜேஷின் நினைவுகளோ அவரை புதைகுழி போல இழுத்துச் செல்ல, கொஞ்சம் கொஞ்சமாக தன்னுடைய இளமைகால நினைவுகளில் நுழைந்தார்.

நிரம்பவும் கட்டுப்பாடான குடும்பத்தில் இருந்து வந்த மஞ்சு தோழிகளுடன் கல்லூரிக்கு செல்லும் வழியில் ஒரு ஆடம்பரமான கார் அவர்களின் வழியை மறைக்க, கல்லூரிக்கு நேரமாகிவிட்டதே என்ற கோபத்தில் நிமிர்ந்தவரை , காரிலிருந்து ஸ்டைலாக இறங்கியவனின் கூர்மையான நீல நிற கண்களும், சுருள் முடியும், மலையாளிகளுக்கே உரிய நிறமும்,



கட்டுக்கோப்பான உடலும்... மொத்தத்தில் ஒரு ஹாலிவுட் ஹீரோ மாதிரி இருந்த ராஜேஷ் முதல் பார்வையிலே அவளைக் கவர்ந்துவிட ,அதற்குமேல் அவரின் பார்வையை சந்திக்க முடியாமல் அங்கிருந்து நகர முயன்றவரை, “எக்ஸ்கியூஸ் மீ மிஸ்..." என்றழைத்தார்.

அவரின் அழைப்பில் மஞ்சு தயக்கத்துடன் திரும்பியதும், “சாரி பார் டிஸ்டர்பன்ஸ்...''என்று மன்னிப்பு கோர, மஞ்சுவுக்கு முதன் முதலாக ஒரு ஆணிடம் தனித்து பேசுவது புதிய அனுபவமாக இருந்தாலும் யாராவது பார்த்துவிட்டால் என்னாவது என்கிற பயம் அவரது கண்களில் மிரட்சியாக வெளிப்பட்டது. பதில் சொல்லாமல் ஓட்டமும் நடையுமாக ஓடிய மஞ்சுவையே கண்ணிமைக்காமல் ரசித்துக்கொண்டிருந்தார் ராஜேஷ்.

அவளது அழகிய முகம் ராஜேஷின் நெஞ்சில் ஆழமாக பதிந்துவிட, அன்றுமுதல் அவள் வரும் வழியில் சரியான நேரத்திற்கு வந்து காத்திருக்க ஆரம்பித்தான். மஞ்சு அவரை தூரத்தில் இருந்தே பார்த்துவிட்டாலும் பார்க்காத மாதிரி செல்ல, இந்த மௌன நாடகம் கிட்டத்தட்ட ஒ்ரு வருடம் அரங்கேறியது.

மஞ்சுவின் மனம் ராஜேஷை சரணடைய, நாளடைவில் ராஜேஷின் பின்புலம் தெரிய வந்ததும் தன் ஆசையை ரப்பர் கொண்டு அழித்துவிட்டு மௌன நாடகத்துக்கு மூடுவிழா நடத்திவிட்டார்.

ஆனால் ராஜேஷ் விடாமல் கல்லூரிக்கே வந்து பேச முயற்சிக்க, மனது ஆசைப்பட்டாலும் மடுவுக்கும்,

மலைக்கும் உள்ள வித்தியாசத்தை புத்தி அறிவுறுத்த, மஞ்சு அவர் கண்ணிலே படாமல் ஓடி ஒளிய... கஜினி முகம்மதுவின் அண்ணன் மாதிரி படையெடுத்து தன் ராஜகுமாரியின் சம்மதத்தை வாங்கினார்.

தன் மீது பாசத்தை பொழிகிற பெற்றோரை இரண்டு நாள் உண்ணாவிரதமிருந்து தன் காதலுக்கு சம்மதம் வாங்கிவிடலாம் என்ற ராஜேஷின் கணக்குக்கு ஜீரோ மார்க் கிடைக்க , ராஜேஷ் தன் காதலை கைவிட அவரின் குடும்பம் எல்லா வழிகளிலும் முயற்சித்தது. ராஜேஷோ அவர்கள் எடுத்த முயற்சிகளில் உள்ள ஓட்டைகளைக் கண்டுபிடித்து அதிரடியாக மஞ்சுவை கைபிடித்தார்.

பெற்றோர்கள், அதுவும் பணக்கார பெற்றோர்கள், கற்களால் கட்டப்படுகிற கட்டிடத்திற்கு கொடுக்கிற மரியாதையைக் கூட இரண்டு இதயங்களால் கட்டப்படும் காதலுக்கு கொடுப்பதில்லையே. திட்டம் போட்டு திருமணத்தை நடத்தியது ராஜேஷ் தான் என்றாலும் பழி என்னவோ மஞ்சுவின் மேல் வந்து விழுந்தது.

ராஜேஷின் தாய் பிரபா தேவிக்கு ஒரு பிச்சைக்கார குடும்பத்திலிருந்து ஒருத்தி, தங்கள் அரண்மனைக்கு மருமகளாக வருவதா என்கிற ஆத்திரத்தில் அவரின் தந்தை ஸ்கூல் வாத்தியார் காசிநாதனிடம் கேவலமாக பேச, ஏற்கெனவே மகளின் செயலால் நொந்து போயிருந்தவர், மேலும் பிரபாதேவி கக்கின விஷத்தை தாங்க முடியாமல் மஞ்சுவை அடியோடு தலை முழுகினார்.



அதை தடுக்க முடியாமல் சிவகாமி அம்மாள் தவித்தது மஞ்சுவுக்கு இன்னும் கண்முன்னே நின்றது. அதை நினைத்ததும் தன்னையும் அறியாமல் கண்களில் கண்ணீர் துளிர்க்க, அதை ஒரு விரலால் சுண்டிவிட்டு, பாரமாய் கனத்த நெஞ்சை லேசாக்க ஆழமாய் மூச்சை இழுத்துவிட்டார். கண்கள் தாமாக மணியை பார்க்க, மதியம் நெருங்கி விட்டிருக்க மடியிலே தூங்கி விட்டிருந்த மதுவை சாப்பிட எழுப்பலாம் என்று நினைத்த வினாடியில் காலிங் பெல் அழைத்தது.

மதுவை அவசரமாக எழுப்பிவிட்டு வாசலுக்கு விரைந்து கதவை திறந்தவர் அப்படியே சமைந்து சிலையாக, தாயிடமிருந்து எந்த சத்தமும் வரவில்லையே என்று வாசலுக்கு வந்தவள், புன்னகை தவழ நின்றிருந்த புதியவர்களை பார்த்து எதுவும் புரியாமல் மஞ்சுவை பார்த்தாள். அவரோ பேசும் சக்தியை இழந்தவர் போல கண்கள் விரிய பார்த்து கொண்டிருந்தார்.

மது பொறுமையிழந்து, ''அம்மா யாரு இவங்க, நீங்க ஏன் இப்படியே நிற்கறீங்க?'' என்று கேட்டும் பலனில்லாமல் போக அவர்களிடமே, ''யார் நீங்க... உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்றாள் கேள்வியாக.

வெளியே நின்றிருந்த விஷ்ணுபூபதியின் இதழில் வேதனையான புன்னகை நெளிய, ''நான்...'' என்பதற்குள் சுதிர் குறுக்கிட்டு,

''இவர் உன் தாத்தா விஷ்ணுபூபதி. உங்க அப்பாவின் அப்பா'' என்று அறிமுகம் செய்துவைக்க இப்போது சிலையாக நிற்பது மதுவின் முறையாயிற்று.

கடிதத்திற்கு பதில் வரவில்லை என்றால் யாராவது ஒருவர் வருவார்கள், பிரச்சனை செய்வார்கள் என்று எதிர்பார்த்து காத்திருந்தவளுக்கு, வீட்டின் பெரியவரே வந்ததால் கொஞ்சம் விக்கித்து தான் போனாள். அடுத்து என்ன சொல்வது என்று யோசிக்க முடியாமல் மூளை மறுத்து போக... நல்லவேளையாக மஞ்சு சுதாரித்துக்கொண்டாள்.

''உள்ளே வாங்க... மா... வாங்க'' என்று மாமா என்று வாய்வரைக்கும் வந்ததை அப்படியே அமுக்கி உள்ளே தள்ளி சம்பிரதாயமாக வரவேற்க, உள்ளே வந்த விஷ்ணுபூபதியின் பார்வை அந்த வீட்டை அளவெடுக்க பெரிய பங்களா அளவிற்கு இல்லையென்றாலும் மிகவும் அழகாக, நேர்த்தியாக ஒவ்வொரு இடமும் சுத்தமாக இருந்தது கண்டு அவருக்கு அப்பவே மஞ்சுவின் மேல் ஒரு நல்ல அபிப்ராயம் வளர ஆரம்பித்தது.

சுதிரின் பார்வை மதுவை அளவெடுக்க அவளோ முகத்தை திருப்பிக்கொண்டாள்.

இவர்கள் நம் வீட்டில் சாப்பிடுவார்களோ... இல்லையோ... என்ற போராட்டத்துடன் மஞ்சு தயங்கி தயங்கி நிற்பதை கண்ட பெரியவர், ''என்னம்மா வேண்டாத விருந்தாளியா வந்துட்டேனா? இப்படி பேயை பார்க்கிற மாதிரி பார்க்கிறாய்?'' என்று கேட்டுவிட்டு, ''நீ பார்ப்பதில் எந்த தவறும் இல்லை, நாங்கள் என்ன நீ எங்களை உபசரிக்கிற மாதிரியா நடந்து கொண்டோம்'' என்று தன்னையே குறை சொல்லிக்கொண்டார்.



அதற்கு மேல் மஞ்சு தயங்காமல் உள்ளே ஓடிப்போய் இரண்டு கண்ணாடி டம்ளர்களில் ஆரஞ்சு சாறை நிரப்பி எடுத்து வந்து உபசரிக்க, இருவரும் சந்தோஷமாக எடுத்துக் கொள்வதை பார்த்த மதுவுக்கு மனதில் ஆயிரம் யோசனைகள் ஓடியது.

'இவர்கள் லெட்டர் போட்டு அதிகாரம் செய்த தோரணை என்ன? இப்போ வீடு தேடி வந்து தான் செய்த தப்பை உணர்ந்த மாதிரி பேசும் விதம் என்ன? இதில் எது உண்மை? எது நடிப்பு?' என்ற ஆராய்ச்சியில் இறங்கியிருந்தாள்.

மது பேசாமல் கையை கட்டிக்கொண்டு அமைதியாக நின்றுக்கொண்டிருக்க, அவள் பார்வையில் இருந்த கூர்மையும் அலட்சியத்தையும் கண்டு பூபதிக்கு அப்படியே தன் மகனை ஞாபகப்படுத்த, அவளை வாஞ்சையோடு, "அருகில் வா' என்று கையை நீட்டி அழைத்தார்.

அவரின் அழைப்புக்கு இணங்காமல் மஞ்சுவை நோக்க, 'போ' என்று சைகையால் சம்மதம் தந்ததும் வேண்டா வெறுப்பாக அவர் அருகில் சென்றார்.

அவர் எழுந்து அவளின் முகத்தை தொட்டு தடவி, ''அப்படியே என் பையனை மாதிரியே இருக்கே. நீ பார்ப்பதும் கூட என் ராஜேஷ் பார்க்கிற மாதிரியே இருக்கு. உன் பேர் என்ன கண்ணம்மா'' என்று அவள் தலையை அன்போடு தடவிக்கொண்டே கேட்டார்.

மது விறைப்பாக நின்றாலும் அவரின், ''கண்ணம்மா'' என்ற உருகலும், அவர் காட்டும் அன்பும் நிச்சயம் பொய்யானது இல்லை என்று

உணர்ந்ததும், தன் கோபத்தை சற்று நேரத்திற்கு தள்ளி போட்டு விட்டு பெயரை சொன்னாள்.

''ரொம்ப அழகான பெயர் நாராயணி'' என்று மெச்சிவிட்டு அவள் நெற்றியில் அன்போடு முத்தமிட்டு, அவளை தன் பக்கத்தில் அமரவைத்துக் கொண்டார்.

அவளின் கையை விடாமலே, ''இது எவ்வளவு கொடுமை தெரியுமா மது கண்ணா, உனக்கு நான் தான் உன் தாத்தா என்று தெரியவில்லை. எனக்கு என் பேத்தியின் பெயர் தெரியவில்லை, இந்த நிலைமை இந்த உலகத்தில் வேறு யாருக்கும் வரக் கூடாது'' என்றவரின் கண்ணில் வைரத்துளியாய் கண்ணீர்.

மஞ்சுவுக்கு அவர் செய்த கொடுமைகள் எல்லாம் மறந்து, அவரின் பேச்சு மனதை உருக்கியதில் விழியோரத்தில் கண்ணீர் வர தாத்தாவையும் பேத்தியையுமே ஆசையோடு பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் மது தாயை பார்வையாலே சுட்டெரித்தாள்.

அவளின் எரிச்சலை புரிந்துகொண்ட சுதிர், தாங்கள் வந்த விஷயத்தை சுருக்கமாக அதே சமயம் அழுத்தமாக கூறி முடித்துவிட்டு, ''மது நம் குடும்பத்து வாரிசு, தன் பேத்தியை ராஜபோகமாக வாழ வைக்க வேண்டுமென்று மாமா விரும்புகிறார். அதுமட்டுமில்லை, உங்களையும் மருமகளாக ஏற்றுக்கொள்ள முழுமனதாக முடிவு செய்து விட்டார்கள். இப்பொழுது சொல்லும்மா உன் முடிவை...' என்று அவர்களின் சம்மதத்தை



எதிர்பார்த்து காத்திருக்க, அவர்களை பார்த்ததிலேயே மஞ்சு பாதி உருகிப் போய்விட , பரிதாபமாக மகளின் முகத்தை நோக்கினார்.

தான் எதிர்பார்த்த தருணம் வந்துவிட்டதை உணர்ந்த மது, அவரின் கைப்பிடியிலிருந்து தன் கையை உருவிக்கொண்டு தாயின் அருகில் வந்து நின்று கொண்டு, ''முதலில் பெரிய மனசு வைச்சு, பாரம்பரியம் இல்லாத இந்த ஏழைகளை தேடி வந்ததற்கும், நாங்கள் தந்த ஜூஸை குடித்ததற்கும் மிக்க நன்றி'' என்று எடுத்த எடுப்பிலேயே ஆரம்பிக்க பூபதியின் முகமும், சுதிரின் முகமும் சவுக்கடிபட்டது போல துடித்து விலுக்கென்று நிமிர, மஞ்சுவோ பெரிதாக அதிர்ந்தார்.

மதுவுக்கு எல்லாமே கருத்தில் பட்டாலும் தொடர்ந்து, ''சிறிது நேரம் முன்னாலே என்னை யாரென்று தெரியவில்லை, உன் பேர் தெரியவில்லை. இந்த கொடுமை வேறு யாருக்கும் வரக்கூடாது என்று புலம்பினீர்களே, இதற்கு முழுக்காரணம் யாரென்று யோசித்து பார்த்தீர்களா?'' என்று கொஞ்சம் நிறுத்தி கொஞ்சம் கூட பயமோ தயக்கமோ இல்லாமல் சுட்டு விரலை அவர் பக்கம் சுட்டிக்காட்டி,

''ஒன்லி... அண்ட்... யூ ஒன்லி...! உங்களின் வறட்டு கவுரவம், உங்களின் பணம் இதெல்லாம் தான் இந்த நிலைமைக்கு காரணம். நீங்கள் மட்டும் என் பெற்றோரின் திருமணத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் உங்கள் மனைவி, அதாவது த கிரேட் மிசஸ் பிரபாதேவி அதை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்களா? அல்லது

உங்கள் பேச்சை அவர்கள் மதிக்க மாட்டார்களா?'' என்று கேட்டாள்.

பெரியவர், ''அதில்லை கண்ணம்மா...' என்று பரிதாபமாக ஆரம்பிக்க, அவரை இடைமறித்தாள்.

''என் பெற்றோர் ஒருவரையொருவர் உண்மையாக காதலித்தது என்ன இமாலயக் குற்றமா? உலகத்தில் யாரும் செய்யாததையா என் பெற்றோர் செய்தார்கள்? காதல் என்பது பணம் படைத்தவர்களுக்கு இடையே தான் வரவேண்டும் , ஏழைக்கு வரக்கூடாது என்று சட்டமிருக்கிறதா...?

சரி அவர்கள் உங்களை கேட்காமல் திருமணம் செய்தது தவறு என்றே வைத்து கொண்டாலும் , அவர்களை வாழ்க்கையை நிம்மதியாக வாழ விடாமல் ஓட ஓட விரட்டி அடித்தீர்களேம, அப்போது எங்கே போச்சு இந்த பாசம் பந்தமெல்லாம்? ஓகே அதையும் விடுங்க, நான் பிறந்த பின்பாவது வந்து பார்த்திருக்கலாமே? அது உலக வழக்கம் தானே. என்ன தான் கோபமிருந்தாலும் பேரன், பேத்தி என்று ஒன்று வந்துவிட்டால் பகைமையை மறந்து ஒன்று சேர்வது ஒன்றும் புதிதில்லையே, அப்படியும் நீங்கள் செய்யவில்லை?

அப்போது இந்த பேத்தியை ராஜபோகமாக வாழ வைக்கவேண்டும் என்ற ஆசை வரவில்லையா? அப்போதெல்லாம் இல்லாத பாசம் இப்போது மட்டும் எப்படி வந்தது . ஏன் ஏதாவது போதி மரம் திடீரென்று உங்கள் வீட்டில் முளைத்திருக்கிறதா?'' என்று நக்கலாக கேட்டவள் தொடர்ந்து,



''நீ தான் எங்கள் வாரிசு என்று சொல்கிறீர்களே? நாங்கள் என்ன நீங்கள் வளர்க்கும் நாய்க்குட்டியா? நீங்கள் போ என்று விரட்டியதும் போய்விட வேண்டும், வா என்று அழைத்ததும் உங்கள் கூடவே வந்துவிட வேண்டும். அந்த அளவிற்கா நாங்கள் கேவலமாக போய்விட்டோம்'' என்றாள் கண்களில் அனல் பறக்க.

''நான் ஏதாவது தவறாக பேசியிருந்தால் பெரியவங்க நீங்க என்னை தயவுசெய்து மன்னிக்கவும்'' என வேண்டுமென்றே குரலை ஏற்றி இறக்கி பணிவாக மன்னிப்பும் கேட்டாள்.

மது பேச ஆரம்பிக்கும் போது அதிர்ந்த சுதிர், அவளுடைய கோபம், ஆத்திரம், ஆதங்கம் எல்லாம் பேச்சில் வெளிப்பட்டதை உணர்ந்தார். அவருடைய அதிர்ச்சி மாறி, அதிலிருந்த நியாயத்தை உணர்ந்து அமைதியாக உள்வாங்கிக்கொண்டார்.

விஷ்ணு பூபதிக்கோ பேத்தியின் ஒவ்வொரு பேச்சும் சாட்டையை சுழற்றி அடித்தது போல் இருக்க, அத்தனையையும் பல்லை கடித்துக் கொண்டு தாங்கிக்கொண்டு நிதானமாக யோசித்துப் பார்த்தார்.

'அவள் பேசியதில் தவறே இல்லை. நாம் செய்ததை தான், நம் பேத்தி சுட்டிக் காட்டுகிறாள். இது நிச்சயம் நமக்கு வேண்டும்' என்ற ஆயாசம் முகத்தில் படர தலை குனிந்து அமர்ந்திருந்தார்.

ஆனால் மஞ்சுவின் நிலைமை தான் பரிதாபமாக இருந்தது. மது சொல்வது அத்தனையும் தான் அனுபவித்த துன்பங்கள் என்றாலும் அதை ஒரு வயதான பெரியவரின் முன்னால் குத்திக் காட்டி

பேசியதை தடுக்க முடியாமல், அதை விஷ்ணுபூபதி எப்படி எடுத்து கொள்வாரோ... என்ன சொல்வாரோ? என்ற பயத்தில் கண்களில் மிரட்சியோடு சுதிரையும், விஷ்ணுபூபதியையும் பார்த்துக்கொண்டு இருந்தார்.

மது பேசிமுடித்ததும் மஞ்சு முந்திக்கொண்டு, ''சாரி... சாரி... தப்பா நினைக்காதீங்க. அவள் சின்ன பெண், ஏதோ கோபத்தில் உங்களைப் பற்றி தெரியாமல் பேசிவிட்டாள். அவளுக்காக நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்'' என்று இரு கைகூப்பி மன்னிப்பு கேட்க, தாயை எரித்துவிடுவது போல பார்த்துவிட்டு, எரிச்சலுடன் முகத்தை திருப்பிக்கொண்டாள் மது.

மஞ்சுவின் அருகில் வந்தவர், "அம்மா மருமகளே என் பேத்தியை மன்னிக்க எனக்கென்ன தகுதியிருக்கு... நாங்கள் உங்களுக்கு இழைத்த கொடுமைகளை தானே சொல்லிக் காட்டினாள். அதை காதால் கேட்கும் போதே நெஞ்சம் வலிக்கிறதே, அதை அனுபவித்த உங்களுக்கு எந்தளவிற்கு வலித்திருக்கும் என்று இப்பொழுது புரிகிறது.

நாங்கள் கூப்பிட்டவுடனேயே எங்கள் பின்னாடி நீங்கள் வந்திருந்தால்தான் எனக்கு உண்மையில் கஷ்டமாக இருந்திருக்கும். ஆனால் இப்போது தான் சந்தோஷமாக இருக்கிறது. என் பேத்தி ராஜேஷின் மறுபதிப்பு என்று நிரூபித்துவிட்டாள். இதை விட வேறென்ன சந்தோஷம் வேண்டும் எங்களுக்கு''



என்றவர், மதுவின் கையை தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டார்.

''நான் செய்தது எல்லாம் தவறு தான் கண்ணம்மா. இந்த கிழவன் புத்தி இல்லாமல் செய்துவிட்டேன். அது எவ்வளவு பெரிய தவறு என்று இன்று தான் எனக்கு புரிகிறது. எங்களை பற்றி மட்டும் யோசித்தேனே தவிர, உங்கள் மனநிலைகளை யோசிக்க தவறிவிட்டேன். இந்த மாதிரி என் தவறுகளை சுட்டி காட்ட உன்னை மாதிரி அங்கே யாருமே இல்லை. இந்த வயதில் உனக்கு இருக்கிற தெளிவு எனக்கில்லாமல் போய்விட்டது. நீ சொன்ன மாதிரி நான் என் மருமகளை அப்பொதே ஏற்றுக் கொண்டிருந்தால் என் மனைவி நிச்சயம் அதை பின்பற்றியிருப்பாள். எல்லாமே என் தவறு தான் .

என்னை மன்னிச்சிடு கண்ணம்மா? இதற்கு நீ என்ன தண்டனை கொடுத்தாலும் இந்த கிழவன் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நீ என்னுடன் வரமாட்டேன் என்று மட்டும் சொல்லிவிடாதே செல்லம். என் சொத்துக்கெல்லாம் நீ தானம்மா வாரிசு'' என்று அவரின் கெஞ்சலில் அதுவரை இளக தொடங்கிய மதுவின் மனது, ''எல்லா சொத்துகளுக்கும் நீ தான் வாரிசு'' என்று அவர்சொன்னதும், வேதாளம் முருங்கை மரம் ஏறின மாதிரி அவள் முகத்தில் கடினத்தன்மை மீண்டும் குடியேற, அவரிடமிருந்து கைகளை உதறிக்கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

# 5

மஞ்சுவுக்கும் சுதிருக்கும் அவள் எப்படியும் பூபதியின் உருக்கமான பேச்சில் மனம் மாறிவிடுவாள் என்று எதிர்பார்த்திருக்க அவள் கையை உதறிக்கொண்டு சென்றவுடன் மீண்டும் அதிர, பூபதி நாம் என்ன தவறாக சொல்லிவிட்டோம் என்று புரியாமல் விக்கித்து போயிருந்தார்.

அதுவரை அங்கே நடப்பவைகளை ஒரு பார்வையாளராக பார்த்துக்கொண்டிருந்த சுதிர், அவளருகே வந்து, ''என்னம்மா மது, தாத்தா தான் உன்னிடம் மன்னிப்பு கேட்டுவிட்டாரே... இன்னுமென்ன கோபம்...'' என்றதும், சுதிரிடம் தன் கோபத்தை காட்டி புண்ணியமில்லை என்று நினைத்தவள் கண்களை இறுக மூடி திறந்தாள்.

''அவர் பேசியது, மன்னிப்பு கேட்டதெல்லாம் சரி. கடைசியாக என்ன சொன்னார் என்று உங்களுக்கு புரியவில்லையா? அவர் சொத்துக்கெல்லாம் நான் தான் வாரிசு என்றார். 'தட் மீன்ஸ்' அவர் சொத்துக்கு நான் தான் வாரிசு என்று சொன்னவுடன் அந்த சொத்துக்கு மயங்கி அவர் பின்னாடியே வந்துவிடுவேன் என்ற எண்ணம் தானே அவரை அப்படி சொல்ல வைத்தது.

யாருக்கு வேண்டும் அவருடைய சொத்து. இத்தனை வருடம் யாருக்காக பூதம் போல பாதுகாத்து வைத்திருந்தாரோ, அவர்களுக்கே கொண்டு போய்



கொடுக்க சொல்லுங்கள். இந்த பணம் தானே என் அப்பா-அம்மாவை ஒரு தூசு போல தூக்கியெறிய வைத்தது. அப்புறம் எப்படி...? அந்த சொத்தை காட்டி கூப்பிட்டால் நாங்கள் வருவோம் என்று நினைத்தீர்கள்?'' என்று கோபமாக கேட்டபிறகு தான் பூபதிக்கு நாம் என்ன தவறு செய்திருக்கிறோம் என்று புரிந்தது.

''தப்புதாண்டா மது கண்ணா, ஏதோ தெரியாத்தனமா சொல்லிட்டேன். வயசாயிடுச்சு அல்லவா அது தான் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பேசிவிட்டேன். இனி அந்த மாதிரி சொல்ல மாட்டேன் செல்லம்'' என்று இறங்கி வந்து மன்னிப்பு கேட்டார்.

வீட்டில் விஷ்ணுபூபதி என்றாலே எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாக இருக்கிறவர் இங்கு மதுவுக்கு அடங்கிப் போனது கண்டு மிகவும் ஆச்சரியமாக இருந்தது சுதிருக்கு. அதே சமயம் அவர் மனதிற்குள் நம் பையன் முகுந்துக்கு மது மாதிரி ஒரு பெண் தான் வேண்டும் என்ற எண்ணமும் ஓடிக்கொண்டு இருந்தது.

அதன் பிறகு மதுவின் கோபம் கொஞ்சம் குறைய மஞ்சு, சுதிர், பூபதியும் மாற்றி மாற்றி பேசி அவளை கேரளாவிலுள்ள அவர்களின் வீட்டிற்கு வருவதற்கு ஒப்புக்கொள்ள வைத்தார்கள். அவள் அப்போதும் வேண்டா வெறுப்பாக விஷ்ணுபூபதியை நேருக்கு நேராக பார்த்தாள்.

''உங்கள் விருப்பப்படி நாங்கள் அங்கு வருகிறோம். ஆனால் அங்கு வந்த பிறகு என்

அம்மாவை யாராவது, ஏதாவது மரியாதை குறைவாக பேசினார்கள்... நடத்தினார்கள் என்றால் அந்த நிமிடமே நாங்கள் அங்கிருந்து கிளம்பிவிடுவோம். இதற்கு சம்மதம் என்றால் சொல்லுங்கள் வருகிறோம்'' என்றாள் சற்று விறைப்பாகவே.

அவளின் தன்மானத்தையும், மஞ்சுவின் மேல் வைத்திருக்கிற அளவிட முடியாத பாசத்தையும் வியந்து கொண்டே அவளுக்கு அந்த மாதிரி நடக்காது என்று வாக்களிக்கவும், மற்றவைகளை எல்லாம் சுமுகமாக பேசி முடித்ததும், மஞ்சு அவர்களை சாப்பிட அழைக்க இருவரும் மறுக்காமல் சாப்பிட்டனர்.

மஞ்சு வேலையை ராஜினாமா செய்வது என்றும் மது படிப்பை கேரளாவில் தொடர்வது என்றும் கடகடவென்று பூபதி முடிவெடுக்க, ''நான் இடையில் புகுந்து பேசுவதற்கு மன்னிக்கவும். உங்கள் ஆசைக்கு உட்பட்டு நாங்கள் அங்கே வருகிறோம். அந்த சூழ்நிலை, அங்கிருப்பவர்களின் மனநிலை இதெல்லாம் எங்களுக்கு ஒத்துப் போனால் தான் அங்கே தொடர்ந்து இருப்பது பற்றி யோசிப்போம். இல்லையென்றால் திரும்பி இங்கேயே வந்துவிடுவோம். அதனால் நீங்கள் எடுத்த முடிவை ஒரு மாதம் கழித்து செயல்படுத்தலாம் . அதுவரை நானும் அம்மாவும் லீவ் எடுத்துகொண்டு வருகிறோம்'' என்று கறாராக பேசினாள்.

பூபதிக்கு இவளை எப்படி நம்ப வைத்து நம் பாசத்தையும், அன்பையும் புரியவைப்பது என்று மலைப்பாக இருந்தது. சுதிருக்கோ மதுவின் தெளிவான முடிவைக் கண்டு வாயடைத்துப் போனது.



இருவருமே ஒருவரை ஒருவர் பார்த்துகொண்டு ஒரு மனதாக, ''சரிம்மா. உன் இஷ்டம். இப்போது எதையும் வாய் வார்த்தையால் நம்ப வைக்க முடியாது. நீங்கள் காயப் பட்டவர்கள். அந்த வலி சீக்கிரத்தில் போகாது. என்னால் உன் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிகிறது. உன் ஆசைப்படியே ஒரு மாதம் வந்து தங்கியபிறகு, உன் முடிவை சொல்'' என்று ஒத்துக்கொண்டார்.

“அப்புறம் போட்டது போட்டபடி உடனே வர முடியாது... எங்களுக்கு ஒருவாரம் அவகாசம் வேண்டும்...' என்றதும் பூபதி சற்றும் யோசியாமல், 'சரிடா மது கண்ணா. உன் கூற்றுப்படியே செய்யலாம்... அதுவரை நான் இங்கேயே தங்கலாமா?' என்று அனுமதி கேட்க, மனம் பதறிய மஞ்சு 'ஐயோ. என்ன இது. இப்படி கேட்கறீங்க... இது உங்க வீடு மாதிரி... 'என்றதும் அவர் மதுவை நோக்க, 'அதான் உங்க மருமகளே சொல்லிட்டாங்களே... அப்புறம் என்ன...' என்று எரிச்சலுடன் கூறிவிட்டு, தன்னறையை நோக்கி செல்ல புன்னகையுடன் பார்வையால் தொடர்ந்தார்.

சுதிரிடம் திரும்பி, “மாப்பிள்ளை, நீங்க போய் முகுந்திடம் எல்லா ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லுங்கள். அவனிடம் சொல்லிவிட்டால் எல்லாவற்றையும் சரியாக செய்துவிடுவான். பாரதியிடமும், மற்றவர்களிடமும் இவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று கொஞ்சம் எச்சரித்து வையுங்கள் '' என்று கூறிவிட்டு அவரிடம் வேறு சில வேலைகளையும் சொல்லி ஊருக்கு அனுப்பி வைக்கார்

கேரளாவில் முகுந்துக்கு நிலைகொள்ளவில்லை. எப்போது தாத்தாவும் அப்பாவும் வருவார்கள், அவர்களிடம் கொஞ்சம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு சென்னைக்கு செல்லலாம் என்று துடித்துக் கொண்டிருக்க, சுதிர் மட்டுமே திரும்பி வந்ததால், கேள்வியாக அவரை பார்த்தான். அவர் முகத்தில் எந்த குழப்பமும் இல்லாமல் தெளிவாக இருந்ததை கண்டு ஓரளவு விஷயத்தை ஊகித்துக் கொண்டான்.

"தாத்தா வரவில்லையா'' என்ற மகனின் கேள்விக்கு,

"சொல்கிறேன்..." என்றவர் அங்கு குழுமியிருந்த குடும்ப அங்கத்தினர்களை பார்த்துப் புன்முறுவல் பூத்து. "அத்தை உங்க ஆசைப்படியே உங்க பேத்தி இங்கே வரப்போறா. இப்போ சந்தோஷம் தானே'' என்று கேட்டுவிட்டு, "பாரதி..., நாராயணியும் அவள் பெண்ணும் தங்குவதற்கு ரூமை ஏற்பாடு செய்துவை" என்று அவரிடம் கூறிவிட்டு,

முகுந்திடம், "உன் அத்தையும், அவள் பெண்ணும் காலேஜுக்கு லீவு போடணும், பெண்கள் இல்லையா அவர்களுக்கு ஷாப்பிங் அது இது என்று நிறைய வேலைகள் இருக்கும். அதனால் ஒரு வாரம் கழித்து வருகிறேன் என்று சொன்னார்கள். உங்கள் தாத்தாவும் அதுவரை நானும் இங்கேயே தங்கிவிடுகிறேன் என்று சொல்லிவிட்டார்'' என்று முடித்தவர் ஞாபகம் வந்தவராக,

"ஆஹா... அவர்கள் ஒரு மாதம் தான் இங்கு தங்குவதற்கு வருகிறார்கள்...' என்றதும் முகுந்த்தை



தவிர மற்ற எல்லோர் முகத்திலிருந்த சந்தோஷம் மறைந்தது.

பிரபாதேவி முந்திக்கொண்டு, "என் பேத்தி ஒரு மாதம் தான் இங்கு தங்குவாளா? போய்விடுவாளா? என்று ஏக்கமாக கேட்டார். அப்புறம் தொடர்ந்து பாரதியும் இதையே கேட்டதும், அவர்களின் ஏக்கம் புரிந்தாலும் மது எடுத்த முடிவு சரிதானே என்று மனதில் தோன்றியதால், ''அத்தை அவள் இங்கே ஒரு மாதம் தங்குவதும், அல்லது இங்கேயே நிரந்தரமாக தங்குவதும் உங்கள் கையில் தான் இருக்கிறது'' என்றவரின் பூடகமான பேச்சு புரியாமல் அனைவரும் விழித்தனர்.

"இந்த இடம், சூழ்நிலை, நீங்கள் எல்லோரும் நடந்துக்கொள்ளும் முறை இதெல்லாம் பார்த்து தான் இங்கே நிரந்தரமாக தங்கலாமா, வேண்டாமா? என்று முடிவு செய்வேன் என்று உங்கள் பேத்தி சொல்லிவிட்டாள். அதுவும் சரி தானே. சின்ன பெண்ணாக இருந்தாலும் பரவாயில்லை .இருபத்தியொரு வயது பெண், திடீரென்று அவளை வேறு ஒரு குடும்ப சூழ்நிலையில் வந்து தங்க சொன்னால் எப்படி தங்குவாள்?

ஒரு மரத்தை அடியோடு பிடிங்கி வேறு இடத்தில் நடுகிற மாதிரி தானே இதுவும். அந்த மரம் அந்த மண்ணில் வேர்விட்டு அதன் பிறகு துளிர் விட சில காலம் எடுக்கத்தான் செய்யும் . அதற்கே நாம் பொறுமையாக காத்துகொண்டு தானே இருக்கிறோம். ஒரு மரத்திற்கே இப்படியென்றால் அவள் இப்படி

சொன்னதில் என்ன தவறு இருக்கு?'' என்று அவர்களையே திருப்பிக் கேட்டார்.

அவரின் கேள்வி பாரதியையும், திலீப்பையும் உடனே சரி தான் என்று தலையாட்ட வைக்க, ''நாராயணி தான் என் பேத்திக்கு இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக்கொடுத்து கெடுத்து வைத்திருக்கிறாள், இங்கு வரட்டும், அவளை ஒரு கை பார்க்கிறேன்'' என்று பொருமிக்கொண்டு எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தார் மூத்தவள்.

முகுந்துக்கு இதிலெல்லாம் இஷ்டமில்லை யென்றாலும் பாட்டியின் முக வாட்டத்தை கண்டு, முகம் தெரியாத மாமா மகளின் மேல் லேசாக கோபம் வந்தது.

''இங்கே உனக்காக ஏகப்பட்ட சொத்து காத்திருக்கிறது. நீதான் அதற்கெல்லாம் சொந்தக்காரி என்று சொல்லியிருந்தால் உடனே இங்கேயே தங்க சம்மதம் சொல்லியிருப்பாளே அந்த மகாராணி'' என்றான் நக்கலாக .

அவன் சொன்னதை கேட்ட சுதிர் அவனை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்து, மெலிதாக சிரிக்க ஆரம்பித்தவர், கொஞ்ச கொஞ்சமாக பெரிதாக வாய்விட்டு சிரிக்கவும், ''இப்போ நான் என்ன ஜோக் சொன்னேனென்று சிரிக்கிறீர்கள்?'' என்று கொஞ்சம் எரிச்சலுடன் கேட்டான்.

''இதே மாதிரி தான் உன் தாத்தா வாய் விட்டு அவளிடம் செமத்தியாக வாங்கி கட்டிக்கொண்டார். அதுவரை இங்கு வரகிறேன் என்றவள்



சொத்துக்கெல்லாம் நீ தான் வாரிசு என்றதும் உங்க சொத்தை குப்பையில் கொண்டு கொட்டுங்கள், எனக்கு ஒன்றும் தேவையில்லை... என்னால் வரமுடியாது'' என்று அவரை தூக்கியெறிந்து பேசிவிட்டாள். அதன் பிறகு அவளை சமாதானம் செய்வதற்குள் எங்களுக்கு போதும்போதும் என்றாகிவிட்டது'' என்றதும் முகுந்த் உள்பட எல்லோருக்குமே ஆச்சரியம் தாங்கவில்லை.

ஆனாலும் முகுந்த் மனதில், 'தன்னை நல்லவளாக காட்டிக்கொள்ள இது வெறும் நாடகமாக இருக்குமோ' என்று அவர்கள் மேல் உள்ள கோபத்தால், மனது வக்கிரமாக நினைத்ததை வெளிக்காட்டிகொள்ளாமல், ஒரு புருவத்தை தூக்கி, ''ஒஹ்...! அப்படிப்பட்ட மகாராணியின் பேரை நீங்கள் இன்னும் சொல்லவே இல்லையே? அவள் பேர் என்ன? என்ன படிக்கிறாள்?'' என்றான் படு அலட்சியமாக.

திலீப், அப்பா சொன்னதை அண்ணன் நம்பவில்லை என்று புரிந்து கொண்டான். அவனுக்கு தெரியும். அண்ணன் எப்பவுமே இப்படி தான். எதையுமே சீக்கிரம் நம்பமாட்டான். பொறுத்திருந்து பார்ப்போம் அண்ணன் நினைக்கிற மாதிரியா? இல்லை அப்பா சொன்ன மாதிரியா? என்று எண்ணிக்கொண்டே சுதிரை பார்த்தான்.

அவனின் அலட்சியத்தை கவனிக்காமல், ''அத்தை உங்க பேத்தி எவ்வளவு அழகு தெரியுமா? அப்படியே உங்க பையன் மாதிரியே இருக்கிறாள்...'' என்றவர் அவளின் பெயரை சொல்லிவிட்டு, அவளின்

படிப்பு, மஞ்சுவின் வேலை பற்றியெல்லாம் சொல்லிக்கொண்டே செல்ல, அவனுக்கு அதற்கு மேல் எதுவும் காதில் விழவில்லை.

சென்னையில் பூபதி மதுவிடம் சாதாரணமாக பேசிப்பழக எவ்வளவு முயற்சிகள் செய்தாலும் அவள் அவரிடம் ஒட்டாமல் எப்பொழுதும் முகத்தில் எரிச்சலுடனும், முணுக்முணுக்கென்று வந்த கோபத்துடனும் இருப்பதை கவனித்த மஞ்சு, மதுவின் அறைக்கு செல்ல, அவள் ஒரு புத்தகத்தை வைத்து கொண்டு கண்கள் அதில் பதியாமல் எதையோ சிந்தித்து கொண்டு இருப்பதை கண்டு பக்கத்தில் போய் அமர்ந்தாள்.

“என்னாச்சு மது ஏன் இப்படி நடந்து கொள்கிறாய்? உன் தாத்தா பாவம் வயதானவர் , உன் கோபம் நியாயமானது தான். அதற்காக அதை அவரிடம் காட்டி என்ன புண்ணியம்? பார், நீ சரியாகப் பேசவில்லை என்று எப்படி கஷ்டப்படுகிறார் '' என்று மென்மையாக கேட்டு அவள் தலையை வருட, அவரின் கையை கோபமாக தட்டிவிட்டு உஷ்ணமாக முறைத்தாள் மது.

“அவர் இன்று கஷ்டப்படுகிறார் என்று சொல்கிறாயே; அங்கு சென்ற பிறகு நீ எப்படி கஷ்டப்படபோகிறாயோ என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன் . வயதாகிவிட்டால் செய்த தவறுகள் எல்லாம் இல்லையென்று ஆகிவிடுமா? ஏன் உனக்கு சின்ன வயசு தானே. நியாயமாக பார்த்தால் நீ பேசியிருக்கணும் இதையெல்லாம். ஆனால் நீ எல்லாவற்றையும் பெருந்தன்மையாக எடுத்து கொண்டாய்.



அதே மாதிரி அவர்கள் அப்போது இருந்திருந்தால் நான் இப்போது ஏன் பேசியிருக்க போகிறேன். அப்போ அவருக்கு இள வயதாம் ... கோபப்பட்டாராம். இப்போது வயசாகிவிட்டதால் கோபம் போய்விட்டதாம். இதை என்னை நம்பச்சொல்கிறாயா ? அம்மா, பாம்பு என்றுமே பாம்பு தான் . அதன் விஷம் என்றுமே மாறாது .

என் அப்பா மிகவும் ரோஷக்காரர். அவருக்கு பிறந்த நான் இப்படி தான் இருக்க முடியும். நீ வேண்டுமென்றால் அவர்களுக்கு தழைந்து போ. ஆனால் ஒரு விஷயம். உன்னை ஏதாவது மரியாதைக் குறைவாக நடத்தினார்கள் என்றால் நான் பார்த்துகொண்டு சும்மாயிருக்க மாட்டேன். அந்த நிமிஷமே நீ என்னுடன் வீட்டை விட்டு கிளம்பியாகணும்'' என்று அவரை எச்சரித்துவிட்டு ,

“நான் சுஸான் ஆன்ட்டி வீடு வரைக்கும் போய் வரேன், இங்கே எனக்கு மூச்சு முட்டுது'' என்று கட்டிலை விட்டிறங்கி வெளியே சென்றவள் . அங்கே விஷ்ணுபூபதி சுவரில் சாய்ந்து கூனிக்குறுகி நிற்பதைப் பார்த்ததும் ஒரு நிமிடம் 'ஐயோ' என்று மனம் பதைபதைத்துபோனது.

ஆனால் அடுத்த நிமிடமே, 'ஒரு காலத்தில் வினையை விதைச்சவங்க, இப்போ அதை அறுவடை செய்யாறாங்க' என்று மனது மீண்டும் வக்கரித்துக்கொள்ள. அவரை கண்டுகொள்ளாமல் வெளியே சென்றவள் அங்கே காரிலிருந்து இறங்கியவர்களை கண்டதும் மகிழ்ச்சிக்கு தாவினாள்.

மதுவை எப்படி தான் சமாளிக்க போகிறோமோ என்று சங்கடப்பட்டுக் கொண்டே வெளியே வந்தவர் அங்கே பூபதியை பார்த்ததும் விதிர்த்து போக, அவசரமாக மகளுக்காக மன்னிப்பு கேட்டார்.

''உப்பை தின்றவன் தண்ணி குடித்துத் தானே ஆகவேண்டும் . என் நிலைமையும் அதுதான். நீ கவலைப்படாதேம்மா. மது என் அன்பை சீக்கிரமே புரிந்து கொள்வாள். மது பயப்படற மாதிரி உனக்கு எந்த பாதகமும் வராமல் பார்த்துக்கொள்கிறேன். எனக்கு நீ இன்னொரு மகள் மாதிரி'' என்று அவர் தலையை அன்பாக வருடி கொடுத்து, 'கடவுளே மதுவின் மனதை சீக்கிரமே மாற்று' என்று வேண்டிக்கொண்டார்.

''அம்மா இங்கே வாங்க.யார் வந்திருக்காங்க என்று பாருங்க...?' என்ற மகளின் சந்தோஷக் குரலைக் கேட்டு ஆச்சரியப்பட்டுக்கொண்டே வெளியே வந்தவர் அவருடைய அண்ணன் தீனா, அண்ணி, அம்மா, மற்றும் ரிக்கியை கண்டதும் மகிழ்ச்சியில் பேச்சே வராமல் நின்றுவிட்டார்.

கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் துளிர்க்க நின்ற மஞ்சுவை சிவகாமி அம்மாள் அருகில் வந்து மகளின் கண்ணீரைத் துடைத்து அன்புடன் கட்டிக்கொள்ள, உள்ளேயிருந்து வந்த பூபதி இவர்களைக் கண்டதும் எதுவும் புரியாமல் மஞ்சுவை பார்த்தார்.

அதுவரை இருந்த சந்தோஷம் மறைந்து, தாயின் அணைப்பிலிருந்து விலகி, 'அச்சோ இவர் இருப்பதை எப்படி மறந்தேன். இவர்கள் யார் என்று தெரிந்தால்



என்ன சொல்வாரோ?' என்ற பயம் கண்ணில் மின்ன மதுவை நோக்கினாள்.

அவளோ தாயின் முக மாற்றத்தை கவனிக்காமல் பூபதியின் அருகில் சென்று அவர் கையை பிடித்துக்கொண்டு, அவரை அறிமுகப்படுத்தி அவர் வந்த விஷயத்தையும் கூற, மஞ்சுவின் குடும்பம் பதட்டமடைந்தது.

மதுவுக்கு அவர்களின் மனநிலை புரிய, விஷ்ணுபூபதிக்கு அவர்களையும் அறிமுகப் படுத்தி விட்டு, ''எங்க தாத்தா ஒன்றும் சொல்ல மாட்டார். அவர் முன்னே மாதிரி இல்லை. அதனால் நீங்கள் பயப்படவேண்டிய அவசியமே இல்லை. அப்படித்தானே தாத்தா?'' என்று கேட்டாள்.

அவள் அறிமுகப்படுத்தியதைவிட தன் பேத்தி தன் கையை பிடித்துக்கொண்டு பக்கத்தில் நிற்பதை கண்டு மனம் ஆனந்தத்தில் துள்ளி குதிக்க, மதுவை தோளோடு அணைத்து கொண்டார்.

''மது சொல்ற மாதிரி எனக்கு ஏன் பயப்படறீங்க. மஞ்சு உங்க பெண் ...மது உங்களுக்கும் பேத்தி தான். நீங்க தாராளமா இவர்களை பார்க்கலாம். அதுக்கு உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கு'' என்று அவர் வாயாலே சொன்னதும் அவர்களின் முகம் தெளிந்தது.

ஆனால் மஞ்சுவுக்கு எட்டாவது அதிசயத்தை பார்த்த மாதிரி மதுவையே விழிகள் விரிய பார்த்துக் கொண்டிருந்தார். 'சற்று நேரம் முன்னால் பூபதியின் மேல் கோபப்பட்டது என்ன? இப்போது என்னடாவென்றால் அவருடன் கையை

கோர்த்துக்கொண்டு தாத்தா என்று ஒட்டி உறவாடுகிறாளே' என்று கொஞ்சம் குழப்பத்தோடு இருந்தார்.

ரிக்கிக்கு மதுவை பார்த்து ஒரு பக்கம் பாவமாகவும், அதே சமயம் பெருமையாகவும் இருந்தது. 'எனக்காவது தாத்தா என்ற ஒரு உறவு குழந்தையிலிருந்து இருந்தது. ஆனால் மது பாவம். இப்போதுதான் கிடைத்திருக்கிறது. இனியாவது அது அவளுக்கு நிலைத்து நிற்கவேண்டும்' என்று மனமார வேண்டிக்கொண்டான்.

அவர்கள் அங்கே தங்கிய இரண்டு நாளும் மது தாத்தாவை கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் அவருடன் பாசமாக பழக அதுவே அவருக்கு கிரீடத்தை தூக்கி தலைமேல் வைத்தது போல இருக்க, அடிக்கடி மதுவை பாசத்துடன் அணைத்துகொண்டார்.

மதுவுக்கு இத்தனை வருடம் கிடைக்காத பாசத்தை, இந்த இரண்டு நாட்களில் அனைவரும் வாரி வாரி வழங்கவும்... பாசத்தில் அவளுக்கு மூச்சு திணறியது அவர்கள் புறப்படும் முன் பூபதி அவர்களுக்கு அவரது வீட்டு போன் நம்பரை கொடுத்தார்.

''உங்களுக்கு மதுவிடமோ மஞ்சுவிடமோ பேச வேண்டும் என்று தோன்றினால் இந்த நம்பரில் பேசுங்கள், எங்களது வீட்டுக்கும் வாருங்கள்'' என்று அழைப்பும் விடுத்தது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'நாம் காண்பதெல்லாம் கனவா? அல்லது நினைவா?' என்று நினைக்குமளவிற்கு பூபதி மிகவும் அன்பாகவும், மரியாதையாகவும் நடந்து கொண்டார்.



ஆனால் மஞ்சுவுக்கு அவருடைய சொந்தபந்தம் வந்த இன்பத்தை விட, மது அவள் தாத்தாவிடம் காட்டிய அன்பும், மரியாதையும் தான் அதிக சந்தோஷத்தைக் கொடுத்தது.

# 6

**தா**த்தாவும் பேத்தியும் இழைவதை கண்ட மஞ்சு ''மது, நீ தாத்தாவை புரிந்து கொண்டாயா? அவரின் அன்பை ஏற்றுக்கொண்டாயா? என்னால் நம்பவே முடியவில்லை. நீ இவ்வளவு சீக்கிரம் மனசு மாறுவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை . எப்படியோ அந்த கடவுளின் கிருபையால் எல்லாம் நல்லபடியாக முடிந்தது'' என்று நிம்மதியாக பெருமூச்சு விட்டவரை ''ஐயோ பாவம்...'' என்றபடி பார்த்தாள்.

''ஆனாலும் உனக்கு ரொம்ப பேராசைம்மா . நான் அவருடைய அன்பை புரிந்து கொண்டேனா... இல்லையா ... என்ற ஆராய்ச்சி இருக்கட்டும். முதலில் அவர் காட்டுவது உண்மையான அன்புதானா...? இல்லையா...? என்று தெரியாமல் ஏன் நீ இப்படியெல்லாம் ஸ்டேட்மென்ட் விடறே...?

அப்புறம் ஏன் அவரிடம் அப்படி நடந்து கொண்டாய் என்ற உன் கேள்விக்கு என் பதில் இது தான். அவர் என் அப்பாவின் அப்பா. அவரை மற்றவர்கள் முன்னால் என்னால் விட்டுக்கொடுத்து

பேச முடியாது. அதே மாதிரி உன்குடும்பத்து ஆட்களையும் இவரிடம் விட்டுக்கொடுக்க மாட்டேன்.

உறவுகள் என்பது மென்மையான மலரை தொடுகிற மாதிரியான ஒரு உணர்வு . அதை மிகவும் மென்மையாக கையாள வேண்டுமே தவிர, அதை கசக்கி முகரக் கூடாது... அவர் தான் உறவுகளை விட பணம் தான் பெரிது என்று காலில் போட்டு நசுக்கினாரென்றால் நானும் அப்படி செய்வது நல்லதல்ல... நான் உன் ஆசைப்படி இருக்க வேண்டுமென்று நினைத்தால், நாம் நேரில் சென்று பார்த்த பிறகு தான் சொல்ல முடியும். அதுவரைக்கும் கொஞ்சம் நிதானமாகவே இரும்மா'' என்றாள் மது.

மகள் பேசுவதை ஆவென்று வாய் பிளந்து கொண்டு கேட்டவர், அவளின் பேச்சுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் ஓய்ந்து போய் அமைதி காத்தாலும் மனதினுள், 'என்ன மாதிரி பெண்ணிவள்? ஒரு பக்கம் தாத்தாவை எதிரியாய் பார்க்கிறாள், இன்னொரு பக்கம் அவரை விட்டுக் கொடுக்காமல் பேசுகிறாள் .

உறவுகளின் அருமையை மது இவ்வளவு தெளிவாக புரிந்து வைத்திருக்கிற அளவுக்கு நாம் தான் புரிந்து கொள்ளவில்லையா? அல்லது நமக்கு அந்த அளவு தெளிவு இல்லையா? இவளின் குணாதிசயம் விநோதமாக இருக்கிறதே . இந்த மாதிரி ஆழ்ந்து சிந்திப்பவளை அங்கிருப்பவர்கள் எப்படி கையாளப் போகிறார்கள்' என்ற பயம் அவரை பிடித்துக்கொண்டது.



மது சொன்ன ஒரு வார கெடுவுக்கு முன்பே அவர்களின் வேலை முடிந்துவிட, பேரனுக்கு போன் செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டார்களா என்று தெரிந்துகொண்டார். சுதிரிடம் பிளைட் டிக்கெட்டை ஏற்பாடு செய்யச் சொல்லிவிட்டு ஏர்போர்ட்டிற்கு வரச் சொல்லி போனை வைத்தார்.

அடுத்த நாள் காலையிலே சென்னை வீட்டை பூட்டி மஞ்சுவின் இனிய தோழியான சுஸானிடம் சாவியை கொடுத்து, அடிக்கடி வந்து பார்த்து கொள்ளுமாறு சொல்லிவிட்டு கிளம்பிய நேரத்தில் இருவருக்குமே மனம் கனத்துப் போனது. பிளைட் சரியான நேரத்திற்கு புறப்பட்டு திருவனந்தபுரத்தை அடைய, வண்டியோடு காத்திருந்த சுதிர் இருவரையும் அன்போடு வரவேற்ற பின், அவர்களை சுமந்து கொண்டு கார் செம்பரகுளத்தை நோக்கி பயணமானது.

மஞ்சுவுக்கு தன் பிறந்த ஊரை பார்க்கப்போகிறோம் என்ற ஆவலோடு கொஞ்சம் பயமும் கலந்திருந்நது. மதுவுக்கோ 'இந்த கூத்தெல்லாம் எத்தனை நாளைக்கு என்று தெரியவில்லை. இதற்கு இவ்வளவு தூர பயணம் ஒரு கேடா' என்று மனதுள் கசப்பாக நினைத்தவாறு வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

கண்ணாடி வழியாக மதுவின் முகத்தை பார்த்த சுதிர், ''மேடம் இன்னும் சரியாகவில்லையா? அங்கே போனால் எல்லாம் சரியாகிவிடும்'' என்று மனதுள் எதையோ நினைத்துக்கொண்டு சிரித்துக்கொண்டார்.

அரண்மனை போலிருந்த பங்களா முன் கார் நின்றது. அதுவரை 'கடனே' என்று வந்த மதுவுக்கு அந்த பங்களாவை பார்த்ததும் மனதுள் ஏதோ இனம் புரியாத ஓர் உணர்வு ஏற்பட்டது.

தன் தந்தை பிறந்து வளர்ந்த இடம் என்றதும் அவளையுமறியாமல் ஒரு பாசம் அவளை ஆட்கொள்ள, மஞ்சுவுக்கோ அந்த பங்களாவை பார்த்ததும் வந்த ராஜேஷின் ஞாபகங்களின் தாக்கத்தில் விழிகளில் கண்ணீர் வழிய தொடங்கியது. பூபதி காரிலிருந்து இறங்க... ஓடி வந்த வேலையாட்கள் கதவை திறக்க முயலும்முன், பூபதி அவர்களை ஓரங்கட்டிவிட்டு தன் பேத்திக்கு அவரே கதவை திறந்தார்.

பாரதி ஆரத்தி தட்டோடு வர, அவரை தொடர்ந்து வந்த பிரபாதேவி தன் பெரிய உடம்பை தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வெளியில் வந்தார். மதுவின் அழகும், உயரமும் நீல நிறக் கண்களும் இருவரையும் கட்டிப்போட, பிரபாதேவி அதற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாமல் ஓடி வந்து மதுவை கட்டிக்கொண்டு உச்சி முகர்ந்தார்.

பாரதி தன் மயக்கத்திலிருந்து வெளியே வந்து மஞ்சுவுக்கும் மதுவுக்கும் ஆரத்தி எடுத்து பொட்டு வைத்து இருவரையும் உள்ளே அழைத்து செல்ல, பூபதி வேலையாட்களை கூப்பிட்டு இருவரையும் அறிமுகப்படுத்திவிட்டு, ''இனி இவர்களும் இந்த வீட்டு உறுப்பினர்கள். எங்களுக்கு கொடுக்கிற அதே மரியாதையை நீங்கள் இவர்களுக்கும் கொடுக்க வேண்டும் '' என்று அழுத்தமாக கூறியனுப்பினார்.



எல்லோரும் மஞ்சுவையும், மதுவையும் சுற்றி அமர்ந்து பேசவும் மஞ்சுவுக்கு மனது நிறைந்து 'இப்போதாவது ஏற்றுக் கொள்வாயா?' என்று கண்ணாலே மதுவிடம் கேட்க, மது அவருக்கு பதில் சொல்லாமல் பேசுகிறவர்களின் மீது கவனத்தை வைத்து அவர்கள் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால் அடிக்கடி அவளது பார்வை மஞ்சுவின் முகத்தை தொட்டு மீண்டது.

இருவருக்கும் பாரதி சக்கை பிரதமன் எடுத்து வந்து உபசரிக்க, அதை தட்ட முடியாமல் இருவரும் எடுத்து கொள்ள, "அவர்களை கொஞ்சம் தனியா விடுங்க.'' என்ற பூபதி, இரண்டு பேரையும் குளித்து ரெஸ்ட் எடுக்க பாரதியுடன் அனுப்பினார்.

இருவருக்கும் தனித்தனி அறை கொடுக்கப்பட, கேள்வியாக பாரதியை நோக்கிய மதுவுக்கு . ''அம்மா மது, இங்கே பொதுவா எல்லோருமே தனித்தனி ரூமில் தான் இருப்பார்கள்...இதில் பயப்பட ஒன்றுமில்லை '' என கூறவும், அதற்கு மேல் அவளுக்கு விளக்கம் தேவைப்படவில்லை.

''சரிம்மா நீ போய் குளித்துவிட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடு. நான் சிறிது நேரத்தில் வருகிறேன் '' என்று கூறிவிட்டு, மஞ்சுவின் அறைக்கு சென்றாள் பாரதி.

அந்த அறையே அவர்களது சென்னை வீட்டின் ஹால் அளவுக்கு இருந்தது. அறையை சுற்றிப் பார்த்தவளுக்கு. உயர்தர தேக்கு மர கட்டிலும் அதன் மேல் விலையுர்ந்த ரஜாயும், அந்த அறையின் பின்னணி

லைட் ப்ளூவுக்கு காண்ட்ராஸ்ட்டாக வெல்வெட் சிகப்பு நிறத்தில் எல்லாமே அமைந்திருந்தது.

அருமையாக இருந்ததை ரசித்துக்கொண்டே, 'ம். பரவாயில்லை நல்ல ரசனையுடன் தான் அலங்கரித்திருக்கிறார்கள். வீடும் அரண்மனையை போல் பெரிதாகத்தான் இருக்கிறது ஆனால் இவர்கள் மனது பெரிதாக இருக்குமா? இல்லை சிறியதாக இருக்குமா?' என்று மீண்டும் மனம் சந்தேகம் கொள்ள, அதன் விளைவாக உடல் கொஞ்சம் சோர்ந்து போனது.

''ச்சே இப்படியே யோசித்தால் பைத்தியம் தன் பிடிக்கும். எதுவாக இருந்தாலும் நடக்கும் போது பார்த்துக்கொள்ளலாம் '' என்று வார்ட்ரோபில் தன் டிரெஸ்ஸை வைக்கலாம் என்று திறக்க, அதிலோ ஏகப்பட்ட புடவைகள் அழகாக மாட்டி வைக்கப்பட்டிருந்தது!

அதை பார்த்து மலைத்துப்போனவள், ''இதை யார் வாங்கி அடுக்கி இருப்பார்கள். ஒருவேளை நமக்காக வாங்கி இருக்கிறார்களோ? இது வரை நாம் புடவையே கட்டியதில்லையே'' என்று யோசித்தபடியே அவற்றை மென்மையாக வருடிக் கொடுத்துவிட்டு வார்ட்ரோபை மூடி வைத்தவள், தன் பெட்டியை திறந்து அதிலிருந்து லாவண்டர் கலர் சுரிதாரை எடுத்துக்கொண்டு குளிக்க சென்றாள்.

குளித்துவிட்டு முடியை கொஞ்சம் அள்ளி 'கிளிப்' போட்டுக்கொண்டு நெற்றியில் சிறிய பொட்டும் வைத்துகொண்டு,கொஞ்ச நேரம் அமர்ந்திருந்தவள்



போரடிக்க ஆரம்பிக்கவும் அம்மாவை பார்க்கலாமென்று வெளியே வந்தாள்.

அவரின் அறை எங்கு இருக்குமென்று தெரியாமல் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே வர, மாடிப்படிகளில் மாட்டியிருந்த ரவிவர்மாவின் ஓவியம் மனதை கொள்ளை கொள்ளவும் ,அதை ரசித்துக்கொண்டே கீழெ இறங்கியவள் எதிரே வந்தவனை கவனிக்காமல் பலமாக மோதிக் கொண்டாள்.

எதிரே வந்தவனும் இரண்டிரண்டு படிகளாக தாவி ஏறிய வேகத்தில் எதிரே வந்து கொண்டிருந்தவளை கவனிக்கவில்லை. மோதிய வேகத்தில் அவளுக்கு நிலைதடுமாற,எங்கேஅவள் விழுந்துவிட போகிறாளோ என்று அவளை அணைத்த மாதிரி பிடித்தான். அவளது முகத்தைக் கண்டதும் ஆச்சர்யத்தில் முகம் விகசிக்க ஆயிரம் வாட்ஸ் பல்ப் போட்ட மாதிரி ஒளிர்ந்தது.

''ஹேய் பார்பி, நீ எங்கே இங்கே...'' என்று நம்பமுடியாத ஆச்சரியமும், சந்தோஷமும் போட்டி போட கேட்டவனை மதுவும் சமாளித்துக்கொண்டு பார்க்க, அவளுக்கு முகுந்தை அந்த இடத்தில் பார்த்தது ஆச்சர்யமாக இருந்தாலும் இவன் எங்கே இங்கே வந்தானென்று குழப்பமாக இருந்தது.

அவளை மிகவும் அருகில் சந்திப்போம் என்று நினைக்காததால் அவனால் ஆச்சர்யத்தில் இருந்து விடுபடமுடியவில்லை. கண்ணிமைக்காமல் அவளுடைய அழகிய முகத்தையே ரசித்துக்கொண்டு

அவளை விடாமல் அவளை இன்னும் பிடித்தபடியே இருந்தான்.

''என்ன முகுந்த் இவ்வளவு சீக்கிரம் வந்துட்டே? என்ன ஆச்சு இரண்டு பேரும் இப்படியே நிற்கறீங்க'' என்ற பாரதியின் குரலைக் கேட்டு இருவரும் அவசரஅவசரமாக விலகினர்.

''இவன் என் மகன் முகுந்த்ம'' என்றதும் அவளின் குழப்பம் மறைந்து முகம் ஒளிர தொடங்கியது. ''இவள் உன் மாமா மகள் மது. ஊரிலிருந்து வந்து விட்டார்கள்'' என்றதும் அவன் முகத்திலிருந்த வெளிச்சம் மறைந்து முகம் இருண்டு போனது.

அடுத்த வினாடியே அவனுடைய முகத்திலிருந்த சந்தோஷம், துணி வைத்து துடைத்த மாதிரி போகவும் உணர்ச்சியில்லாத ஜடம் மாதிரி ''ஹலோ வெல்கம் ஹோம் '' என்று சம்பிரதாயமாக கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு மின்னலாய் மறைந்தான்.

''வா மது, உனக்கு வீட்டை சுற்றிக்காட்டுகிறேன் ''என்று பாரதி அவளை கைப்பிடித்து அழைத்துச்செல்ல, மதுவுக்கோ உடம்பு தான் அவர் கூட சென்றதே தவிர, மனம் முழுவதும் மிகுந்த குழப்பத்தில் இருந்தது. முகுந்தை இங்கே பார்த்ததே ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்க, அவன் வேறு பார்த்தவுடனே 'பார்பி' என்று கண்கள் சந்தோஷத்தில் மின்ன அழைத்ததே மனதை நிறைத்தது.

அப்புறம் பாரதி அத்தை வந்து அறிமுகப்படுத்தியவுடன்னே முகம் ஏன் உணர்ச்சியில்லாத கல் மாதிரி மாறிவிட்டது ?



என்னாச்சு... ஒண்ணுமே புரியலையே? இதை யாரிடம் கேட்பது? என்று மண்டையை போட்டு உடைத்துக் கொண்டாள். இவளது உள்மனப் போராட்டத்தை யறியாமல் ஒவ்வொரு இடத்தையும் காட்டிக்கொண்டே வந்தவர் அப்படியே மஞ்சுவின் அறைக்குள்ளும் அழைத்து சென்றார்.

ஏதோ புத்தகத்தைப் படித்துகொண்டிருந்த மஞ்சுவை கண்டதும் பசுவைத் தேடி ஓடும் கன்றின் நிலையிலிருந்த மது ஓடிப் போய் அவரின் கையை பிடித்துக்கொள்ள, ''அம்மாவை காணவில்லை என்று பெண் பயந்துவிட்டாள் போலிருக்கும.'' என்று எண்ணினாள் பாரதி.

''அம்மாவிடம் பேசிக் கொண்டிரு மது . நான் முகுந்தை சாப்பிட அழைத்துவிட்டு வருகிறேன் '' என்று அவர்களுக்கு தனிமை கொடுத்துவிட்டு சென்றார்.

முகுந்த் என்றதும் கேள்வியாக மதுவை பார்த்த மஞ்சுவுக்கு, அவளின் முகம் ஏகமாக் குழம்பியிருந்தது புரிந்தது. மஞ்சுவே இதுவரை மதுவை அப்படி பார்த்ததேயில்லை. எதுவாக இருந்தாலும் தெளிவாக இருக்கிற மதுவே குழம்பிப் போயிருக்கிறாள் என்றால் நிச்சயம் ஏதோ நடந்திருக்க வேண்டும் என்று யூகித்தார்.

''என்னடா மது என்ன ஆச்சு, நீ ஏன் இப்படி பேயை கண்ட மாதிரி இருக்கிறாய்..'' என்று கேட்டதற்கு பதில் சொல்லாமல் தலையை அழுந்த பிடித்துக்கொண்டு சோபாவில் அமர்ந்தவளை கண்டு மஞ்சுவின் வயிற்றில் புளியை கரைத்தது.

''இப்படி இருக்கிற அளவுக்கு என்ன தான் நடந்தது?'' என்று மீண்டும் அவளை துளைத்தெடுக்க, நடந்ததை விவரித்தாள் மது.

''ஏன் முகுந்த் அப்படி நடந்து கொண்டார் என்று எனக்கு தெரியவில்லை. நான் ஒன்றும் தவறு செய்யவில்லையே? அப்புறம் ஏன் முகத்தை திருப்பிக்கொண்டு போக வேண்டும். அதுவும் இன்று தான் என்னை முதன் முதலில் இந்த வீட்டில் சந்திக்கிறார்.

அப்படி இருக்கும் போது அவரின் ரியாக்ஷன் என்னை மிகவும் குழப்புகிறது. எனக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது. யாரும் இதுவரை என்னிடம் இப்படி முகம் திருப்பியதில்லை.'' என்று மீண்டும் தலையை அழுந்த பிடித்துக்கொண்டாள்.

மஞ்சுவுக்கே ஆச்சரியமாக தான் இருந்தது. ''நாத்தனாரின் மகனே,நம் பெண்ணிற்கு மாப்பிள்ளையாக்க ஆசைப்பட்ட முகுந்த் என்பதை அறிந்ததும் ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தாலும் இன்னொரு பக்கம் அவன் ஏன் மதுவைப் பார்த்து முகம் திருப்பிக் கொள்ள வேண்டும். அதுவும் முதலில் சந்தோஷமாக பேசியவன் மது யார் என்று அறிந்ததும் ஏன் இப்படி மாற வேண்டும்?'' என்று அவரும் தன் பங்கிற்கு குழம்பினார்.

தன் அறைக்கு கிட்டத்தட்ட ஓடிய முகுந்துக்கு அடுத்ததாக என்ன செய்யவேண்டுமென்று தெரியாமல் அங்கிருந்த சோபாவில் தொப்பென்று அமர்ந்து, மூளை மறத்துபோன மாதிரி எதுவும் யோசிக்க முடியாமல் ஒரே



திசையையே பார்த்துகொண்டு இருந்தான். அவனுடைய செல்போன் 'ஹேய் சம்படி கால் யூ' என்றழைக்க சுய உணர்வுக்கு வந்து, அதை வெறித்துப் பார்த்தவன் எதுவும் பேச பிடிக்காமல் சுவிட்ச் ஆப் செய்தான்.

மதுவை நினைக்க நினைக்க அழுவதா ...இல்லை தன் விதியை நினைத்து நொந்து கொள்வதா என்று புரியாமல் தவித்தான். 'எந்த அளவிற்கு உன்னை நேசித்தேன், கடைசியில் நீ என் மாமாவின் பெண்ணாகவா இருக்க வேண்டும்'?

'யாரை நான் வெறுக்கிறேனோ அவர்களின் மகளாக நீ ஏன் பிறந்தாய்? குருவாயூரப்பா. இது என்ன திருவிளையாடல்? என்னால் முடியாதது எதுவுமேயில்லை என்றெண்ணி இறுமாந்திருந்தேனே, கடைசியில் ஒரு பெண்ணின் முன்னால் நான் தோற்றுவிட்டேனே...

உன்னை சந்தித்ததில் கிடைத்த சந்தோஷம் ஒரு நிமிடம் கூட நிலைத்திருக்கவில்லையே! எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது?' என்று நினைக்க... நினைக்கமூச்சே முட்டுவது போல இருந்தது.

அது உள்ளத்தின் வலியென்று உணர்ந்திருந்தும், என்னவோ உடை தான் இறுக்குகிற மாதிரி கழுத்திலிருந்த டையை கழற்றி எரிச்சலுடன் வீசிவிட்டு, சட்டையின் மேல் பட்டனை திறந்துவிட்டு ஏசியை ரிமோட் மூலம் அதிகப்படுத்திவிட்டு சோபாவிலேயே படுத்துகொண்டான் .

நெஞ்சின் வலி கண்ணீராய் வெளிவர, அதை துடைக்கக் கூட தோன்றாமல் அப்படியே கண்மூடி படுத்துக்கிடந்தான்.

முகுந்தை சாப்பிட அழைக்க வந்த பாரதி கதவை மரியாதை நிமித்தமாக தட்டி அனுமதி கேட்டு நின்றார். அனுமதி கேட்காமல் உள்ளே வந்தால் அவனுக்கு கோபம் வந்துவிடும் என்பதை அவர் அறிவார். சத்தம் கேட்டு கண்ணைத் திறந்தவன் மணிக்கட்டை திருப்பி பார்க்க மணி பனிரெண்டரை ஆகியிருந்தது.

சாப்பாட்டு நேரமென்பதால் அம்மா தான் வந்திருப்பார்கள் என்று யூகித்தவன் உடனே சோபாவிலிருந்து எழுந்து கண்ணை துடைத்துக் கொண்டு ஜன்னலருகில் சென்று நின்று முகத்தை மறைத்துக்கொண்டு ''எஸ்...'' என்றான் கம்பீரமாக.

உள்ளே சென்றவர், ''மணியாச்சு முகுந்த்... கெஸ்ட் எல்லோரும் வந்திருக்காங்க. தாத்தா வேறு காத்திருக்கிறார். சாப்பிட வாப்பா...' என்றழைக்க அங்கே போனால் அவர்களை எல்லாம் பார்க்கணுமே, மறுபடியும் நான் நேசித்தவளை உணர்ச்சியற்று பார்க்க வேண்டுமாயென்று மனதிற்குள் மீண்டும் சோர்ந்து போனான்.

''இல்லை நான் வரலை. எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. நான் அப்புறம் வருகிறேன். இல்லை..., எனக்கு இங்கேயே அனுப்பிவிடுங்கள்'' என்றான் அவர் முகத்தை பாராமலே.

'குரல் பிசிறடிக்கிறதே, இது மகனின் வழக்கமான குரலில்லையே...' என்று தாயின் மனது புரிந்துகொள்ள



அவனருகில் சென்று அவன் தோளைத் தொட்டு ''என்னப்பா ஆச்சு. நல்லா தானே இருந்தாய். அதற்குள் என்ன வந்தது?'' என்று விசாரித்தாள்.

''ஒன்றுமில்லை லேசாக தலைவலி. கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தால் சரியாகிவிடும்'' என்று தனக்குள் பேசிக்கொள்கிற மாதிரி அவருக்கு பதில் சொன்னவனை தோளை தொட்டு திருப்பினார்.

அவனது முகம் கன்றி, கண்கள் கோவைப் பழமாக சிவந்திருக்கவும் பாரதி பதறி போய், நெற்றியில் கை வைக்க உடம்பு சூடில்லாமல் இருக்க, ''இவ்வளவு ஏசி இருந்தால் தலை வலிக்கத் தானே செய்யும்'' என்று ரிமோட்டை எடுத்து ஏசியை குறைத்து வைத்தார்.

''சரி முகுந்த் நீ படுத்துகொள். நான் தாத்தாவிடம் சொல்லிக் கொள்கிறேன். உனக்கு இங்கேயே சாப்பாடு எடுத்து வருகிறேன்'' என்று கதவை மூடிக்கொண்டு அவர் வெளியில் போனதும் மறுபடியும் சோபாவில் தொய்ந்து போய் சரிந்தான்.

பாரதி மஞ்சுவின் ரூமிற்கு சென்றதும்,அங்கே இருவரும் ஆளுக்கொரு மூலையில் அமர்ந்திருப்பதை கவனித்தார். 'என்னாச்சு? இப்படி இருவரும் அமைதியா இருக்காங்க...' என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டே சாப்பிட அழைக்க ,ஆளுக்கொரு காரணத்தை சொல்லி இருவருமே வரவில்லையென்றனர்.

மூவரின் நடவடிக்கைகளை கண்டதால் குழப்பமேற்பட, என்ன செய்வது என்று ஒரு நிமிடம் யோசித்தவர், தந்தையிடம் சென்று விஷயத்தை கூறினார்.

அவர் கடகடவென்று மாடியேறி நேரே முகுந் அறைக்கதவை தட்டாமல் அதிரடியாக உள்ளே நுழைய படுத்திருந்தவன் பதறியெழுந்து ''என்ன தாத்தா, இப்படி திடீரென்று வர்றீங்க? '' என்றான்.

''என்ன ஆச்சு முகுந்த் உனக்கு? ஏன் சாப்பிட வர மாட்டேனென்று சொன்னாய். நீ இதுவரை இப்படி சொன்னதே இல்லையே. அதுவும் மது வந்திருக்கும் போது, நீ இப்படி சொன்னால் அது நன்றாக இருக்குமா? இந்த வீட்டின் மூத்த பேரப்பிள்ளை நீ. வந்தவர்களை நீ பார்க்கவும் இல்லை. பரஸ்பரம் அறிமுகம் செய்து வைக்க வேண்டாமா? ஒரு விருந்தாளி வீட்டிற்கு வந்திருக்கும் போது தான் நீ இப்படி செய்யலாமா? இது தான் நான் கற்றுக்கொடுத்த பழக்கமா?'' என்று அவனை பார்த்து கூர்மையாக கேட்டார்.

அவருக்கு பதில் சொல்லாமல் 'வந்தவர்களை பார்த்ததால் தான் வரமாட்டேன் என்கிறேன். மறுபடியும் அவளை சந்தித்தால் கொஞ்சம் சமன்பட்டிருக்கிற என் மனது மீண்டும் புயலில் சிக்கிய நாணல் போலாகிவிடும். இதை நான் எப்படி உங்களிடம் சொல்வேன்?' என்று மனதிற்குள் மறுகிக்கொண்டு அமைதியாக இருந்தான்.

அவன் அமைதியாக இருக்கவும் தொடர்ந்தவர் ''இந்த வீட்டின் உறுப்பினரான நீயே சாப்பிட வராதபோது புதிதாக வந்தவர்கள் எப்படி வருவார்கள்? மதுவும் வர மாட்டேனென்று கூறிவிட்டாள்'' என்று அவனை குற்றம் சாட்டினார்.



அதற்கு மேலும் அமைதியாக இருப்பது மரியாதையல்ல என்பதால், ஒன்றும் பேசாமல் குளியலறைக்கு சென்று முகத்தை கழுவி துடைத்துக்கொண்டான். ஆழ ஒரு மூச்சை இழுத்துவிட்டு அவன் இறங்கிச் செல்வதை திருப்தியாக பார்த்துவிட்டு எதிர் அறைக்கு சென்றார்.

மது அமைதியாக கண்மூடி அமர்ந்திருக்க அவளருகே சென்று, ''மது...'' என்ற மென்மையான அழைப்பில் தூக்கிவாரிப்போட நிமிர்ந்தவளை சமாதானப்படுத்தி சாப்பிட அழைக்க, அவரிடம் விதண்டாவாதம் செய்ய பிடிக்காமல் அம்மாவை அழைத்துக்கொண்டு பூபதியுடன் கீழே இறங்கினாள்.

அவள் கீழே இறங்கி செல்லவும், முகுந்தை தவிர எல்லோரும் டைனிங் ஹாலில் இவர்களுக்காக ஆவலுடன் காத்திருந்தனர். மதுவை பூபதி தன் பக்கத்தில் அமரவைத்துக்கொண்டார். மதுவின் எதிரே முகுந்த், திலீப், மற்றும் சுதிர் அமர்ந்திருக்க பிரபாதேவி மருமகளை தன் பக்கத்தில் அமர்த்திக்கொண்டார்.

சீருடை அணிந்த வேலையாட்கள் உணவு பரிமாற வந்த போது முதன்முதலில் எல்லோருக்கும் இனிப்பை வழங்க சொன்னவர், டைனிங் ஹாலுக்கு வந்ததிலிருந்து எதுவும் பேசாமல் எதையோ யோசிக்கிற மாதிரியே அமர்ந்திருந்தவனை உலுக்கி மஞ்சுவையும், மதுவையையும் அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். மதுவும் வந்ததிலிருந்து அமைதியாக இருக்க, அவள் பார்வை மட்டும் அவன் பக்கம் அடிக்கடி சென்று போய் மீண்டது.

உதட்டை இழுத்து வைத்து கடமையாக சிரித்து ''ஹாய்'' என மதுவுக்கு சொல்லிவிட்டு, மஞ்சுவுக்கு ''வணக்கம்'' என்று கைகுவிக்க, மதுவும் அவன் செய்த மாதிரியே செய்து அமைதியாகிவிட, மஞ்சு அவனை பார்வையால் துளைத்தெடுத்தபடியே பதில் வணக்கம் சொன்னார்.

மூன்று பேருடைய பேச்சிலுமே உயிரில்லை என்று உணர்ந்தவர்கள் திலீப்பும், சுதிரும் தான். அவர்கள் இரண்டு பேரும் மற்ற மூவரையும் மாறி மாறி கவனிக்க, அவர்களோ அதை கவனிக்காமல் தத்தம் நினைவுகளிலேயே உழன்று கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு எல்லோருக்கும் உணவு பரிமாறப்பட, மதுவுக்கு சாப்பிடவே பிடிக்கவில்லை. என்னவோ வேண்டாதவர்கள் வீட்டில் சாப்பிடுகிற மாதிரி ஒரு உறுத்தல் எழுந்ததால் சாப்பாட்டை அளைந்து கொண்டே இருந்தாள். மஞ்சுவும் அப்படியே தான் இருந்தார். ஆனால் மற்றவர்களுக்கு தெரியாத மாதிரி பார்த்துக்கொண்டார்.

மற்றவர்கள் இது ஒன்றுமறியாமல் சந்தோஷமாக பேசிக்கொண்டே சாப்பிட முகுந்த் பேருக்கு கொறித்தான்... சுதிர் சாப்பிட்டுக் கொண்டே மதுவையும், முகுந்தையும் கவனிக்க இருவருமே நார்மலாக இல்லை என்று உணர்ந்தவர், அப்புறம் விசாரிக்கலாம் என்ற யோசனையுடன் தள்ளிவைத்தார்.

மதுவின் தட்டில் வைத்த சாப்பாடு அப்படியே இருக்க பூபதி, ''என்னம்மா ஆச்சு...?" என்று விசாரிக்க அவருக்கு என்ன சமாதானம் சொல்வது என்று ஒரு நிமிஷம் தடுமாறி, ''லேசா தலைவலி தாத்தா, அது தான்



சாப்பிட பிடிக்கவில்லை'' என்று முனக, முகுந்த் அவளை கண்ணில் வலியோடு நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் தட்டில் தலையை குனிந்து கொண்டான்.

அவளுக்கு தலைவலி என்றதுமே பூபதி, ''சரிமா முடியவில்லை என்றால் விட்டு விடு. நீ போய் ரூமில் ரெஸ்ட் எடு. பால் கொண்டு வருவார்கள் அதை மட்டும் குடித்துவிட்டு ஒரு மாத்திரை போட்டுகொண்டு தூங்கு'' என்று பரிவாக சொன்னதுமே விட்டால் போதும் என்று எல்லோரிடமும் மன்னிப்பு கேட்டுக் கொண்டு ஓட்டமும் நடையுமாக தன் அறையை நோக்கி விரைந்தாள்.

மஞ்சுவுக்கு அவளை பார்க்க பாவமாக இருந்தது. 'எப்படி துறுதுறுன்னு வாய் ஓயாம பேசிக்கிட்டு இருந்த பெண் இன்று காலையிலிருந்து மிகவும் ஓய்ந்து போன மாதிரி இருக்கிறாள் . அது போதாதென்று முகுந்த் வேறு அவள் மனதை பாதிக்கிற மாதிரி நடந்திருக்கிறான். இதை எப்படி சரி செய்வது?' என்று தனக்குள் பேசிக்கொண்டே இருந்தவர், தன்னை பாரதி கவனிப்பதை கவனிக்கவில்லை.

# 7

**சா**ப்பிட்டு முடிந்ததும் ஹாலுக்கு சென்று அமர்ந்த பூபதி முகுந்தை அழைத்து, ''மதுவையும் என் மருமகளையும் நம் சொந்தங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். அதற்காக ஒரு விழாவிற்கு ஏற்பாடு

செய்யவேண்டும். இன்னும் மூன்று நாட்களுக்குள் நடத்த வேண்டும்.

மாப்பிள்ளை, திலீப் நீங்கள் இரண்டு பேரும் கம்பெனிகளை கவனித்து கொள்ளுங்கள். அபினவையும் உதவிக்கு கூப்பிட்டு கொள்ளுங்கள். நானும், முகுந்தும் விழாவிற்கு தேவையான ஏற்பாடுகளை கவனிக்க வேண்டும்'' என்று சொல்லிவிட்டு,

''பிரபா உனக்கு ஏதாவது சொல்லணுமா?'' என்று அவரிடம் கேட்டார்.

''இல்லைங்க, எனக்கு வேறு என்ன வேண்டும். என் பேத்தியும் மருமகளும் என்னிடமே வந்து விட்டார்கள் . அப்புறம் என்ன? ஆனால் ஒரு விஷயம் என் மருமகளுக்கும், என் பேத்திக்கும் நான் தான் விழாவுக்கு நகைகளை செலக்ட் செய்வேன்'' என்று கோரிக்கை வைக்க, பூபதி கொஞ்சம் யோசித்துவிட்டு ''சரி செய். ஆனால் மதுவுக்கு முகுந்த் செய்யட்டும்'' என்று சொல்லிவிட அதற்கு மேல் பிரபாதேவி எதுவும் சொல்லாமல் ஏற்றுக்கொண்டார்.

ஆனால் மஞ்சுவுக்கு தான் என்ன இது... இவன் மதுவை கண்டாலே ஏன் இங்கே வந்தாய் என்கிற மாதிரி முகத்தை திருப்பிக் கொண்டு போகிறான். இவர் அவனைப் போய் மதுவுக்கு தேவையானதை பார்த்துக்கொள்ள சொல்கிறாரே. இது சரி வருமா? என்று அதி முக்கியமான வேலை போல நகங்களை யோசனையுடன் ஆராய்ந்து கொண்டிருந்தார். மஞ்சு அமைதியாக இருப்பதை கண்டு பிரபாதேவி,



''ஏன்மா எதுவும் பேசாமல் இருக்கிறாய்? உனக்கு இன்னும் எங்கள் மேல் கோபம் போகவில்லையா?'' என்று கொஞ்சம் தவிப்பாக கேட்டதும், மஞ்சு அவரை அதிசயமாக நிமிர்ந்து பார்த்தார். இந்த புடவை கட்டின பூனைக்கு யார் தைரியமாக மணி கட்டியது என்கிற மாதிரி ஒரு பார்வை தான் அவர் கண்களில் தெரிந்தது.

பிரபாதேவி தன்னை மாற்றிக் கொண்டதற்கு ஒரே காரணம் மது தான் என்பது மஞ்சுவுக்கு தெரியவில்லை.

ஊரிலிருந்து வந்த உடனே பிரபாதேவி ஒரு மாதம் தங்குவதை பற்றி கேட்டு, ''மஞ்சு தான் அதற்கு எல்லாம் காரணம்'' என்று பொரிய,

பூபதி நிதானமாக, ''அதற்கு காரணம் வேறு யாருமில்லை. நீயாகத்தான் இருப்பாய்'' என்றதும் பிரபா பெரிதாக அதிர்ந்தார். அவரின் அதிர்ச்சியை பொருட்படுத்தாமல், ''நீ இப்படியே மஞ்சுவிடம் உன் கோபத்தைக் காட்டினால் மது மஞ்சுவை அழைத்து கொண்டு சென்றுவிடுவாள். மஞ்சு என்ன பாவம் செய்தாள். மது அவள் பெற்ற பெண். அவளுடைய பெண்ணின் மேல் பாசம் வைக்கிற நீ, ஏன் அவளை பெற்றவள் மேல் வைக்க மாட்டேனென்கிறாய். ஏன் மாமியார் - மருமகள் என்றாலே எலியும் பூனையுமாக தான் இருக்க வேண்டும் என்று உங்களுக்குள் எழுதப்படாத சட்டம் ஒன்று வைத்திருக்கிறீர்களா?'' என்றார் சற்று காரமாக.

''நம்மிடம் இருந்ததை விட ராஜேஷ் அவர்களுடன் சந்தோஷமாகவே இருந்திருக்கிறான் என்பதை நான் அங்கே போன பிறகு தெரிந்து

கொண்டேன். அதே மாதிரி மஞ்சுவும் இன்று வரை ராஜேஷ்வரின் நினைவாகவே இருக்கிறாள். மது அவர்கள் இருவரின் மேல் உயிராக இருக்கிறாள். நீ இப்படி ஏதாவது செய்து அவர்கள் மனதை நோகடித்துவிடாதே.

அப்படி செய்து மது மஞ்சுவுடன் இந்த வீட்டை விட்டு வெளியேறிவிட்டால் என்ன செய்வது? அப்புறம் நம் பேத்தி நமக்கில்லை என்பதை புரிந்துகொண்டு மஞ்சுவுடன் அன்பாக நடந்துகொள். அப்படி நடந்துகொண்டால் நீ எந்த வகையிலும் குறைந்து போக மாட்டாய். மாறாக நல்ல மாமியார், பாட்டி என்கிற பெயர் தான் கிடைக்கும் '' என்று அழுத்தம் திருத்தமாக சொல்லிவிட, பிரபாதேவி தன் தவறை உணர்ந்து மருமகளிடம் அன்பாக நடக்க முயற்சிகள் செய்தார்.

அதன் முதல் படி தான் அவர் தன் கையாலே நகைகள் செலக்ட் செய்வது என்று மஞ்சு உணர்ந்திருக்க நியாயமில்லை. ஆனால் ஒரு மாமியாராக மருமகளிடம் அன்பாக இருப்பது எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதைப் போல சிரமமாக இருந்தது அவருக்கு.

என்னம்மா கேட்டதற்கு பதில் சொல்லாமல் இருக்கிறாய்? ...' என்று மீண்டும் கேட்க, 'ஒன்றுமில்லை அத்தை... நீங்கள் எல்லோரும் பேசுவதை கேட்டுக் கொண்டிருக்கிறேன்... வேறு ஒன்றுமில்லை'' என்று சமாளித்துவிட்டு, ''ஆனால்... இந்த விழாவை... கிராண்டாக செய்யத்தான் வேண்டுமா...'' என்று தயங்கித் தயங்கி மாமனாரிடம் கேட்டாள்.



''முதலில் என்னை மாமா என்று வாய் நிறைய கூப்பிடு. ஏன் இப்படி எப்போது பார்த்தாலும் பயந்து பயந்து பேசுகிறாய். உனக்கு எதை சொல்லணும் என்றாலும் என்னிடமோ, உன் அத்தையிடமோ தாராளமாக சொல்லலாம். பாரதியை உன் தோழி மாதிரி நினைத்துகொள். இதோ திலீப், முகுந்த் இவர்கள் இரண்டு பேரும் உனக்கு பிள்ளைகள் மாதிரி . உனக்கிந்த வீட்டில் எல்லா உரிமைகளும் இருக்கிறது'' என்று சொல்லிவிட்டு,

''ஏன் விழாவை கிராண்டாக செய்ய வேண்டாம் என்கிறாய்? எங்களுடைய சொந்தங்கள் எங்களிடம் வந்து சேர்ந்ததை எல்லோரிடமும் தெரிவிக்க வேண்டாமா? இதை இப்படி தான் மஞ்சு செய்யணும். நீ ஒன்றும் பயப்படாதே. எல்லாம் நல்ல படியாக நடக்கும்'' என்று விளக்கமாக கூறி ஆறுதலளித்தார்.

அதற்கு மேல் பேச ஒன்றுமில்லை என்று மஞ்சு மீண்டும் நகங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் மூழ்கி அமைதியாகிவிட, பூபதி அதற்கு மேல் என்ன செய்யவேண்டும் என்று முகுந்திடம் திட்டம் போட்டுக் கொண்டிருந்தார்.

அதற்கான முதல் வேலையாக நாளை அவளை அழைத்துக்கொண்டு அவளுக்கு தேவையான புடவை நகைகள் எல்லாம் அவள் விருப்பபடி வாங்கிவிடு'' என்று அவனிடம் சொல்லிவிட்டு சுதிரிடம் மேற்கொண்டு விஷயங்களை பேசினார்.

முகுந்துக்கு, ''குருவாயூரப்பா, வேலியில் போற ஓணானை மடியில் எடுத்து விட்டு கொண்ட கதையாய்

அவளை கூடவே அழைத்து போய் எல்லாம் செய் என்கிறாரே? எப்படி என்னால் மதுவின் முகத்தை பார்க்க முடியும். மனம் நிறைய அவளை வைத்துக்கொண்டு யாரோ மாதிரி எப்படி பேச முடியும்?

நேற்று வரை அவளை மனதார காதலித்து விட்டு, இன்று அவளை மனதுக்கு பிடிக்காதவர்களின் பெண்ணாக பார்க்கவே மனது இத்தனை வலிக்கிறதே. இதில் அவளை தனியாக வேறு அழைத்துச் செல்ல வேண்டுமா, இதென்ன சோதனை. என்னால் இதெல்லாம் முடியாது என்று எப்படி சொல்வது' என்று தன்னையே கேள்விகளால் துளைத்துக் கொண்டான். ஆனால் அதற்கெல்லாம் பதில் சொல்ல தான் ஆளில்லை .

அதற்கு மேல் அங்கு இருக்க பிடிக்காமல் தன் அறைக்கு சென்று தஞ்சம் புகுந்து கட்டிலில் படுத்து கண்ணை இறுக மூடி தூங்க முயற்சி செய்தவன் அதில் ஓரளவு வெற்றியும்பெற்றான்.

ரூமிற்கு வந்த மது கொஞ்ச நேரம் கட்டிலில் படுத்து தூங்க முயற்சி செய்தவளின் மனது முகுந்த் தன்னிடம் நடந்துகொண்டதை நினைத்து முரண்டு பிடிக்க, தூங்கும் முயற்சியை கைவிட்டு எழுந்து ஜன்னல் பக்கம் போய் வேடிக்கை பார்க்க, வெளியே தெரிந்த காட்சிகள் கண்ணுக்கு விருந்தளித்தாலும் மனது மட்டும் சமன்படாமல்,

'சென்னையில் ஸ்பென்சரில் அவன் பார்த்த பார்வையில் இருந்த காதல் எங்கே? இங்கே மாடிப்படியில் என்னை இடித்துவிட்டு விழாமல் பிடித்த



பின்பு பார்த்த போதும் அதே காதல் இருந்ததே? அதுமட்டுமில்லாமல் பார்பி என்று வேறு அழைத்தானே. அது ஏன்? அப்புறம் ஏன் அத்தை அறிமுகப் படுத்தியபின் அவன் முகம் இருண்டு, கண்களிலிருந்த காதலெல்லாம் வரண்டு போய் விருப்பு வெறுப்பில்லாமல் ஒரு வெறுமையான பார்வையைக் கொண்டான். இவனால் இப்படியெல்லாம் கூட பார்க்க முடியுமா? உண்மையில் என்னை காதலித்திருந்தால் அவனால் அந்த மாதிரி பார்த்திருக்க முடியாதே?' என்றே கேட்டுக் கொண்டிருந்தது.

''என்ன மது, தூங்கலியா? இன்னமும் முகுந்த் பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறாயா?'' என்ற மஞ்சுவின் என்ற குரல் கேட்டு திரும்பியவள் ஜன்னலின் மேல் சாய்ந்து கொண்டாள்.

''ஆமாம்மா, முகுந்த் ஏன் அப்படி நடக்கணும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்... எனக்கு ஒன்று தோன்றுகிறது. ஒருவேளை இது தப்பாகவும் இருக்கலாம்... சரியாகவும் இருக்கலாம்''என்றாள்.

''சென்னையில் முகுந்த் மூன்று இடங்களில் என்னிடம் பேச முயற்சி செய்தார் என்று சொன்னாய். அதன் பிறகு அவரே என்னை ஸ்பென்சரில் தேடி வந்து பேச வரும் சமயம் யாரோ வந்ததும் நாம் அங்கிருந்து வந்துவிட்டோம் இல்லையா?''என்றதும் மஞ்சு ஆமோதிப்பாக, ''ஆமாம்...''என்றார்.

''அதன் பின்பு இங்கு தான் என்னை பார்த்தார்.பார்த்தவுடன் ஹே பார்பி நீ எங்கே இங்கே என்று ஆச்சர்யத்துடன் கேட்டவருக்கு... நான் உங்கள்...

அதாவது மாமாவின் மகளென்று தெரிந்தவுடனே முகபாவமே மாறிவிட்டது. அப்படியென்றால் அவர் சென்னையில் என்னை சந்தித்தபோது யாரென்று தெரியாததால் என்னை விரும்பி அவர் காதலை சொல்ல ஆசைப்பட்டிருக்கிறார்'' என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போதே மஞ்சு குறுக்கிட்டார்.

''மது ஐ காட் இட், தட் மீன்ஸ் நீ எங்களுடைய பெண் என்று தெரிந்ததும் முகுந்த் விலகி போயிருக்கிறான் என்றால் அவனுக்கு உன் மேல் கோபமில்லை.அவன் கோபம் எங்கள் மீது. அதாவது சரியாக சொல்ல போனால் என் மீதாக தான் இருக்கும் என்று நினைக்கிறேன். அவனால் நிச்சயம் அவன் மாமாவை வெறுக்க முடியாது. என்னால் தானே ராஜேஷ் இந்த குடும்பத்தைப் பிரிந்து சென்றார். அதனால் என் மீது முகுந்த் துவேஷமாக இருக்கிறான் என்று நினைக்கிறேன். அதனால் தான் என்னிடமும் அவன் சரியாக பேசவில்லை'' என்று மன வருத்தத்தோடு சொல்வதை கேட்டு,

''அப்படியும் இருக்கலாம்... இல்லை நம்முடைய வருகை அவருக்கு பிடிக்காமல் இருந்திருக்கலாம். நான் தான் இங்கே வரப்போகிறேன் என்று அவருக்கு தெரியாததால் சென்னையில் பேசியவர் நான் தான் தாத்தாவோட பேத்தி என்றதும் அவர் சொத்துக்கு போட்டியாக வந்துவிட்டேன் என்று கூட நினைத்திருக்கலாம். யாருக்கு தெரியும்...?' என்று தோள்களை குலுக்கினாள்.



''அப்போ நாம் இங்கே வந்தது தவறா மது...? ஒரு வீட்டில் ஆயிரம் பேர் நமக்கு ஆதரவாக இருந்து ஒரே ஒருத்தர் நம்மை வெறுத்தாலும் அந்த வீட்டில் எப்படி தங்க முடியும்...? எப்படி ஒரு கவளம் சாப்பாடு இறங்கும். நீ எவ்வளவோ சொன்னாய் நான் தான் கேட்கவில்லை. இப்போது இப்படி முகத்தை திருப்பி கொண்டு போவதை பார்க்க வேண்டியதாகிவிட்டது'' என்று சொல்ல அவர் குரல் உடைந்து அழுகையாய் வெடிக்க, மது பதறி போய் அவரை அணைத்துக் கொண்டாள்.

''அம்மா ப்ளீஸ் முதலில் அழுகையை நிறுத்துங்கள். ஒரு பெண்ணுக்கு அழுகை தான் எதிரி. நம்மை பலவீனமாக்குவதே இந்த பாழாய் போன அழுகை தான்'' என்று அவர் கண்ணீர் துடைக்க, அவர் கண்களிலிருந்து கண்ணீர் நிற்காமல் வழிந்து கொண்டே இருக்க மஞ்சுவின் விசும்பல் அதிகமாகிக் கொண்டே சென்றது.

கொஞ்ச நேரம் சமாதானம் செய்து பார்த்த மது, அவர் அழுகை நின்றபாடில்லை என்று தெரிந்ததும் 'சரி அழட்டும்' என்று விட்டு விட்டு அவர் முதுகை யோசனையோடு வருடி கொடுத்துக்கொண்டிருந்தாள்.

அவள் யோசனையை கலைக்கும் விதமாக அவள் அறைக் கதவு தட்டும் சத்தம் கேட்டதும், மஞ்சு அவசரமாக மதுவின் மடியிலிருந்து எழுந்து கண்களை துடைத்துகொள்ள, ''உள்ளே வாங்க'' என்று குரல் கொடுத்தாள் மது.

சுதிர் தான் உள்ளே வந்தார். முதலில் தயங்கி கதவருகே நின்றவரை மது, ''உள்ளே வாங்க மாமா...'' என்றதும் உள்ளே வந்தவர் மஞ்சுவின் முகத்தை பார்த்து கேள்வியாக, ''என்னாச்சு மது... ஏன் அம்மா அழறாங்க?'' என்னும் போதே மஞ்சு விழிகளாலே சொல்லாதே என்று எச்சரிக்க, ''அம்மாவுக்கு இங்கே வந்ததும் அப்பாவின் ஞாபகம் அதிகமாகிவிட்டது மாமா அது தான் . வேறு ஒன்றுமில்லை '' என்று சமாளித்தாள்.

அவள் சொன்ன விதத்திலேயே சுதிருக்கு புரிந்துவிட்டது. அவர் தான் ஏற்கெனவே இரண்டு பேரையும் கவனித்துக்கொண்டு தானே இருக்கிறார் . போதாததிற்கு டைனிங் ஹாலில் அரங்கேறிய நாடகமும் அவருக்கு ஏதோ விஷயம் இருக்கு என்று பட்சி அடித்து சொல்ல, அதை பற்றி பேசத்தான் இங்கு வந்திருந்தார்.

இங்கே மஞ்சுவின் முகத்தை பார்த்ததும் தொண்ணூறு சதவிகித சந்தேகத்தோடு வந்தவருக்கு, அவர் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்த மாதிரி இருந்தது.''ஏன் மது நீ சொல்றதை நம்புவதா? வேண்டாமா?'' என்று அப்பாவியாக முகத்தை வைத்துக்கொண்டு பார்வையால் அவளை துளைத்துக்கொண்டே கேட்டதும், மஞ்சுவுக்கும், மதுவுக்கும் தூக்கிவாரிப்போட்டது.

''ஏன்...மாமா அப்படி கேட்கறீங்க ...'' என்றாள் சிறு தயக்கத்துடன்.

''பின்னே உன் வயசு என் அனுபவம். நீ சொல்வதில் உண்மையில்லை என்று கண்டுபிடிக்க



என்னால் முடியாதா என்ன? என்னம்மா என்னை அந்த அளவிற்கா எடைபோட்டுவிட்டாய்? முகுந்த் உங்களிடம் சரியாகப் பேசவில்லை என்று எனக்கு தெரியும். ஒருத்தர் அறிமுகப்படுத்தி வைத்தபின் அவர் எப்படி பேசுகிறார் என்பதை பொறுத்து தான் புதியவர்கள் பேசவோ, பழகவோ முடியும். ஆனால் அவன் உங்களுக்கு வணக்கம் சொன்ன விதமும், நீங்கள் இருவரும் அவனுக்கு பதில் வணக்கம் சொன்னவிதமுமே சொல்லுதே ஏற்கெனவே உங்களுக்கு முகுந்தை தெரிந்திருக்கிறது என்பதை'' என்று சரியாக பாய்ண்டை பிடித்தார்.

சுதிர் இந்த அளவிற்கு தெரிந்துகொண்டு கேட்கும் போது இனி மறைத்து பலனில்லை, இவரிடம் சொல்லிவிடலாமா என்று நினைத்துக்கொண்டே அம்மாவின் முகத்தை பார்க்க அவர் 'வேண்டாம் வேண்டாம்' என்று ஜாடை காட்டி எச்சரித்தார்.

''சொல்லு மது, உங்களுக்குள் என்ன பிரச்சனை? என்னிடம் மறைக்கிற அளவிற்கு என்ன விஷயம் இருக்கிறது '' என்று கேட்டார்.

''அங்கிள் எங்களுக்குள் எந்த பிரச்னையுமில்லை. எங்களுக்குள் இருக்கிற ஒரே ஒரு கேள்விக்கு பதில் சொல்லுங்க அது போதும் . அதாவது நாங்கள் இங்கே வருவதில் யார் யாருக்கெல்லாம் விருப்பமில்லை என்று சொல்ல முடியுமா?'' என்று கேட்டாள்.

அவள் கேட்டதும் புருவத்தில் முடிச்சு விழ, ''என்ன கேள்வி மது? நீங்கள் இங்கே வர உன்னிடம் எந்த அளவிற்கு கெஞ்சினோம் என்பதை

மறந்துவிட்டாயா?'' என்று கேட்டுவிட்டு, ''நீங்கள் இங்கே வந்தது எல்லோருக்குமே சந்தோஷம். யாருக்கும் எந்த தொல்லையும் இல்லை. உண்மையை சொல்லப்போனால் எல்லோரும் இப்போதுதான் சந்தோஷமாக இருக்கிறோம் '' என்றார்.

அவரின் பதிலில் திருப்தி இல்லை என்பது போல தலையை அசைத்து மறுத்தவள், ''இல்லை அங்கிள், நான் நேரடியாகவே விஷயத்திற்கு வருகிறேன். நாங்கள் இங்கே வந்ததில் உங்கள் பிள்ளை முகுந்துக்கு இஷ்டமில்லை என்று நினைக்கிறோம். அது தான் எங்களிடம் அவர் சரியாகவே பேசவில்லை'' என்றாள்.

அவளை இடைமறித்தவர், ''எப்படி அவ்வளவு உறுதியாக சொல்கிறாய்?'' அவள் வாயிலிருந்தே உண்மை வர வேண்டுமென்று வலையை வீசினார்.

அவர் வீசிய வலையில் சுலபமாக சிக்க போகிறோம் என்று தெரியாமலே கொஞ்சம் தயங்கிவிட்டு, ''அது... அது... '' என்று இழுத்துவிட்டு, ''அவர் எங்களை சென்னையில் இரண்டு மூன்று இடங்களில் பார்த்திருக்கிறார். அம்மா கூட இவரை பார்த்த மாதிரி இருக்கே என்று அவரை பற்றி விசாரித்தார்கள். அப்போதெல்லாம் முகம் நன்றாகவே இருந்தது. அதன் பின்னர் என்னை ஸ்பென்சரில் மீண்டும் பார்த்துவிட்டு என்னிடம் பேச முயற்சி செய்தார். ஆனால் சில காரணங்களால் பேச முடியாமல் போய்விட்டது'' என்று சொல்லிவிட்டு இங்கு நடந்ததையும் சொன்னவள், ''அதனால் தான் கேட்கிறேன் அவருக்கு நாங்கள் வந்தது



பிடிக்கவில்லையா? என மீண்டும் அதே கேள்விக்கு திரும்பி வரவும், மகனின் மனது அவருக்கு தெளிவாகப் புரிந்தது.

'ஓ...! இதுக்குதான் பையன் அடிக்கடி சென்னைக்கு சென்றானா? இன்றுகூட சென்னைக்கு கிளம்பத்தானே வீட்டுக்கு சீக்கிரம் வந்தான். நான் கூட என்ன இவன் சென்னைக்கு கிளம்பாமல் இருக்கிறானே என்று நினைத்தேனே? அப்போ அவன் மதுவை தேட தான் அங்கு செல்ல நினைத்தானா? அவளே இங்கு வந்ததும் அவனுக்கு சென்னை செல்ல வேண்டியஅவசியமில்லாமல் ஆகியிருக்கிறது.

மஞ்சுவின் மேல் தப்பான அபிப்ராயம் வைத்திருப்பதால் மது அவரின் பெண் என்றதும் ,காதலித்த பெண் என்று கூட பார்க்காமல் ஐயா கோபத்தோடு முகத்தை திருப்பிக்கொண்டு போய்விட்டாரா? அதுதான் இன்றைக்கு மூட் அவுட்டா? ம்ஹூம். நாம் நம் பையனுக்கு மது தான் சரியான ஜோடி என்று நினைத்தால்... பையன் கில்லாடி தான்... அவள் தான் இந்த வீட்டு வாரிசு என்று தெரியாமலே காதலித்திருக்கிறான்' என்று தனக்குள்ளே பேசிக்கொண்டார்.

'முகுந்த் மிகவும் நல்ல பையன் மா. உண்மையில் நீங்கள் வருவது தெரிந்ததும் உங்கள் இருவரின் அறையை தயார் செய்தவனே அவன் தான். இன்னும் கேட்டால் நானும் மாமாவும் நேரடியாக உங்களிடம் வந்ததற்கு காரணமே அவன் தான். உங்களுக்கு கடிதம் போட்ட விஷயத்தை தெரிந்தவுடன்... அப்படிச்

செய்வது சரியில்லை. நேரே போய் அழைத்து வாருங்கள் என்று யோசனை சொன்னவன் அவன். அப்படி இருக்கும் போது அவன் எப்படி உங்களை வெறுப்பான்...?' என்று அவர்களிடம் திருப்பி கேட்கவும் இருவருடமும் பதிலில்லாமல் தவித்தனர்.

அதன் பிறகு இருவரிடமும் சிறிது நேரம் பேசிவிட்டு அவர் கீழே இறங்கிச் செல்ல, மதுவும் தாயை சாமாதானப்படுத்திவிட்டு தன்னறைக்கு சென்றாள். அவள் மனம் சுதிரின் பதிலில் திருப்தியடைய மறுக்க, முகுந்தின் கோபத்திற்குண்டான காரணத்தை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தது.

அடுத்த நாள் அவன் கண்ணிலே படாமல் இருந்த மதுவை அழைத்து, 'முகுந்த் ஆபிசிலிருந்து திரும்பி வந்துவிட்டான்மா... அவனுடன் சென்று விழாவிற்கு தேவையான நகை, புடவைகளை எடுத்துக்கொண்டு வந்துவிடு'' என்ற பாரதியிடம், 'நான் கண்டிப்பாக போயாக வேண்டுமா அத்தை?'' என்றாள் வெறுப்பாக.

'நேற்றே தாத்தா சொன்னாரே மது... சீக்கிரம் போய் கிளம்பி வா...' என்று அவளின் அறையின் கதவை மூடிக்கொண்டு கீழே செல்ல, ''இருக்கிற கேடுக்கு இது ரொம்ப முக்கியம்'' என்று கொஞ்ச நேரம் எரிச்சலுடன் முணுமுணுத்தபடி முகம் கழுவிக் கொண்டு பாத்ருமிலிருந்து வெளிப்பட்ட பொழுது அவளுக்கு பூஸ்ட் கொண்டு வந்திருந்தாள் பாரதி அத்தை.

''மது இந்த வார்ட்ரோபில் இருக்கும் புடவையெல்லாம் முகுந்த் உனக்காக வாங்கி வைத்தது.



உன் ஜாக்கெட் அளவு தெரியாது என்பதால் அதை மட்டும் வாங்கவில்லை. அதனால் நீங்கள் போகும் போது அப்படியே இதற்குண்டான கலர் ப்ளௌஸ் வாங்கிவிடுங்கள்'' என்றதும் மதுவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

அவரிடம் தன் ஆச்சர்யத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல், ''சாரி அத்தை. எனக்கு புடவை கட்டத் தெரியாது'' என்று கொஞ்சம் சங்கோஜத்தோடு சொன்னவளை புன்னகை தவழ பார்த்து, ''அதனால் என்னடா உனக்கு எது இஷ்டமோ அதை வாங்கி கொள். அப்படியே ஜாக்கெட்டையும் வாங்கிவிடு'' என்று சொல்லிவிட்டு, ''சரி. நீ கிளம்பி வாடா. மறக்காமல் பூஸ்ட்டை குடித்துவிடு'' என்று அக்கறையாக சொல்லிவிட்டு கதவை சாத்திக்கொண்டு கீழே சென்றார்.

முகுந்துக்கு ஆபிஸ் சென்று வந்ததும் மனதின் போராட்டம் சற்று குறைய, 'நமக்கு நம் காதலும் இல்லை, பார்பியும் இல்லை என்று நினைத்து கொள்ள வேண்டியது தான். இனி புலம்புவதில் எந்த அர்த்தமும் இல்லை.

தாத்தா சொன்ன மாதிரி மதுவை கடைக்கு அழைத்துச் செல்வதில் என்ன ஆகிவிட போகிறது. இனி அவள் யாரோ, நான் யாரோ. யாரோ ஒருவரை,கடைக்கு கூட அழைத்து போவதால் நமக்கென்ன வந்துவிடும்' என்ற தீர்மானமான ஒரு முடிவுக்கு வந்தான்.

''எந்த கடைக்கு போக போகிறீர்கள்...?'' என்ற பூபதியின் கேள்விக்கு.

''கல்யாண் ஜுவல்லர்ஸ் போனால் அங்கேயே புடவையும் எடுத்துவிடலாம். அப்படியே மற்ற ரெடிமேட் டிரஸ் கூட எடுக்கலாம்'' என்று பிசிறில்லாமல் தெளிவாக, ஏன் கொஞ்சம் உற்சாகமாக கூட சொல்ல முடிந்தது.

''இதற்கு தான் உன்னை போக சொன்னேன். உன்னால் மட்டும் தான் இப்படி சரியாக முடிவெடுக்க முடியும்ம'' என்று பூபதி பாராட்ட அதை புன்னகையால் ஏற்றுக்கொண்டு, பாரதி கொண்டு வந்துகொடுத்த காபியை குடித்துக்கொண்டே கடிகாரத்தை பார்த்து விட்டு மாடியை பார்க்க, மது பச்சையும், சிவப்பும் கலந்த குந்தன் வொர்க் செய்த சுரிதாரும், அதற்கு ஏற்ற மாதிரி மெல்லிய கற்கள் வைத்த அணிகலனும் அணிந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

இயல்பிலேயே சிவந்த இதழ்கள் என்பதால் மது லிப்ஸ்டிக் போட்டதேயில்லை. ஆனால் இங்கு வந்ததுமே சென்னையில் இருப்பது போல விட்டேத்தியாக இருக்க முடியாது என்று தோன்றியதால் கவனமாக தன்னை அலங்கரித்து கொண்டதன் விளைவாக அவளின் அழகு மேலும் மெருகேற, அது எல்லோரின் பார்வையையும் கவர்ந்தது.

எல்லோரும் அவள் அழகில் சொக்கி போய் பார்க்க, முகுந்துக்கு சற்று முன் இருந்த தெளிவு எல்லாம் பொடிப்பொடியாகி போக அவளையே கண்ணிமைக்காமல் பார்த்தவனை மதுவின் நீல விழிகளின் காந்த பார்வை அவனை சந்தித்தது.

அவளின் பார்வையை சந்தித்ததும் அவனின் தீர்மானத்தை தூள் தூளாக்க, அவளின் அழகை கண்டு



உள்ளுக்குள் தீயாய் எரிய, இந்த அழகு இன்னும் எந்த குடும்பத்தை அழ வைக்க போகிறதோ என்று மனதினுள் வெறுக்க அந்த நினைப்பே அவனை அங்கிருந்து விருட்டென்று எழுந்து போக வைத்தது.

எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு அவன் காரின் சீட்டில் சாய்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திகொண்டு காத்திருக்க, அவனின் ஓட்டத்தை பார்த்த சுதிர், 'ஓடு... ஓடு... எங்கே ஓட போறே, எப்படி இருந்தாலும் மது கூடத்தான் நீ போயாகணும். அப்போ என்ன செய்வியாம்' என்று மனதுக்குள் உரக்க சிரித்துகொண்டார்.

'என்ன அம்சமா இருக்கா? இவள் மட்டும் நம் பிள்ளைக்கு மனைவியாக வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். இருவருக்கும் ஜோடி பொருத்தம் ரொம்ப நன்றாக இருக்கும். இதை பற்றி அப்பாவிடம் பேசணும்' என்று எண்ணியபடியே சுதிரை பார்க்க, அவர் பாரதியின் எண்ணத்தை படித்தவர் போல உள்ளுக்குள் சிரித்துக்கொண்டார்.

பூபதி மதுவை தோளோடு அணைத்து, ''இப்போ தான் இந்த வீட்டுக்கே ஒரு அழகு வந்திருக்கு. எவ்வளவு தான் செல்வங்கள் இருந்தாலும், ஆண்பிள்ளைகள் இருந்தாலும், ஒரு பெண்பிள்ளை இல்லையென்றால் அது வீடாகவே இருக்காது. பெண்கள் தான் வீட்டின் மகாலட்சுமி என்பது எனக்கு புரிந்தாலும் உன்னை பார்க்கும் போது தான் என்னால் உணரமுடிகிறது'' என்று அவள் நெற்றியில் முத்தமிட்டார்.

திலீப் குறுக்கிட்டு, ''இப்படியே சொல்லி எங்களை ஓரங்கட்டிவிடாதீர்கள். அப்போ எங்களை மகாவிஷ்ணு என்று சொல்லுங்கள்'' என்று குறும்பாக சொல்ல அவன் முதுகில் செல்லமாக தட்டினார்.

பாரதி அவளருகே வந்து, '' மது உனக்கு எந்த டிரஸ் பிடிக்குதோ அதை வாங்கி கொள். ஆனால் விழாவுக்கு புடவை தான் கட்டணும். அது தான் அழகு, ஏன் மரியாதையும் கூட. அதனால் உனக்கு பிடித்த மாதிரி என்ன விலையானாலும் சரி செலக்ட் செய்துகொள். விழா அன்று நான் உனக்கு புடவை கட்டிவிடுகிறேன்'' என அன்புடன் கூற, சரி என்பதாக தலையாட்டினாள்.

இதையெல்லாம் கண்டு மஞ்சுவின் மனது பூரித்து போனது. இவர்கள் எல்லாம் சீக்கிரமே முகுந்தை சரி செய்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை எழுந்தது. பூபதியே அவளை வெளியே அழைத்து வந்து காரின் கதவை திறந்து முகுந்த் பக்கத்தில் அமரவைத்துவிட்டு, அவனிடம் பத்திரமாக காரை ஓட்டும்படி பணித்தார். அவருக்கு தலையசைத்துவிட்டு வண்டியை எடுக்க மது,அவனை திரும்பி பார்த்தாள்.

ஆனால் கொஞ்சமும் அவள் பக்கம் திரும்பாமல் சாலையை பார்த்தே வண்டி ஓட்ட, அவனின் பக்கவாட்டு தோற்றத்தில் முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லாமல் ஏதோ 'ரோபோ' வண்டி ஓட்டுகிற மாதிரி இருந்தது.

மது மனதில் சிரித்துக்கொண்டு, 'நான் யார் என்று தெரியாத போதே எனக்காக பார்த்து பார்த்து செய்த



நீங்கள் இப்போது நேசித்தவள் என்று தெரிந்தும் ஏதோ சொத்தை காரணத்தால் என்னை வெறுக்கிற மாதிரி நடந்து கொள்கிறீர்களா? பார்க்கலாம் உங்கள் கண்ணாமூச்சி ஆட்டம் எத்தனை நாளைக்கு என்று. நீங்கள் என்னை ஸ்பென்சரில் பார்த்த அதே பார்வையை உங்களை பார்க்க வைக்கிறேன். உங்கள் வாயாலே உங்கள் காதலை சொல்ல வைக்கிறேன்' என்று மனதினுள் சவாலாக எண்ணிக்கொண்டு எதுவும் பேசாமல் வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்தாள்.

முகுந்தின் நிலைமை தான் ரொம்ப பாவமாக இருந்தது. மதுவை இப்படி பக்கத்தில் வைத்துகொண்டு உணர்ச்சியே இல்லாத மாதிரி நடந்துகொள்வோம் என்று அவன் கனவிலும் நினையாததால், அவளின் அருகாமையில் சகஜமாக இருக்க முடியாமல் மிகவும் தவித்துப் போனான்.

ஆனாலும் மனதை கட்டுப்படுத்துவது இத்தனை வருட தொழில் அனுபவத்தில் கைவந்த கலையாக இருப்பதால் மதுவின் முன்னால் இயல்பாக இருக்கிற மாதிரி நடந்துகொள்ள முடிந்தது.

சுதிர் அவனுக்கு போன் செய்ய எடுத்தவனிடம், ''முகுந்த் நான் சொல்றதை இடையில் பேசாமல் கேட்டுகொள். உனக்கு என்ன தான் அவள் மீது கோபம் இருந்தாலும் அதை அவளிடம் காட்டாதே. எதுவாக இருந்தாலும் வீட்டில் எல்லோர் முன்னிலையிலும் பேசி தீர்த்துக்கொள். அதை விட்டு விட்டு வீட்டில் நீ நடந்துகொண்ட மாதிரி அழைத்துப்போன இடத்திலும்

பாராமுகமாக இருக்காதே. அதற்கு மேலும் உனக்கு எதுவும் சொல்ல தேவையில்லை என்று நினைக்கிறேன்'' என அவன் பேச இடம் கொடுக்காமல் அவரே பேசி போனை வைத்துவிட, ஒரு பெருமூச்சோடு ப்ளூடூதை ஆப் செய்துவிட்டு மதுவை திரும்பிப் பார்த்தான்.

ஆனால் இவனை கவனிக்காமல் வெளியே வேடிக்கை பார்க்க, அவள் முகத்தில் இருந்த குழந்தைத்தனம் அவனை கொஞ்சம் இளக வைக்க, 'எனக்கு உன் மேல் எதுவும் கோபம் இல்லை மது. ஆனால் என் மனநிலைமையை எப்படி சொல்லி உனக்கு புரியவைக்க முடியும். இதை என் அப்பாவும் புரிந்து கொள்ள மாட்டேங்கிறார். எல்லோரும் என்னையே குற்றம் சொல்கிறார்களே' என்று லேசாக அலுப்பு தட்டியது. அந்த எரிச்சலை காரின் ஆக்சிலேட்டர் மேல் காட்ட அது காற்றாய் பறந்தது.

கார் ஏன் திடீரென்று இப்படி வேகமாக போகிறது என்று ஓரக்கண்ணால் அவனை திரும்பி பார்க்க, இறுகிய முகத்தோடு காரை கையாண்டு கொண்டிருப்பதை கண்டு 'இன்னும் எவ்வளவு நேரம் இப்படியே இருக்கிறார் என்று பார்ப்போம்'' என எண்ணியவளாக மீண்டும் வேடிக்கை பார்ப்பதை தொடர்ந்தாள்.

கடையை அடைந்ததும், சுதிர் சொன்ன படி தன் கோபத்தை கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு மதுவிடம், ''உங்களுக்கு என்ன கலர் புடவை வேண்டும் என்று சொன்னால் விற்பனை ஆளை எடுத்து போட சொல்லலாம்?'' என்றவனின் பேச்சில் இருந்த



அந்நியத்தன்மை மதுவின் இதயத்தில் ஊசியாய் குத்த, அவனை நேர்பார்வை பார்த்தாள்.

''முதலில் இந்த மாதிரி வாங்கள், போங்கள் என்று மரியாதையாக பேசுவதை விடுங்கள். உங்களை விட நான் வயதில் சிறியவள், அதனால் மது என்று பெயர் சொல்லியே கூப்பிடலாம்'' என்றுவிட்டு, ''உங்களுக்கு எந்த கலர் பிடிக்குதோ அந்த கலரிலே நீங்களே தேர்வு செய்யுங்கள்'' என்று அவனிடமே முடிவை விட்டு விட்டாள்.

யோசனையோடு அவளின் கண்களுக்குள் ஊடுருவி பார்க்க, அதில் ஒன்றையுமே கண்டுபிடிக்க முடியாமல் மனம் தொட்டாச்சிணுங்கியாய் சுருங்கி போக, எதுவும் பேசாமல் புடவை அடுக்கி வைக்கப்பட்டிருந்த செல்பை பார்த்து அவளை அந்த வீட்டு வாரிசாய் எண்ணாமல் தன் பார்பியாய் மனதில் கொண்டு வந்து அவளின் கலருக்கு எது அழகாக இருக்குமென்று எண்ணியபடியே கண்களால் துழாவினான்.

ஒரு சில புடவைகளை எடுத்துபோட சொல்ல, அவர்கள் எடுத்து போட்ட புடவையில் அடர் பச்சையில் சரிகையில், ரவிவர்மா ஓவியத்தை தத்ரூபமாக நெய்திருந்த புடவை கண்ணை பறித்தது.

மதுவுக்கு அந்த புடவையின் அழகு மனதை கொள்ளை கொள்ள இது தான் வேண்டும் என்று சொல்ல மனது துடித்தாலும் அதை கட்டுப்படுத்திக் கொண்டு, முகுந்த் என்னதான் தேர்வு செய்கிறான் பார்ப்போம் என்று ஆழம் பார்க்க அமைதியாக அவனையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவனும் அதே புடவையை திருப்பி திருப்பி பார்த்து விட்டு மனதினுள் அவளுக்கு அணிவித்து பார்த்து திருப்தியாக திரும்பி, ''இந்த புடவை அழகாக இருக்கு. உங்களின் கலருக்கு மிகவும் எடுப்பாக இருக்கும்'' என்று சொல்லிவிட்டு அவசரமாக நாக்கை கடித்துக்கொண்டு, ''சாரி. இது உங்களுக்கு பிடித்திருக்கிறதா?'' என்று மீண்டும் அன்னியமாய் கேட்டதும் அவளுக்கு இப்போது அவன் அப்படி பேசியது உறுத்தவே இல்லை. மாறாக சந்தோஷம் தான் வந்தது.

அவனின் மனதில் தான் இருக்கிறோம் என்றதை அவனின் பேச்சிலே புரிந்துகொண்டதும் அவளுக்கு துள்ளி குதிக்க வேண்டும் போல் தோன்றியது.

# 8

**த**ன் துள்ளலை அடக்கி ''ம்ம்ம் அழகா இருக்கு'' என்று சுருக்கமாக சொல்லிவிட, மேலும் சில புடவைகளை அவனே தேர்ந்தெடுத்து அவளின் அபிப்ராயம் கேட்டு செலக்ட் செய்தான். ரெடிமேட் செக்க்ஷனில் சென்னையில் மது ரசித்த ஜியோமெட்ரிக் வொர்க் செய்த அதே மயில்வண்ண கலரில் சுரிதாரை பார்த்ததும் அதனருகில் சென்று அதை எடுத்துப்பார்த்து, ஆசையாக வருடி பின்பு ஒரு பெருமூச்சுடன் அதை அங்கேயே மாட்டினான்.



இந்த நாடகத்தை ஆரம்பத்தில் இருந்தே ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்த மதுவுக்கு முகுந்த் தன்னை ஆர்.எம்.கே.வியிலே பார்த்திருக்கிறான் என்று புரிய மனதினுள் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் பறக்க, அந்த சந்தோஷத்தினூடே தனக்கு வேண்டியதை தேர்வு செய்து முகுந்திடம் கொடுத்துவிட்டு, அவன் முகத்தை எதையோ எதிர்பார்த்து நோக்கினாள்.

அவளுடைய தேர்வுகள் எல்லாமே அவனின் ரசனைக்கு ஏற்ற மாதிரியே இருக்க ஆச்சரியத்துடன் அவள் முகத்தைப் பார்க்க மதுவின் இதழ்கடையில் சிறு புன்னகை நெளிந்தது . அவளின் சிறு புன்னகை அவன் மனதை அவள் பால் இழுக்க, முகுந்த் அவசரமாக பார்வையை விலக்கி அங்கிருந்து நகர்ந்தான்.

நகைக் கடையிலும், தேர்ந்தெடுக்கிற வேலையை அவனிடமே விட்டுவிட வெள்ளை தங்கத்தில் பச்சையும் வெள்ளையும் கலந்த வைர கற்கள் பதித்த இலையும் பூவும் கொடியில் பின்னி பிணைந்த மாதிரி இருந்த நகை செட்டை தேர்வு செய்தான். அதில் நெக்லஸ், வளையல் மற்றும் கம்மல் இருக்க அதிலிருந்து நெக்லஸ் எடுத்து மதுவின் கழுத்தில் வைத்து அழகு பார்த்தான். அவன் திடீரென்று அப்படி செய்ததும் அவளுக்கு அவனின் தொடுகையில் சருமம் கூசியது.

முதன் முதலில் ஒரு ஆணின் ஸ்பரிசமும், அவனின் மூச்சுக்காற்றும் மதுவை ரொம்பவே அலைக்கழிக்க, அதை தாங்க முடியாமல், ''ப்ளீஸ்

கையை எடுக்கறீங்களா?'' என்று காற்றாகி போன குரலில் சொன்னதும், முகுந்துக்கு தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் மண்டையில் உரைக்க, சட்டென்று விலகி, ''சாரி சாரி ஏதோ தெரியாமல் செய்துட்டேன். சாரி தப்பா எடுத்துக்காதீங்க'' என்று மனம் பதறி போய் மீண்டும் மீண்டும் அவளிடம் மன்னிப்பு கேட்டதும் மதுவுக்கு பாவமாக இருந்தது.

அவனை சமாதானப்படுத்தும் விதமாக, ''இட்ஸ் ஓகே முகுந்த், லீவ் இட்'' என்று முகம் சிவக்க சொல்லிவிட்டு அதற்கு மேல் அவன் முகத்தை நேருக்கு நேர் பார்க்க முடியாது என்று தோன்றியதால் ,விடுவிடுவென்று வெளியே வந்துவிட்டாள்.

அவள் செல்வதை விழிகளாலே தொடர்ந்தவனுக்கு மது முதன்முதலில் தன்னை முகுந்த் என்று பெயர் சொல்லி அழைத்தது ஞாபகம் வர, அவளின் அழைப்பில் அவனுள் ஏதோ ஒன்று உயிர்தெழுந்தது.

அதே சமயம் அவளது முகச்சிவப்பு அவனுக்கு புன்னகையை கொண்டு வர, முகமும் பரவசமாக விரிய, நகைகளை பில் போட்டுகொண்டு வெளியே வந்தான்.

வாங்கியவற்றை எல்லாம் வண்டியில் வைத்துவிட்டு, மணியை பார்க்க மணி எட்டரை ஆகிவிட்டிருந்தது. இதற்கு மேல் வீட்டிற்கு செல்ல எப்படியும் இரண்டு மணி நேரம் ஆகிவிடும். அதனால் இங்கேயே சாப்பிட்டுவிட்டு போகலாம் என்று முடிவு செய்து மதுவை கேட்டான். அவளும் உங்கள் இஷ்டம்



என்றுவிட, தனக்குள் சிரித்துக்கொண்டு, வண்டியை ரெஸ்டாரெண்டிற்கு விட்டான்.

ஒரு உயர்தர ரெஸ்டாரண்ட் கண்ணில் பட, முகுந்த் வண்டியை பார்க் செய்துவிட்டு உள்ளே செல்ல அந்த இடமே அரையிருட்டில் குளித்திருக்க,, இருவரும் ஓர் இடத்தை தேர்ந்தெடுத்து அமர்ந்து மெனுவை ஆர்டர் செய்ததும் அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல் இருவரும் மௌனத்தில் மூழ்கினார்கள் .

மது மௌனமாக தன் விரல் நகங்களை ஆராய்ந்து கொண்டிருக்க, முகுந்தும் அமைதியாக அவள் செய்கைகளை கண்டும் காணாமல் பார்த்துக் கொண்டிருந்தவன் கொஞ்ச கொஞ்சமாக தன் வசத்தை அவளின் அருகாமையில் தொலைத்துக் கொண்டிருந்தான்.

ஆனால் அவள் மனதில் முகுந்திடம் ஏன் சரியாக பேசவில்லை என்று கேட்கலாமா? பார்பி என்று அழைத்தானே அதை பற்றி கேட்கலாமா? அப்படி ஏதாவது கேட்டால் இப்போதிருக்கும் ரம்யமான சூழ்நிலை மாறிவிடுமோ? என்று எண்ணிய கணத்தில், 'ச்சே. என்ன நாம் சராசரி பெண்ணை மாதிரி யோசித்துக் கொண்டிருக்கிறோம். இவன் இப்படி செய்வதால் அதிகமாக பாதிக்கப்படுவது அம்மா தான். அவர்கள் சந்தோஷம் தான் எனக்கு முக்கியம் . இவன் நம்மிடம் கோபித்துக் கொண்டால் என்ன ஆகிவிட போகிறது' என்று பழைய துடுக்குத்தனம் தலைதூக்க, அவனை அதே வேகத்தில் நிமிர்ந்து பார்த்தாள்.

முகுந்த் தன்னையே பார்த்துக்கொண்டிருக்க, அவள் நிமிர்ந்ததும் இருவரின் பார்வையும் ஒரே நேர்கோட்டில் சந்தித்தது. உண்மையில் முகுந்தும் அதையே தான் யோசித்துக் கொண்டிருந்தான்.

'இவள் நம்மை சென்னையில் அடித்து வைத்த மாதிரி பார்த்தாளே, நிச்சயம் அந்த பார்வையில் காதல் இல்லையென்றாலும் நம் மேல் கோபம் இல்லாத மாதிரி தான் இருந்தது. இங்கே நான் பார்பி என்று அழைத்து அவளிடம் பாராமுகமாக இருப்பதை ஏன் மது கேட்கவில்லை. ஒருவேளை நம் காதல் மனது புரிந்ததா? இல்லை எதற்காக வெறுக்கிறோம் என்று தெரிந்துவிட்டதா?

அப்படியே இருந்தாலும் இரண்டிற்குமே ஏற்ற ரியாக்ஷன் இல்லையே இவளிடம். இப்போது அவள் ஏன் பார்பி என்று அழைத்தாய் என்று கேட்டால் என்ன சொல்வது . அப்படி என் மனதில் இருப்பதை சொன்னால் அதை சரியாக புரிந்து கொள்வாளா? என்று யோசித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான்.

நிமிர்ந்தவள் முகுந்தின் கூர்மையான பார்வையில் சற்று தடுமாறி கேட்க வந்ததை மறந்து தலை குனிந்தவள் மெதுவாக அவனை ஓர விழியால் பார்க்க, அந்த பார்வையில் முகுந்தின் மனது ஈர சிறகுகளாய் சிலிர்த்தது. அதை அனுபவிப்பதற்குள் பூஜைவேளை கரடியாய் பீனா வந்து சேர்ந்தாள்.

பெற்றோருடன் வந்த பீனா இருவரையும் தூரத்தில் இருந்தே பார்த்துவிட... அதுவும் அவளுக்கு மதுவை முகுந்த் அருகில் பார்த்ததும், முகுந்த் அவளை



விழுங்கி விடுவது போல் பார்த்துக்கொண்டிருப்பதை கண்டதும் அவளின் உடம்பு முழுவதும் சொக்க பானையாக எரிந்தது.

இருவரும் தனியாக இருக்கிறார்கள், நடுவில் போய் அவர்களை தொல்லை செய்வது நாகரிகமில்லை என்று தெரிந்தாலும் எரிச்சல் தாங்காமல் அவர்கள் அருகில் சென்று அப்போது தான் பார்ப்பது போல, ''ஹாய் முகுந்த்ம'' என்றழைக்க கூடவே மோகனும் வந்துவிட முகுந்த், ''ஐயோ இவர்களா...?, கத்தியில்லாமல் ரத்தம் வர வைக்கிற பார்ட்டிகளாச்சே'' என்று முகத்தை சுளித்து எரிச்சலுடன் முணுமுணுக்க மது அவனை ஆச்சர்யத்துடன் பார்த்தாள்.

அதற்குள் பீனாவின் அம்மா லதா குறுக்கிட்டு, ''வாங்க.சாப்பிட வந்த இடத்தில் போய் கொஞ்சம் கூட நாகரிகம் இல்லாமல் போய் பேசி தொல்லை பண்ணிக்கிட்டு'' என்று அவரை அங்கிருந்து இழுத்துப் போகவும், வேறு வழியில்லாமல் பீனாவும் அவர்களை பின்தொடர்ந்தாள்.

அவர்கள் ரிசர்வ் செய்திருந்த டேபிளில் போய் அமர்ந்தவளின் கண்ணோ இவர்கள் மேலேயே இருந்தது. 'இவளைத் தானே அன்று ஸ்பென்சரில் ரொமான்ஸ் பார்வை பார்த்தான். இன்று எப்படி இருவரும் கேரளாவில்... அதுவும் மணி ஒன்பது ஆகப்போகுது. இந்த நேரத்தில் இங்கே முகுந்துடன் பேசிக்கொண்டு இருக்கிறாள் என்றால் இவள் முகுந்துக்கு சொந்தமா...! இத்தனை வருடத்தில் இவளை நான் பார்த்ததே இல்லையே! அப்படியே

சொந்தமென்றால் அன்று ஏன் இவனை ஸ்பென்சரில் பார்த்து பேசாமல் போனாள். என்ன நடக்குது? நான் சென்னைக்கு போயிருந்த சமயம் இங்கே என்னென்னவோ நடந்திருக்கு. அது என்ன என்று முதலில் தெரிந்து அந்த பூனைக்கண் சுநரியை வெட்டிவிடணும். ஏற்கெனவே முகுந்த் சரியாக என்னை பார்த்து பேசமாட்டான். இதில் அநியாயத்திற்கு அழகாக இருக்கும் அவள் முன்னால் எப்படி என்னை திரும்பி பார்ப்பான்' என்று நினைக்க நினைக்க ஆத்திரத்தில் உடம்பு நடுங்கியது.

பீனா வந்து குறுக்கிட்டதால் முகுந்த் சுதாரித்துக்கொண்டு தான் கேட்க வந்ததை கேட்காமல் அமைதியாக கைகளை கட்டிக்கொண்டு எங்கேயோ வேடிக்கை பார்க்க ஆரம்பிக்க, அவனின் திடீர் மாற்றத்துக்கான காரணம் தெரியாமல் மதுவும் தானாக இப்போது எதுவும் கேட்க வேண்டாம் என்று முடிவு செய்து அவளும் அமைதியானாள். அவர்கள் ஆர்டர் செய்த உணவு வரவும், மௌனமாக சாப்பிட்டுவிட்டு அங்கிருந்து எழுந்து வெளியே வந்தார்கள்.

மௌனமாக காரை எடுத்தவன் முன்பு இருந்த அந்த இளகல் தன்மை அவனை விட்டு முற்றிலும் போய் மறுபடியும் ரோபோ மாதிரி முகம் மாறிவிட, மதுவுக்கு சற்று எரிச்சலாக இருந்தது. 'ச்சே எவ்வளவு ரம்யமாக இருந்தது, யாரது லூசு மாதிரியே ஒரு டிரஸ் போட்டுகொண்டு கொஞ்சம் கூட நாகரிகம் இல்லாமல் வந்து இதமான சூழ்நிலையை கெடுத்துவிட்டாள்' என்று கடுகடுத்தது மனம்.



'வந்தவள் யாரென்று கேட்கலாமா?' என்று யோசித்துக்கொண்டே திரும்பி அவன் முகத்தை பார்க்க அவனும் சலனமே இல்லாமல் பார்த்துவிட்டு மறுபடியும் பார்வையை சாலையில் பதித்தான்.

இருட்டாக இருந்ததினால் வெளியேயும் வேடிக்கை பார்க்க முடியாமல் மிகவும் போரடித்தது. அவளின் மனம் புரிந்து ஐ பாட்-ஐ காரின் டாஷ் போர்டிலிருந்து எடுத்துக் கொடுக்க, மது நன்றி சொல்லி அதை வாங்கி தலையில் ஹெட் போன் மாட்டிக்கொண்டு கொஞ்ச நேரம் பாட்டு கேட்டுகொண்டே இருட்டில் கண்ணை பதித்து வேடிக்கை பார்த்தவளுக்கு கொஞ்ச நேரத்திலே தூக்கம் கண்ணை சுழற்ற, முகுந்த் முன்னால் தூங்க வெட்கப்பட்டு மிகவும் தூங்காமல் இருக்க முயற்சி செய்தும் பலனில்லாமல் சீட்டில் சாய்ந்தே தூங்கிவிட்டாள்.

''மது... '' என்று மயிலிறகால் வருடுவது போல் மென்மையாக யாரோ அழைப்பதை கண்டு கண்விழித்தவளுக்கு அது முகுந்தின் குரல் என்று புரிய சுற்றும் முற்றும் பார்க்க, ''இறங்கு வீடு வந்திருச்சு...'' என்று கதவை திறக்க சீட்டிலிருந்து எழ முயற்சி செய்தவள் முடியாமல் திரும்பி பார்க்க சீட் நன்றாக அவள் தூங்குவதற்கு வசதியாக சாய்த்து வைக்கப்பட்டு அதில் ஒரு குஷனையும் வைத்திருக்க அதை ஆச்சர்யத்தோடு பார்த்துவிட்டு முகுந்தையும் பார்த்தாள்.

அவள் எழ சிரமப்படுவதை பார்த்து அவன் பக்கம் குனிந்து சீட்டை சரி செய்ய, அவன் மீதிருந்து

'பாய்சன் செண்ட்'ன் மனம் மதுவை மயக்க முகத்தை வேறுபக்கம் திருப்பி கண்ணை இறுக்கமாக மூடிக்கொண்டாள் .

கார் சத்தம் கேட்டு பாரதியும், மஞ்சுவும், சுதிரும் வெளியே வர அவர்களிடம் முகுந்த் ஷாப்பிங் செய்த பைகளை கொடுத்துவிட்டு , சோபாவில் அமர்ந்து ஷூ லேசை கழட்டிக்கொண்டே ரெஸ்டாரெண்டில் சாப்பிட்டுவிட்டோம் ...தாத்தா எங்கே கேட்டு, அவர் தூங்க போய்விட்டார் என்ற பதிலை வாங்கியவன், இன் செய்த ஷர்ட்டை பேண்டிலிருந்து வெளியே எடுத்துக்கொண்டே மாடியேறினான்.

அவன் செல்வதையே சிறிது நேரம் பார்த்துவிட்டு திரும்பிய மதுவிடம், ''நீ போய் தூங்குமா மீதியை நாளை பார்த்துக்கொள்ளலாம். மஞ்சு நீயும் போய் தூங்கு'' என்று அனுப்பி வைக்க, மதுவும் அதைத் தான் அந்த நேரத்தில் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அதனால் உடனே மஞ்சுவை அழைத்துக்கொண்டு ரூமிற்கு சென்றவளிடம்...

''என்னாச்சு மது உனக்கும், முகுந்துக்கும் போன இடத்தில் பிரச்சனையா? நீயும் ஒரு மாதிரியா இருக்கே?'' என்று கேட்டதும் அங்கிருந்த சோபாவில் ஒரு காலை மடித்து அமர்ந்தாள்.

''பிரச்சனை எல்லாம் இல்லை. பார்க்கப் போனால் என்னிடம் நன்றாக தான் பேசினார். அதாவது ஸ்பென்சரில் ஒருத்தியை பார்த்தோமே அவள் வரும் வரை எல்லாமே நல்லா தான் இருந்தது. அவள் வந்ததும் வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏறிவிட்டது'' என்றாள்.



''நீ சொல்றது உண்மையாம? அப்புறம் ஏன்... என்னாச்சு. யாரது குறுக்கிட்டது . அவளைப் பற்றி ஏதாவது கேட்டாயா?'' என்றார் ஆர்வமாக.

''ம்ச்ச்...'' என்று அலட்சியமாக உச்சு கொட்டிவிட்டு, ''அவள் யாராக இருந்தா நமக்கு என்ன? ஆனால் ஒன்று அவர் மனதில் என்னவோ பலமா ஒன்று உறுத்துது. தொண்டையில் மீன் முள் சிக்கிய மாதிரி அவரிடம் ஒரு தவிப்பு இருக்கு. அதனால் அவர் தன் கோபத்தை விட்டு பேச நினைத்தாலும் அந்த உறுத்தல் தடுக்குது. ஒருவேளை அவருடைய மாமா பெண் நானாக இல்லாமல் வேறு யாராகவேணும் இருந்திருந்தால் இந்த அளவுக்கு தடுமாற்றம் இருந்திருக்காதோ என்னவோ...?'' என்றாள்.

''அப்போ முகுந்த் மனதில் என்ன இருக்கு என்று தெரிந்து கொண்டாயா? இல்லை அவனே உன்னிடம் சொல்லிவிட்டானா?'' என்று அப்பாவியாக கேட்டார்.

அவரின் அப்பாவித்தனமான கேள்விக்கு சிரித்துவிட்டு, ''ஐயோ அம்மா, ஏன் நீ இன்னும் இப்படி அப்பாவியாய் இருக்கிறே. இரு முதலில் சொல்லி முடித்துவிடுகிறேன். இருந்தாலும் உனக்கு ஆர்வ கோளாறு அதிகமாயிடுச்சு. அப்பா பாவம் எப்படி தான் உனக்கு தன் காதலை புரியவைச்சாரோம.'' என்று கேலி செய்தாள்.

இந்த மாதிரி ஒரு தவிப்பு இருக்சிறவர் எப்படி தன் காதலை சொல்கிற அளவுக்கு பேசுவார். சும்மா இந்த புடவை பிடித்திருக்கா, இந்த நகை பிடித்திருக்கா, ஹோட்டலுக்கு போலாமா என்ற ரீதியில் தான் பேசினார்.

ஆனால் அவர் மனதில் நான் இருக்கிறேன் என்று எனக்கு தேவையானதை அவர் தேர்ந்தெடுத்ததிலேயே புரிந்து கொண்டேன்'' என்று கண்களில் கனவு மின்ன பேசியவளை முக விகசிப்போடு பார்த்தார்.

அவரின் தோள் மீது சாய்ந்து கொண்டு, ''ம்மா, எனக்கு முகுந்தை மிகவும் பிடித்திருக்கு. ஐ லவ் ஹிம். உனக்கு இப்போ சந்தோஷம் தானே. உன் நாத்தனார் பையனாக முகுந்த் ஆனதால் உனக்கு இரட்டிப்பு சந்தோஷம் தானே'' என்று கொஞ்சம் வெட்கத்தோடு சொல்வதை கேட்டு தாயின் மனம் பூரித்தது.

ஆனாலும் எப்படி திடீரென்று மதுவின் மனம் மாறியது என்ற கேள்வி அவர் மனதில் உறுத்த அதை வாய்விட்டே கேட்டார். மது எழுந்து ஜன்னலருகே சென்று சிறிது நேரம் வெளியே வேடிக்கை பார்த்துவிட்டு, திரும்பி கையை கட்டிக்கொண்டு,

''நீ கேட்கறது நல்ல கேள்வி தான் . எனக்கு முதன் முதலில் முகுந்தை பார்த்தபோது என் மனதை தொட்டவனாக இருந்தாலும் அவன் யாரென்று தெரியாமல் அவனை காதலித்து பிறகு உன்னை மாதிரி நான் கஷ்டப்பட தயாராக இல்லை. நீ யாருடைய சம்மதமும் இல்லாமல் கல்யாணம் செய்துக்கொண்டு எவ்வளவு அவப்பெயர் சுமந்தாய்'' என்று சொல்லும்போது மஞ்சுவின் கண்களில் பழைய நினைவுகளால் கண்ணீர் வழிய அதை துடைத்துக்கொண்டு மது சொல்வதை கவனித்தார்.

''அது மாதிரி என்னால் இருக்க முடியாது. ஒரு பெண்ணுக்கு பொறுமை இருக்க வேண்டியது தான்.



ஆனால் அதுவே நம் தன்மானத்துக்கு இழுக்கு வர விடக்கூடாது. நீ குனிய குனிய இவர்கள் எல்லாம் உன்னை குட்டினார்கள். அதன் பலன் என்ன? இப்போது இவர்கள் ஏற்றுக்கொண்டாலும் உன்னாலும், என்னாலும் சகஜமாக இருக்க முடியவில்லையே . இவர்கள் செய்தது நம் மனதில் ரணமாகத்தானே இருக்கிறது'' எனும் போது மஞ்சுவின் தலையை அனிச்சையாக ஆட்டினார்.

''அதே நிலைமை எனக்கும் வந்து, அதைப் பார்த்து நீ கஷ்டப்படக்கூடாது என்று தான் என் மனதில் எந்த ஆசையையும் வளர்த்துக்கொள்ளவில்லை. ஆனால் இப்போது நிலைமை வேறு. முகுந்த் உங்கள் நாத்தனார் பையன் . எனக்கு அத்தை மகன். இப்போது என் ஆசைக்கு எந்த தடையும் வராது. குடும்பத்தில் எந்த பிரச்சனையும் வராது. அது மட்டுமில்லை, உங்கள் திருமணத்தால் ஏற்பட்ட கசப்பான அனுபவமும், இந்த திருமணத்தால் கிட்டத்தட்ட மறைந்துவிடும். இப்போது புரிகிறதா ?'' என்று அவரின் பின்னால் வந்து கழுத்தை கட்டிக்கொண்டு கொஞ்சலாக கேட்டாள்.

மது பேசிய அத்தனையும் உண்மை என்பதால் மஞ்சு கண்ணில் தன்னையும் மீறி கண்ணீர் சுரக்க திரும்பி மதுவை கட்டிக்கொண்டு விசும்பினார். அவரின் விசும்பல் சத்தம் கேட்டு மது அவரிடமிருந்து விலகி ,''ஷ் மஞ்சு, என்ன இது சின்ன குழந்தையாட்டம். நான் உனக்கு பொண்ணா? இல்லை நீ எனக்கு பொண்ணா என்றே சில சமயம் தெரியமாட்டேங்குது'' என்று போலியாக அலுத்துக்கொண்டே அவர் கண்ணை துடைத்தாள்.

''இனிமே நீ அழக்கூடாது. எப்பவும் இந்த முகத்தில் சிரிப்பை தான் பார்க்கணும்'' என்று அவர் கன்னத்தில் முத்தமிட்டு ''எங்கே கொஞ்சம் சிரி...'' என்று அவர் கன்னத்தை பிடித்துக் கிள்ள, மஞ்சு கண்ணீருடன் லேசாக புன்னகை செய்தார்.

''ஐயோ மஞ்சு இதற்கு நீ அழுவதே அழகா இருக்கு. வரவர ரொம்ப அழுகாச்சி மஞ்சுவா மாறிட்டே'' என்று சீண்ட அவரின் புன்னகை மேலும் பெரிதாக விரிந்து, வெட்கத்துடன், ''ச்சே போடி உனக்கு ரொம்ப திமிர்'' என்று செல்லமாக திட்டிவிட்டு, ''அது சரி இப்படி முகுந்த் முரண்டு பிடிக்கிறானே எப்படி இதை சரிசெய்வாய்?'' என்று கொஞ்சம் சந்தேகமாக கேட்டார்.

''ம்ம் நானும் அதை தான் யோசித்து கொண்டிருக்கிறேன் . ஒரு மாதம் தான் தங்கலாம் என்று வந்தேன். ஆனால் முகுந்தின் மனது தெரியாமல் இங்கிருந்து போவதில்லை என்று முடிவு செய்து விட்டேன். பார்க்கலாம். ஒரு பெண் நினைத்தால் முடியாதது எதுவும் இல்லை. எனக்கு நம்பிக்கை இருக்கு. அந்த நம்பிக்கையை கொடுத்தவரே முகுந்த் தான்'' என்றவளை கேள்வியாக நோக்கினார்.

''எஸ் மா. இன்று அவர் நடந்துகொண்ட விதம், எனக்காக பார்த்து பார்த்து செய்தது, நான் காரிலே தூங்கியபோது என் மீது அவர் காட்டிய பரிவும் அன்பும் எனக்கு நம்பிக்கையை கொடுத்திருக்கு'' என்று கூறிவிட்டு, ''சரி மா நீ போய் தூங்கு, இப்பவே மணி பனிரெண்டு ஆகிவிட்டது. மீதியை நாளை பேசிக் கொள்ளலாம்'' என்றதும் அவரும் குட் நைட் சொல்லிவிட்டு தன் அறைக்குச் சென்றார் .



அடுத்த நாள் மது ரெடியாகி கீழே வரும் போது இரு புதியவர்கள் வந்திருக்க, ''இவங்க உன் சின்ன அத்தை பல்லவி, இவர் உன் அத்தையின் கணவர் அவினாஷ். டெக்ஸ்டைல் மில் வைத்திருக்கிறார். இவர்களுக்கு ஒரே பையன் அபினவ். அவன் இப்போ திலீப் கூட பாக்டரிக்கு போயிருக்கிறான். மதியம் வருவார்கள். அப்போது பார்க்கலாம்'' என்று அறிமுகப்படுத்தினார்.

மது இருவருக்கும் மரியாதை நிமித்தமாக தாமரை மொட்டாக கைகுவிக்க, பல்லவி அவளை உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை நிதானமாக அலட்சியமான பார்வையால் அளவெடுக்க, அவினாஷ் அவள் வணக்கம் சொன்னவுடன் பதில் வணக்கம் சொல்லி, ''எப்படி மா இருக்கிறேம, என்ன படிக்கிறே? என்ன காலேஜ்...?'' என்று அன்பாக விசாரிக்க ஆரம்பித்தார்.

மது பல்லவியை நேருக்கு நேராக சந்தித்து ஒரு பார்வை பார்க்க, பல்லவியின் முகத்தில், 'ம்ஹூம் ஓடிப் போனவளுக்கு பிறந்தவள் தானே. இவளுக்கு என்ன மரியாதை'என்ற பாவனை தான் இருந்தது.

மதுவுக்கு அவரின் பார்வை உள்ளுக்குள் எரிச்சலை கிளப்ப, 'இங்கே பார்த்தாயா இவர்களின் அலட்சியத்தை...' என்று மஞ்சுவுக்கு கண்ணாலே ஜாடை காட்டிவிட்டு, அவினாஷின் கேள்விக்கு பதில் சொல்லிவிட்டு , ''நீங்க எப்படி இருக்கீங்க அத்தை...?'' என்று வேண்டுமென்றே அந்த அத்தைக்கு அழுத்தம் கொடுத்து நலம் விசாரித்தாள்.

பல்லவிக்கு அவள் குரலில் இருந்தது பதவிசா, கேலியா? நக்கலா? என்று கண்டுபிடிக்க முடியாமல் எப்படி ரியாக்ட் செய்வது என்று குழம்பி பின் பூபதி இருப்பதை நினைவில் கொண்டு வந்து, ''ம்ம் நல்லா இருக்கேன் . நீ எப்படி இருக்கே?'' என்ற அவர் கேள்வியில் சத்தியமாய் அன்பு என்று மருந்துக்கு கூட இல்லை என்று புரிந்து கொண்ட மது, ''அது தான் இப்போ சொன்னேனே . நீங்கள் கேட்கவில்லையா?'' என்றாள் சீண்டலாக.

# 9

பூபதிக்கு இவர்களின் வார்த்தை போர் புரியாமல் குறுக்கிட்டு, ''நேற்று எப்படி இருந்தது ஷாப்பிங் அனுபவம். உனக்கு தேவையானது எல்லாம் வாங்கினாயா? என்ன புடவை வாங்கினாய்?'' என்று கேட்டதும், மதுவின் கண்கள் முகுந்தை தேடியது.

அவன் அங்கே இன்னொரு சோபாவில் அமர்ந்து எகானமிக் டைம்ஸ் படித்துக்கொண்டிருந்ததை பார்த்துவிட்டு, ''ம்ம் நல்லா இருந்தது '' என்று சொல்லி முடிப்பதற்குள் பாரதி எல்லாவற்றையும் பூபதியின் முன் கொண்டு வந்து வைக்க பிரபா தேவியும் அங்கே வந்து வாங்கிய புடவைகளை பார்த்தார்.

பாரதி புடவையை பிரித்து பார்த்துவிட்டு அதை மதுவின் மேல் வைத்து பார்க்க, இகானமிகஸ் டைம்ஸ் படித்துகொண்டிருந்தவனின் பார்வை மதுவின் பக்கம் திரும்பியது. மதுவின் கண்கள் தாமாக அவனை நோக்கி பாய, முகுந்த் பார்வையை மீண்டும் நெருப்புக் கோழி தன் தலையை மண்ணுக்குள் புதைத்துக்கொள்வது போல பேப்பருக்குள் புதைத்துக்கொண்டான்.



மதியம் அபினவ் வந்ததும் திலீப் அவனை மதுவுக்கு அறிமுகப்படுத்தி பேச ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே அது அரட்டையாக மாறியது. அங்கே அமர்ந்திருந்த பல்லவியின் கண்கள் தாமாக முகுந்தை நோக்க, அவன் முகத்தில் தெரிந்த எரிச்சலை கண்டு உள்ளுக்குள் திருப்தியாக இருந்தது. இவர்களின் அரட்டையை ரசிக்க முடியாமல் முகுந்த் விருட்டென்று எழுந்து போனது, மதுவுக்கு வேடிக்கையாக இருந்தது.

பல்லவியும், அவினாஷும் 'கெட்-டுகெதர்' விழாவை ஒரு வாரம் கழித்து வைத்துக்கொள்ளுங்கள். அப்போது தான் எங்களால் கலந்து கொள்ள முடியும் என்று சொல்லிவிட்டதால் பூபதி விழாவை புது வருடத்திற்கு முதல் நாள் வைத்துக்கொள்ளலாம் என்று முடிவெடுக்க, எல்லோரும் அந்த விழாவுக்காக பிஸியாகிவிட, மஞ்சுவும் பாரதியோடே சுற்றிக் கொண்டிருந்தார்.

மதுவுக்கு செய்ய வேலையும் இல்லாமல், காலேஜுமில்லாமல் போரடித்தது. ஒவ்வொரு நாளையும் புத்தகம் படிப்பது, தோட்டத்தில் சுற்றுவது என்று பொழுது போக்கியும் நேரம் நகரவில்லை. மியூசிக் சிஸ்டத்தில் பாரதியாரின் பாடலான, ''ஆசை முகம் மறந்து போச்சே...'' என்ற பாடலை போட்டு சுரிதார் துப்பட்டாவை குறுக்காக இழுத்து கட்டிக்கொண்டு ஆட

ஆரம்பிக்க, கொஞ்ச கொஞ்சமாக அதிலே மூழ்கி லயித்துப் போய் ஆடினாள்.

தொடர்ந்து நான்கு பாட்டுகளுக்கு ஆடிவிட்டு இசை நின்றதும் தன் ஆட்டத்தை நிறுத்த பட படவென்று கை தட்டும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு திரும்ப, பாரதி, மஞ்சு, பூபதி , பிரபாதேவி என்று ஒரு பெரிய கூட்டமே இருக்க, அவர்கள் கூடவே முகுந்தும் அவளையே கூர்மையாக பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

மதுவுக்கு எல்லோரும் பார்த்ததை விட முகுந்தும் பார்த்தான் என்று தெரிந்ததும் முகம் செவ்வானமாக சிவந்துபோக அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் நெஞ்சம் படபடக்க அப்படியே நின்றாள்.

பிரபாதேவி அருகில் வந்து, ''மது எவ்வளவு அழகா ஆடினே தெரியுமா? பரவாயில்லை மஞ்சு தன் பெண்ணை எல்லாம் நல்லபடியா சொல்லி தந்து தான் வளர்த்திருக்கா'' என்று பாராட்டினார்.

திலீப் அவளருகில் வந்து, ''சூப்பர் மது அழகா ஆடினீங்க...'' என்று கைகொடுக்க, மதுவும் வெட்கச் சிரிப்போடு அந்த பாராட்டை ஏற்றுக்கொள்ள, அவளின் வெட்கத்தை முகுந்த் கண்களில் பளபளப்போடு ரசித்துக் கொண்டிருந்தான்.

''சரி இதுக்கும் மேலே உனக்கு என்னென்ன தெரியும் மது கண்ணா'' என்று பூபதி கேட்டார். பாரதி குறுக்கிட்டு, ''அப்பா விடுங்கப்பா, அவளே ஆடிக் களைத்து போயிருக்கிறாள் . நீங்கள் வேறு கேள்வி மேலே கேள்வியாக கேட்கறீங்க. அதெல்லாம் மெதுவா



கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்'' எனும் போதே பணியாள் பழச்சாறை கொண்டு வந்து பாரதியிடம் நீட்டினான்.

இத்தனையையும் கல்லு பிள்ளையார் மாதிரி பார்த்துக்கொண்டேயிருந்தவன் ஏதாவது சொல்ல மாட்டானா என்று எதிர்பார்த்து, அவன் முகத்தை ஆவலாக நோக்கினாள். அவள் பார்வையை சந்தித்ததும் உடனே அவன் அந்த இடத்தை காலி செய்யவும், 'இவன் ஏன் இன்னும் இப்படியே இருக்கிறான். நான் வந்து ஒரு வாரம் ஓடிவிட்டது. இன்னும் என்ன முறுக்கிக்கொண்டு இருக்கிறான்?' என்று சற்று எரிச்சல் கலந்த வேதனையாக இருந்தாலும், அடுத்த வினாடியே 'எங்கே ஓடுவாய் என்னிடம் தான் வந்தாகணும்' என்று நினைத்த மாத்திரத்தில் மெலிதான முறுவல் வந்தது.

பூபதி ஏற்பாடு செய்த 'கெட்- டு கெதர்' விழாவும் நெருங்க, அன்று மாலை விழா என்பதால் எல்லோரும் அதில் பிஸியாகிவிட , சாப்பிட்டுவிட்டு தூங்குமாறு மதுவை பாரதி பணித்திருந்தார். ஆனால் மதுவுக்கு தான் தூக்கம் வரவில்லை.

ரொம்ப டென்ஷனாக இருக்கிறாள் என்று தெரிந்து வந்த பாரதி அவள் கைக்கு மருதாணி இட வந்தவர், மதுவின் முகம் கொஞ்சம் ஓய்ந்து போன மாதிரி இருப்பதை கண்டு ஆதரவாக என்னவாயிற்று என்று விசாரித்தார்

''ம்ம்ச்ச் ... இந்த விழா இப்போ தேவையா என்று தோன்றுகிறது. எனக்கிருக்கிற மனநிலையில் என்னால் விழாவில் இயல்பாக இருக்க முடியுமா என்று

தெரியவில்லை'' என்றவளின் பேச்சிலிருந்த சோர்வு பாரதியை துணுக்குற செய்தது.

''என்ன மது இப்படி சொல்கிறாய். உன் மனதில் அப்படியென்ன சங்கடம் இருக்கு. உன்னை யார் என்ன சொன்னார்கள்?'' என்று மீண்டும் அதே கேள்வியை கேட்டார்.

மது அசுவாரசியமாக உச்சு கொட்டிவிட்டு, ''உங்கள் எல்லோருக்கும் நாங்கள் இங்கே வந்தது எந்த அளவிற்கு சந்தோஷமாக இருக்குமென்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நிச்சயமாக உங்கள் பிள்ளைக்கு சந்தோஷமில்லை என்று மட்டும் தெரிகிறது. அதுமட்டுமில்லை, பல்லவி அத்தைக்கும் கூட நான் இங்கே வந்தது பிடிக்கவில்லை என்றே நினைக்கிறேன். அதனால் தான் கேட்கிறேன் இந்த விழா இப்போது தேவையா...'' என்றாள்.

பாரதிக்கு அவளின் மனதில் இருந்த சங்கடம் புரிய மனம் வருந்தி, ''என்னம்மா மது நீ இந்த வீட்டு வாரிசுடா, அதுவும் இந்த வீட்டின் மகாலட்சுமி. உன்னை யாருக்காவது பிடிக்காமல் போகுமா? முகுந்த் அடிப்படையில் மிகவும் நல்லவன் தான். ஆனால் அவனுடைய சிறிய வயதில் அவன் மனதில் பதிந்த விஷயம் தான் அவனை இந்த அளவுக்கு பேச விடாமல் தடுக்குது.

பல்லவிக்கு தன் அண்ணனை உன் அம்மா பிரித்துவிட்டார்களே என்ற ஆத்திரம். அந்த ஆத்திரத்தை, கோபத்தை எல்லாம் வார்த்தைகளாக்கி விஷத்தில் தோய்த்து சிறு வயதிலிருந்தே இன்று வரை



முகுந்த் மனதில் விதைத்து வைத்திருக்கிறாள். உங்களை இங்கு வரவைக்க அவன் ஐடியா கொடுத்தாலும் உங்களை மனமார ஏற்றுக்கொள்வதில் தடுமாறுகிறான்'' என்று கொஞ்சம் வருத்தத்தோடு உரைத்தார்.

'தன் அம்மாவை பற்றி அப்படியென்ன தவறாக சொல்லி முகுந்த் மனதை கெடுத்து வைத்திருக்கிறார்கள்' என்ற கேள்வி மனதை நெருட அதை வாய்விட்டே அவரிடம் கேட்டாள். பாரதி அதை எதிர்பார்த்திருந்தாலும் அவள் கேட்டதும் எப்படி இவளுக்கு சொல்வதென்று சற்றே நிலை தடுமாறிப் போனார்.

மது மீண்டும் மீண்டும் சொல்லும்படி வற்புறுத்த, பாரதி வேறு வழியில்லாமல் அவள் கையில் மருதாணி வைத்துக்கொண்டே, ''உன் அப்பா இந்த வீட்டு செல்லப் பிள்ளை. அவன் படிக்கும்போதே எந்த பெண்களிடம் பேசி நாங்கள் பார்த்ததில்லை. ஏன் சொந்தக்காரப் பெண்களிடம் கூட பேசமாட்டான். அப்படிபட்டவன் திடீரென்று மஞ்சுவை யாருடைய சம்மதம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டதினால்.. '' என்று மேற்கொண்டு சொல்ல முடியாமல் தடுமாறினார்.

மது, ''சொல்லுங்க அத்தை, யாருடைய சம்மதமில்லாமல்... திருமணம் செய்துகொண்டதினால் என்ன?'' என்று துளைத்தாள்.

''நான் சொல்றதை கேட்டு கோபப்படாதே'' என்று சொல்லிவிட்டு, ''ராஜேஷை மயக்கி,

சொத்துக்காக ஆசைப்பட்டு மஞ்சு தான் அவரை தங்கள் குடும்பத்திலிருந்து பிரித்து இழுத்துக்கொண்டு ஓடிவிட்டாள். மஞ்சு பணத்திற்காக என்ன வேண்டுமென்றாலும் செய்கிற கீழ்த்தரமான பெண் என்ற ரீதியில்... இன்னும் சொல்ல நா கூச வைக்கும் பட்டங்களைக் கொடுத்து முகுந்தின் மனதில் ஏற்றிவிட்டாள்.

ராஜேஷ் உன் அம்மாவை திருமணம் செய்த போது நான் முகுந்தை பெற்றெடுக்க மருத்துவமனையில் இருந்தேன். ராஜேஷ் எங்களை விட்டு பிரிந்துவிட்டான் என்ற கவலையில் நான் குழந்தையை சரியாக கவனிக்கவில்லை. பல்லவி தான் அவனை கவனித்துகொண்டாள்.

முகுந்துக்கு எட்டு வயது இருக்கும்போது தான் பல்லவிக்கு திருமணம் ஆனது. அதுவரைக்கும் முகுந்துக்கு இந்த மாதிரி கண்டதையும் சொல்லிக் கொடுக்க அந்த பிஞ்சு மனதில் பசுமரத்து ஆணி போல பதிந்துவிட்டது. போதாததிற்கு அம்மா ராஜேஷின் நினைவில் அழும்போது முகுந்த் ஏன் பாட்டி அழுகிறாய் என்று கேட்டால், அவர் பங்குக்கு மஞ்சுவை கண்டபடி பேசுவார். வீட்டில் உள்ள எல்லோரும் எப்போதும் ராஜேஷின் நினைவில் புலம்புவதை பார்த்து பார்த்து அவன் மனதில் அழியாத வடுவாக மாறிவிட்டது.

இப்போது உங்களைப் பார்த்ததும் எல்லாவற்றையும் மறந்துவிட்டோம். ஆனால் அவன் மனது உங்களை ஏற்றுக்கொள்ள தடுமாறுகிறது'' என்று எல்லா உண்மையையும் போட்டு உடைத்தார். பாரதி



சொல்ல சொல்ல மதுவுக்கு கோபம் எகிற முகம் கன்றி உள்ளம் தீப்பிழம்பாய் கொதித்தது. அவரிடமிருந்து தன் கையை பிடுங்கிக்கொண்டு அங்கிருந்து கோபமாக எழுந்து ஜன்னலருகே போய் நின்றுகொண்டாள் .

அவள் எழுந்து போனதும் பாரதி பயந்து போய், ''மது உங்கள் மேல் கோபம் இருந்தது எல்லாம் பழைய கதை. இப்போ யாருக்கும் உங்கள் மீது அந்த மாதிரி எண்ணமே இல்லை. முகுந்துக்கு நீ நினைப்பது தவறு என்று எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வான். என்ன தான் மனதில் கோபம் இருந்தாலும் அதை வெளிப்படையாக காட்டமாட்டான். நான் சொன்னதை நீ ஏதும் தவறாக எடுத்துக்கொள்ளாதே மது'' என்று ஏறக்குறைய கெஞ்சினார்.

அவர் கெஞ்சியும் அவளின் கோபம் கட்டுக்கடங்காமல் தகிக்க, அவரை திரும்பியே பார்க்காமல் மௌனமாக கல்லு மாதிரி நிற்க, பாரதி அவசரமாக கீழே ஓடிப்போய் சுதிரை அழைத்துவந்தார்.

அவளிடம் மன்றாடி கெஞ்சி ஒருவாறு சமாதானப்படுத்த முயற்சி செய்துகொண்டிருந்த சுதிர் கடைசி ஆயுதமாய், ''இப்போ நீ இந்த விழாவுக்கு வரவில்லையென்றால் தாத்தா மிகவும் அவமானப்பட்டுவிடுவார். ப்ளீஸ் மா இந்த வயதில் அவருக்கு இப்படி ஒரு கஷ்டம் வேண்டாமே. உன் பிரச்சனையை நான் தீர்த்து வைக்கிறேன்'' என்று மன்றாடினார். வேண்டாவெறுப்பாக வர ஒத்துக் கொண்டதும் இருவருக்குமே போன உயிர் திரும்பி வந்தது.

நேரே மகனின் அறைக்கு சென்ற சுதிர், அவன் இல்லாததால் கீழே வந்தவர் அப்பொழுது வெளியிலிருந்து உள்ளே நுழையும் போதே போனில் பேசியபடி கையில் ஏதோ பைலை வைத்து சரிபார்த்துக்கொண்டு மாடியேறியவனை அழைக்க, அவசரமாக பேசிமுடித்து விட்டு கேள்வியாக நோக்கியவனிடம், ''உன்னிடம் கொஞ்சம் பேசணும்...'' என்றார் அழுத்தமாக.

''கம்பெனி விஷயமென்றால் முதலில் விழா முடியட்டும். நிதானமாக உட்கார்ந்து பேசலாம். நான் கூட கம்பெனி விஷயமா பேசணும் என்று இருந்தேன். நம் ப்ரொடக்ட் ஏற்றுமதியாவதில் ஹார்பரில் ஒரு சின்ன பிரச்சனை வந்துவிட்டது. அதை பார்க்கத்தான் இப்போ போய்விட்டு வந்தேன். ஏறக்குறைய சரியாகிவிட்டது. இருந்தாலும் புதுசா வந்திருக்கிற கஸ்டம்ஸ் ஆபிசர் ரொம்பவே ரூல்ஸ் பேசறான். அவனை நாளைக்கு தான் பார்த்து பேசணும் '' என்று சொல்லி விட்டு நகர முயன்றவனை, முகத்தில் உணர்ச்சியே இல்லாமல் கையை நீட்டி வழிமறித்தார்.

அவரின் செய்கை அவனுக்கு வியப்பை கொடுக்க ஒரு ஆச்சர்ய பார்வையுடன் அவர் பக்கம் திரும்பி கேள்வியாய் நோக்கியவனை, ''நான் கம்பெனி விஷயமாய் பேச வரவில்லை முகுந்த் . அதை விட முக்கியமான விஷயம். மதுவை பற்றிப் பேச வந்தேன்'' என்றதும்,

''ஓ!! இவ்வளவு தானா நிச்சயம் பேசலாம். ஆனால் இப்போது இல்லை'' என்று தோளை



குலுக்கிவிட்டு அவரின் பேச்சுக்கு காத்திராமல் அங்கிருந்து நகர்ந்தவனை இயலாமையோடு வெறித்து பார்த்தார்.

அதற்கு மேல் அவருக்கு சிந்திக்க நேரமே கொடுக்காமல் பூபதி ஏதாவது ஒரு வேலை கொடுத்துக்கொண்டே இருக்க, அதிலேயே மூழ்கி தற்காலிகமாக அப்போதைக்கு அந்த பிரச்சனையை தள்ளிவைத்தார்.

மணி ஐந்தாக பிரபாதேவி பட்டுபுடவை சகிதம் வெளியே வந்து எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டு சுறுசுறுப்பாக தேனீ போல சுற்றிக்கொண்டிருந்த பூபதியை தயாராக சொல்லி அனுப்பினார்.

பூபதி பத்து நிமிடத்திலேயே பட்டுவேட்டி அங்கவஸ்திரம் அணிந்து கம்பீரமாக முகமெல்லாம் சந்தோஷம் பொங்கி வழிய வந்தவரை பார்த்து சுதிர் புன்முறுவல் பூத்தார். ஆனால் உள்ளுக்குள் அவருக்கு வலித்தது. நினைத்தபடி இந்த விழா இனிதே நடந்து முடியுமா? மதுவால் தன் மனதை கட்டுப்படுத்தி அமைதியாக நடக்க முடியுமா? ரொம்ப சின்ன பெண்ணாச்சே... அவளின் மனது இப்படியிருக்கும் நேரத்தில் எப்படி அவளால் இயல்பாகயிருக்க முடியும்? என்று யோசித்துக்கொண்டே தன் அறையை நோக்கி சென்றார்.

பெரிய தோட்டத்தில் எங்கும் வண்ண விளக்குகளால் அலங்காரம் செய்து ஆங்காங்கே பூந்தொட்டி வைத்து அழகுபடுத்தப்பட்டு இருந்தது.

தோட்டம் முழுவதும் விருந்தினர்கள் அமருவதற்கு நிறைய வட்ட மேசைகள் போட்டு அதை சுற்றி நாற்காலிகள் போட்டிருக்க, வந்தவர்கள் அதிலே அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தார்கள்.

மதுவின் மனம் உலைக்களமாக கொதிக்க, அனிச்சையாக மருதாணி வைத்த கையை பார்த்தாள். அது அரைகுறையாக கலைந்து இருப்பதை பார்த்து 'நம் வாழ்க்கையும் இதே மாதிரி கலைந்துவிடுமோ...' என்று நினைத்தவுடன் கண்ணோரத்தில் கண்ணீர் துளிர்க்க, அதை வெளியே வராமல் உள்ளுக்கிழுக்க தலை விண்ணென்று தெறித்தது.

மஞ்சுவின் முகம் கண்ணில் வர அந்த முகத்தில் இருக்கும் குழந்தைத்தனம், யாரையும் நம்புகிற அப்பாவி தனம், எப்போதுமே சிரிக்கும் கண்கள், யார் மனசையும் நோகடிக்காத குணம் இதெல்லாம் பார்த்தால் சொத்துக்காக எதையும் செய்கிற மாதிரியா தோன்றுகிறது. ஒரு பெண்ணை பற்றி இன்னொரு பெண்ணே இப்படி பேச வேண்டுமென்றால் அந்த மனது எந்த அளவிற்கு வக்கிரமாக இருந்திருக்கும்... என்று நினைக்க நினைக்க உடம்பு முழுவதும் தணலை அள்ளிக்கொட்டியது மாதிரி இருக்க அந்த அறையில் அவளுக்கு மூச்சு முட்டியது.

அதை தாங்க முடியாமல் பால்கனி கதவை திறந்து வெளியே வர அந்த மாலை நேரத்து மலை காற்று அவள் முகத்தில் மோத அவளின் கோபம் குறையவில்லை என்றாலும் மனதிற்கு இதமாக இருந்தது. அதை அனுபவித்துக்கொண்டே பால்கனி



சுவற்றில் சாய்ந்து தூரத்தில் தெரிந்த வானத்தையே வெறித்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

குளித்துவிட்டு ரெடியாகி பால்கனிக்கு வந்த முகுந்த் பக்கத்து பால்கனியில் மதுவை அந்த கோலத்தில் பார்த்ததும் மனம் துணுக்குற . அவள் இங்கே வந்ததிலிருந்து மதுவை இப்படி பார்த்ததே இல்லை. எப்போதும் சிரித்த முகத்தோடும், குறும்பான கண்களோடும் தான் பார்த்திருக்கிறான். ஆனால் இன்று ஒரு சோக சிலையாக பார்த்ததும் ,

'என்ன ஆச்சு? ஏன் இப்படி தனியா பால்கனியில் வந்து நிற்கிறாள்? அப்படி என்ன கவலை அவள் மனதில்' என்று எண்ணிய விநாடி அவன் மனது அவனையும் அறியாமல் அவன் மன தடைகளையும் தாண்டி அவளிடம் சென்றுவிட ஆறுதல் கூற வேண்டும் என்று தோன்றிய உத்வேகத்தை கஷ்டப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டு அரைமனதோடு கீழே சென்றான்.

மதுவை தேடி வந்த மஞ்சு அறையில் காணமல் குரல் கொடுக்க தாயின் குரலைக் கேட்டு அவசரமாக தன்னை சீர் செய்துகொண்டு உள்ளே வந்தவளின் முகம் சிவந்து ஓய்ந்து போயிருந்ததைக் கண்டு திடுக்கிட்ட மஞ்சு, அவசரமாக அவள் நெற்றியில் கைவைத்து பார்த்துவிட்டு, ''உடம்புக்கு என்னடா...?'' என்றார்.

அவரின் பாசமான விசாரிப்பு மனதை பலமிழக்க செய்தாலும் தாய்க்கு தெரிந்தால் உடைந்துவிடுவார் என்ற காரணத்தால் தன்னை கட்டுப்படுத்திக்

கொண்டு, "நத்திங் ஜஸ்ட் தலைவலி... நீ போய் கிளம்பும்மா எல்லோரும் வந்திருப்பார்கள்... இன்னும் அரைமணி நேரத்தில் ரெடியாகிவிடுகிறேன்..." என்றவளை வித்தியாசமாக நோக்கி,

''என்னாச்சு உனக்கு... நான் ஆல்ரெடி கிளம்பித்தான் வந்திருக்கிறேன்...'' என்றவரை அப்போது தான் மது முழுசாக பார்த்தாள்.

கத்திரிபூ கலரில் பட்டு சேலையும் அதற்கு ஏற்ற நகைகளும் அணிந்து பார்ப்பதற்கு மகாலட்சுமி போல இருந்தவரை பார்க்க பார்க்க மனது வலித்தது. மீண்டும் கண்ணீர் இதோ வந்துவிடுவேன் என்று பயமுறுத்த, முகம் கழுவிவிட்டு வருகிறேன் என்று முணுமுணுத்துவிட்டு குளியலறையில் தஞ்சமடைந்த வளுக்கு அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை.

ஒரு மூச்சு அழுது முகத்தில் குளிர்ந்த நீரை வாரியடித்து கழுவிக் கொண்டு வெளியில் வந்தவளுக்கு மஞ்சு அதிக அலங்காரம் வேண்டாம் என்ற மகளின் விருப்பதிற்கேற்ப இரண்டு பக்கம் முடியெடுத்து கிளிப் போட்டு நிறைய பூவை வைத்து, கண்களை காஜலில் வரைய கண்கள் வசீகரித்தது. புடவை கட்டி நகையெல்லாம் அணிவித்ததும் மஞ்சுவுக்கே தன் மகளின் அழகை கண்டு கண்ணெடுக்க முடியாமல் திணறினார்.

மேலே வந்த பாரதி மஞ்சுவை கீழே அனுப்பிவிட்டு மதுவை பார்க்க அவளின் அழகை கண்டு திருஷ்டி கழிக்க, அவரின் செய்கைக்கு லேசாக புன்னகைக்க, அதில் ஜீவனே இல்லை



என்பதையுணர்ந்த பாரதிக்கு இதயத்தில் முள் தைத்தது போல வலித்தது.

பூபதி ஏற்கெனவே தனக்கு ஒரு பேத்தி இருக்கிறாள் என்று சொல்லியிருந்ததால் எல்லோரும் மதுவின் வருகைக்காக ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்க, வீட்டின் பெரியவர் மஞ்சுவை தன் மருமகளென்று அறிமுகப்படுத்த அரங்கமே கைத்தட்டலில் அதிர்ந்தது.

அப்போது மஞ்சுவின் குடும்பத்தினரும் வருகை தர, பூபதி மரியாதையுடன் வரவேற்று முகுந்துக்கு அறிமுகபடுத்தியதும், கைகுவித்து வணக்கம் சொன்னவன் ரிக்கியை அறிமுகப்படுத்தியதும் அவனின் பார்வை அவனை அளவெடுத்துக் கொண்டே கைகுலுக்கியது.

ரிக்கியின் பார்வை தன்னிடமில்லாமல் வேறெங்கோ சுவாரசியமாக தாவுவதை உணர்ந்த முகுந்த் அவனின் பார்வையை தொடர்ந்து செல்ல மது அழகே உருவாக மாடியிலிருந்து இறங்கி வந்து பூபதியின் பக்கத்தில் நிற்கவும் முகுந்தின் இதய துடிப்பு ஒரு நிமிடம் நின்று துடித்தது.

பூபதி விருந்தினர்களுக்கு அவளை அறிமுகப்படுத்த முகத்தில் ஒட்டவைத்த புன்னகையோடு கைகுவித்து வணக்கம் சொல்ல வேண்டியவர்களுக்கு கை குவிக்க, கை குலுக்க வேண்டியவர்களுக்கு தயங்காமல் கைகுலுக்கியவளை பார்த்தவனுக்கு அவளின் சிரிப்பு கண்களை எட்டாமல் உதட்டோடு நின்ற மாதிரி தோன்றியது. கண்கள்

சோகத்தை தாங்க முகம் மட்டும் சிரித்தது. அப்போது தான் அவனுக்கு பால்கனியில் அவள் நின்றிருந்த கோலம் ஞாபகம் வந்தது.

சுற்றுப்புறத்தை மறந்து அவளையே பார்த்துக்கொண்டு நிற்கவும், எல்லோரும் மஞ்சுவையும் மதுவையும் வாழ்த்தி, பரிசு பொருட்களை கொடுக்க திலீப் அதை வாங்கி வைத்து உதவி செய்து கொண்டிருந்தான்.

அவினாஷும் தங்கள் பரிசாக வைரநகை செட் கொடுக்க மதுவுக்கு பல்லவியின் முகத்தை பார்க்கவே பிடிக்காமல் அதை வாங்க தயங்க மஞ்சுவுக்கு அவள் மனது புரிந்தது. இருந்தாலும் இந்த நேரத்தில் இப்படி மறுத்தால் நாகரிகமாக இருக்காது என்று அவர் வாங்கி திலீப்பிடம் கொடுத்தார்.

மஞ்சுவின் அண்ணன் குடும்பம் அவர்கள் அருகில் வர மதுவுக்கு ரிக்கியை பார்த்ததும் கொஞ்சம் தெம்பு வந்த மாதிரி இருந்தது. அவனை பார்த்ததும் அதுவரை இருந்த மூட் மாறி சற்று சகஜமாக அதிகமாக சிரிக்கவில்லை என்றாலும் அழகிய பல்வரிசை தெரிய மென்மையாக சிரித்து பேச, சிவகாமி அம்மாள் மதுவை அணைத்து நெற்றியில் முத்தமிட்டு இருவருக்கும் நகைகளை பரிசாக கொடுக்க, மது அதை மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டாள்.

அதுவரை அவளையே பார்த்துக்கொண்டு இருந்த முகுந்த் மெதுவாக அவள் அருகில் வர, மஞ்சு அவர் அண்ணன் குடும்பத்தோடு பேச சென்றுவிட, மதுவின் அருகில் பூபதி, பிரபாதேவி, பாரதி தான் இருந்தார்கள்.



''என்ன முகுந்த் என் பேத்திக்கு நீ பரிசேதும் தரவில்லையா?'' என்று அவனை குறும்பாக வம்பிழுக்க அவருக்கு ஒரு புன்னகையை கொடுத்துவிட்டு பேண்ட் பாக்கட்டிலிருந்து ஒரு சிறிய நகைப் பெட்டியை எடுத்தான். அதில் பிளாட்டின மோதிரம் இருக்க, ''பெஸ்ட் விஷஸ் மது...'' என்று அவள் மீதிருந்த பார்வையை விலக்காமல் கொடுக்க, அவனை நிமிர்ந்து கூட பார்க்கவில்லை.

இதுவே முதல் நாள் அவன் இப்படி பேசியிருந்தால் அவளின் மனம் துள்ளி குதித்திருக்குமோ என்னவோ, ஆனால் இன்று அவனை பார்க்கவே பிடிக்காமல், சலனமே இல்லாமல் ஒரு பார்வையை வீச பாரதியை தவிர அவளின் மனநிலை அங்கு யாருக்கும் புரிந்திருக்க நியாயமில்லை.

'ஏன் முகுந்த் கையில் கொடுக்கிறாய், நீயே அவளுக்கு போட்டுவிடு'' என்ற தாத்தாவின் பேச்சிற்கு கட்டுப்பட்டு கொஞ்சம் தயங்கினாலும் உடனே செயல்படுத்த ,

''இல்லை தாத்தா வேண்டாம். நான் கையிலே வாங்கிக்கிறேன்...'' என்று அழுத்தமாக சொன்னதும் முகுந்து சற்று ஏமாற்றத்தோடு அவள் கையில் கொடுத்தான். வாங்கியவள் உடனே அதை பாரதியிடம் கொடுத்துவிட்டு, ''சரி தாத்தா நான் மாடிக்கு போகிறேன்...'' என்று சொல்லி மாடிக்கு சிட்டாய் பறந்தாள்.

அறைக்கு சென்றவளுக்கு எல்லாத்தையும் கழற்றி போட்டுவிட்டு இங்கிருந்து உடனே கிளம்பி

போகவேண்டும் என்று மனது பரபரத்தது. ஆனால் அப்படி கிளம்பினால் மஞ்சுவிடம் என்ன காரணம் சொல்ல முடியும். உண்மையை சொன்னால் அந்த பூஞ்சை மனது தாங்குமா? அதனால் அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால் என்று நினைத்த மாத்திரத்தில் உடம்பு பயத்தில் தூக்கி போட, ''நோஒ'' என்று தன்னையும் மீறி அலறினாள்.

பாரதிக்கு மதுவின் இந்த நிலைமைக்கு நாம்தானே காரணம் என்று மனதை வண்டாய் குடைய அவளை பின்தொடர்ந்து வந்தவர் அவளின் 'நோ' என்ற அலறலைக் கேட்டு வேகவேகமாக உள்ளே ஓடினார்.

# 10

"என்னாச்சு மது..." என்று விசாரித்த அத்தையிடம், ''ஒன்றுமில்லை'' என்றவள் முகத்தை அழுந்த துடைத்துக்கொண்டு, கீழே போகலாம் என்று கிளம்ப பாரதிக்கு அவளின் மனக்கட்டுப்பாடும், உறுதியும் கண்டு வியப்பாக இருந்தது.

மாடியிலிருந்து இறங்கி வந்த மதுவை காட்டி சுதிர் மோகன் குடும்பத்துடன் பேச, ஏதோ கெட் டு கெதர் விழா என்று வந்த பீனாவுக்கு விழா நாயகியே மது என்று தெரிந்ததுமே முகம் அஷ்ட கோணலாகியது.

அவளைப் பார்க்க பிடிக்காமல் எல்லோரையும் கவனிக்கும் பொறுப்பிலிருந்த முகுந்திடம் பீனா அட்டை மாதிரி ஒட்டி நிற்பதைக் கண்டு ஒரு மாதிரியாக முகம் சுளித்துவிட்டு விலகிச் சென்றான்.



சாப்பிட்டுவிட்டு வந்த ரிக்கியிடம் பேசிக்கொண்டிருந்த மதுவுக்கு மனது லேசாக முகத்தில் புன்னகை கூட வர, தூரத்திலிருந்தே இருவரும் சிரித்து பேசுவதை பார்த்த முகுந்துக்கு, 'எல்லோரிடமும் சிரித்து பேச முடியுது... ஆனால் என்னிடம் மட்டும் பேச முடியவில்லை... அட்லீஸ்ட் ஒரு சிறிய பார்வையை கூட கொடுக்க மனதில்லை' என்று நினைத்ததும் மனது வலித்தது.

''மதுவை சாப்பிட அழைத்து வா முகுந்த்...'' என்ற தாத்தாவின் கட்டளையை ஏற்றுக் அவளருகில் வர, கூடவே அட்டை போல ஒட்டிக்கொண்டு பீனாவும் வரவும், அவளிடம் மரியாதைக்கு முகுந்த், ''ஷி இஸ் மது'' என்று அறிமுகபடுத்தினான்.

பீனா நக்கலாக, ''என்ன முகுந்த் வெறும் மது என்றால் எப்படி? அவள் என்ன இந்த கேரளா மினிஸ்டர் பொண்ணா? இல்லை பெரிய வி.ஐ.பி.யா பேரை சொன்னால் உடனே தெரிந்து கொள்வதற்கு?'' என்று நீட்டி முழக்கியபடி... பாதி ஆங்கிலத்திலும் பாதி தமிழிலும் கேட்டாள்.

அவளின் நக்கலுக்கு பதில் சொல்ல விருப்பமில்லாமல் மது அமைதியாக ரிக்கியை ஒரு பார்வை பார்த்துவிட்டு சலனமே இல்லாமல் முகுந்தை பார்க்க, அவனோ பீனாவின் பேச்சை கேட்டு கடுப்பானான்.

''எங்கள் குடும்பத்திற்கு மது என்றால் யாரென்று தெரியும். நீ என் அப்பாவின் நண்பரின் மகள் என்பதால் இங்கு வந்திருக்கிறாய். இந்த விழாவில் ஒருவரை

அறிமுகப்படுத்துகிறார்கள் என்றால் அவர்கள் இந்த வீட்டு முக்கியமான நபராக தான் இருப்பார்கள் என்று அடிப்படை அறிவு கூடவா இல்லாமல் போயிற்று'' என்று எரிச்சலாக சொன்னான்.

''ஐயோ முகுந்த் நான் கேட்டதை நீங்கள் தவறாக புரிந்து கொண்டீர்கள் . மது என்றால் யார்? உங்களுக்கு என்ன ரிலேஷன் என்ற அர்த்தத்தில் கேட்டேன்'' என்று சமாளித்தாள்.

''ஒ..., ராஜேஷ் அங்கிளின் பெண் இவள்'' என்று சொல்லிவிட்டு, பின்பு மஞ்சுவை சுட்டிக் காட்டி ''அதோ அங்கிருக்கிறார்களே அவர்கள் தான் ராஜேஷ் அங்கிளின் மனைவி '' என்றான்.

"எஸ் ஐ காட் இட் ... நீங்கள் கூட சொன்னீர்களே... சொத்துக்கு ஆசைப்பட்டு ஒருத்தி ராஜேஷ் அங்கிளை மயக்கி இழுத்துக்கொண்டு ஓடினார்களே... அவர்களின் பெண்ணா இவள்?'' என்று கண்ணை விரித்து அப்பாவியாக கேட்பது போல் வன்மமாக ஓரக்கண்ணால் மதுவை பார்த்தாள்.

அவளது வார்த்தைகள் ஏற்கெனவே நொந்துபோயிருந்த மதுவின் மனதை குத்தி ரணமாக்க, கைகளை இறுக்கமாக மூடி தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தினாள். அதற்கு மேலும் பீனா அவளின் காயத்தில் கத்தியை விட்டு நோண்டாத குறையாக வேண்டுமென்றே, ''ஓடிப்போனவருடைய மனைவியையும், மகளையும் அறிமுகம் செய்ய இவ்வளவு பெரிய விழாவா? பரவாயில்லையே. ஒரு காலத்தில் கேவலமாகப் பேசியதையெல்லாம் மறந்து



இன்று எல்லோரும் ஒன்றாகி சந்தோஷமாக சிரித்துப் பேசுகிறீர்களே. உண்மையில் உங்களுக்கு பெரிய மனது தான் முகுந்த்'' என்று இனிமையான குரலில் சொன்னாள்.

அதற்கு மேல் அவளின் பேச்சை கேட்கப் பிடிக்காமல், ''ஷட் அப் பீனா. திஸ் இஸ் த லிமிட். வீட்டுக்கு வந்த விருந்தினர் என்பதால் சும்மா விடுகிறேன். இதற்கு மேல் பேசினால் மரியாதை கிடையாது'' என்று ஒரு விரலைக் காட்டி கண்கள் சிவக்க எச்சரித்தான். ஆனால் அதைக் கேட்க மது அங்கில்லை... அவள் எப்போதோ அங்கிருந்து மாடிக்கு ஓடிப் போய் விட்டிருந்தாள்.

ரிக்கி செய்வதறியாது தவித்துப் போயிருக்க, பீனா அவனின் எரிச்சலை பொருட்படுத்தாமல், '' இப்போ நான் என்ன சொல்லிவிட்டேன் என்று இப்படி கோபிக்கிறீங்க, சரி சரி நான் போறேன். நாம் அப்புறமா பேசலாம் '' என்று தான் வந்த வேலை முடிந்துவிட்டது என்ற சந்தோஷத்தோடு நகர்ந்தவளை இரு ஆண்களுமே அருவெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள் .

ஒரு வழியாக விழா முடிந்து எல்லோரும் சென்றதும் அதற்கு மேல் யாரையும் பார்க்க பிடிக்காமல் தன் அறைக்குள் தஞ்சம் புகுந்தவள் எல்லோருமே சந்தோஷ அலுப்பில் சீக்கிரமே உறங்கிவிட, நெஞ்சம் கனத்ததில் மூச்சு முட்டுவது போல தோன்ற, தோட்டத்திற்கு சென்றவளை சிலுசிலுவென்ற காற்று தழுவிக்கொண்டது. அங்கிருந்த பெஞ்சில் அமர்ந்தாள்.

மதியம் பாரதி சொன்னதை நினைத்தவுடன் கண்ணீர் தானாக ஊற்றெடுக்க அதையடக்க தோன்றாமல் அழுதாள்.

அவளின் தோள் மீது ஒரு கை விழ அழுகையை நிறுத்திவிட்டு திடுக்கிட்டு திரும்ப இவளையே பார்த்தபடி முகுந்த் நிற்பதை கண்டதும் கண்களை துடைத்துக்கொண்டு அவசரமாக அங்கிருந்து நகர முயன்றவளை கைபிடித்து நிறுத்தி, அவள் முகத்தை நிமிர்த்தி, ''ஏன் மது அழுகிறாய்...? மாலை பீனா பேசியதை நினைத்து அழுகிறாயா...?'' என்று ஆழ்ந்த குரலில் கேட்டான்.

அவன் கேள்விக்கு பதில் சொல்லாமல் அவனது பிடியிலிருந்து விடுபட முயன்றவளை இழுத்து அணைத்துக் கொள்ள, முதலில் திமிறினாலும் அவனது பரந்த மார்பில் சாய்ந்தவள் அழுகையை அடக்க முடியாமல் கண்ணீரில் கரைந்தாள்.

முகுந்தும் மென்மையாக அவள் முதுகை வருடிக்கொடுக்க, மதுவின் அழுகை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து விசும்பலாக மாறியது. அப்போது தான் சுய உணர்வுக்கு வந்த மது.முகுந்தின் அணைப்பில் கட்டுண்டு இருக்கிறோம் என்றதும் விதிர்த்துப்போய் உடனே விடுபட்டு உள்ளே ஓடினாள்.அவனோ அவளைத் தடுக்க முடியாத இயலாமையோடு பார்த்துக்கொண்டு நின்றான்.

மது விலகி ஓடியதும் சொல்லொண்ணா வேதனையுடன் அங்கேயே அமர்ந்து தலையை கைகளால் தாங்கியபடி அமர்ந்திருந்தவன், காற்று



சிலுசிலுவென்று கொஞ்சம் கொஞ்சமாக பனிக்காற்றாக மாறி ஊசி மாதிரி உடலை குத்திய போதும் உறைக்காமல் தனக்குள்ளே மருகிக் கொண்டிருந்தான்

தூக்கம் வராமல் எழுந்து ஹாலுக்கு வந்த சுதிர், மது அழுதுகொண்டே ஓடவும்... ஒன்றும் புரியாமல் பார்த்துவிட்டு முகுந்திடம் பேசலாமென்று அவன் அறைக்கு சென்றார். அங்கு அவன் இல்லையென்றதும் திரும்ப எத்தனித்தவர், தோட்டத்தில் அவன் அமர்ந்திருப்பதை ஜன்னல் வழியே பார்த்தார். வேகவேகமாக கீழே இறங்கி அவனருகில் சென்று, ''முகுந்த்'' என்று மென்மையாக அழைத்தார்.

அவரின் அழைப்பை கேட்டு நிமிர்ந்தவனின் கண்கள் ஈரத்தில் பளபளக்க, சுதிருக்கு அவனை கண்டு வேதனையாக இருந்தாலும் இன்னொரு பக்கம் ஆச்சரியமாக இருந்தது. இதுவரை முகுந்த் இந்த மாதிரி வேதனைப்பட்டு அவர் பார்த்ததே இல்லை.

'பார்ன் வித் சில்வர் ஸ்பூன்' என்று சொல்வார்களே அந்த மாதிரி வளர்ந்தவன். அவன் எது கேட்டாலும் உடனே கிடைத்துவிடும். இதுவரை அவன் முகம் சுணங்கியோ, அழுதோ பார்த்ததில்லை. கஷ்டம் என்றால் என்னவென்றே தெரியாமல் வளர்ந்தவன். முதன் முதலாக அவனின் இந்த நிலை சுதிருக்கு கவலையூட்டுவதாக இருந்தது.

அவன் அருகில் அமர்ந்து அவன் தோள்மேல் கையை போட்டு, ''என்ன முகுந்த் ஏன் இப்படி பனிக்காற்றில் அமர்ந்திருக்கிறாய். உடம்புக்கு ஏதாவது ஆகிவிட போகிறது. உள்ளே எழுந்து வா'' என்று ஒரு

தகப்பனின் அக்கறையோடு சொன்னவரின் தோளில் ஆதரவை தேடி சாய, சுதிருக்கு அவன் செயல் மேலும் வியப்பின் உச்சிக்கே கொண்டு செல்ல, ஆறுதல் தேடும் குழந்தை போல் அவன் சாயவும் அவனின் மனது அவருக்கு புரிய அவன் முதுகை தட்டி கொடுத்தார்.

''முகுந்த் எனக்கு உன் மனசு புரியுது. எது பேசவேண்டுமேன்றாலும் முதலில் இங்கிருந்து எழுந்து வா. நான் கூட உன்னிடம் பேசவேண்டும்'' என்று அவனை எழுப்பி அவனின் அறைக்கு அழைத்து வந்தவர் அவன் எதிரே அமர்ந்து, ''உனக்கு மதுவை சென்னையிலே தெரியும் அல்லவா? அதாவது அவள் உன் மாமா ராஜேஷின் பெண் என்று தெரியாமல் இருக்கும் போதே நீ அவளை காதலித்தாயா இல்லையா?'' என்று கொஞ்சம் கடினமான குரலில் கேட்டார். அவரின் கேள்விக்கு அவரின் கண்களை நேராக சந்தித்து ஆமாம் என்பதாக தலையசைத்தான்.

''சரி அப்படி காதலித்தவன் அவள் உன் மாமா பெண் என்று தெரிந்து ஏன் விலகி போனாய்...?'' என்றார் கண்கள் இடுங்க.

முகுந்த் அதற்கு என்ன பதில் சொல்வதென்று தடுமாறி, ''எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லைப்பா. எனக்கு மது மேலே கோபமே இல்லை. என் கோபம் எல்லாம் மஞ்சு அத்தை மீது தான். அவர்களால் தானே தாத்தா, பாட்டி எல்லோரும் கஷ்டப்பட்டார்கள். அதுமட்டுமில்லாமல் சித்தி அவர்களை பற்றி நிறைய சொல்லி இருக்கிறார்கள்.



எனக்கு அவர்களை பார்த்ததும் கோபம். அதனால் தான் இருவரிடமிருந்தும் விலகி போனேன்.

நான் வெறுக்கிறவர்களுடைய பெண்ணான மதுவை என்னால் ஏற்றுக்கொள்ள முடியுமா என்ற கேள்வி எனக்குள் இருந்ததால் மதுவை மறந்துவிட முயற்சி செய்தேன். பட் ஐ காண்ட். ஸ்டில் ஐ லவ் ஹெர்...'' என்று வேதனையில் முகம் சுருங்க கேட்டவனை பார்த்து பரிதாபப்படுவதா? இல்லை இன்னும் மஞ்சுவின் மேல் தப்பான அபிப்ராயம் வைத்திருப்பதற்காக அவன் மீது கோபப்படுவதா? என்று சற்று குழம்பினார்.

''முகுந்த் உன்னை நான் ரொம்ப புத்திசாலி என்று நினைத்திருக்கிறேன். நீயும் அப்படி தான் இதுவரை உன்னை நிரூபித்து வந்திருக்கிறாய். தொழிலில் எவ்வளவோ சாதித்திருக்கிறாய். அதை நினைத்து நான் பெருமைப்படாத நாளே கிடையாது. அப்படிபட்டவன் சிறிய வயதில் யாரோ எப்போதோ சொன்னதை இன்னும் மனதில் வைத்துக்கொண்டு ஒருத்தரை வெறுக்கலாமா? தூர இருக்கும் போது ஒருத்தருடைய குணங்கள், நடத்தை பற்றி தெரியாது ஓகே, ஆனால் அவர்கள் இங்கே வந்து கிட்டத்தட்ட பத்து நாட்கள் ஆகுது. இந்த பத்து நாட்களில் உன்னால் அவர்களை புரிந்துக்கொள்ள முடியவில்லையென்றால் தொழிலில் சாதித்து என்ன புண்ணியம்?'' என்றார் கண்களில் கடுமையை ஏற்றி.

முகுந்துக்கு, சுதிரின் கோபம் புதிதாயிருக்க, ''நான் அவர்களிடம் பேசினால் தானே புரிந்து கொள்வதற்கு. நான் அவர் மீது உள்ள கோபத்தில் பேசவே

இல்லையே?'' என்று கண்ணில் வலியோடு சொன்னவனை பரிதாபமாகப் பார்த்து அவனுக்கு எப்படியும் மஞ்சுவை புரியவைத்துவிடும் நோக்கத்தோடு,

''முகுந்த், உன் மாமா நம்மை விட்டுப் போன ஆத்திரத்தில் நம் வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் ஏதேதோ பேசினார்கள். அதெல்லாம் முடிந்து போன கதை. ஆனால் இவ்வளவு பேசிய நாம் இதுவரைக்கும் நமக்கு சாதகமாக தான் பேசியிருக்கிறோம் தவிர யாராவது ஒருத்தர் உன் அத்தையின் பக்கம் யோசித்திருப்போமா?

உன் மாமாவை திருமணம் செய்ததால் உன் அத்தைக்கு இழப்பு இல்லையா? நன்றாக யோசித்து பார். பார்க்க போனால் இழப்பு மஞ்சுவுக்கு தான் அதிகம். இந்த திருமணத்தால் உன் அத்தை தன் அப்பாவை இழந்து, தன் பிறந்த வீட்டின் பாசத்தை இழந்து புகுந்த வீட்டும் ஆதரவும் இல்லாமல் தன்னந்தனியாக போராடி ஒரு பிள்ளையும் பெற்று அனாதையாக வளர்த்து இருக்கிறார்கள். இருந்த ஒரே சொந்தமான உன் மாமாவும் இரண்டு வருஷத்திற்கு முன் இறந்து போக தனியாக வாழ்ந்துகொண்டிருக்கிற உன் அத்தையின் கஷ்டம் நஷ்டத்தை யாராவது யோசித்தோமா இல்லையே ...

நானும் ஒரு காலத்தில் மஞ்சுவை தவறாக தான் நினைத்தேன். ஆனால் உன் பல்லவி சித்தி சொன்ன மாதிரி மஞ்சு சொத்துக்கு ஆசைப்பட்டு உன் மாமாவை திருமணம் செய்திருந்தால் என்ன செய்திருக்கணும்'' என்று கேள்வி கேட்டு விட்டு அவரே தொடர்ந்தார்.



''ஒரு குழந்தை பிறந்தவுடனே தனக்கு பங்கு வேண்டும் என்று கோர்ட்டில் கேஸ் போட்டு இருக்கலாமே? அப்படி போட்டால் கொடுக்க முடியாது என்று நம்மால் சொல்ல முடியுமா? இதுவரை அப்படி கேட்கவில்லையே? உன் மாமா இறந்து அனாதையாக நின்றார்களே, அப்போதாவது அதையே சாக்காக வைத்து இங்கு வந்திருக்கலாமே? அப்படியும் செய்யவில்லையே?

அது மட்டுமா நாம் லெட்டர் போட்டவுடன் உடனே வந்து ஒட்டிக்கொண்டிருக்கலாம். சொத்துக்கு ஆசைப்பட்டு திருமணம் செய்திருந்தால் இதை தான் செய்திருப்பார்கள். ஆனால் நம்மிடமிருந்து ஒதுங்கி அல்லவா சென்றார்கள்.

நாங்கள் போய் கேட்டபொழுது கூட அவர்கள் அவ்வளவு சீக்கிரத்தில் ஒத்துக்கொள்ளவில்லை. அதுவும் உன் தாத்தா பேச்சு வாக்கில் சொத்துக்கெல்லாம் நீ தான் வாரிசு என்ற போது மது அதையெல்லாம் குப்பையில் கொண்டு கொட்டுங்கள் என்று ஆத்திரத்தோடு சொன்னாள் . இதிலிருந்து உனக்கு எது உண்மை, எது பொய் என்று புரியவில்லையா? இப்படிப்பட்டவர்களையா நீ கேவலமானவர்கள் என்று வெறுத்து ஒதுக்குகிறாய்'' என்றார் கடுமையாக.

அவர் சொல்ல சொல்ல முகமும் மனமும் இறுக குறுக்கே பேசாமல் கேட்டு கொண்டிருந்தவன், ''ஓ மை காட் இப்படிப்பட்டவங்களையா நான் இத்தனை வருடம் வெறுத்தேன்'' என்று நெற்றியில் தட்டிக்கொண்டான்.

''அப்புறம் ஏன் சித்தி அவர்களை பற்றி அப்படி அபாண்டமா சொல்லணும்'' என்று மீண்டும் தான் ஒரு தொழிலதிபர் என்று மறந்துவிட்டு குழந்தைத்தனமாக கேட்டான்.

அவனின் கேள்விக்கு விரக்தியாக சிரித்துவிட்டு, ''ம்ஹும், நாமெல்லாம் அப்படித் தானே. எப்போதும் நல்லவர்களை குத்தம் சொல்லிக்கொண்டே இருப்போம் . தீங்கு செய்பவர்களை பக்கத்தில் வைத்து கொஞ்சி கொண்டிருப்போம், அது தானே பணக்கார வர்க்கத்தின் குணம்'' என்றார் குத்தலாக.

''உண்மை தான் டாடி...'' ஆனால் ஏன் மது மதியத்திலிருந்து மூட் அவுட்டாக இருந்தாள். என்ன நடந்தது?'' என்றதுமே கொஞ்சம் கூட தயங்காமல்,

''அவள் அப்படி ஆனதற்கு காரணமே நீ தான்'' என்று அவன் மேல் குண்டை தூக்கிபோட்டார்.

முகுந்த் அதிர்ந்து, ''டாடி என்ன சொல்றீங்க...? நான் மதுவிடம் பேசவில்லை என்றாலும் அவள் மனசு நோக ஒரு வார்த்தை கூட சொன்னதில்லை. சொல்லவும் மனசு வரவில்லை. என்னை பற்றி உங்களுக்கு தெரியாதா?' என்று கொஞ்சம் கோபமாகக் கேட்டான்.

''இதற்கே இப்படி கோபப்படுகிறாயே, அப்போ மது எந்த அளவிற்கு கோபப்படணும்'' என்று வேண்டுமென்றே சீண்டினார்.

''அப்பா ப்ளீஸ் என் பொறுமையை சோதிக்காதீங்க. சொல்லுங்க...'' என்று கொஞ்சம் இறங்கிவந்து கேட்டவனுக்கு, ''நான் சொல்கிறேன்...''



என்ற பதில் பாரதியிடம் இருந்து வர இருவரும் திடுக்கிட்டு திரும்பி பார்த்தார்கள்.

''அம்மா நீங்க...'' என்று இழுக்க பாரதி அவன் பக்கத்தில் வந்தமர்ந்து, ''மது ரூமிற்கு வந்தேன். அப்படியே உன்னிடம் பேசவேண்டும் என்று வந்தேன். நீங்கள் இருவரும் பேசுவதை கேட்டதும் எனக்கு வசதியா போச்சு... '' என்று சொல்லிவிட்டு,

''மது இன்று இப்படி இருந்ததற்கு காரணம் அப்பா சொன்ன மாதிரி நீ தான் முகுந்த்'' என்றவுடன் முகுந்தின் பார்வை 'நீங்களுமா' என அவன் பார்வையை கண்டு,

''ஆமா கண்ணா, நீ அவர்கள் இங்கு வந்ததிலிருந்து பேசவே இல்லை . பல்லவி வேறு அவளை ஒரு தினுசா பார்த்திருக்கிறாள். இது போதாதா ஒரு புத்திசாலி பெண்ணுக்கு . அது தான் என்னிடம் நாங்கள் வந்தது உங்கள் பிள்ளைக்கு பிடிக்கவில்லையா என்று கேட்டாள் . நானும் எவ்வளவோ மழுப்பி பார்த்தேன் . ஆனால் அவளிடம் முடியவில்லை கடைசியாக உண்மையை சொல்ல வேண்டியதாக போச்சு.

அதை கேட்டதிலிருந்து அவள் மனசும் காயமாகிவிட்டது. பாவம் அதை மஞ்சுவுக்கு தெரியாமல் அவள் மறைக்க பட்டப்பாடு ரொம்ப கொடுமை. எந்த பொண்ணு தன் தாயை பற்றி கேவலமாக பேசினால் தாங்கிக் கொள்வாள்.

இதுவே வேறு பெண்ணாக இருந்திருந்தால் இந்த விழா இப்படி சந்தோஷமாக நடந்திருக்காது. ஆனால்

மது உங்கள் அப்பாவுக்கும், தாத்தாவுக்கும் மதிப்பு கொடுத்து தன் உணர்வுகளை, கோபத்தை கட்டுப்படுத்தி அதை அவள் அம்மாவுக்கு தெரியாமல் மறைத்து அவள் தவித்த தவிப்பு இருக்கே, நான் கூட அப்படி இருந்திருப்பேனா என்று சந்தேகம் தான். உண்மையில் அவள் வைரம்'' என்று சிலாகித்தார்.

'மதுவின் வேதனைக்கு நான் தான் காரணமா? ஐயோ கடவுளே அவளின் மென்மையான மனதை இப்படி குத்தி கிழித்த அரக்கன் நான் தானா? அவள் மனதை இந்த அளவு ரணமாக்கியிருக்கிறேனே' என்று வேதனையில் உறைந்துபோனான்.

அவன் விழிகளில் கசிந்த காயம்பட்ட வலியை உணர்ந்த பாரதி, ''முகுந்த்...'' என்று மென்மையாக அழைக்க அவரை அடிபட்ட பார்வை பார்த்துவிட்டு அம்மா என்ற கதறலோடு அவர் மடியில் படுத்துக்கொண்டான். பாரதி அந்த வளர்ந்த குழந்தையை ஆதரவாக வருடி கொடுக்க அவரின் மடி கண்ணீரில் நனைந்தது.

'காதல் என்று வந்துவிட்டால் கம்பீரமான ஆண்களையும் இப்படி பலமிழக்க வைக்குதே' என்று சுதிருக்கு ஆயாசமாக இருந்தது.

சற்று நேரம் கழித்து எழுந்தவன் கண்கள் கலங்கியிருக்க, ''அம்மா எனக்கு மதுவை இப்பவே பார்க்கணும். ப்ளீஸ் வாங்கம்மா...'' என்று அவரை அழைத்தான்.

அவன் முடியை கோதி, ''நான் போய் அவளை பார்த்துவிட்டுத் தான் வந்தேன். அவளுக்கு உடம்பு



நெருப்பா கொதிக்குது. இப்போ தான் மாத்திரை கொடுத்து அவளை படுக்க வைத்துவிட்டு வந்தேன். மஞ்சு பக்கத்தில் தான் இருக்கிறாள். நீ காலையில் போய் பார்'' என்றதும் மற்ற இருவரும் அதிர்ந்து போயினர்.

முகுந்த் அவர் பேச்சையும் மீறி எதிர் ரூமிற்கு ஓடியவன் கலங்கிய கண்களுடன் அமர்ந்திருந்த மஞ்சுவை பரிதாபமாக நோக்கிவிட்டு மதுவின் அருகிலமர்ந்து அவள் முகத்தையே காதலுடன் பார்க்க புரிந்துகொண்ட மஞ்சு விலகி நின்றார். முகுந்த் அவள் நெற்றியை தொட்டு பார்த்துவிட்டு தவிப்புடன் சுதிரிடம் டாக்டருக்கு போன் செய்ய சொல்ல, ''இன்னும் கொஞ்ச நேரத்தில் நம் டாக்டர் வந்துவிடுவார்'' என்று அவனை சமாதானப்படுத்திவிட்டு, மற்ற இருவரையும் அழைத்துக்கொண்டு வெளியேறினார்.

அவள் பக்கத்தில் அமர்ந்து அவளை தன் மடியில் இழுத்து போட்டுக்கொண்டு, அவன் கண்கள் அவள் முகத்தை விட்டு அசையாமல் இருக்க கைகள், அவள் கூந்தலை மென்மையாக வருட அவன் வாய் தன்னிச்சையாக, ''ஐம் சாரிடா மது'' என்று புலம்பிக்கொண்டே இருந்தது.

ஜுரத்தினால் முகம் சிவந்து போயிருக்க, மூடியிருந்த கண்கள் அங்கும் இங்கும் அலைபாய்ந்ததை கண்டு அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட, அவனின் இதழின் சூட்டில் மது மெதுவாக கண்திறந்து பார்த்தாள்.

''எப்படி டா இருக்கே? ஐ அம் சாரிடா? உன்னை ரொம்ப காயப்படுத்திவிட்டேன்'' என்று அவன்

வேதனையுடன் சொல்வதை கேட்க முடியாமல் மீண்டும் கண்கள் சோர்வில் மூடிக்கொள்ள முகுந்தின் கண்கள் கலங்கியது.

இரவு முழுவதும் தூங்காமல், டாக்டர் கொடுத்த மருந்துகளை நேரப்படி கொடுத்து மதுவை தன் கண்ணின் மணி போல பார்த்துக் கொள்ள, சரியாக நேரம் தவறாமல் மருந்துகள் கொடுத்த காரணத்தினாலே அவளுக்கு காய்ச்சல் குறைய ஆரம்பித்தது.

விடியற்காலை ஐந்தானதும் பாரதி முகுந்தை கட்டாயப்படுத்தி தூங்க சொல்ல, மதுவுக்கு காய்ச்சல் குறைந்திருந்ததால் அவளை கட்டிலில் படுக்க வைத்துவிட்டு தன் அறைக்கு சென்றான்.

கண்விழித்து பார்த்தவளின் முடியை கோதிக்கொண்டே, ''எப்படிடா இருக்கே , சாரி மது கண்ணா... ஏதேதோ சொல்லி உன் மனசை கஷ்டபடுத்திவிட்டேன், உன் மனக்குமுறலை வெளியே சொல்ல முடியாமல் உனக்குள்ளே புழுங்கி இப்படி காய்ச்சல் வருகிற அளவிற்கு ஆகிவிட்டதே'' என்று வருந்தினார் பாரதி.

மது சோகையாக புன்னகைத்து தன் கூந்தலை கோதிய கையை பிடித்து மெல்லிய குரலில், ''அதெல்லாம் ஒன்றுமில்லை அத்தை. நான் நல்லாதான் இருக்கேன். இதற்கு ஏன் வருத்தப்படறீங்க?'' என்று அவரை சமாதானப்ப'டுத்திவிட்டு, ''அம்மா எங்கே அத்தை?'' என்று கண்களால் தேடிய படியே கேட்டாள்.

''நீ தூங்கி கொண்டிருக்கும் போது பார்த்துவிட்டு இப்போது தான் தன்னுடைய அறைக்கு சென்றாள்.



நாளைக்கு புது வருடம் பிறக்குது. உனக்கு உடம்பு சரியில்லை என்று தாத்தாவுக்கு இன்னும் தெரியாது. தெரிந்தால் கோபித்துக் கொள்வார். முகுந்த் தான் இரவில் எதுவும் சொல்ல வேண்டாம் என்று சொல்லிவிட்டான் . அவனும் நைட் முழுவதும் உன் கூடவே இருந்து உன்னை கவனித்துக் கொண்டான். நான் தான் இப்போ அவனை வலுக்கட்டாயமாக தூங்க அனுப்பி வைத்தேன்'' என்றார்.

முகுந்த் இரவு முழுவதும் தன்னுடன் இருந்தான் என்று கேட்டதும், கோபத்தில் முகம் சிவந்து போனது. பாரதிக்கு அவளின் கோபம் புரியாமல் முகம் சிவக்கவும் மறுபடியும் ஜுரம் அதிகமாகிவிட்டதா என்று அவள் நெற்றியில் கையை வைத்து பார்த்துவிட்டு, ''சரி மது நீ தூங்கி ரெஸ்ட் எடு. இன்னும் கொஞ்ச நேரத்தில் மஞ்சு இங்கே வந்து விடுவாள்'' என்று வாஞ்சையுடன் அவள் நெற்றியை வருடிவிட்டு சென்றார்.

சிறிது நேரத்திலே மனைவியுடன் வந்த பூபதி, 'மது கண்ணா உனக்கு உடம்பு சரியில்லை என்று என்னிடம் இவர்கள் சொல்லவே இல்லை... நீ வேதனையிலிருக்கும் பொழுது நான் நன்றாக தூங்கியிருக்கேன்'' என்று வேதனைப்பட்டவரை சமாதானப்படுத்துவதற்குள் போதும் போது மென்றாகிவிட்டது.

ஹார்பரில் சரக்கு ஏற்றுகிற விஷயமாய் இன்று கண்டிப்பாக ஆபிஸ் போயே ஆகவேண்டும் என்பதால் கிளம்புவதற்கு முன் அவளின் அறைக்கு சென்றவன் அவள் ஆழ்ந்த உறக்கத்திலிருப்பதை கண்டு

நெற்றியில் முத்தமிட்டுவிட்டு சென்றான். அன்று மதியமே மது முழுவதும் குணமாகி விட குளித்துவிட்டு கீழே இறங்கி வந்து எல்லோரிடம் கொஞ்ச நேரம் அமர்ந்து பேசிக்கொண்டிருக்க, பீனா அவள் அப்பாவுடன் ஆரவாரமாக வந்திறங்கினாள்.

எல்லோருடனும் சேர்த்து மதுவை பார்த்தது அவளுக்கு எரிந்தது. 'கொஞ்சிக் கொண்டிருக்கிறாயா? நீ எத்தனை நாளைக்கு தான் இந்த வீட்டில் இருக்க போகிறாய் என்று பார்க்கிறேன். உன்னை ஓட ஓட விரட்டுகிறேன்' என்று உள்ளுக்குள் கறுவிக் கொண்டு, பிரபாதேவியுடன் போய் அமர்ந்துகொண்டாள்.

அவரிடம் ரொம்ப பொறுப்பான பெண் போலே, ''எப்படி இருக்கீங்க பாட்டி? எப்படி இருக்கீங்க தாத்தா?'' என்று கேட்டுவிட்டு, ''ஆமாம் இந்த பெண் பெயர் என்ன மறந்துவிட்டேன்? இவள் தானே இப்போ புதுசா வந்த சொந்தம்'' என்று நக்கலாக கேட்டாள்.

அதை கேட்டு திலீப் முகத்தை சுளிக்க, பிரபாதேவி அவளை எப்படி அடக்குவது என்று தெரியாமல் கையை பிசைய, பூபதி அவளை கண்ணாலே எடை போட்டு, ''அம்மாடி பீனா நீ சொல்ற மாதிரி என் பேத்தி புதுசா வந்த சொந்தம் இல்லை. என் பையனுக்கு இவள் எப்போது பிறந்தாளோ, அப்போதிலிருந்து இவள் எங்கள் பேத்தி தான். அது எப்படி என் பேத்தியின் பெயர் தெரியவில்லை என்று சொல்கிறாய்? நேற்று நடந்த விழாவே அதற்கு தானே. என்ன சாப்பிட மட்டும் வந்தாயா? விழாவை



கவனிக்கவில்லையா?'' என்று அவரும் அவள் பாணியிலே நக்கலாக பேசி அவள் வாயை அடைக்க, அவளுள் எரிச்சல் மண்டியது.

'கிழம் என்ன பேச்சு பேசுகிறது. இருக்கட்டும் இந்த வீட்டுக்கு வந்த பிறகு உன்னை என்ன செய்கிறேன்' என்று வன்மமாக நினைத்துக்கொண்டு, அவரையே முறைத்துக் கொண்டிருக்க, ''என்னம்மா பேச்சையே காணோம்'' என்று மீண்டும் அவளை சீண்டினார் பூபதி. அவரின் பேச்சுக்கு மோகன் தவிர எல்லோருமே நமுட்டு சிரிப்பு சிரித்துக்கொண்டார்கள்.

மது அவளை அடப்பாவமே ரேஞ்சுக்கு பார்வை பார்த்துவிட்டு, ''சரி தாத்தா நான் மேலே போகிறேன்'' என்று எழ பூபதி, ''நீ ஏன்மா போகிறாய். இவர்கள் எல்லாம் இப்போது போய்விடுவார்கள்'' என்று பீனாவை முறைத்துக்கொண்டே சொல்ல,

மது லேசாக சிரித்து விட்டு பீனாவை ஓரக்கண்ணால் பார்த்து, ''நான் யாருக்காகவும் போகவில்லை தாத்தா. கொஞ்சம் அசதியா இருக்கு'' என்று சொல்லி முடிப்பதற்குள், ''சரிடா நீ போய் ரெஸ்ட் எடு'' என்று அவளிடம் பரிவாக சொல்லிவிட்டு, பாரதியை அழைத்து போக சொன்னார்

அவள் சென்ற ஐந்து நிமிடம் கழிந்து முகுந்த் வர அவன் பீனாவை பார்த்ததும் முகத்தை திருப்பிக் கொண்டு நேரே மாடிக்கு சென்றுவிட்டான். மதுவை பார்க்கலாம் என்று அவள் அறைக்கு போக அவள் போனில் பேசும் சத்தம் கேட்டு சரி அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்று திரும்பி சென்றுவிட்டான்.

# 11

முகுந்தை நேருக்கு நேர் பார்க்க பிடிக்காமல் உடனடியாக அங்கிருந்து சென்றுவிட மனது துடித்தாலும், அதற்கு தாயிடம் என்னவென்று காரணத்தை சொல்வது என்று யோசித்த மதுவுக்கு ஒரு யோசனை உதிக்க, சாப்பாடு கொண்டு வந்த தாயிடம், ''மாமா வீட்டுக்கு போகணும் போல ஆசையா இருக்கு மஞ்சு...' என்றவளை விநோதமாக பார்த்தார்.

'நாளை புதுவருஷம் பிறக்குது... அதுவும் உன் பிறந்த நாள்வேறு... எப்படி தாத்தா அனுப்புவார்...?'' என்று யோசிக்க,

'எனக்குத் தெரியாது... போயே ஆகணும்'' என்று அடம்பிடித்தவளை புதிதாக பார்த்துவிட்டு, சுதிரிடம் விஷயத்தை சொல்ல, அவரும் அவளது மனதை புரிந்து பூபதியிடம் எப்படியோ பேசி அனுமதி வாங்கிக்கொண்டு அவளை அழைத்து சென்றார்.

ஆனால் மஞ்சுவுக்கு தான் எல்லாமே புதிதாக இருந்தது. 'எப்போதுமே எது சொன்னாலும் அப்படியே ஏற்றுக் கொள்பவள் இன்று புதிதாக அடம்பிடிக்கிறாள் என்றால் தாத்தாவின் செல்லத்தில் புதிதாக இந்த குணம் வந்திருக்கா' என்று எண்ணிக்கொண்டே மகளுக்கு விடை கொடுத்தார்.

ஏற்கெனவே போன் செய்து விஷயத்தை சொல்லிவிட்டதால் அவளை அன்புடன் வரவேற்க,



சுதிரும் அவர்களுடன் சிறிது நேரம் பேசிவிட்டு கிளம்பு அவரை வழியனுப்ப வந்தவளிடம், 'உனக்கு முகுந்த் மேலே கோபம்... அதனால் அவனை பார்க்க பிடிக்காமல் இங்கே வந்திருக்கிறாய் சரியா...'' என்று கேட்டு அவளை அதிர வைத்துவிட்டு,

''நேற்று நீ அழுதது தாங்க முடியாமல் ரொம்ப துடித்து போய்விட்டான்மா. உனக்கு ஜுரம் என்றதும் எப்படி தவித்தான் தெரியுமா? நேற்று முழுவதும் தூங்காமல் உன்னை கவனித்துக்கொண்டான். அதற்கு காரணம் அவன் உன் மேல் வைத்திருக்கிற அலாதி காதல் தான்'' என்றவரை சற்றும் சலனமே இல்லாமல் பார்க்க,

''உண்மை தான் மது, நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்... உன்னை அவன் உயிருக்கும் மேலே நேசிக்கிறான்... ஏதோ சின்ன வயதில் தவறாக சொல்லி கொடுத்து அது மனதில் பதிந்தது அவன் தப்பு இல்லைமா. நீ புத்திசாலி பெண். அவன் நிலைமையில் இருந்து யோசித்து பார் உனக்கே புரியும்...' என்று புறப்பட்டு செல்ல அவளுக்கு லேசாக உறுத்தலாக இருந்தது.

மது திடீரென்று வந்தது அவர்களுக்கு சந்தோஷத்தை கொடுத்தது. அவளை பூப்போல தாங்க, வேலை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்த ரிக்கி மதுவை பார்த்ததும் அவனால் ஆச்சர்யத்தை தாங்க முடியவில்லை. மதுவுக்கும் ரிக்கியோடு பேசுவது மனதுக்கு நிம்மதியாக இருந்தது. காலையில் எப்படியோ சந்தோஷமாக கழிந்தாலும் இரவானதும் முகுந்தின்

நினைவில் தூக்கம் வராமல் எழுந்து ஹாலுக்கு வர, ரிக்கி லேப்டாப்பில் கட்டிடத்துக்கான ப்ளூ பிரிண்ட் போட்டுக் கொண்டிருந்தான்.

அவளை கண்டதும், ''என்ன மது புது இடம் என்பதால் தூக்கம் வரவில்லையா?'' என்று விசாரிக்க, அவன் கேள்விக்கு 'ம்ம்' கொட்டிவிட்டு எதிர் சோபாவில் அமர்ந்தவளை கூர்மையாக பார்த்தான்.

''ஏன் மது புது இடம் என்பதால் மட்டும் தானா? இல்லை வேறு ஏதாவது குழப்பமா உன் மனதில் நானும் நேற்று உன் முகத்தை கவனித்தேன். ஒரு தேவதை மாதிரி இருந்த போதிலும் உன் முகத்தில் ஏதோ மிஸ்ஸிங். உன் முகத்தில் தெரிந்த சந்தோஷம் வலுக்கட்டாயமாக கொண்டு வரப்பட்டது மாதிரி இருந்தது. அங்கு ஏதாவது உனக்கு பிரச்சனையா?'' என்று கேட்டான்.

அவனின் கேள்விக்கு என்ன சொல்வது, எப்படி சொல்வது என்று ஒரு நிமிடம் தயங்கி இவனிடம் சொல்வதால் எதுவும் ஆகிவிடாது என்று யோசித்து கொண்டிருக்க,

''ஆனால் அங்கு இருப்பவர்கள் எல்லோரும் உன் மேல் ரொம்ப பாசமாக தான் இருந்தார்கள். நேற்று ஏதோ ஒரு பெண் கூட வந்து உன்னிடம் அநாகரிகமாக நடந்து கொள்வதை தாங்க முடியாமல் முகுந்த் அந்த பெண்ணிடம் எப்படி கோபப்பட்டார் தெரியுமா? அந்த கோபம் எனக்கு என்னவோ சாதாரணமாக மாமா பெண் என்பதற்காக வந்த மாதிரி தெரியவில்லை. அவர் பார்வையும் முகமும் எனக்கு சொல்கிற சேதியே வேறு''



என்று நிறுத்திவிட்டு மதுவின் ரியாக்ஷனை கவனித்தான்.

ரிக்கியின் பார்வை தன்னை துளைத்து எடுப்பதை உணர்ந்த மது, தன் உணர்வுகளை ஜாக்கிரதையாக வெளியே காட்டாமல் கவனமாக கை நகங்களை ஆராய்வது போல நடிக்க, ரிக்கியோ உணர்வுகளை பூட்டிவைக்க அவள் படாத பாடுபடுவதை கண்டு மனதிற்குள் சத்தமாக சிரித்துக் கொண்டான்.

''என்ன மது நான் சொன்னதற்கு உன்னிடம் எந்த ரியாக்ஷனும் இல்லை'' என்று வேண்டுமென்றே அவளை ஆழம் பார்த்தான்.

மது தன் உணர்வுகளை மறைப்பதிலே கவனமாக இருந்ததால் ரிக்கி சீண்டலாக கேட்டதை கவனிக்காமல், ''ம்ச்ச்'' என்று அலுத்துக்கொண்டு, ''என்ன சொல்றது, அவர் மனசில் என்ன நினைப்பார்? என்ன செய்வார்? என்று எனக்கு எப்படி தெரியும்'' என விட்டேத்தியாக சொன்னதும், ரிக்கி துணுக்குற்றான்.

''நீ சொல்றது புரியலை மது..." என்றதும், முகுந்தை முதன் முதல் சந்தித்ததிலிருந்து, நேற்று நடந்தது வரை சொல்லி முடித்துவிட்டு இப்படிப்பட்ட அவருடன் என்னால் எப்படி இயல்பாக பேசமுடியும்?' என்று எதிர்கேள்வி கேட்டாள்.

'நீ சொல்றது எனக்கு புரியுது... உன்னை ஆழமாக விரும்புகிறார்... ஆனால் அத்தையை பற்றி தவறான எண்ணம் அவர் மனதில் இருக்கு என்பது தான் குற்றச்சாட்டு...' என்று கேட்க, 'ம்ச்ச் அதான் சொல்லிட்டேனே...' என்று அலுத்துக்கொண்டாள்.

''அவரை பற்றிய உன் நினைப்பு தவறு மது. முகுந்துக்கு அத்தையின் மேல் தவறான எண்ணம் இருந்தபோதும் இது வரைக்கும் உன்னையோ அல்லது அத்தையையோ ஒரு வார்த்தை ஏதும் தவறாக அல்லது மனம் நோகும்படி பேசினாரா?'' என்று புருவம் முடிச்சிட கேட்ட கேள்விக்கு மது ஒரு நிமிடம் யோசித்துவிட்டு, 'ம்ஹூம்' என்று உதட்டை பிதுக்கினாள்.

''என்ன தான் கோபம் இருந்தாலும் இதுவரைக்கும் அவர் உங்களிடம் விலகி போயிருக்கிறாரே தவிர, லூசாக வார்த்தையை விடவில்லை. ஏன் கடுமையாகக் கூட நடந்துகொள்ளவில்லை என்று நீ சொன்னதிலிருந்தே தெரிகிறது. ஆனால் நீ இப்போது செய்து கொண்டிருப்பது என்ன? அவர் இப்படி நினைத்திருக்கிறார் என்று கேள்விப்பட்டவுடன் உன்னை கண்ணும் கருத்துமாக கவனித்துக்கொண்ட அவரை பார்க்கக் கூடாது என்று தூக்கியெறிந்து விட்டு வந்திருக்கிறாய்'' என்றவுடன், மது குறுக்கே பேச முயல,

''வெயிட் மது நான் சொல்லி முடித்துவிடுகிறேன். எதுவாக இருந்தாலும் நான் சொல்வதைக் கேட்டுவிட்டு சொல்'' என்று அவளை தடுத்துவிட்டு,

''உனக்கு பேச பிடிக்கவில்லை என்றாலும் நீ என்ன செய்திருக்கணும் அட்லீஸ்ட் அவர் செய்த உதவிக்கு ஒரு நன்றியாவது சொல்லியிருக்கலாமே. அதையும் செய்யவில்லை. இதற்கே நீ இவ்வளவு எமோஷனலாக நடந்து அவரின் மனதை காயப்படுத்தி இருக்கிறாய். இத்தனை வருடம் மனதில் பதிந்த



விஷயத்திற்கு அவர் எந்தளவிற்கு உங்கள் இருவரிடமும் கோபப்பட்டிருக்கணும். அவர் அதை செய்யவில்லை. மாறாக அமைதியாக, மிகவும் நாகரிகமாக ஒதுங்கிப் போயிருக்கிறார். அவரை போய் உன்னால் எப்படி மது கஷ்டப்படுத்த முடிகிறது...?'' என்று ரிக்கியின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் வாயடைத்து போனாள்.

''அப்போ அவர் செய்தது எல்லாம் சரி என்கிறீர்களா ரிக்கி?'' என்று ஆதங்கத்துடன் கேட்டு விட்டு, ''என்ன இருந்தாலும் இரண்டும் ஒரே இனம் தானே, அது தான் நீங்கள் அவருக்கு சப்போர்ட் செய்கிறீர்கள்'' என்றாள் குறையாக.

ரிக்கிக்கு அவளின் குழந்தைத்தனமான குற்றச்சாட்டு சிரிப்பை வரவழைக்க, ''மது ஒருத்தர் நல்லவரா? கெட்டவரா? என்று பார்த்து அவருக்கு தகுந்தபடி பேச அவர் ஆணா? பெண்ணா என்று பார்க்க தேவையில்லை. என்னை பொறுத்தவரை முகுந்த் இஸ் எ ஜெம் ஆப் பர்சன் என்று தான் சொல்வேன்'' என்றவன், ''ஏன் மது உன் மனதில் முகுந்த் இருக்கிறார் தானே. அப்புறம் ஏன் அதற்கு வேலி போடுகிறாய். இரண்டு பேரும் இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி கண்ணாம்பூச்சி ஆட்டம் ஆட போகிறீர்கள்'' என்று புருவத்தை தூக்கி சிரித்துக் கொண்டே கேட்டான்.

ஆனால் அவனின் சிரிப்பு அந்த நேரத்தில் கோபத்தை வரவழைக்க, ''நான் சொன்னேனா அவரை காதலிக்கிறேன் என்று. நீங்களா ஏதாவது கற்பனை செய்துக் கொள்ள வேண்டாம். என் மனதில் அவர்

இல்லை'' என்று அப்பட்டமாக பொய்யுரைக்க, ஆனால் அவள் முகம் அவளை எட்டப்பன் மாதிரி காட்டிக் கொடுத்தது.

ரிக்கிக்கு அவளின் தவிப்பு சிரிப்பை கொண்டு வர, அட்டகாசமாக சிரித்துவிட்டு, ''ஐயோ மது பொய் சொல்ல நிறைய திறமை வேண்டும். உனக்கு அது வரலை பாவம் விட்டு விடு. ஏன் வீணா முயற்சி செய்கிறாய். நீ நீயாகவே இரு'' என்றவுடன் மது அவனை முறைத்துவிட்டு அங்கிருந்து எழ முயற்சி செய்ய, ரிக்கி எழுந்து இரண்டே எட்டில் கையை பிடித்து அவளை அமரவைத்தான்.

''மது ப்ளீஸ், இப்படி உன் மனதில் முகுந்தை சுமந்துகொண்டு அவரை பிடிக்கவில்லை என்று எதுக்கு உன்னையே நீ வருத்திக் கொள்கிறாய். அவரின் உணர்வுகளையும் கொஞ்சம் புரிந்து கொள்ள முயற்சி செய்யேன். உன் மனசில் முகுந்த் இல்லை என்று அடித்து சொல்ல முடியுமா? நீயே தான் கொஞ்ச நேரத்திற்கு முன்னே சொன்னாய். உன் அறையை அலங்கரித்தது, உன்னை பர்சேஸ் செய்ய அழைத்துபோன போது உன்னை பரிவாக கவனித்துக்கொண்டது என்று. உன் மனதில் அவரை பற்றி எந்த அபிப்ராயமும் இல்லையென்றால் நீ அவர் மீது குற்றம் மட்டும் தானே சுமத்திருக்கணும். அவர் செய்த நல்ல விஷயங்களையும் ஏன் சேர்த்து சொல்லணும்'' என்று அவளையே திருப்பிக் கேட்டான்.

ரிக்கியின் கேள்வி மதுவை திகைக்க வைக்க, அவனே தொடர்ந்து, ''மது அவரின் நிலைமையில்



வேறொருவர் இருந்திருந்தால் , என்ன ஆகியிருக்கும் தெரியுமா? நிச்சயம் இந்நேரத்திற்கு உன் பல்லவி அத்தை மாதிரி குத்திக் கிழித்திருப்பார்கள். ஆனால் அப்படி எதுவும் செய்யாமல் இருந்த முகுந்தை உனக்கு பிடிக்கவில்லை என்கிறாய். இதை நான் நம்பணுமா?'' என்று ஒரு புருவத்தை தூக்கி கேட்க அவனின் எந்த ஒரு கேள்விக்கும் மதுவிடம் பதில் இல்லை. அவள் தொடர்ந்து அமைதி காத்தாள்.

''அவருக்கு இப்போ எல்லா உண்மையும் தெரிந்துவிட்டது. இனி என்ன எல்லாமே சுபம் தானே. அதை விட்டு நீ கோபப்படுவதில் என்ன நியாயம் இருக்கு. இந்நேரத்திற்கு நீ அங்கு இல்லை என்று தெரிந்த பிறகு அவரின் மனம் படும் பாடு உனக்கு புரியுமா? இல்லை அதை பற்றி யோசித்து பார்த்தாயா?'' என்ற கேள்விக்கு மது தலை தன்னிச்சையாக இல்லை என்று அசைந்தது.

''ம்ஹூம்... பெண்களுக்கு ஒருத்தரை பிடிக்கவில்லை என்றால் என்ன ஏது என்று யோசிக்காமல் தூக்கியெறிந்து விடுவீர்கள். ஆனால் இந்த ஆண் ஜென்மம் இருக்கே அது அப்படி செய்யாது. விடவும் முடியாமல், தூக்கியெறியவும் முடியாமல் இரண்டுக்கும் இடையில் அல்லாடும் '' என்று சற்று வேதனையோடு சொல்லி நிறுத்தினான்.

ரிக்கி பேச பேச ஆரம்பத்தில் வீம்புக்காக பேசினாலும், அதில் இருக்கிற உண்மையை மறுக்க முடியாமல் நாம் அங்கிருந்து வந்தது தவறோ என்று அவளை யோசிக்க வைத்தது. முகுந்த் மீது தவறில்லை

என்று தோன்றினாலும் ஏனோ அவன் காதலை ஏற்றுக்கொள்வதில் தயக்கமாக இருந்தது. அவளின் தவிப்பும் தயக்கமும் தலைவலியை கொண்டு வர, இருகைகளாலும் தலையை அழுந்த பிடித்துக்கொண்டு வலியில் முகம் சுளிக்க அமர்ந்திருந்தவளை கண்டு பதறி போனான்.

''சாரி மது நான் ஹார்ஷா பேசிட்டேனா...?" என்று கவலையுடன் கேட்டான்.

''ச்சே ச்சே. நீங்கள் சொன்னது எதுவும் தவறே இல்லை ரிக்கி. என் மனசில் இருப்பதை தானே சொன்னீர்கள். எனக்கும் மனசு விட்டு பேச அங்கே யாருமில்லை . அது தான் உங்களிடம் கொஞ்சம் வீம்பாக பேசிவிட்டேன். நேற்றிலிருந்து உடம்பு சரியி?ல்லாமல் இருந்தது. இப்போது ஆழ்ந்து யோசிக்கவும் மீண்டும் தலைவலி வந்துவிட்டது'' என்று அவனை சமாதானப்படுத்திவிட்டு, ''அவர் மீது எந்த தவறும் இல்லை என்று என் மனது சொன்னாலும் இத்தனை வருடம் தப்பான எண்ணம் வைத்திருந்த அவரை என்னால் சுவாதீனமாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்று தோன்றவில்லை. அது தான் குழப்பமாக இருக்கிறது'' என்று பரிதாபமாக சொன்னவளை பார்த்து சிரித்தான்.

''அப்பப்பா...! எனக்கு இது போதும். கடைசியாக அவரை நீ புரிந்து கொண்டாய். உன்னை நான் இப்போதே அவரை ஏற்றுக்கொள் என்று சொல்லவில்லை. முகுந்தை கண்டு ஒதுங்கி போகாமல் அவரிடம் சாதாரணமாக பேசு. போக போக நீயே உன்



மனசை அவரிடம் திறந்துவிடுவாய்'' என்றதும் மது சரி என்று தலையசைத்தாள்.

''சரி நேரமாச்சு மாத்திரை வேண்டுமா...?'' என்று கேட்டுவிட்டு அவளுக்கு பதிலுக்கு காத்திராமல் கிச்சனுக்கு சென்று பாலை சூடு செய்துகொண்டு மாத்திரையோடு திரும்பி வந்தான் . அவளை வற்புறுத்தி மாத்திரை போட வைத்து, பாலை குடிக்க வைத்து போய் படுக்க அனுப்பி விட்டு மீண்டும் தன் வேலையில் ஆழ்ந்தான் .

சாயங்காலம் மதுவை பார்க்க ஆவலாக வீட்டுக்கு வந்த முகுந்த், அவள் ரிக்கியின் வீட்டிற்கு போயிருப்பதை கேள்விப்பட்டு மனம் சோர்ந்து போக, 'உடம்பு சரியில்லாத நேரத்தில் எதுக்கு இங்கிருந்து போகணும்... அவள் உடம்பு இப்பொழுது எப்படியிருக்கிறதோ' என்று கவலைப்பட்டபடியே மாடியேற, எதிரில் மஞ்சு இறங்கி வந்து கொண்டிருந்தார்.

முகுந்தை பார்த்ததும் அவர் ஒதுங்கி போக, முகுந்துக்கு அடிபட்ட மாதிரி இருந்தது. ''அத்தை...'' என்றழைக்க, முதலில் மஞ்சுவுக்கு தன்னை தான் அழைக்கிறான் என்று தெரியாமல் மேலும் அவர் சென்று கொண்டே இருக்க, ''அத்தை உங்களைத் தான்...'' என்று மீண்டும் அழைத்ததும் மஞ்சு ஆச்சர்யத்துடன் திரும்பினார்.

அவரிடம் இத்தனை நாள் பேசாமல் இருந்ததற்கு மன்னிப்பு கேட்டதும், அவனின் வருத்தத்தைக் கண்டு நெகிழ்ந்து போக, அவரிடம் சிறிது நேரம் பேசிவிட்டு

ரூமிற்கு சென்றதும் மதுவின் குரலையாவது கேட்கலாம் அவளின் நம்பருக்கு அழைத்தான். ஆனால் போன் சுவிட்ச் ஆப் என்று வர மன பாரத்துடன் பால்கனியில் அமர்ந்துக்கொண்டான்.

அடுத்த நாள் காலையில் பூபதி அவனிடம், ''மதுவை அழைத்துக்கொண்டு சோட்டாணிகரை பகவதி அம்மன் கோயிலுக்கு வந்துவிடு. நாங்கள் எல்லோரும் அங்கே தான் போகிறோம். இந்த புடவையை கட்டிக்கொள்ள சொல். வருஷா வருஷம் நம் குடும்பத்திற்காகவே நடக்கிற ஸ்பெஷல் பூஜை தெரியுமில்லையா? அதனால் சீக்கிரம் வந்துவிடுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

மனதிற்கினியவளை பார்க்கப்போகிறோம் என்ற இன்ப பரபரப்பில் அவனின் மனது காரின் வேகத்தை விட அதிகமான வேகத்தில் மதுவிடம் செல்ல, மதுவுக்கு ஏற்கெனவே பூபதி விஷயத்தை தெரிவித்ததால் அவளும் அவனுக்காக காத்திருந்தாள். முகுந்த் வந்ததும் மதுவின் எதிர்கால கணவர் என்ற உரிமையில் அன்பாக உபசரித்து அவனுடன் மதுவை அனுப்பி வைத்தார்கள்.

கிளம்பும் முன் ரிக்கி, 'பீ ரிலாக்ஸ்ட்... நான் சொன்னதை மறக்காதே'' என்று மெல்லிய குரலில் அறிவுறுத்த, அவர்களிடம் விடைபெற்று அவள் பக்கம் திரும்பாமல் வண்டியை செலுத்தியவன் சிறிது தூரம் சென்றதும் வண்டியை நிறுத்த, அதுவரை முகுந்த் ஏன் எதுவும் பேசவில்லை என்று குழம்பிக்கொண்டே வந்தவள் வண்டி நின்றதும் அவனை கேள்வியாக நோக்கினாள்.



அவள் பக்கம் திரும்பியமர்ந்து அவளையே விழுங்கிவிடுவது போல பார்த்தான். மதுவுக்கு அவனின் பார்வை உள்ளுக்குள் ஏதோ செய்ய அவனைப் பார்க்க முடியாமல் பார்வையை தாழ்த்திக் கொண்டாள்.

முகுந்தும் அவளிடமிருந்து தன் பார்வையை விலக்கிவிட்டு என்ன பேசுவது என்று தவித்து விட்டு, "மது..'' என்று மென்மையாக காதலுடன் அழைத்தான்.

அவனின் காதலை சுமந்து வந்த குரல் அவளை சிலிர்க்க வைக்க, தாங்க முடியாமல் முகத்தை திருப்பிக்கொண்டதும் முகுந்தின் மனம் தொட்டார் சிணுங்கியாய் சுருங்கியது.

''ஏன் மது என்னை பார்க்கவே பிடிக்கலையா? ஆனால் என்னால் உன்னை பார்க்காமல் இருக்கவே முடியவில்லையே... என் மேல் உனக்கிருக்கிற கோபம் நியாயமானது தான். சாரி மது, தவறான பேச்சை கேட்டு உன்னையும் அத்தையும் ரொம்பவே நோகடித்துவிட்டேன்'' என்றவனின் வருத்தம் அவளின் நெஞ்சை தொட்டது.

அவசரமாக திரும்பி, ''ஐயோ அப்படியெல்லாம் இல்லை முகுந்த். உங்கள் நிலைமையில் யாராக இருந்தாலும் இப்படி தானே செய்திருப்பார்கள். இதற்கு எதுக்கு மன்னிப்பு?'' என்றாள் மென்மையாக.

அவளின் இதமான வார்த்தைகள் மனதில் சந்தோஷ சிறகடித்தாலும் சிறிது சஞ்சலத்துடன், ''அப்புறம் ஏன் மது உடம்பு சரியில்லாத நேரத்தில் இவ்வளவு தூரம் வந்தாய்'' என்ற அவன் அக்கறையில் மனம் பாகாய் உருக, வார்த்தைகள் வெளிவராமல் அழிச்சாட்டியம் செய்தது.

அவளின் மௌனம் அவனுக்கு தவிப்பான நிமிடங்களை அளிக்க, ''நீ நேற்று வீட்டில் இல்லாமல் எப்படி தவித்துவிட்டேன் தெரியுமா?'' என்றதும் அவளுக்கு ரிக்கி சொன்னது ஞாபகம் வர அவனை நிமிர்ந்து அவன் கண்களை சந்திக்க அந்த கண்களில் தெரிந்த ஏக்கம் அவளை கொஞ்ச கொஞ்சமாக இளக்கியது.

''ஐ அம் சாரி முகுந்த்'' என்று முனகியவளின் கையை பிடித்து, ''இனி ஒரு தடவை இந்த மாதிரி என்னை விட்டு போகாதே மது. என்னால் தாங்க முடியாது. ஐ கான்ட் லீவ் வித் அவுட் யு'' என்று உருகியவனை தன்னை மறந்து பார்த்தாள்.

''எஸ் மது ஐ லவ் யு, இதை நான் எப்போதோ சொல்லியிருக்கணும். ஆனால் சில குழப்பங்களால் சொல்ல முடியாமல் போய்விட்டது. இனியும் என்னால் உன்னை பிரிந்திருக்க முடியாது'' என்று கூறி அவள் கைகளில் முத்தமிட, அவனின் முதல் முத்தம் அவளுள் சிலிர்ப்பை ஏற்படுத்த, கைகளை அவனிடமிருந்து இழுத்துக் கொண்டாள்.

அவளின் செய்கை புரியாமல் கையிலிருந்த மிட்டாயை பிடுங்கின தினுசில் அவன் பார்வை இருக்க, மதுவுக்கு பாவமாக இருந்தாலும் ஏனோ அவன் காதலை ஏற்றுக்கொள்ள அவள் மனம் பக்குவப்பட்டிருக்கவில்லை.

ஒரு பெருமூச்சை இழுத்துவிட்டு, ''சாரி முகுந்த். நான் சொல்றதை தவறாக எடுத்துக்கொள்ளாதீர்கள். உங்கள் காதலை ஏற்றுக்கொள்கிற மனநிலையில் இப்போதில்லை. நீங்கள் செய்தது தவறு என்றுணர்ந்து



மன்னிப்பு கேட்டாலும் என் மனது அதை ஜீரணிக்க கொஞ்ச நாள் ஆகும். அதுவரைக்கும் ப்ளீஸ்'' என்று கண்ணை சுருக்கி உதடு குவிய நிறுத்திவிட்டாள்.

அவளின் பதிலிலே தனக்கு சம்மதம் கிடைத்துவிட்டதில் முகம் பூவாய் மலர, ''நிச்சயம் மது, உனக்காக எத்தனை நாள் வேண்டுமென்றாலும் காத்திருப்பேன். எனக்கு உன் மனது முழுதாக வேண்டும். அதில் சஞ்சலமோ, வெறுப்போ இருக்கக்கூடாது. நீ எப்போது வேண்டுமென்றாலும் உன் மனதை என்னிடம் சொல். ஆனால் என்றைக்கும் உன்னை காதலித்துக்கொண்டு தான் இருப்பேன்'' என்று கூறிவிட்டு

''தேங்க்ஸ் மது, தேங்க் யு சோ மச் . சீக்கிரமே உன் மனது என் பக்கம் சாயும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு'' என்று முகம் விகசிக்க சொன்னதோடு நில்லாமல் அவள் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து விலகி காரை எடுக்க, அப்போதே மது மனதில் முகுந்த் நுழைந்து கொஞ்சம் கொஞ்சமாக அவள் மனதை ஆக்ரமிக்க ஆரம்பித்தான்.

# 12

**கோ**யிலுக்கு சென்ற சுதிரால் நிம்மதியாகவே இருக்க முடியவில்லை. 'மது இப்போது முகுந்த் மீது கோபமாக இருக்கும் போது அவளால் சரியான முடிவு எடுக்க முடியுமா? அப்படி எடுக்கிற முடிவு முகுந்துக்கு சாதகமாக இருக்குமா? இல்லை அவன் மனது

காயப்படும்படி இருக்குமா? அப்படி மதுவின் பதில் நெகடிவாக இருந்தால் முகுந்தை எப்படி சமாளிக்க போகிறேன்?' என்று ஒரு போராட்டமே நடந்து கொண்டிருக்க அவரின் கண்கள் ஒரு அலைப்புறுதலுடன் கோயிலின் வாசற்படியை நோக்கி தவமிருந்தது.

முகுந்தின் மனது ஆகாயத்தில் பறக்க காரும் அவன் கையில் பறக்க, மதுவுக்கு அவன் உற்சாகம் பார்த்து வெட்கத்துடன் புன்னகைக்க, . காரின் சிடியில் ''நானா கருத்தே ப்யார் ஹாய் மே'' என்ற பாடலை போட்டான்.

மது ஆச்சரியப் பார்வையோடு . ''முகுந்த் நீங்க ஹிந்தி சாங்க்ஸ் எல்லாம் கேட்பீர்களா? அதுவும் இந்த பாட்டு உங்களுக்கு பிடிக்குமா?'' என்று வியப்போடு வினவியவளை, விகசிப்போடு திரும்பி ஒரு பார்வை பார்த்துவிட்டு லேசான கண்சிமிட்டினான்.

''உன்னை முதன் முதலில் பார்த்தபோது நீ இந்த பாட்டு தான் பாடிக்கொண்டிருந்தாய். அப்போதே உன்னில் நான் விழுந்துவிட்டேன். நீ இந்த பாட்டு பாட உனக்குள் ஏற்கெனவே காதல் இருக்கா என்று கூட ஒரு நிமிஷம் துடித்துப் போய்விட்டேன் தெரியுமா. அன்றிலிருந்து என் உயிரோடு இந்த பாட்டு கலந்துவிட்டது'' என்று அந்த சந்தோஷ நிமிஷங்களில் கரைந்துக்கொண்டே சொன்னவனை மதுவின் மனது சிறைபிடித்தது.

மதுவுக்கும் அதற்கு மேல் பேச தோன்றாமல் அந்த இனிமையான தருணங்களில் மூழ்கி விட,.கோயில்



நெருங்கியதும் வண்டியை பார்க் செய்துவிட்டு இருவரும் சிரித்து பேசியபடி இணைந்து நடந்து செல்ல, இவர்களை தூரத்தில் இருந்தே கவனித்துவிட்ட சுதிர்க்கு மனது நிம்மதியடைய மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு அவர்களருகில் சென்றார்.

அதன் பிறகு தொடர்ந்து வந்த நாட்களில் முகுந்த் மதுவை நிறைய இடங்களுக்கு அழைத்து சுற்றிக்காட்டிய அளவுக்கு கம்பெனியை பற்றியும் அவனோடு கம்பெனிக்கு சென்று என்னென்ன தொழில்கள் என்று தெரிந்து கொள்வதிலும் நேரம் பறக்க, அவளுக்கு கடல் உணவு ஏற்றுக்மதி பற்றி சொல்லிக்கொடுத்தான்.

தொழிலை திறம்பட நடத்துகிற திறமையும், வேலை செய்பவர்கள் ஆபிஸ் ஸ்டாப்பாக இருந்தாலும் சரி, பண்ணையில் வேலை செய்கிற ஆட்களாக இருந்தாலும் அவர்கள் முகுந்த் மேலே வைத்திருக்கிற மரியாதையும், அவர்களிடம் அன்பாக பழகுவதையும் பார்த்து பிரமித்துப் போயிருந்தாள்.

வேலை செய்பவர்களுடைய வீட்டு விசேஷங்களுக்கு சென்று அவர்களை கவுரவித்த அவனின் பெருந்தன்மையும் பண்பும், யாரையும் மனம் நோக பேசாத குணமும் மதுவை ரொம்பவே இம்ப்ரெஸ் செய்தது. கம்பெனியில் மட்டுமில்லை, வீட்டிலும் அவனுக்கு எல்லோரும் கொடுக்கும் மரியாதையை, அவன் மற்றவர்களிடம் அன்பாக நடந்துகொள்வது, மஞ்சுவிடம் மரியாதையாக பழகிய விதம், இதெல்லாம் நாளாக நாளாக மதுவின் நெஞ்சில் முகுந்த் பூதாகரமாக

விஸ்வரூபம் எடுத்தாலும் தயக்கத்தை உதறி காதலைச் சொல்ல மட்டும் முடியாமல் தவித்தாள் .

பீனா அடிக்கடி வந்தாலும் அவளுக்கு பிரபாதேவி மட்டுமே ஆதரவு கொடுத்தார். ஆனால் அவள் மதுவை பற்றி ஏதாவது நக்கலாக பேசினால் மட்டும் அதற்கு பதில் கொடுக்காமல் அமைதியாக இருந்துவிடுவார்.

மது சொன்ன ஒரு மாதம் முழுமையாக முடிந்து விட, ஒரு மாலை எல்லோரும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும் போது பூபதி மதுவிடம், ''என்ன மது ஒரு மாதம் இங்கே தங்கி உன் முடிவை சொல்கிறேன் என்று சொன்னாய். இப்போ உன் முடிவு என்ன என்று தெரிந்து கொள்ளலாமா?'' என்று ஆர்வமாக கேட்டார்.

அவர் கேட்டதும் சிரித்து பேசிக்கொண்டிருந்த மதுவின் சிரிப்பு உதட்டிலே உறைந்துவிட தூக்கிவாரி போட நிமிர்ந்தவளின் பார்வை பூபதி, பாரதி, மஞ்சு என்று போய்விட்டு கடைசியாக முகுந்த் முகத்தில் வந்து நிலைத்தது.

முகுந்துக்கும் அவள் இன்னும் தன் காதலை சொல்லவில்லையே என்று ஏக்கம் இருந்தாலும் அதை காட்டிக் கொள்ளாமல் மது அருகில் இருந்தாலே போதும் என்ற நிம்மதியில் இருந்தவன் பூபதியின் கேள்வியில் ஆடிப்போனான்.

மது தன்னை பார்த்ததும் அவனும் அவள் என்ன சொல்ல போகிறாளோ என்று இதயம் துடிக்க தவிப்புடன் காத்திருக்க அவனின் பார்வை ''ப்ளீஸ் போகமாட்டேன் என்று சொல்லேன்...'' என்று கெஞ்சியது .



எந்த பதிலும் சொல்ல முடியாமல் அங்கிருந்து எழுந்து தன் அறைக்கு ஓட, முகுந்தும் இதயம் தடதடக்க நான் போய் பார்த்துவருகிறேன் என்று அவளின் அறைக்கு செல்ல, கதவு திறந்தேயிருந்தாலும் அனுமதி கேட்டு கொண்டு உள்ளே சென்றவன் மது ஜன்னல் பக்கம் வெறித்து பார்த்துக் கொண்டிருந்ததை பார்த்ததும் அவளருகில் வந்து அவள் தோளில் கைவைத்து தன் பக்கம் திருப்பினான். அவள் கண்களில் வைரத்துளியாய் கண்ணீரை கண்டு அவள் முகத்தை தன் கையில் ஏந்தினான்.

''ஏன் மது அழுகிறாய்... தாத்தா கேட்டதற்கு பதிலே சொல்லாமல் வந்துவிட்டாய். ஏன் இங்கிருக்க பிடிக்கவில்லையா?'' என்று கேட்கும் போதே இங்கிருந்து போக வேண்டும் என்று சொல்லி விடுவாளோ என்ற பயம் உள்ளுக்குள்ளே அரித்தது.

அவன் கேள்விக்கு மது பதிலொன்றும் சொல்லாமல் அவன் முகத்தையே பார்க்க, முகுந்துக்கும் அவளின் பார்வை கொஞ்சம் புரிந்தாலும் மதுவின் வாயால் சொல்லாமல் என்ன என்று அர்த்தம் செய்துகொள்வது என்று தவிப்புடன் அவளையே பார்க்க மது அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள் .

முகுந்துக்கு அவளின் செய்கை சொர்க்கத்தின் வாசப்படி திறந்து வைத்த மாதிரி இருக்க, ஆச்சர்யத்தின் உச்சத்தில் இருந்தவன் குனிந்து அவள் முகத்தை பார்க்க, மது வெட்கப்பட்டுக்கொண்டே மேலும் அவன் மார்பில் முகம் புதைத்துக்கொள்ள சந்தோஷ சிரிப்போடு அணைத்துக்கொண்டான் .

சற்று நேரம் கழித்து அவளை தன்னிடமிருந்து விலக்கி, ''மது நீ... என்னை...'' என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்திவிட, மது அவனை வெட்கத்துடன் நிமிர்ந்து பார்த்து, ''எஸ் முகுந்த்... ஐ வான்ட் யு... என்னால் உங்களை விட்டு போக முடியாது. தாத்தாவிடம் அன்று அப்படி சொன்னது உண்மை தான். ஆனால் இன்று என் மனம் முழுவதும் உங்களை வைத்துக்கொண்டு என்னால் எப்படி பிரிந்து போக முடியும்'' என்று மீண்டும் அவன் மார்பில் சாய்ந்துகொள்ள, முகுந்த் அவளை மனம் நிறைய சந்தோஷத்துடன் இறுக அணைத்துக் கொண்டான்.

மதுவும், அண்ணனும் தாத்தாவின் பேச்சில் தவித்துப்போனதை புரிந்துகொண்ட திலீப், ''இப்போ எதுக்கு தேவையில்லாமல் மதுவிடம் இப்படி கேட்டீங்க. அவள் இங்கே சந்தோஷமாக தானே இருக்கிறாங்க. இப்போ நீங்க கேட்டதை பார்த்தால் மது இங்கே தங்க வந்திருப்பது நாள் கணக்கில் தான் என்பதை நீங்களே ஞாபகப்படுத்துகிற மாதிரி இருக்கு'' என்றான் சற்று கோபமாக.

''திலீப் என்ன இது அதிகபிரசங்கதனமா பேசறே. தாத்தாவுக்கு தெரியாதா? எது எப்போ செய்யணும்'' என சுதிர் கடிந்து கொள்ள, ''இல்லை டாடி பாருங்க மது எப்படி கஷ்டப்படறாங்க'' என்று கோபத்துடன் முணுமுணுத்தான்.

''திலீப் கண்ணா, எனக்கு உன் ஆதங்கம் புரியுதுப்பா... எத்தனை நாள் மது அவள் படிப்பை விட்டு விட்டு இங்கேயிருக்க முடியும். அவள் சரி



என்றால் அவள் படிப்பை இங்கே தொடர ஏற்பாடு செய்யலாம். இன்னும் நிறைய விஷயங்களை அவள் பேரில் மாற்றவேண்டும். அதுக்கு தான் கேட்டேன். ஆனால் என் பேத்தி இப்படி வேதனைப்படுவாள் என்று எனக்கு தெரியாதே'' என்று அவனை சமாதானப் படுத்தியவர், மஞ்சுவிடம், 'நீ என்னம்மா சொல்கிறாய் ...' என்றதும்,

''மதுவின் முடிவு தான் என்னுடையதும். எனக்கு அவளின் சந்தோஷம் தான் முக்கியம். அவளுக்கு எதிரா எந்த முடிவும் எடுக்க மாட்டேன்'' என்று உறுதியாக சொன்னதும், அதற்கு மேல் அவர் எதுவும் பேசாமல் அமைதியாகிவிட, எல்லோரின் கண்களும் மாடிப்படி நோக்கியே இருந்தது...

சிறிது நேரம் கழித்து மாடியிலிருந்து இறங்கி வந்தவர்களின் முகம் சந்தோஷத்திலும் வெட்கத்திலும் தத்தளிக்க, ''மது இங்கேயே தங்க சம்மதிச்சிட்டா'' என்று சொல்லிக்கொண்டே அவள் கையை கோர்த்துக் கொள்வதை பார்த்ததும் எல்லோர் முகத்திலிருந்த மகிழ்ச்சி ஆச்சர்யமாக மாறியது.

அவர்களின் ஆச்சர்யத்தை கண்டு முகுந்த், ''ஆமா தாத்தா. நாங்கள் இருவரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புகிறோம்'' என்று சொல்லிவிட்டு மது முகத்தை குறும்பாக பார்க்க, அவன் எல்லோர் முன்னாலும் சொன்னதும் முகம் இரத்தமென சிவக்க, அவனிடமிருந்து கையை விடுவித்துக்கொண்டு மஞ்சுவின் மடியில் முகம் புதைத்துக்கொண்டாள்.

அவர்களின் காதல் விஷயம் தெரிந்து எல்லோர் முகத்திலும் ஆயிரம் வாட்ஸ் பல்ப் போட்ட மாதிரி

பிரகாசமாக மாற, ''கங்க்ராட்ஸ் அண்ணா...'' என்று திலீப் முகுந்த் கையை குலுக்கிவிட்டு, ''அப்பாடா எனக்கு அண்ணி வந்தாச்சு'' என்று துள்ளலாக சொல்வதை கேட்டு சுதிர்,

''உனக்கும் லைன் கிளியர் ஆகிடுச்சு இல்லையா?'' என்று சிரித்துக்கொண்டே அவனை சீண்ட அவரின் கேலி புரிந்து,

''நான் கொஞ்சம் சந்தோஷமா இருந்தா உங்களுக்கு பிடிக்காதே. அதற்குள் வேலி போடணும் ஏன்று ஆரம்பிச்சிடுவீங்களே. இருங்கப்பா அண்ணனே இப்போ தான் அந்த ஜெயிலுக்குள் போயிருக்கிறார். அவரின் அனுபவம் எப்படி இருக்கு என்று பார்த்துவிட்டு அப்புறம் கல்யாணத்தை பற்றி யோசிக்கிறேன்'' என்று சிரிப்போடு சொல்லிவிட்டு கண்ணடித்தான்.

முகுந்த் அவன் முதுகில் செல்லமாக தட்டி,''சும்மா இருடா வாலு'' என்று சந்தோஷமாக சிரித்தான்.மதுவுக்கு அவனின் கேலி இன்னும் முகத்தை சிவக்க வைக்க தலையை குனிந்து கொண்டு சிரித்தாள்.

மதுவின் சிரிப்பு பிரபாதேவிக்கு பூரிப்பை கொடுக்க அவரின் உடம்பையும் பொருட்படுத்தாமல் அவளருகில் வந்து, அவள் முகத்தை கையில் ஏந்தி, ''மது செல்லம், முகுந்த் சொல்றது உண்மையா கண்ணம்மா'' என்று ஆச்சரியத்தை அடக்க முடியாமல் கேட்டதும் மது வெட்கத்துடன் 'ஆமாம்' என்பதாக தலையசைத்தாள்.

''அப்போ இனிமே நீ எங்கள் கூடத்தான் இருப்பியா? அப்பப்பா கேட்கவே எவ்ளோ சந்தோஷமா



இருக்கு தெரியுமா?'' என்று அவளை முத்தமிட்டு உச்சி முகர்ந்தார்.

''சுதிர் அப்போ உடனே திருமண ஏற்பாடுகளை செய்துவிடலாமா? நீங்க மாப்பிள்ளை வீட்டுகாரர்கள். நாங்க பொண்ணு வீடு. அது தான் கேட்கிறேன்'' என்று பூபதி சுதிரை கேலி செய்ய .

சுதிர் சிரித்துவிட்டு, ''மாமா நல்லாவே ஓட்டறீங்க . நீங்க இந்த மாதிரி சந்தோஷமா இருக்கறது ரொம்ப நிறைவா இருக்கு'' என்று நெகிழ்ந்தவர், ''நீங்கள் கேலியாக கேட்டிருந்தாலும் சீரியஸா இருந்தாலும் என் பதில் இப்போ திருமணம் வேண்டாம்'' என்றதும் பிரபாதேவி மட்டும் பதறிப் போனார்.

''என்ன மாப்பிள்ளை சொல்றீங்க. உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கா?'' என கேட்டார்.

''அத்தை எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை, சொல்ல போனால் அதிக சந்தோஷம் தான். ஆனால் மது படிப்பு முடிய இன்னும் ஆறுமாதம் தான் இருந்தது. அதில் ஒரு மாதம் இங்கே வந்து தங்கிவிட்டாள். இன்னும் ஐந்து மாதம் இருக்கிறது. அந்த படிப்பை முடித்து பட்டம் வாங்கிய பிறகு திருமணத்தை வைத்துக் கொள்ளலாம்'' என்றதுமே எல்லோருக்குமே அவரின் யோசனை சரியென பட்டது.

மதுவின் படிப்பு தொடர்வது பற்றி பேச, ஐந்து மாத படிப்பு என்பதால் இங்கே காலேஜில் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள் என்பதால் அங்கேயே ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கி வீட்டிலேயே படித்து எக்ஸாம் அன்று கலந்துகொள்வது என்று முடிவெடுத்தார்கள்.

அதன் பிறகு எல்லோரும் கலகலப்பாக பேசிவிட்டு படுக்கச் சென்றார்கள்.

சந்தோஷத்தில் தூக்கம் வராது என்பதால் மது தோட்டத்திற்கு சென்று அன்றொரு நாள் அவள் அமுத அதே பெஞ்சிலே அமர்ந்தவளுக்கு அன்று இருந்த தன் மனநிலைக்கும், இன்று இருக்கிற மனநிலைக்கும் இருந்த வித்தியாசம் சிரிப்பை கொண்டு வர வாய்விட்டு சிரித்தாள்.

''என்ன மது தனியா அமர்ந்து சிரித்து கொண்டிருக்கிறாய்? என்னென்று சொன்னால் நானும் சிரிப்பேன் '' என்ற குறும்பான குரல் கேட்டு திடுக்கிட்டு திரும்பியவள் முகுந்தை பார்த்ததும், 'ஐயோ இவர் இருக்கிறது தெரியாமல் சிரித்துவிட்டேனே... இப்போது என்ன சொல்லி சமாளிப்பது' என்று சந்தோஷ திணறலோடு ஓரக்கண்ணால் முகுந்தை பார்த்தாள்.

அவள் பக்கத்தில் நெருங்கி பக்கத்தில் அமர்ந்துக் கொண்டே, ''என்ன மேடம் பதிலே சொல்லலை, ஏன் சொல்லக்கூடாத விஷயமா? பரவாயில்லை சொல்லுங்க, நான் அட்ஜஸ்ட் செய்துக்கிறேன்'' என்று வேண்டுமென்றே சீண்டினான்.

அவனின் சீண்டலில் அவளின் குறும்பு தலைதூக்க, ''இல்லை திலீப் சொன்னதை நினைத்தேன்... சிரித்தேன்'' என்று மாற்றி சொல்லிவிட்டு, ''ஆமாம் சார்க்கு என்ன திடீர்ன்னு இவ்வளவு தைரியம்... நேற்று வரைக்கும் தள்ளி அமர்ந்தவர் இன்று இப்படி இடித்துக் கொண்டு



உட்காருகிறீர்கள்'' என்று புருவத்தை தூக்கி உதட்டோரம் சிரிப்பில் துடிக்க கேட்டாள். ஆனால் முகுந்த் அருகில் அமர்ந்ததை மனதிற்குள் ரசித்துக் கொண்டுதானிருந்தாள்.

அவளின் முகம் பொய் சொல்வதை தெரிந்துகொண்டு, ''ம்ம்ம் அதுவா நேற்று வரைக்கும் நான் மட்டும் என் பார்பியை மனதில் வைத்துக்கொண்டு இருந்தேன். ஆனால் இன்று என் பார்பி மனதிலும் நான் வந்துவிட்டேன். அதன் பிறகு இந்த இடைவெளி எதற்கு?'' என்று அவளை மாதிரியே புருவத்தை தூக்கி குறும்பாக கூறியவனை இடைமறித்தாள்.

''வெயிட் முகுந்த், இதற்கு முன்னாலும் கூட என்னை பார்பி என்று அழைத்து இருக்கிறீர்கள், ஏனப்படி அழைத்தீர்கள்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டதும் உல்லாசமாக சிரித்துவிட்டு, அவள் கன்னத்தை ஒரு விரலால் வருடிவிட்டான்.

''ம்ம்... உன் நீல நிற காந்த கண்களும், சுருள் முடியும்..., உன் அழகான வட்ட முகமும் பார்ப்பதற்கு அசல் பார்பி பொம்மை போலவே இருப்பதால் உனக்கும் அந்த பெயரே வைத்துவிட்டேன். அதிலிருந்து உன்னை அந்த பெயரை வைத்து தான் என் மனதிற்குள் கூப்பிடுவேன்'' என்று அவள் காதருகில் லேசாக குனிந்து கிசுசிசுப்பாக கூறினான்.

மதுவிற்கு வெட்கத்தில் தன் முகம் சிவப்பதை தடுக்க முடியாமல் வேறு பக்கம் திருப்பி கொள்ள, முகுந்த் சிரித்துக்கொண்டே அவளை தன் பக்கம்

திருப்பி, ''இப்படி முகம் சிவப்பது இன்னும் ரொம்ப அழகா இருக்கு, யு லுக் சோ பியூட்டிபுல்'' என்று ரசனையுடன் கூறிவிட்டு, ''உனக்கு இன்னொன்று கூட காட்டணும்'' என்று அவள் கையை பிடித்து தன் அறைக்கு அழைத்துச் சென்றான்.

முகுந்த் பின்னாலிருந்து கண்ணை மூடியதும் மது கொஞ்சலாக சிணுங்க, ''ப்ளீஸ் மது கொஞ்ச நேரம்...'' என்றபடியே அவள் கண்ணை மூடியபடியே நடத்தி போய் அவன் கட்டில் பக்கத்தில் போய் நின்று ''இப்போ பார், எப்படி இருக்கு என்று நீயே சொல்...'' என்று அவள் கண்ணை மூடியிருந்த கையை விலக்கினான்.

சில வினாடிகள் எதுவுமே தெரியாமல் மசமசவென்றிருக்க, கண்ணை நன்றாக கசக்கிவிட்டு கொண்டு பார்த்தவளுக்கு, அலங்கார டேபிளின் மேல் தன்னைப் போலவே ஒரு உருவம் தலை வரை வீற்றிருக்க வியப்பில் கண்கள் விரிந்தன. அப்படியே அச்சு அசலா என்னை மாதிரியே இருக்கே! ஆச்சரியம் அகலாத பார்வையோடு அவனிடத்தில் திரும்பி, ''இது... இது... நீங்களா செய்தீர்கள் முகுந்த்?'' என்று கேட்டதும் அவன் கலாட்டாவாக சிரித்தான்.

''ஐயோ! இப்படியெல்லாம் செய்கிற அளவிற்கு நான் சகலகலாவல்லவன் இல்லைமா. ஏதோ கொஞ்சம் படம் வரைய தெரியும் அவ்வளவுதான் . நம் பண்ணையில் வேலை செய்கிற ஒரு தொழிலாளி இந்த மாதிரி பொம்மை செய்வதை பொழுதுபோக்காக வைத்திருக்கிறார். அவரை பற்றி கேள்விப்பட்டு உன்



படத்தை கொடுத்து செய்ய சொன்னேன். அவர் செய்தது தான் இது'' என்று அவளுக்கு விளக்கம் கொடுத்துக்கொண்டே அவள் தோள் வளைவில் முகத்தை வைத்துகொண்டு,

''உன்னை எப்போதும் பார்த்துக்கொண்டே இருக்கணும் என்று தான் அவரிடம் உன் உருவத்தை செய்து வாங்கினேன். பகலெல்லாம் பார்த்தாலும் இரவில் உன்னை பார்க்க முடியாது இல்லையா? அப்போது இந்த பொம்மையை பார்த்துக்கொள்வேன்'' என்று உருகி போய் சொன்னவனை, திரும்பி பார்த்தவளுக்கு எப்படி ரியாக்ட் செய்வது என்று தெரியாமல் சிறிது நேரம் அவன் கண்களோடு உறவாடிவிட்டு, எதிர்பாராத நேரத்தில் அவன் கன்னத்தில் பரவசத்துடன் தன் இதழ்களை பதித்தவள், வெட்கம் தாங்காமல் அவன் பிடியிலிருந்து நழுவி அவன் ரூமிற்கு ஓடிவிட்டாள்.

எதிர்பாராது கிடைத்த முத்தம் அவனை தன்வசமிழக்க செய்ய, ஒரு நிமிடம் இனிமையாக அதிர்ந்தவன், சுதாரித்து வெளியே வந்த போது சுதிரை பார்த்ததும் நின்றுவிட்டான்.

''நாளை காலையில் சென்னைக்கு போகணும் முகுந்த். திலீப்பிடம் என்னென்ன வேலைகள் இருக்கு என்று சொல்லிவிடு. அடுத்த வாரம் போர்ட் ஆப் டைரக்டர்ஸ் மீட்டிங் ஏற்பாடு செய்திருக்கிறேன். அதில் மதுவை இண்டர்நேஷனல் ஸீ புட் கம்பெனிக்கு எம்-டி யாக அறிவிக்கணும் என்று மாமா சொல்லியிருக்கிறார். அதற்கு தேவையானதை எல்லாம் திலீப்பிடம் ஏற்பாடு

செய்ய சொல். நாம் சென்னையிலிருந்து வந்ததும் எல்லோருக்கும் அழைப்பு கொடுத்திடலாம்'' என்று சொல்லிமுடித்தார்.

மதுவை கம்பெனி எம்-டியாக்க சந்தோஷமாக இருந்தாலும், 'படிப்பை முடிக்காமல் எப்படி? கம்பெனியை நிர்வாகம் செய்ய ஆரம்பித்தால் எப்படி படிப்பை நல்ல படியாக முடிக்க முடியும்?' என்ற கேள்வி அவனுள் எழுந்ததை அவனுள்ளே வைத்து கொள்ளாமல் அவரிடம் வெளியிட்டான் .

''அது பிரச்சனையில்லைப்பா, அவளை முதலில் அந்த பதவியில் உட்கார வைப்போம். அவளுக்கு தான் ஏற்கெனவே கொஞ்சம் சொல்லி கொடுத்திருக்கிறாயே, படிப்பு இல்லாத சமயங்களில் இன்னும் சொல்லிக்கொடு. அவள் படிப்பை பாதிக்காத வகையில் நாம் பார்த்துக்கொள்வோம். எக்ஸாம் முடிந்ததும் கம்பெனின் முழு பொறுப்பை ஏற்றுக்கொள்ளட்டும். நீயும் சப்போர்டிவா இரு'' என்று ஐயத்தை போக்கிவிட்டு, "நேரமாச்சு, நாளை காலையிலே சென்னை கிளம்பணும்'' என்று நாசுக்காக கை மறைவில் ஒரு கொட்டாவியை வெளியேற்றிக் கொண்டே மாடியிறங்கி சென்றதும் மதுவின் அறையை ஏக்கத்துடன் பார்த்துவிட்டு, அவள் முத்தம் தந்த இடம் குறுகுறுக்க கன்னத்தை தடவிக்கொண்டே புன்னகையுடன் படுக்கச் சென்றான்.

சுதிர் சொன்ன மாதிரியே அடுத்த நாள் நால்வரும் சென்னைக்கு சென்று மதுவின் கல்லூரி சேர்மனிடம் பேசி தங்கள் பிரச்சினைகளை புரியவைத்து அனுமதி



கேட்க, முதலில் மறுத்தவர் அவள் புத்திசாலி மாணவி என்பதை கருத்தில் கொண்டு அனுமதியை வழங்கியதோடு நில்லாமல், ''வீட்டில் தானே படிக்கிறோம் என்று அசட்டையாக இருக்காதே மது. உன் திறமை மேல் நம்பிக்கை இருப்பதால் தான் இந்த அனுமதியை உனக்காக கொடுக்கிறேன்'' என்று பெரிதாக அட்வைஸ் செய்தார்.

அடுத்த நாளிலிருந்து மது படிப்பிலே பிஸியாகிவிட, முகுந்த் அவளிடம் பேச ஆசைப்பட்டாலும் அவளின் படிப்பை தொல்லை செய்யக்கூடாது என்று ஒதுங்கியே இருந்தான்.

காலை வேளைகளில் படிப்பதும், மதியம் நேரம் அவன் கூடவே ஆபிஸ் சென்று கம்பெனி விஷயங்களை கற்று தேர்வதிலும் நேரம் செலவானது. படிப்பு தொடர்பான வேலை என்பதால் மதுவுக்கு சுவாரசியமாக இருந்தது. ஆபிஸ் விஷயம் என்று வரும் போது மதுவும் சரி, முகுந்தும் சரி தாங்கள் காதலர்கள் என்ற எண்ணம் மறைந்து வேலை கற்றுக் கொடுப்பதிலும், அதை கற்றுத் தேர்வதிலுமே மும்மரமாக இருந்தார்கள்.

நடு நடுவில் பீனா வந்து தொல்லை கொடுத்தாலும் அதை மது சட்டையே செய்யவில்லை... அவளை எம்-டி-யாக அறிவிக்கும் நாள் வந்ததும் அது வரை மதுவை அலட்சியமாக நினைத்திருந்த பீனா, அன்று தான் விஷயத்தின் தீவிரத்தை உணர்ந்தாள்.

நேரே மோகனிடம் சென்று, ''இப்போ விஷயம் அந்த பூனைக் கண்ணியை கம்பெனியில் உட்கார

வைக்கிற அளவிற்கு வந்துவிட்டது. நான் சொல்லும் போதெல்லாம் என்னை சும்மா இரு, இதெல்லாம் நிலைக்காது அவள் ஊருக்கு ஓடிவிடுவாள் என்று சமாதானம் செய்தீர்களே, இப்போ என்ன சொல்ல போகிறீர்கள்?'' என்று ஆத்திரத்தில் முகம் சிவக்க கத்தினாள்.

மோகனுக்கும் ஒன்றும் புரியவில்லை. அன்று வந்தவர்கள் நிலைக்க மாட்டார்கள் என்று அசட்டையாக பீனாவுக்கு பதில் சொன்னவர், இன்று நிலைமையே வேறு எனவும் அவரும் திணறித்தான் போனார்.

அவர் அமைதியாக யோசிப்பதை பார்த்து, ''என்ன உங்களுக்கு மூளையே மறத்துவிட்டதா? அன்றே, எப்படியாவது அவளை இங்கிருந்து கிளப்ப ஏற்பாடு செய்யுங்கள் என்றேன். ஐயோ நாம் நினைத்தது எதுவும் நடக்காது செய்துவிட்டீர்களே, உங்களை என்ன செய்வது?'' என தாம் தூமென்று குதித்தவளை மோகன் பிடி கிடைத்த தெம்புடன், அவளை பார்த்து சிரித்தார்.

அவரின் சிரிப்பு அவளுக்கு மேலும் எரிச்சலை ஊட்ட, அவரை உறுத்து விழிக்க, அவளின் முறைப்பை லட்சியம் செய்யாமல், ''பீனு இப்போ எதுக்கு குதிக்கிறே? முகுந்த் உனக்கு தான். கவலைப்படாதே'' என்று அமர்த்தலாக சொன்னார்.

அதைக் கேட்டதும் ''முகுந்த் எனக்கெப்படி கிடைப்பான்? நான் சொன்ன விஷயத்தை கேட்டு மறை கழண்டு விட்டதா உங்களுக்கு, இன்று கம்பெனியில் எம்டியாக அமர்கிறாள். அப்புறம் இன்னும் நாலே மாதத்தில் அவள் படிப்பு முடிந்த பிறகு கல்யாணம் தான்



செய்துவைக்கும் அந்த கிழம், அதுவரைக்கும் பொறுமையாக இருந்து வேடிக்கை பார்க்கப் போறீங்களா? இல்லை அவள் கல்யாணத்திற்கு என்னை மணப்பெண் தோழியாக போ என்று சொல்ல போறீங்களா?'' என்று படபடவென்று பொரிந்தாள்.

''பீனா கண்ணு, நான் உன்னுடைய அப்பா, அப்படியெல்லாம் செய்வேனா? உன் ஆசை எனக்கு தெரியாதா? கம்பெனி எம்டியாக தானே அமர போறா போகட்டும் விடு. ஆனால் உன் திருமணம் முகுந்தோடு தான். சோ பீ ஹாப்பி'' என்று உறுதியாக சொல்லி அவள் முதுகை தட்டிக் கொடுத்து அமைதிப்படுத்த முயன்றார்.

''ஆமா என்ன செய்ய போறீங்களோ? உங்களுக்கு ப்ளேடு மட்டும் தானே போட தெரியும். விட்டால் ரத்தம் வர அளவிற்கு அறுத்து தள்ளுவீங்க. அதனாலே அந்த முகுந்த் உங்களோடு என்னையும் பார்த்தால் காத தூரம் ஓடுகிறான்'' என்று எரிச்சலோடு முணுமுணுத்தாள்.

'இப்போது சொல்ல மாட்டேன் என்ன செய்ய போகிறேன் என்று. என் பெண்ணிற்கு மட்டும் அந்த முகுந்த் கிடைக்கவில்லை என்றால் என்ன வேண்டுமென்றாலும் செய்ய மாட்டேனா என்ன?' என்று மனதினுள் கருவிகொண்டு, ''டோன்ட் வொர்ரி செல்லம், நீ எங்கோ பியூட்டிபார்லர் போகணும் என்று சொன்னியே, போயிட்டு வா இந்த விஷயத்தை நான் பார்த்துகொள்கிறேன்'' என்று அவளுக்கு நம்பிக்கையை கொடுக்க முணுமுணுத்துகொண்டே சென்றாள்.

அவள் இந்த பக்கம் சென்றதும் பூபதியின் அரண்மனைக்கு கிளம்பியவரை அவர் சகதர்மிணி இடைமறிக்க, ஏற்கெனவே எரிச்சலில் இருந்த மோகன் இன்னும் எரிச்சல் அதிகமாகி, ''வெளியே கிளம்பும்போதே வழியை மறிக்கிறாயே, போற காரியம் உருப்படுமா...?'' என்று எரிந்து விழுந்தார்.

''ம்ஹூம் போற காரியம் நல்லதா இருந்தால் நீங்க கேட்கிறது சரியான கேள்வி... ஒரு குடும்பத்தில் போய் குட்டையை குழப்ப போகிற உங்களுக்கு எதுக்குங்க சகுனம் எல்லாம். இதை கேட்கும் போது எனக்கு சாத்தான் வேதம் ஓதுகிற மாதிரி இருக்கு'' என்று வெறுப்பாக சொன்னவர், ''பீனா தான் அறிவில்லாமல் குதிக்கிறாள் என்றால் நீங்களும் அதுக்கு ஒத்து ஊதறீங்க. எனக்கு ஒரு விஷயம் புரியலை. மது முகுந்தோட அத்தை பெண். அதனால் பூபதி ஐயா அவங்க ரெண்டு பேருக்கும் திருமணம் செய்து வைப்பார்... வைக்காம போகிறார். அதில் உங்களுக்கு என்ன நஷ்டம் வந்துவிட்டது என்று ரெண்டு பேரும் இப்படி பேயாட்டம் ஆடறீங்க. நீங்க என்ன அவருக்கு பிள்ளையா? இல்லை நான் தான் அவருடைய பெண்ணா? நம் பெண்ணை முகுந்துக்கு கட்டி வைக்க உரிமையோடு கேட்கிறதுக்கு'' என்றார் கடுமையாக.

அவரின் கேள்வியில் அப்பட்டமான உண்மை இருந்தாலும் சாத்தான் அதை ஏற்றுக்கொள்ளுமா? அந்த நிலையில் தானே மோகனின் புத்தி இருக்கிறது.

''எங்கள் விஷயத்தில் தலையிடாதே. என் பெண்ணுக்கு யார் மாப்பிள்ளையா வரணும் என்று நான்



முடிவு செய்து கொள்கிறேன். உன் அட்வைசை எல்லாம் மூட்டை கட்டி பரணில் போட்டு வை'' என்று அலட்சியமாக கூறிவிட்டு வெளியே சென்றார்.

# 13

பதினோரு மணி அளவில் டைரக்டர்ஸ் போர்டு மீட்டிங் இருந்ததால், மது காலையிலே கிளம்பி பூபதியுடன் கோயிலுக்கு போய்விட்டு கம்பெனிக்கு வந்தாள். பூபதி மதுவை எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்து புது எம்-டியாக அறிவித்ததும், அவர்கள் கைதட்டி மதுவை உற்சாகப்படுத்த, எல்லோருக்கும் கைகூப்பி நன்றி சொன்னாள்.

முகுந்த் ஒவ்வொருத்தராக அறிமுகம் செய்து வைத்து எம்டி சீட்டில் அமர வைத்து, ''பெஸ்ட் விஷஸ் மிஸ் மதுவதனா'' என்று கைகுலுக்க, அதை தொடர்ந்து எல்லோரும் கை குலுக்கி வாழ்த்து சொன்னார்கள். எல்லோரும் சென்ற பிறகு பூபதியும் அவனை பார்த்துக்கொள்ள சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

முகுந்த் டேபிளில் சாய்ந்து நின்று புன்னகையுடன் ஒரு புருவத்தை தூக்கி, ''என்ன மிஸ் மதுவதனா...'' என்று நீட்டி முழக்கி அழைத்து, ''இப்போ எம்.டியாகிட்டீங்க. அந்த வேகத்தில் என்னை மறந்துடமாட்டீங்களே'' என்று சிரிப்போடு அவளை சீண்டினான்.

சீட்டில் கொஞ்சம் சங்கோஜத்துடன் அமர்ந்திருந்த மது அவனின் கேலியில் கூச்சம் இன்னும்

அதிகமானாலும் அதை முகத்தில் காட்டாமல், வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு முகத்தை முடிந்தவரை இயல்பாக வைத்து, "ம்ம்ம் பார்க்கலாம், இப்பவே சொல்ல முடியாது" என்றாள் அமர்த்தலாக.

அவளின் பதிலுக்கு பணிவாக கையை கட்டிக்கொண்டவன், "சரிங்க மேடம் நீங்க சொன்னால் சரி தான்" என்று போலியான மரியாதையோடு சொன்னதும் அதற்கு மேல் தாங்க முடியாமல், சீட்டிலிருந்து எழுந்து வந்து, "யுமை நாட்டி " என்று செல்லமாக அவன் நெஞ்சில் இரண்டு கைகளாலும் குத்த அவள் கைகளை பிடித்துக்கொண்டவன், அவள் கண்களை கூர்ந்து பார்த்தான்.

"மது இந்த சந்தோஷமான நேரத்தில் எல்லோருக்கும் நான் ட்ரீட் கொடுத்தேன். நீ எனக்கு எதுவும் தரமாட்டியா?" என்று குரலில் ஏக்கத்தை சுமந்து கேட்டான்.

அவன் மார்பில் சாய்ந்து, "நிச்சயம் முகுந்த் உங்களுக்கில்லாததா? ஆனால் இப்போ இல்லை. வீட்டில் போய் தருகிறேன்" என்று கண்ணடித்தாள்.

மதியம் சாப்பிட சுதிர் வீட்டுக்கு செல்ல, முகுந்த் மதுவை வெளியே அழைத்துப் போவதாக அவரிடம் சொல்லிவிட்டு தாத்தாவை தேடிச் சென்றான்.

சிரித்துக்கொண்டே அனுமதி தந்தவர், மதுவிடம் "ரெண்டு பெரும் வெளியே போவதாக ப்ளான் இருக்குனு முகுந்த் சொன்னான். உனக்கு நான் சொல்ல வேண்டியதே இல்லை. வெளியே போய்விட்டு சீக்கிரம் திரும்பிடுங்க. உன் எக்ஸாம்முக்கு இன்னும் நாலு



மாதம் தான் இருக்கு. படிப்பில் ந்து உன் கவனம் சிதறக் கூடாது" என்று மென்மையாக அறிவுறுத்த, புன்னகையோடு ஏற்றுக்கொண்டாள்.

அவர் சென்றதும் முகுந்த் அவளை ஒரு பெரிய ரெஸ்டாரெண்டிற்கு அழைத்துச் சென்றான். கார் நின்றது கூடத் தெரியாமல் மது சுதிர் சொன்னதையே யோசித்து கொண்டு வர, முகுந்த் சொடக்கு போடவும் தான் தன்னிலைக்கு வந்தாள்.

கார் நின்ற இடத்தை சுற்றும் முற்றும் பார்க்க அது ஒரு ரெஸ்டாரெண்ட் என்று தெரிந்ததும் கேலியாக, "ஏன் முகுந்த் நீங்க கேட்ட ட்ரீட்டை இந்த ஹோட்டலில் கொடுத்தால் போதுமா?" என்று குறும்புடன் சிரித்துக்கொண்டே கேட்டாள்.

சிரித்துவிட்டு, "ஹே பார்பி இது நான் உனக்கு கொடுக்க போகிற ட்ரீட். நீ எம்-டியானதற்கு. உன் ட்ரீட் தான் வீட்டில் தருகிறேன் என்று சொன்னாயே. நீ கொடுக்க போகிற ட்ரீட் ஹோட்டலில் கிடைக்குமா என்ன?" என்று அப்பாவியாக முகத்தை வைத்துகொண்டு கேட்டதும் அவன் முதுகில் ரெண்டு அடி வைக்க, சிரித்துக்கொண்டே உள்ளே அழைத்து சென்றான்.

மெனு ஆர்டர் கொடுத்துவிட்டு காத்திருந்த சமயம் மது முகுந்திடம் மெயில் செக் செய்யணும் என்று அவன் லாப்டாப்பை வாங்கி திறந்தவளுக்கு, அதில் அவளுடைய படம் போர்ட்ரைட் செய்யப்பட்டு இருந்ததை பார்த்ததும் ஆச்சரியம் தாங்கவில்லை. முதல் சந்திப்பிலே அவன் மனதில் நாம் இந்த அளவிற்கு

சிம்மாசனம் போட்டு அமர்ந்துவிட்டோமோ என்ற எண்ணம் தான் எழுந்தது.

அதற்கு மேல் மதுவால் எதுவும் பேச முடியாமல் ஆயாசத்திலே மூழ்கிவிட, சாப்பிட்டபின் அவளை படகு வீட்டுக்கு அழைத்துப்போனான். அவளது இடுப்பில் கைபோட்டு வளைத்துக்கொள்ள ஏற்கெனவே அவன் அன்பில் கற்பூரமாக கரைந்து கொண்டிருந்தவள், கொஞ்சம் கொஞ்சமாக நெகிழ்ந்து போய் அவன் தோளில் சாய்ந்துகொண்டாள்.

மது சென்னையில் நிறைய முறை போட் கிளப் சென்று படகு சவாரி செய்திருந்தாலும், வீடு மாதிரியான அமைப்பில் சென்றதில்லை. இனிமையான சூழ்நிலையில், அதுவும் மனதிற்கினிய காதலனின் வலிமையான கரங்களில் சிக்குண்டு பயணம் செய்வது சுகானுபவமாக இருக்க கண்களை மூடி ரசித்துக்கொண்டிருந்தாள்.

முகுந்த் ஒவ்வொரு இடமாக விளக்கி கொண்டிருந்தவன் அவளிடமிருந்து பேச்சே இல்லை என்றதும் தன் தோளில் சாய்ந்திருந்தவளை திரும்பி பார்த்தான். அந்த நெருக்கத்தில் அவளின் முகம் பால் நிலாவாக ஜொலிக்க, லேசாக துடித்துக்கொண்டிருந்த அவளது சிவந்த இதழ்கள் அவனை சுண்டியிழக்க அதற்கு மேலும் தாங்க முடியாமல் அவளது இதழை சிறைபிடித்தான்.

உலகமே இயங்காதது போல தன்னிலை மறந்திருந்த இருவரும் சுயநினைவிற்கு திரும்ப சிறிது நேரம் பிடித்தது. இதழ்களின் நீண்ட சங்கமத்திற்கு



பிறகு... மயக்கம் கலைந்த மது முதலில் தன்னை சுதாரித்துக் கொள்ள, அவனிடமிருந்து விலகியவளின் முகம் இரத்தமென சிவக்க படகு வீட்டின் உள்ளே ஓடிவிட்டாள்.

இது முதல் முத்தம் என்பதால் மனம் அவள் வசம் வராமல் அடம்பிடிக்க, ஓடையிலிருந்து தண்ணீரை வாரி முகத்தில் அடித்துக் கொண்டாள். அப்படியும் இதயம் தாறுமாறாக துடிக்க முகத்தை இரு கைகளாலும் அழுந்த மூடிக்கொண்டு அமர்ந்துவிட்டாள்.

முகுந்துக்கும் இது தான் முதல் அனுபவம் என்பதால் அவனுக்குள் சிலிர்த்து இனிதாக உறைய , தன்னை மீட்டுக் கொள்ள சிறிதுநேரம் பிடித்தது. அந்த முத்தம் தந்த இனிமையை ரசித்துகொண்டே புன்னகையுடன் தலைமுடியை கோதிக் கொண்டு மதுவை தேடி வந்தான்.

முகத்தை மூடி அமர்ந்திருந்தவளின் கையை விலக்கியவன், அவள் முகம் சிவந்துகிடப்பதை பார்த்து ரசனையுடன் ஒற்றை விரலால் வருட, மதுவின் தளிர் மேனி பனியில் நனைந்த மலராய் சிலிர்த்தது. அவன் கையை மென்மையாக விலக்கிவிட்டு எங்கே அவன் முகத்தை பார்த்தால் தன் வசம் இழந்துவிடுவோமோ என்ற லேசான பயத்தில் அவனை பார்க்காமலே, ''போகலாம் முகுந்த்...'' என்று ரெடியானாள்.

வீட்டிற்குச் சென்றவளால் யாரிடமும் பேச முடியாமல் காதலனின் முதல் முத்தம் அவளை ஊமையாக்க, தன் அறைக்கு சென்று சோபாவில் ரோபோ மாதிரி அமர, முகுந்த் கீழே எல்லோரிடமும்

பேசிவிட்டு மாடிக்கு வர, மதுவின் அறை திறந்திருப்பதை கண்டு தட்டிவிட்டு உள்ளே சென்றவன் கண்ணை மூடியபடி அமர்ந்திருந்த மதுவை மென்மையாக அழைத்தான்.

அவனின் அழைப்பில் சிப்பியாய் இமைகள் திறக்க முகுந்தை அருகாமையில் கண்டதும் தன்னை மறந்து அவன் முகத்தையே பார்த்தாள் . சந்தன கலரில் வசீகரமான முகமும், பார்ப்பவர்களை கவர்ந்திழுக்க கூடிய காந்த கருவிழிகளும், ஆண்மைக்கே உரிய அடர்த்தியான மீசையும், கைவிரல்கள்களை அளையத் தூண்டும் கைக்கு அடங்காத முடியும், அசாத்தியமான உயரமும், அழுத்தமான முகவாய் என்று ஒவ்வொன்றாக அவள் பார்வையால் அளவிட, முகுந்த் அவள் கண்களால் எடை போடுவதை பார்த்து புருவத்தை வில்லாக வளைத்து என்னவென்று பார்வையாலே கேட்டான்.

அவனின் ஊடுருவும் பார்வையை தாங்க முடியாமல் தன் வசம் இழந்து அவனை இறுக்கி அணைக்க, முதலில் முகுந்துக்கு ஒன்றும் புரியாமல், '' மதும மது... ' என்று அழைக்க அவளின் பெண்மை அவனிடம் அடைக்கலம் தேடி கழுத்து வளைவில் முகம் புதைத்துக்கொண்டாள். அவளிடமிருந்து பதில் வராமல் போகவே பூமாலையாய் தன் மேலே சாய்ந்தவளை அவனது கைகளும் அணைத்துக்கொண்டன.

சிறிது நேரம் கழித்து அவளை விலக்கி ''ஹே மது, உன் மனசு எனக்கு புரியுதுடா, ஆனால் நீ முதலில்



நல்லா படிக்கணும். உன் ஹெச்.ஓ.டி -சொன்னதை மறக்காதே. 'ஐ அம் சாரி'. நானும் உன் உணர்ச்சிகளோடு விளையாடிவிட்டேன். உன் படிப்பு முடியற வரைக்கும்... என்னால் உனக்கு எந்த தொல்லையும் வராது. ப்ராமிஸ்'' என்று ஆழ்ந்த குரலில் உறுதியாக சொன்னான். அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டவன் திரும்பி செல்ல எத்தனிக்க மது உணர்ச்சி மிகுந்த முகத்தோடு அவன் கையை பிடித்தாள்.

''தேங்க்ஸ் எ லாட் முகுந்த்'' என்று அவன் முகத்தை பார்க்காமலே மெதுவான குரலில் சொல்ல, சிரித்துக்கொண்டே, அவள் கன்னத்தில் மெதுவாக தட்டிவிட்டு கதவை சாத்திவிட்டு சென்றான். அவளையுமறியாமல் இதழ்களில் வெட்கச் சிரிப்பு ஒன்று எட்டிப்பார்க்க தன்னை மீட்டுக்கொண்டு, குளித்துவிட்டு படிக்க ஆரம்பித்தாள்.

அவளுடைய நாட்கள் படிப்பு , கம்பெனி என்று கழிய, முகுந்த் அவன் சொன்ன மாதிரியே மதுவிடம் சீண்டாமல், எந்த விதத்திலும் அவள் கவனத்தை திசை திருப்பாமல் பார்த்துக்கொண்டான். மது புரியாத பாடங்களை மஞ்சுவிடம் கேட்டு படித்தாலும் அவருக்கே தெரியாத பகுதிகளை பற்றி தெரிந்துகொள்ள முகுந்த் அந்த ஊரில் அவனுக்கு தெரிந்த விரிவுரையாளர் மூலம் ஏற்பாடு செய்தான்.

இதற்கு நடுவில் ஒரு நாள் பீனா வழக்கம் போல் பிரபாதேவியிடம் தன் அலப்பறையை எடுத்துவிட, மது வருகிற வரைக்கும் பீனாவின் அலட்டல் பேச்சு, நடை உடை பாவனை இதில் எல்லாம் வித்தியாசம் தெரியாத

பிரபாதேவிக்கு மது வந்த பிறகு அவளின் பழகும் தன்மை, அமைதி, தேவையான அளவுக்கு மட்டுமே பேச்சு என்பதையெல்லாம் பார்க்கப் பார்க்க பீனாவின் அலட்டல் எரிச்சலை தர ஆரம்பித்திருந்தது.

அன்றும் அவள் தனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை என்ற ரேஞ்சில் பேசிக்கொண்டிருந்தாள். "போதும் பீனா, எப்போது பார்த்தாலும் ஒரே அலட்டலா பேசிட்டு இருக்கியே, எங்க மதுவை பார், அவள் இங்கு வந்து கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் ஆகப்போகிறது. இதுவரைக்கும் அவள் இந்த மாதிரி பேசி நான் கேட்டதே இல்லை. அப்படியே தெரிந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொண்டிருக்க மாட்டாள். இப்போது கம்பெனியையும் கவனித்துகொண்டு, தன் படிப்பையும் தொடர்கிறாள். புத்திசாலி பெண். நீ என்னடாவென்றால் எப்போது பார்த்தாலும் ஊர் சுற்றிக்கொண்டே இருக்கிறாய். உன் அப்பா கம்பெனியையாவது போய் பார்த்துக்கொள்ளலாம் இல்லையா?'' என்று அறிவுரை கூறினார்.

அவரின் அறிவுரை வேப்பங்காயாய் கசக்க முகத்தை சுளித்து, ''என்ன பேத்தி மேல் பாசம் பொங்குது. பேத்தி வந்தவுடன் என் பேச்சு உங்களுக்கு அலட்டலா இருக்கா? முதலில் என்னை தான் கண்ணு, செல்லம் என்று கொஞ்சுவீர்கள் அதெல்லாம் மறந்துபோச்சா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

''என் பேத்தியின் அருமை புரியாமல் உன்னை பற்றி நினைத்து சந்தோஷப்பட்டேன். ஆனால் என் பேத்தியை பற்றி தெரிந்தபிறகு தான் உன் பேச்சு எப்படி



இருக்கிறது என்று எனக்கு புரிகிறது'' என்ற அவர்களின் வாக்குவாதத்தின் நடுவே மோகன் வந்தார்.

'உங்க பேத்தியின் பெருமையெல்லாம் இருக்கட்டும்... பீனாவுக்கும், முகுந்துக்கும் திருமணம் செய்துவைப்பதாக சொன்னீர்களே... அது எப்பொழுது?'' என்று வெகு சாதரணமாக கேட்டார்.

பிரபாதேவி அப்பட்டமாக அதிர்ந்து, 'ஏதோ என் மருமகள் மேலிருந்த வெறுப்பில் அன்று இவர்கள் இருவருக்கும் திருமணம் செய்துவைக்கிறேன் என்று சொன்னேன்... ஆனால் இன்று என் பேரனுக்கு என் மகன் வயிற்று பேத்தி இருக்கும் பொழுது நீ கேட்பதெல்லாம் நடக்காது...' என்றவரின் பேச்சை காதிலே வாங்காமல்,

"இந்த சாக்கெல்லாம் எனக்கு வேண்டாம்... நீங்கள் சொன்னதை நான் செய்தேன்... அதே மாதிரி நான் கேட்டதையும் நீங்கள் நிறைவேற்றியே ஆகவேண்டும்...'' என்றவரை இடைமறித்து, "இதை நீயும் நானும் முடிவு செய்ய முடியாது மோகன்... என் பேரனுக்கு மதுவை தான் பிடித்திருக்கிறது...உன் பெண்ணை அவனுக்கு பிடிக்கவில்லை... இதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது... பல தொழிலை நிர்வகிக்கிறவனிடம் இவளைத் தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று சொல்ல முடியுமா என்னால்... இதெல்லாம் நடக்கிற காரியமா...?'' என்றார் பரிதாபமாக.

"அப்போ என் பெண்ணின் நிலைமை...? நீங்கள் கொடுத்த வாக்குறுதி...? இதற்கெல்லாம் என்ன பதில்

சொல்ல போகிறீர்கள்...?' என்று மீண்டும் தொடங்கின இடத்திலேயே வந்து நின்ற மோகனுக்கு, "நீ உன் பெண்ணிற்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்துக்கொள்... என்னால் ஒன்றும் செய்ய முடியாது...' என்று எரிச்சலும் அலட்சியமும் கலந்து கூற, மோகனின் முகம் சிவந்தது.

"ஒ... பழசெல்லாம் மறந்து போச்சு போலிருக்கு... அதுதான் பதிலும் அலட்சியமாக வருது... உங்கள் தேவைகள் பூர்த்தியானதும் என்னை கறிவேப்பிலை மாதிரி அலட்சியமாக தூக்கிப்போட நினைக்கிறீர்களா? சரி... நான் எங்கே பேசணுமோ அங்கே பேசிக் கொள்கிறேன்... வா பீனு..." என்று எழுந்து செல்ல பிரபாதேவிக்கு சர்வமும் பதறிப்போனது.

"உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தரேன்... தயவுசெய்து யாரிடமும் சொல்லிவிடாதே..." என்று நிலைகுலைந்து கெஞ்ச, கொஞ்சமும் மசியாமல், "யாருக்குவேண்டும் உங்கள் பணம்... எனக்கு தேவை என் பெண் உங்க வீட்டு மருமகளாக வரவேண்டும். நீங்க இவ்வளவு தூரம் கெஞ்சுவதினால் உங்களுக்கு ஒரு சாய்ஸ் தருகிறேன். என் பெண் இந்த வீட்டுக்கு மருமகளா வரணும். அவ்வளவு தான். அதனால் முகுந்த் இல்லைவிட்டால் என்ன திலீப் இருக்கிறானே. அவனுக்கு கட்டிவைக்க ஏற்பாடு செய்யுங்கள். உங்களுக்கு ஒரு வாரம், இல்லையில்லை ஒரு மாதம் டைம் கொடுக்கிறேன். நிதானமாக பேசி எனக்கு ஒரு நல்ல முடிவு சொல்லுங்கள். இல்லையென்றால் என் முடிவு மோசமாக இருக்கும்" என்று மிரட்டிவிட்டு



அங்கிருந்து பீனாவை அழைத்துக்கொண்டு அகன்றார்.

பயத்துடன் சிறிய மகள் பல்லவியை போனில் அழைக்க அவர் இப்போதைக்கு வர முடியாது என்று சொல்லிவிட பிரபாதேவி நிலைகொள்ளாமல் தவித்தார். யாரிடமும் தன் திருட்டுத்தனத்தைச் சொல்லவும் முடியாமல், முழுங்கவும் முடியாமல் திருடனுக்கு தேள் கொட்டியதை போல விழித்துக்கொண்டிருந்தவரின் மனஉளைச்சல் யாருக்கும் புரியவில்லை.

நாட்கள் பறந்தோட, மதுவுக்கு எக்ஸாம் நெருங்கிவிட முகுந்தும் சுதிரும், அவள் ஸ்தானத்தில் இருந்து கம்பெனியை பார்த்துக் கொண்டார்கள். மதுவை எக்ஸாம் எழுத சென்னைக்கு அழைத்து சென்றவன். சுஸான் வீட்டில் விட்டுவிட்டு, பிரிய மனமில்லாமல், அவளை கட்டியணைத்து முத்தமிட வேண்டும் என்ற வேகத்தை அடக்கி வெறுமே, 'பெஸ்ட் ஆப் லக்..." என்று கட்டை விரலை தூக்கி காட்டிவிட்டு கிளம்ப மது அவனுக்கு ஏக்கப் பார்வையுடன் விடை கொடுத்தாள்.

மது இல்லாத வீடு வெறுமையாக இருக்க அவளிடம் பேச ஆசையிருந்தாலும் அவளை தொல்லை செய்யக் கூடாது என்று போனில் கூட அழைக்காமல் இருக்க அவனை தவிர மற்றவர்கள் பேச மதுவுக்கு முகுந்த் மேல் கோபம் வர ஒரு நாளைக்கு நூறு தடவை மனதில் அர்சித்தாள். கடவுளை கூட அந்தளவுக்கு அர்ச்சனை செய்திருக்க மாட்டாள். ஒருவழியாக எல்லா பரிட்சையும் முடிந்து வீடு திரும்பிய அன்று கூட முகுந்த் ரிசீவ் செய்ய வராததால் அவன் மீது கோபம்

பன்மடங்காக பெருக வீட்டிற்கு சென்றவள் யாரிடமும் பேசாமல் தன் ரூமிற்கு சென்று அடைந்து கொண்டாள்

மகளின் கோபம் புரியாத மஞ்சு பதட்டத்துடன் சுதிரை நோக்கியதும், அவளின் கோபம் பற்றி கூறி கலாட்டாவாக சிரிக்க மஞ்சுவின் மனம் நிம்மதியடைய அவருக்கும் சிரிப்பு வந்தது. அந்நேரம் முகுந்த் உள்ளே நுழைய, ''இப்போ ஹீரோ வந்தாச்சு... இனிமே ஹீரோயின் கோபம் போயிடும்...'' என்று பாரதியிடம் கண்ணடித்து சொல்லி சிரித்தார்.

அவரின் கேலிக்கு சிரித்த பாரதி, "வர வர அவனை கேலி செய்வதே உங்களுக்கு வேலையா போச்சு... போய் குளிச்சிட்டு வாங்க..." என்று விரட்ட, மஞ்சு மனம் நிறைந்த சிரிப்புடன் அங்கிருந்து நகர்ந்தார்.

மது வந்துவிட்டாள் என்பதை சுதிரை கண்டதுமே புரிந்துகொண்டவன், அவளை தேடி ரூமிற்கு செல்ல கோபத்துடன் கண்மூடி படுத்திருந்தவளின் பிடிவாதமான முக பாவனையை ரசித்துவிட்டு குனிந்து அவளின் கன்னத்தில் தன் இதழ்களை பதிக்க, தூக்கிவாரி போட எழுந்தவள் முகுந்தை கண்டதும் கோபத்துடன் ஜன்னல் பக்கம் எழுந்து செல்ல, அவளின் கையை பிடித்து திருப்பி, ''சாரிடா செல்லம்..." என்று அவள் முகத்தில் விழுந்த கூந்தலை ஒதுக்கிக் கொண்டே சொல்ல, அவன் கையை தட்டிவிட்டு உஷ்ணமாக முறைத்தாள்.

அவளின் முறைப்பை பார்த்து பயந்தவன் போல், ''ஐயோ கண்ணகி மாதிரி முறைக்காதேமா, உன் அன்பு



காதலன் நான் பஸ்பமாகிவிட்டால் உன் நிலைமையை யோசித்துப் பார்த்தாயா?'' என்று இதழ்களில் உறைந்திருந்த குறும்பு புன்னகையுடன் அவளை அணைக்க முயற்சி செய்தபடியே கூறினான். அவனின் கேலி இன்னுமும் மதுவுக்கு கோபத்தை அதிகமாக்க அவன் மார்பில் கைவைத்து தள்ளிவிட்டாள்.

"பெரிய அன்பு காதலன், சும்மா பேச்சுக்கு மட்டும் தான் போலிருக்கிறது. அன்பு காதல் எல்லாம்'' என்று பழிப்பு காட்டிவிட்டு, ''அது தான் நான் சென்னையில் இருக்கும் போது தினமும் போன் செய்து பேசினீர்கள் போலிருக்கு'' என்று நக்கலாக கோபம் மாறாமலே கூறினாள்.

அவளை பின்னாலே இருந்து அணைத்து அவள் காதோரத்தில் முத்தமிட்டுக் கொண்டே, ''உனக்கு போன் செய்தால் அப்புறம் இந்த மாதிரி எல்லாம் செய்ய வேண்டும் என்று ஆசை வந்து என்னை பாடாய் படுத்துமே பார்பி'' என்று கிறங்கிய குரலில் கூற அவனின் அணைப்பில் ஏற்கெனவே இளகிக் கொண்டிருந்தவள், அவனின் கிறங்கிய குரலும், அவன் முத்தமிட்ட இடமும் கூச அவளின் கோபம் இருந்த இடம் தெரியாமல் பறந்தது. ஆனாலும் கஷ்டப்பட்டு கோபம் இருக்கிற மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு அவன் பக்கம் திரும்பினாள்.

அவன் கண்களில் தெரிந்த அதீதமான காதல் அவளுக்குப் புரிந்தாலும் விடாமல், ''நான் எவ்வளவு ஆசையாக உங்கள் போனை எதிர்பார்த்தேன் தெரியுமா? ஆனால் நீங்கள் என்னை மறந்துவிட்டீர்கள் அப்படி

தானே...'' என்று குற்றம் சாட்டும் குரலில் அவனை நிமிர்ந்து பார்க்காமல் அவன் இரவு உடையின் பட்டனை திருகிக் கொண்டே கேட்டாள்.

அவளின் ஏக்கத்தை புரியவைக்க உள்ளுக்குள் சந்தோஷ அலை பொங்க, ''நீ சொல்கிற மாதிரி எல்லாம் இல்லை மது. அன்று போட் ஹௌசில் நான் தொட்டதும் நீ உன் உணர்ச்சிகளோடு போராடியதை பார்த்ததிலிருந்து உன்னை எக்ஸாம் நேரத்தில் பேசி தொல்லை செய்யக் கூடாது என்று தான் போன் செய்வதை தவிர்த்தேன்...' என்றதும் அதுவரை இருந்த கோபமெல்லாம் காற்றில் அடித்த சருகு போல பறந்து விட அவன் மார்பில் சாய்ந்து கொண்டவளை அணைத்துக்கொண்டு பரிட்சையை பற்றி விசாரித்தான்.

அவனின் கேள்விக்கு பதில் கூறியதும், 'இன்னும் இரண்டு நாளில் நிச்சயம் முடிவு செய்திருக்கிறார் தாத்தா... உனக்கேதும் ப்ராப்ளம் இல்லையே...' என்றதும் அதுவரை அவனிடம் வாயடித்துக் கொண்டிருந்தவளுக்கு திருமண விஷயத்தை சொன்னதும், முகம் வெட்கத்தில் ஜொலிக்க அவனை நிமிர்ந்து பார்க்க கூச்சப்பட்டுக் கொண்டு தலையை குனிந்து கொண்டாள்.

அவள் எதுவும் பேசாமல் அமைதியாக விழிகளை தாழ்த்தியிருந்தவளின் முகத்தை நிமிர்த்த சிவந்த முகம் அவன் கண்ணில் பட்டதும் ரசனையுடன் ஆசையும் சேர்ந்துகொள்ள அவளின் இதழ் நோக்கி குனிய அவனின் செல்போன் சிணுங்கி அழைக்க எடுத்து



பேசிவிட்டு, அவள் கன்னத்தில் செல்லமாக தட்டி , 'தாத்தா தான் அழைக்கிறார்...' என்றதும், விரித்து கிடந்த கூந்தலில் கிளிப் போட முயற்சி செய்து வராமல் தடுமாறுவதை குறும்புடன் பார்த்துக் கொண்டிருந்தவனை செல்லமாக முறைத்தாள்.

சிரித்துக்கொண்டே, கிளிப்பை வாங்கி அவள் கூந்தலில் போட்டுவிட்டு அவளின் நீள கூந்தலை ஆசையாக வருடி, ''எவ்வளவு நீளமான கூந்தல்...'' என்று சொல்லிக்கொண்டே அவள் கூந்தலில் முகம் புதைத்து, ''மது உன் கூந்தல் நறுமணத்தின் ரகசியம் என்ன?'' என்று திருவிளையாடல் பாணியில் குறும்பாக கேட்டவனுக்கு மது சிரித்துக்கொண்டே, ''அதுவா நான் துணி துவைக்கும் சோப் தான் உபயோகிக்கிறேன் '' என்று நக்கலாக கூறிவிட்டு, ''தாத்தா கூப்பிட்டதற்கு போகாமல் இங்கே இந்த ஆராய்ச்சி ரொம்ப முக்கியம். வாங்க போகலாம். வர வர உங்கள் அலம்பல் அதிகம் ஆயிடுச்சி'' என்று அவன் கையை பிடித்து இழுத்துக்கொண்டு செல்ல முகுந்தும் சிரித்துக் கொண்டே கூடவே சென்றான்.

சிறியவர்களின் முகத்தில் தத்தளித்த மகிழ்ச்சி கீழே அவர்களுக்காக காத்திருந்த பெரியவர்களின் மனதில் நிறைவை கொண்டுவர, நிச்சயத்திற்கு என்னென்ன செய்யவேண்டும்.... யாரை அழைக்க வேண்டும்... என்று கலந்து பேசி முடிவு செய்தார்கள்.

முகுந்தும், மதுவும் ஆபிஸ், ஷாப்பிங் என்று பிஸியாகிவிட, நிச்சய நாளும் நெருங்கியது. முதல் நாளே சுஸான் வந்துவிட, பல்லவி தன்

குடும்பத்தாருடன் வந்திருக்க, அவருக்கு முகுந்துக்கு மதுவை திருமணம் செய்துவைப்பது பிடிக்கவில்லை என்றாலும் தனக்கு ஆதரவாக பேசவோ, முகுந்திடம் பேசி ஜெயிக்கவோ முடியாது என்பதால் வலிய புன்னகையை வரவழைத்து கொண்டு மற்றவர்களுக்கு உதவி செய்துகொண்டிருந்தார்.

பிரபாதேவியும் பல்லவியிடம் பரபரப்பில் பேச முடியாமல், மோகன் எப்பொழுது வந்து காரியத்தை கெடுப்பாரோ என்று மனம் அலை பாய்ந்துகொண்டிருந்தது

# 14

மஞ்சுவின் குடும்பம் நிச்சயத்திற்கு வருகை தந்திருந்தது. முகுந்தின் கைகளை குலுக்கி, 'குடும்பத் தலைவனாக போறீங்க வாழ்த்துக்கள்...' என்று கூற முகுந்தின் பார்வை காதலுடன் மதுவை வருட வெட்கத்துடன் தலைகுனிந்தாள் . பல்லவி எரிச்சலிலும், பிரபாதேவி பயத்திலுமிருக்க மற்றவர்களின் சந்தோஷ ஆரவாரத்தில் பேரனும் பேத்தியும் மோதிரம் மாற்றி கொள்ள பிரபாதேவி நிம்மதியாக உணர்ந்தார்.

ஆனாலும் கல்யாணம் வரைக்கும் இந்த சந்தோஷம் நிலைக்கணுமே என்ற பயம் ஆட்கொள்ள, அதை மற்றவர்களுக்கு காட்டாமல் மறைப்பதே பெரிய வேலையாக இருந்தது. நிச்சயத்திற்கு வந்த பல்லவி



அங்கேயே தங்கிவிட நடுவில் மூன்று வாரம் தான் என்பதால் மூச்சுவிட கூட நேரமில்லாமல் எல்லோரும் கல்யாண வேலையில் மூழ்கிவிட, பிரபாதேவியால் இப்பொழுதும் பல்லவியிடம் பேச முடியாமல் போனது.

நிச்சயதார்த்தம் முடிந்ததால் முகுந்தின் சீண்டல் அதிகமாக இருக்க, மதுவும் அவனுக்கு இணையாக அவனை கேலி செய்து கொண்டிருந்தாள். மூன்று வாரம் எல்லோருக்கும் வேகமாக ஓடிவிட, கல்யாண நாளும் நெருங்கியது. பூபதி கேரளாவிலே உள்ள ஒரு பெரிய மண்டபத்தை ஏற்பாடு செய்திருந்தார். தங்கள் தொழில் வட்டாரத்தில் உள்ளவர்கள், சொந்தக்காரர்கள், அவினாஷின் குடும்பம், சுதிரின் குடும்பம் , மினிஸ்டர் என்று அந்த மண்டபமே கொள்ளாத அளவிற்கு கூட்டம் நிறைந்தது.

மோகனும், பீனாவும் கல்யாணத்திற்கு வந்திருக்க சுதிர் வரவேற்று உட்கார வைத்ததோடு சரி. யாருமே பேசாமல் அவரவர் காரியத்தில் கண்ணாக இருக்க, இருவருக்கும் நெஞ்சு கொதித்தது. அவர்களின் பார்வை பிரபாதேவியை தீண்டினாலே அவருக்கு திக்திக் என்று இருந்தது.

கெட்டி மேளம் முழங்க ஐயர் தாலி எடுத்து கொடுத்ததும் முகுந்த் அவளின் சங்கு கழுத்தில் தாலியை அணிவித்து தன்னில் பாதியாக்கி கொள்ள, அதை பார்க்க முடியாமல் பீனா அங்கிருந்து வெளியேற அந்த மேள சத்தத்தின் சந்தோஷத்தில் யாரும் அவளை சீண்டவில்லை... மஞ்சுவுக்கு கண்ணில் நீர் நிறைய பாரதி தான் அவரின் கையைப் பிடித்து ஆதரவாக

அழுத்திக் கொடுத்தார். சிவகாமி அம்மாவும் அவர் பக்கத்தில் இருந்ததால் மஞ்சுவுக்கு தெம்பாக இருந்தது

அன்றிரவு முதலிரவுக்கு ஏற்பாடு செய்த தாத்தாவிடம், 'இது எங்கள் சொந்த் விஷயம் தாத்தா... அதை நாலு பேர் வீட்டிலிருக்கும் பொழுது நடத்துவது சரியில்லை...' என்று உறுதியாக மறுத்த முகுந்த். அடுத்த நாளே ஹனிமூனுக்கு சுவிட்சர்லாந்து கிளம்ப மஞ்சு மனநிறைவோடு விடை கொடுத்தார்.

பேரனும் பேத்தியும் ஹனிமூன் கிளம்பிய இரண்டாம் நாள் பல்லவியிடம் , "நான் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிகிட்டேன். அந்த கடன்காரன் மோகன் என்னை வந்து மிரட்டிட்டு போறான்" என்று எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் மொட்டையாக விஷயத்தை கூற, தலையும் புரியாமல் வாலும் புரியாமல் தாயின் பதற்றத்திற்கு காரணம் கேட்ட மகளிடம், "அதை எப்படி சொல்வேன். நீ தான் என் மனசை சரியா புரிந்து கொள்வாய் என்று உன்னை கூப்பிட்டேன்" என்று பூடகமாய் சொல்லிவிட்டு, "உன் அண்ணன் மஞ்சுவை திருமணம் செய்த புதிதில் நாம் எல்லோருமே மஞ்சுவை வெறுத்தோம் இல்லையா?" என்று கூற, "ஆமாம் இப்போ அதுக்கென்ன அது தான் முடிஞ்சு போன கதையாச்சே" என்று முற்றுப்புள்ளி வைக்க, "இல்லை அது முடியலை... இப்போ தொடருது ..." என்றார் கலவரத்துடன்.

புரியாமல் நோக்கிய மகளிடம், "ஆமாம் பல்லவி உன் அண்ணன் இருக்கிற இடம் நான்கு வருடங்களுக்கு முன்பு எனக்கு மோகன் மூலமாக



தெரியவந்தது. அப்போது ரெண்டு பேரையும் ஒன்றாக பார்த்ததாக வந்து மோகன் சொன்னவுடன் எனக்கு ஆத்திரம் தாங்காமல் அவனிடம் மஞ்சுவை பற்றி தரக்குறைவாக பேசினேன். அப்பொழுது அவன் உங்க மருமகளை ஒழித்துக்கட்டிவிட்டால் உங்கள் மகன் உங்களுக்கு கிடைப்பார் இல்லையா? என்று என்னிடம் கேட்டான். நான் யதார்த்தமாக தான் ஆமாம் என்றேன்.

நானும் அதன் பிறகு அதை மறந்துவிட்டேன். அப்புறம் ஒரு வருடம் கழித்து வந்து உங்கள் மருமகளை தீர்த்துக்கட்டினால் எனக்கு என்ன தருவீங்க என்று கேட்டான். அவன் கேட்டதும் எனக்கு புரியவில்லை . என்ன திடீர்னு வந்து கேட்கிறே என்று கேட்டதற்கு எனக்கு தெரிந்த ஒருத்தன் ஊருக்கு போயிருந்தான். அவன் வர வரைக்கும் காத்திருந்தேன். உங்க மருமகளை தீர்த்து கட்ட ஏற்பாடு செய்கிறேன். எனக்கு என்ன தருவீங்க என்றான். நானும் பீனா முகுந்தின் மேல் ஆசையா இருக்கிறாள் என்று தெரிந்துகொண்டு அவளை இந்த வீட்டு மருமகளா ஆக்குகிறேன் என்று சொன்னேன்.

அவனும் சந்தோஷமாக ஒத்துக்கொண்டு போனான். ஆனால் அவன் மஞ்சுவை கொல்றதுக்கு பதில் என் பையனைக் கொன்றுவிட்டான். கேட்டதிற்கு ஆள் மாறிவிட்டது என்று அலட்சியமாக சொல்லிவிட்டான். இதை நான் யாரிடமாவது சொன்னால் நான் தான் கொல்ல சொன்னேன் என்று போலீசில் சொல்லிவிடுவேன் என்று என்னை மிரட்டியதால் என்னால் வெளியே சொல்லவும்

முடியாமல், முழங்கவும் முடியாமல் தவிக்கிறேன். இன்று என் பெண்ணை முகுந்த் அல்லது திலீப்புக்கு கட்டி வை என்று மிரட்டுகிறான்'' என்று ஒரே மூச்சில் சொல்ல, அதைக் கேட்ட பல்லவிக்கு சொர சொரவென்று இருந்தது.

கடைசியில் தன் அண்ணன் இறந்ததிற்கு சொந்த தாயே காரணகர்த்தா என்று தெரிய வந்த போது பல்லவிக்கு பிரபாதேவியை பார்க்கவே வெறுப்பாக இருக்க, அது அவரின் பார்வையில் வெளிப்பட்டது.

''என்னை அப்படி பார்க்காதே பல்லவி... நான் வேண்டுமென்றே செய்யவில்லை எல்லாவற்றிக்கும் காரணம் அந்த மோகன் தான். நீ தான் இந்த சிக்கலிலிருந்து என்னை காப்பாற்றணும்'' என்று அழுதவரின் கையை உதறினாள்.

''ச்சே உன்னை மாதிரி ஒரு அம்மாவை நான் பார்த்ததே இல்லை. ஒரு மாமியாருக்கு மருமகளை பிடிக்காமல் போவது இயற்கை தான். ஆனால் நீ மஞ்சுவை கொல்கிற அளவிற்கு துணிந்து இருக்கிறாயே . உன்னை என்ன சொல்வது, உன் கெட்ட எண்ணம் உன் பிள்ளையையே அழித்துவிட்டது'' என்று சீறிய மகளுக்கு தன்னை புரியவைக்க முயற்சி செய்தவரின் பேச்சை காதில் வாங்காமல் நெருப்பாக பார்த்தாள்.

''அப்படி என்ன ஆளையே கொல்கிற ஆத்திரம். கோபம் வந்தால் கத்தியை எடுத்து தலையை சீவி விடுவீர்களா? ச்சே நான் கூட மஞ்சுவால் தான் அண்ணன் இறந்து போனார் என்று நினைத்திருந்தேன்.



கடைசியில் எல்லாவற்றிக்கும் சூத்ரதாரி நீயா? உன்னால் ஒரு பெண் அமங்கலியா இருக்கிறாள். இதற்கு என்ன செய்யப் போகிறாய்?'' என்று பொரிந்தவருக்கு பதில் சொல்லமுடியாமல் பிரபாதேவி பரிதாபமாக அழுதார்.

பிரபா தேவிக்கு மருந்து கொடுக்க வேண்டுமே என்று பாலோடு வந்த மஞ்சு அறையில் நடந்த சம்பாஷணைகளை கேட்டதும் காலுக்கடியில் பூமியே நழுவுவதுபோல உணர்ந்தவர் கையிலிருந்த வெள்ளி டம்ளர் அனிச்சையாக கீழே விழ, தளர்ந்த நடையோடு தன் அறைக்கு சென்றார். டம்ளர் விழுந்த சப்தம் கேட்டு வெளியே வந்த பல்லவி, மஞ்சு மாடியேறி செல்வதை பார்த்து திடுக்கிட்டு செய்வதறியாது அதிர்ந்து நின்றார்.

மாடிக்கு போன மஞ்சு அறைக் கதவை தாளிட்டுக்கொண்டு ராஜேஷின் படத்திருக்கு முன்னால் சரிந்து மண்டியிட்டு அழுதார். தன் கணவனை கொன்ற இந்த வீட்டிலா இத்தனை நாள் இருந்தோம் என நினைக்க நினைக்க பூமி இரண்டாக பிளந்து தன்னை அழைத்துக் கொள்ள மாட்டாளா என்று நெஞ்சு விம்மி தணிந்தது.

மதுவுக்கு இந்த விஷயம் தெரிந்தால் அவளுடைய வாழ்க்கை என்னாகும் என்ற கேள்வி எழ, அந்த கேள்வியே அவர் இதயத்தை கல்லாக மாறி அழுத்த அப்படியே நெஞ்சை பிடித்துகொண்டு சரிந்தார்.

பல்லவியும், விஷயம் தெரிந்து பாரதியும்... அறையின் கதவை பதட்டத்துடன் தட்டியும் பலனில்லாமல் போக பயத்துடன் வேலையாட்களை

அழைத்து கதவை உடைத்து உள்ளே சென்றவர்கள் ராஜேஷின் படத்தருகே மயங்கி கிடந்த மஞ்சுவை தூக்கிச் சென்று ஹாஸ்பிடலில் சேர்த்துவிட்டு நெஞ்சம் துடிக்க காத்திருக்க, பிரபாதேவியோ பயத்தில் மழையில் நனைந்த கோழிக்குஞ்சாய் நடுங்கிக் கொண்டிருந்தார்.

மஞ்சுவுக்கு நெஞ்சு வலி வந்திருக்கு என்று மருத்துவரின் மூலம் தெரிந்துகொண்ட பூபதி, அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் கையை பிசைந்து நின்ற சுதிர், பூபதி நெஞ்சை பிடித்துகொண்டு அமர்ந்திருப்பதைப் பார்த்து அவரை தேற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். மருமகளை அப்படி ஒரு நிலையில் பார்த்த பூபதிக்கு மனம் ஆறாமல் புயலாக வீட்டுக்கு வந்தவர், 'மஞ்சுவின் நிலைக்கு யார் காரணம்'' என்று உறும வீடே நடுங்கிப் போனது.

தந்தையை இந்தளவிற்கு கோபப்பட்டு பார்த்திராத பல்லவி பயத்தில் தாய் தன்னிடம் சொன்னதை அப்படியே அவரிடம் ஒப்பிக்க, ஆத்திரத்துடன் பிரபாதேவியின் அறைக்கு சென்று... ஒடுங்கிப் போய், பயத்தில் முகம் வெளிறி அமர்ந்திருந்தவரை அடிக்க கையை ஓங்க,ஓடி வந்த சுதிர் தான் கையை பிடித்து தடுத்தார்.

சுதிர் அவரிடம் பொறுமையாக விசாரிக்க, பிரபாதேவி மோகனிடம் தான் சொன்னது அவர் செய்தது எல்லாம் கூறிவிட்டு, ''இந்த மாதிரியெல்லாம் ஆகும் என்று எனக்கு தெரியாது மாப்பிள்ளை. நான் வேண்டுமென்றே கூறவில்லை. ஒரு கோபத்தில் தான் கூறினேன். ஆனால் அவன் இந்த மாதிரி எல்லாம்



செய்வான் என்று எனக்கு தெரியாது'' என்று தலையில் அடித்துக்கொண்டு அழ, ஒரு வயதானவர் அழுவதை பார்க்க சகிக்காமல் மனைவியிடம் சமாதனம் செய்யச் சொல்லிவிட்டு,

''மாமா, அத்தை மீது கோபப்பட்டு எந்த புண்ணியமும் இல்லை . நாம் எல்லோரும் கோபத்தில் இருந்தோம், அதையே அவர்கள் சொல்லக் கூடாத ஒரு ஆளிடம் தன் கோபத்தை வெளிக்காட்டி பழிக்கு ஆளாகிவிட்டார்கள் . இப்போது அவர்கள் மீது கோபப்படுவதினால் எந்த காரியமும் நடக்க போவதில்லை'' என்றார்.

''எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை மாப்பிள்ளை. நீங்களே ஏதாவது ஒரு வழி சொல்லுங்களேன் . இப்போ மஞ்சு வேற இப்படி இருக்கிறாள். இதை மதுவுக்கு தெரியப்படுத்த வேண்டாமா?'' என்று பரிதாபமாக கேட்டவரை பார்க்க சுதிருக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

விதி ஒருவர் வாழ்கையில் எப்படி எல்லாம் விளையாடுகிறது என்று நொந்துகொண்டு, ''மாமா, நான் சொல்வதை பொறுமையாக கேளுங்கள். இந்த நேரத்தில் தான் நாம் எச்சரிகையாக யோசித்து முடிவெடுக்க வேண்டும். இப்போ நாம் மதுவுக்கு எதுவும் சொல்ல வேண்டாம். இப்போது தான் ஹனி மூனுக்கு போயிருக்கிறார்கள். அதை நாம் கெடுக்க வேண்டாம். இப்பொழுது சொன்னால் முகுந்த் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் மாட்டிக்கொள்வோம். அதுமட்டுமில்லை பிரச்சனை

மதுவுக்கு தெரிந்தால் என்ன ஆகும் என்று யோசித்து பாருங்கள். நிச்சயம் அவள் இந்த வீட்டை விட்டு மட்டுமில்லை முகுந்தையும் பிரிந்து போய்விடுவாள்'' என்று சொன்னார்.

“இது மறைக்கக்கூடிய விஷயமில்லையே..." என்றவரின் பயம் புரிய, ''நீங்க கேட்கிறது எனக்கு புரியுது. ஆனால் அதை யோசிப்பதை விட, இப்போது அத்தையிடம் மோகன் மிரட்டிவிட்டு சென்று இருக்கிறானே அந்த விஷயத்தை தான் முதலில் கவனிக்க வேண்டும். நான் கூட மோகன் நல்லவன் என்று தான் நினைத்திருந்தேன். ஆனால் அவன் இவ்வளவு மோசமானவன் என்று இப்போது தான் தெரிகிறது இந்த லட்சணத்திற்கு பீனாவுக்கு திலீப் வேண்டுமா?'' என்று கோபத்தோடு தனக்கு தானே கேட்டுக்கொண்டார்.

அதை கேட்டு கொண்டிருந்த பாரதி, ''ஏங்க இந்த விஷயத்தை முகுந்திடம் சொன்னால் அவன் மோகனை கூப்பிட்டு நன்றாக டோஸ் விடுவானே'' என்று அப்பாவியாக சொன்னார்.

''காரியம் கெட்டது போ. இதை அவனிடம் சொன்னால் என்ன ஆகும் தெரியுமா? முதலில் அவன் யார் மீது கோபப்படுவான் என்று நினைக்கிறாய். அவனின் கோபம் முதலில் அத்தை மீது தான் திரும்பும்'' என்று சொன்னவுடன், பாரதியும் அட ஆமாம் என்கிற தினுசில் யோசித்தார்.

சுதிர் சொன்னதை ஆமோதித்த பல்லவி, ''ஆமாம் மாமா நிச்சயம் முகுந்துக்கு தெரியாமல் பார்த்துக்கொள்வது நல்லது. அப்படி தெரிந்தால் என் நிலைமை தான் அம்மாவுக்கும் ஏற்படும். நான் மஞ்சுவை பற்றி ஏதோ கோபத்தில் தவறாக சொன்னேன் என்று கொஞ்ச நாளாக அவன் என்னிடம் பேசுவதே இல்லை. அண்ணனின் இறப்புக்கு காரணம் அம்மா தான் என்று தெரிந்தால் அவனின் கோபம் எப்படி இருக்கும் என்று என்னால் யோசித்துக்கூட பார்க்க முடியாது'' என்று அவரின் எண்ணத்தை வெளியிட்டார்.



மூவரும் என்ன செய்யலாம் என்று சிந்திக்க கடைசியில் சுதிரே, ''சரி மாமா.நான் என் கமிஷனர் ப்ரெண்ட் மூலம் மோகனை வார்ன் செய்கிறேன். பீனாவை கூப்பிட்டு அவளுக்கு புரியும்படி புத்தி சொல்கிறேன். இனி அவர்கள் நம் வழிக்கு வர மாட்டார்கள். அதனால் நீங்கள் கவலைப்படாதீர்கள். முதலில் மஞ்சுவை கவனிப்போம்'' என்று அந்த பிரச்சனைக்கு ஒரு முற்றுபுள்ளி வைக்க, பூபதி வேறு வழியில்லாமல் தலையாட்டி வைத்தார்.

அடுத்து வந்த ஒரு வாரமும் மஞ்சுவை கவனிப்பதிலேயே அவர்கள் நாட்கள் கவலையோடு கழிய, இதை புது ஜோடிகளுக்கு தெரியாமல் பார்த்துக்கொண்டார்கள். மருத்துவமனையில் மஞ்சுவின் உடல் நிலை தேறுகிற அறிகுறியே தெரியாததால் மருத்துவர்கள் கையை விரித்துவிட, அதற்கு மேல் தாமதிக்காமல் இருவருக்கும் மஞ்சுவுக்கு உடல் நிலை சரியில்லை என்று மட்டும் கூறி தகவல் தெரிவித்தார்கள். வீட்டில் எல்லோரிடமும் பிரபாதேவி செய்த காரியத்தை அவர்களிடம் வெளியிடக் கூடாது என எச்சரித்துவிட எல்லோரும் அதன் படியே நடந்து கொண்டார்கள்.

வீட்டுக்கு வந்ததும் மதுவை அழைத்துக்கொண்டு முகுந்த் மருத்துவமனைக்கு செல்ல, மஞ்சுவை பார்த்ததும் மதுவால் தன்னை கட்டுப்படுத்த முடியாமல் கதறினாள். அவளை தேற்ற முடியாமல் முகுந்த் பரிதாமாக விழிக்க, மஞ்சு மதுவை பார்த்ததும் சோர்ந்து போயிருந்த அவர் விழிகள் பளிச்சிட சைகையால் கிட்டே அழைத்தார்.

மது அவரின் கையை பிடித்துகொண்டு, "சொல்லுங்கம்மா என்னம்மா ஆச்சு?" என்று கண்களில் கண்ணீர் வழிய கேட்டளின் கண்ணீரை தன் மெலிந்த கையால் துடைத்துவிட்டு,

"அழாதேடா மது, எனக்கு ஒன்றுமில்லை. ஏதோ திடீரென்று நெஞ்சு வலித்தது அவ்வளவுதான். உன் குழந்தையை கொஞ்சாமல் அவ்வளவு சீக்கிரம் எனக்கு ஒன்றும் ஆகாது" என்று அந்த நிலையிலும் லேசாக சிரித்து அவளை சமாதானப்படுத்த மதுவின் அழுகை நின்ற பாடில்லை .

"மது அம்மாவுக்கு ஒரு ஆசை செய்வியா?" என்று வேண்டுகோள் வைக்க, மது கண்களை துடைத்து கொண்டு, " சொல்லுங்கம்மா" என்று கண்கள் பளிச்சிட கேட்டாள்.

மஞ்சு லேசான புன்னகையுடன் அவள் முகத்தை வருடி, "என்னை சென்னையில் இருக்கும் போது மஞ்சு என்று பேர் சொல்லி கூப்பிடுவியே, அந்த மாதிரி கூப்பிடேன் மது. இங்கு வந்ததிலிருந்து நீ அந்த மாதிரி என்னை கூப்பிடவே இல்லையே" என்றார் ஏக்கமாக.

"ஐயோ அம்மா இப்போ அதுவா முக்கியம். நீ நல்ல படியா உடம்பு சரியாகி வா. மூச்சுக்கு முந்நூறு



தரம் பேர் சொல்லி அழைக்கிறேன்" என்று அவர் நெஞ்சில் முகத்தை புதைத்துக் கொள்ள மஞ்சு அவள் தலையை தடவி, "நிச்சயம் வரேண்டா மது. ஆனால் இப்போ ஒரே ஒரு தரம் கூப்பிடுடா செல்லம்" என்று கெஞ்சினார்.

மது ஒரு தடவை முகுந்தை திரும்பி பார்த்துவிட்டு, "ஒரு தரம் என்ன மஞ்சு நூறு தரம் கூப்பிடுகிறேன். நீ என் பழைய மஞ்சுவாய் வீட்டுக்கு வரணும். உனக்காகவே நான் சீக்கிரம் ஒரு பிள்ளையை பெற்று தருகிறேன். அதுக்கு நீ தான் பேர் வைக்கணும் மஞ்சு" என்று கண்களில் கண்ணீர் வழிந்தோட சொல்லவும், அதை கேட்ட நிம்மதியில் மஞ்சுவின் கண்கள் பளபளக்க அதுவரை காத்திருந்த உயிர் அவர் உடலை விட்டுப் பிரிந்தது.

மஞ்சுவின் முகத்தில் புன்னகையுடன் நிம்மதியும் உறைந்திருக்க, கண்கள் மதுவின் முகத்திலே நிலைத்துவிட, அவர் இப்பூலகத்தைவிட்டு சென்றுவிட்டார் என்று நம்பாத மது, பயத்துடன் அவரை உலுக்க, முகுந்த் அவளை அணைத்து கண்ட்ரோல் செய்ய வெடித்து அழுதாள்.

அவளின் அழுகை சத்தம் கேட்டு வெளியே காத்திருந்த சுதிரும், பூபதியும் பதறியடித்துக்கொண்டு உள்ளே ஓடி வர மஞ்சு இறந்துவிட்டார் என்று தெரிந்ததும் அதிர்ச்சியில் உறைந்துவிட்டார்கள்.

முகுந்த் அவரின் கண்களை மூட, மது முகுந்தின் சட்டையை பிடித்து உலுக்கி, "என் மஞ்சு என்னை விட்டு போகமாட்டாங்க. நீ ஏண்டா அவர் கண்ணை

மூடறே'' என்று கதறியவளை தேற்ற முடியாமல் தவித்தான்.

அழுகிற மதுவை பார்த்து ஒன்றும் செய்யமுடியாமல் தவித்த பூபதி அவளை அணைத்து ஆறுதல் படுத்த அவளின் அழுகை அடங்காமல் அதிகரித்துக்கொண்டே போனது. சுதிர் முகுந்திடம் அவளை இங்கிருந்து அழைத்துக்கொண்டு போ என்று கண்ணைக் காட்ட, அவன் அவளை அங்கிருந்து அழைத்துச் செல்ல முயற்சிக்க, அவளோ அங்கிருந்து ஒரு இன்ச் கூட மஞ்சுவை விட்டு நகராமல் அவரை தொட்டு தடவி அழுதழுது சிறிது நேரத்திலே மயக்கமாகி விட்டாள்.

இதற்கு மேல் வைத்திருப்பது சரியில்லை என்று எல்லோருக்கும் சொல்லி, செய்ய வேண்டியது எல்லாம் செய்ய, முகுந்த் தான் ஒரு மகனாய் இருந்து அவரின் இறுதி காரியங்களை கவனித்தான். மது மயக்கம் தெளிந்தால் மஞ்சுவை பார்த்து அழுவதும், மீண்டும் மயங்குவதுமாக இருக்க பூபதி எல்லா வேலைகளையும் சீக்கிரமே முடிக்கச் சொன்னார்.

முகுந்தை கொஞ்ச நாள் கம்பெனிக்கு வர வேண்டாம் மதுவை கவனித்துக்கொள் என்று பூபதியும் சுதிரும் சொல்லிவிட்டதால் அவன் எப்போதும் மதுவின் அருகில் இருந்து அவளை கவனித்துக்கொண்டான். பாரதியும் வேறு எந்த வேலையையும் விட அவளை கவனிப்பது தான் முதல் வேலையாக வைத்துக்கொள்ள, பல்லவியும் மதுவுக்கு ஆறுதலாக நடந்துகொண்டார். மொத்தத்தில் எல்லோரும் அவளை பூவாக



தாங்கினாலும் பெற்ற தாய் போல் ஆக முடியுமா? இருந்தாலும் முகுந்தின் அதீதமான காதலாலும், கவனிப்பாலும், கனிவான அரவணைப்பாலும் கொஞ்ச கொஞ்சமாக மனது தேற தொடங்கியது.

பிரபாதேவிக்கு குற்ற உணர்ச்சியே அவரை கொஞ்சம் கொஞ்சமாக கொல்ல மதுவை பார்க்க பேச மனம் கூசிப் போய் அவளிடம் இருந்து ஒதுங்கியதை கண்ட பூபதி, ''ஏன் மஞ்சு இறந்தது போதாதா? இதே மாதிரி நடந்து இப்போது நீயே எல்லாவற்றையும் தெரியபடுத்துகிறாயா? இன்னும் என்ன நடக்க ஆசைப்படுகிறாய்?'' என்று தீயாக வார்த்தைகளை கொட்டி அவரை எச்சரித்தார். ஆனால் இது எதையும் கவனிக்கும் நிலையில் மதுவும், முகுந்தும் இல்லாததால் எந்த சந்தேகமும் வரவில்லை.

சுதிர், அவரின் போலீஸ் கமிஷனர் ப்ரெண்ட் மூலம் ராஜேஷ் கேசை தோண்டி எடுத்து விசாரிக்க சொல்ல, அவர் சொல்படி ரகசியமாக விசாரித்தபோது, அந்தக் கொலையை செய்ய சொன்னது மோகன் தான் என்று கொலை செய்தவனே அப்ரூவராக மாறிவிட, மோகனை கூப்பிட்டு சுதிர் கமிஷனரின் முன்னிலையிலே எச்சரித்து இந்த கொலைக்கும், பிரபாதேவிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், இனி ஏதாவது எங்கள் குடும்பத்தில் வந்து கலகம் செய்தால் பின் விளைவுகள் கடுமையாக இருக்கும் என்றும் வாக்கு மூலம் வாங்கினார்.

முதலில் அசால்ட்டாக இருந்த மோகன் இப்படி இந்த கேசை தோண்டி துருவுவார்கள் என்று

எதிர்பார்க்காததால் நிரம்பவே ஆடிப்போனார். அதனால் சுதிர் சொன்னபடி வாக்குமூலம் கொடுத்தார்.

நாளாக நாளாக மது முகுந்தின் கவனிப்பிலும் அன்பிலும் மூழ்கிவிட, மஞ்சு இல்லாத குறையை முகுந்த் தீர்த்து வைத்தான். இரண்டு மாதம் கழித்து வீட்டில் இருந்தால் அம்மாவின் நினைவு அதிகமாக இருக்கு. அதனால் ஆபிஸ் வருகிறேன் என்று மது சொல்லிவிட, யாரும் எந்த எதிர்ப்பும் சொல்லவில்லை. அவள் இஷ்டத்திற்கே விட்டு விட்டார்கள். முகுந்தே அவளை அழைத்துச் செல்வான். ஆபிஸ் முடிந்ததும் அவன் மற்ற கம்பெனிகளுக்கு அவளை அழைத்துச் சென்று அவள் கவன்த்தை கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பினான்.

அன்று வழக்கம் போல காலையில் ஆபிஸ் கிளம்பியவளுக்கு லேசாக தலை சுற்ற அப்படியே சோபாவில் சரிந்து அமர்ந்தவளின் மனம் தன் கிழமைகளை கணக்கு போட, தனக்குள் ஒரு உயிர் வளர்வது நிச்சயமாயிற்று. ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தாலும், நாம் இப்போதிருக்கிற மன நிலையில் இது தேவை தானா? என்ற கேள்வி எழ, இதை கவனிக்காமல் விட்டுவிட்டோமே என்ற ஆயாசத்தில் சோபாவிலே சரிந்து படுத்துவிட்டாள்.

மனைவியை தேடி மேலே வந்த முகுந்த் அவளின் நிலையை பார்த்து வேகமாக அவளருகில் அவள் நெற்றியை தொட்டு பார்த்துவிட்டு கனிவாக விசாரிக்க, மது குழப்பத்துடன் விஷயத்தை கூறியதும் முகுந்துக்கு ஒரு நிமிடம் மனம் சிறகடித்து பறந்தது.



ஆனால் அடுத்த நிமிடமே மதுவின் முகத்தில் இருந்த குழப்பம் அவனை தொற்றிக் கொண்டது.

''ஏன் மது இது சந்தோஷமான விஷயம் தானே. ஆனால் உன் முகத்தில் சந்தோஷமே இல்லையே '' என்று கவலையாக விசாரித்தான். அவனின் கேள்விக்கு எழுந்து அமர்ந்து அவன் மேல் சாய்ந்துக் கொண்டு, ''ஏன் முகுந்த், இவ்வளவு சீக்கிரம் இந்த குழந்தை தேவை தானா?'' என்று சிறு குழந்தையாக கேட்டவளை அணைத்து அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

''மது உன் கேள்வி எனக்கு புரிகிறது. ஆனால் இப்போதிருக்கிற நம் மன நிலைக்கு தேவையில்லை என்றாலும் அத்தை இறந்த பிறகு முதன் முதலில் ஒரு உயிர் உன் வயிற்றில் ஜனித்திருக்கிறது. ஒருவேளை இந்த குழந்தை உன் அம்மாவாக கூட இருக்கலாம். இருக்கலாம் என்ன உன் அம்மாவே தான். அதற்காக வேண்டியாவது இந்த குழந்தை நமக்கு வேண்டும் மது ப்ளீஸ் மா'' என்றான் கெஞ்சலாக.

மதுவுக்கும் முகுந்த் சொன்னது போல் தன் அம்மாவே தன் வயிற்றில் வந்திருக்கிறார்களோ என்று தோன்றியதும் அவள் உடல் ஆனந்தத்தில் சிலிர்த்தது.

அவள் பதில் ஏதும் பேசாமல் அமைதியாக தன் மேல் கண்மூடி இருப்பதை பார்த்து அவள் முகத்தை தன் பக்கம் நிமிர்த்தி, ''என்ன மது பதிலே சொல்லவில்லை. இந்த குழந்தை வேண்டாமா?'' என்ற அவன் குரலில் இருந்த ஏக்கம் மதுவை அவன் பால் ஈர்க்க, அவன் கழுத்தில் பூமாலையாக கைகளைக் கோர்த்து அவன் நெஞ்சில் முகம் புதைத்தாள்.

''இல்லை முகுந்த். இந்த குழந்தை நமக்கு வேண்டும். நீங்கள் சொல்வது போல் நிச்சயம் அம்மா தான் பிறப்பார்கள். தேங்க்ஸ் முகுந்த். தேங்க்ஸ் எ லாட்'' என்று முகம் முழுவதும் சந்தோஷம் கொப்பளிக்க சொன்னவளை ஆசையுடன் வாரி அணைத்துக் கொண்டான்.

அவள் கன்னத்தை தன் கன்னத்தோடு இழைத்துக்கொண்டே, ''மது குட்டி, நம் குட்டி பாப்பாவுக்கு என்ன பெயர் வைக்கலாம்?'' என்று கேட்டதும் மது ஆச்சரியத்தோடு அவனிடமிருந்து விலகி அவன் கண்களை சந்திக்க அந்த கண்களில் குழந்தையை பற்றிய கனவுகள் டன் டன்னாக இருப்பதைக் கண்டதும் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அவன் கன்னத்தில் ஒரு தட்டு தட்டி, ''ஹலோ முகுந்த் சார், இப்போ தான் நாள் தள்ளி போயிருக்கு. இன்னும் டாக்டரிடம் போகணும். கன்ஃபார்ம் செய்யணும், அப்புறம் ஒரு ஒன்பது மாதம் காத்திருக்கணும், அதற்கு பிறகு தான் குழந்தைக்கு பெயர் வைக்கணும். நீங்க என்னவென்றால் இப்போதே இவ்வளவு அவசரப்படறீங்க உங்க அவசரத்துக்கெல்லாம் குழந்தை பிறக்காது. சரியான முந்திரிகொட்டை'' என்று சிரித்துக்கொண்டே சொன்னவளின் கையை பிடித்து முத்தமிட்டான்.

''அதெல்லாம் உனக்கு தான். எனக்கு எப்போ நீ கன்சீவ் என்று தெரிந்ததோ அப்பவே அது நம் குழந்தை



தான்'' என்று அமர்த்தலாக சொன்னதும் சிரிப்புடன் ஆமோதித்துவிட்டு,

''அப்போ நீங்களே என்ன பெயர் வைக்கலாம் என்று சொல்லுங்க?'' என்று அவன் மடியில் படுத்துக் கொண்டாள். அவள் கூந்தலை வருடி கொண்டே, கொஞ்ச நேரம் கண்மூடி யோசித்தான். மது அவன் யோசிக்கும் அழகை ரசித்துக்கொண்டு இருக்க, கண்ணை திறந்து, ''ஹே ஐ காட் இட்'' என்று சந்தோஷமாக கூவினான்.

''ம்ம்ம் உன் பேரில் பாதி இருக்கணும், அத்தை பெயரின் உச்சரிப்பு மாதிரியும் இருக்கணும். அதனால் மதுஜா...'' என்று கண்கள் பளபளக்க கூறிவிட்டு, ''எப்படி இருக்கு மது...உனக்கு பிடிச்சிருக்கா?'' என்று ஆர்வமாக கேட்டான். மதுவுக்கு அவனின் ஆர்வக்கோளாறு சிரிப்பை கொண்டு வந்தது.

''ம்ம் நல்லா இருக்கு. ஆனால் இது என்ன சிந்துஜா மாதிரி மதுஜா? அப்படி என்றால் என்ன அர்த்தம்?'' என்று புரியாமல் கேட்டாள்.

அவள் கன்னத்தை வருடிக் கொண்டே, ''அப்படி என்றால் தேனால் செய்யப்பட்டவள். மிகவும் இனிமையானவள் என்று அர்த்தம். நீ மதுரமானவள் தானே. நீ பெற்றெடுக்கிற நம் குழந்தைக்கு இது சரியான பெயர் தானே'' என்று கண்ணடிக்க, மது அவன் புத்திக் கூர்மையை வியந்து கொண்டே சந்தோஷமாக சிரிக்க முகுந்தும் அவளுடன் சேர்ந்து நகைத்தான்.

# 15

அன்றே அவர்கள் குடும்ப டாக்டரிடம் அப்பாயின்ட்மென்ட் வாங்கி மதுவை அழைத்துச் சென்று கன்ஃபார்ம் செய்ததும் உடனே போன் செய்து வீட்டுக்கு சொல்லிவிட்டு இருவரும் ரிக்கியின் வீட்டுக்கு சென்றார்கள். மது அம்மாவாகி இருப்பதை சொன்னதும் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மஞ்சுவின் மறைவால் மிகவும் நொந்து போயிருந்த சிவகாமி அம்மாள், மது உண்டாகி இருப்பதை கேள்விபட்டதும் தன் மகளே பேத்தியின் ரூபத்தில் வரப் போகிறாள் என்று திடமாக நம்பினார்.

பிரபாதேவிக்கு மது உண்டாகி இருப்பதால் ஒரு பாட்டிக்கே உரிய சந்தோஷம் இருந்தாலும் அவரின் அடி மனதில் இருந்த உறுத்தல் மட்டும் குறைய மறுத்தது. அந்த உறுத்தல் மதுவுக்கு தெரியாமல் மறைப்பதே அவருக்கு பெரும்பாடாக இருந்தது. மதுவுக்கு அவரின் உறுத்தல் எதுவும் தெரியாததால் அவரிடம் வழக்கம் போல கலகலப்பாக பேசினாள். தன் அம்மாவை தன் வயிற்றில் சுமக்கிறோம் என்பதே பெருமையாகவும். அதே சமயம் ஆனந்தமாகவும் இருந்தது.

ஆறாம் மாத செக் -அப்பிற்கு ஆபிஸ் முடிந்ததும் வழக்கம் போல அழைத்துச் சென்றவன், மது உள்ளே சென்றதும் வெளியே எகனாமிக்ஸ் டைம்ஸ் படித்துக்



கொண்டிருந்தான். ஏகப்பட்ட ஒப்பனையுடன் டக் டக்கென்று அந்த மருத்துவமனையின் அமைதியை கிழிக்கும் வண்ணம் புயலாக உள்ளே நுழைந்த பீனாவை கண்டதும் கொஞ்சம் வெறுப்பு இருந்தாலும்,அப்பாவின் நண்பருடைய மகள் என்ற காரணத்தால் அவளிடம் நலம் விசாரித்தான்.

தன் அம்மாவை டாக்டரிடம் அழைத்து வந்தவள் வெளியில் இருந்தே முகுந்தை பார்த்தவளுக்கு அவன் மீது ஆத்திரம் குவிண்டால் கணக்கில் இருந்தாலும் அவன் அத்தையின் மரணத்திற்கு நாம் தான் காரணம் என்று சுதிர் அங்கிள் சொல்லியிருப்பார். இப்போ நாம் அவன் கண்ணில் பட்டால் நம்மை குதறி எடுத்துவிடுவான் என்று எண்ணியவள்,அவன் பார்க்கும் முன்னே வேகமாக உள்ளே செல்ல முயற்சித்தாள்.

ஆனால் முகுந்த் அவளை அழைத்து நலம் விசாரித்ததும் ஆச்சரியம் பலமாக தாக்கியது. 'மஞ்சுவின் மரணத்திற்கு யார் காரணம் என்று யாரும் இவனிடம் சொல்லவில்லையா? தெரிந்திருந்தால் இவன் இப்படியா நலம் விசாரிப்பான்? கதையே வேறு மாதிரி அல்லவா ஆகியிருக்கும்' என்று அவள் மூளை வேக வேகமாக யோசித்தது.

அவள் பதில் சொல்லாமல் ஏதோ யோசிப்பதை கண்ட முகுந்த், ''என்ன பீனா ஏதோ பலமான யோசனை போல?'' என்று கேட்டுக்கொண்டே திரும்ப லதாவை கண்டதும் ''ஹலோ ஆன்ட்டி எப்படி இருக்கீங்க?'' என்று கேட்டான்.

அவர் முகுந்தை பார்த்து வாஞ்சையாக சிரித்தார். "நல்லா இருக்கேன் பா. நீ எப்படி இருக்கே? மது எப்படி இருக்கா? என்ன விஷயம்பா...மதுவுக்கு ஏதாவது விசேஷமா?" என்று ஆர்வமாக விசாரித்தார்.

'ஆமா ஆன்ட்டி, மது கன்சீவா இருக்கா. செக் அப்பிற்கு வந்தோம்" என்று முகம் மலர கூறிவிட்டு அவரிடம் பேசிக்கொண்டிருந்தான். மது உண்டாகி இருக்காள் என்று கேட்டவுடன் பீனாவுக்கு தலையிலிருந்து உள்ளங்கால் வரை தீயை வைத்த மாதிரி எரிந்தது.

'நாம் இருக்க வேண்டிய இடத்தில் அந்த பூனை கண்ணி இருப்பதோடு அல்லாமல் இப்போது குழந்தை வேறு பிறக்க போகுதா? இருடி உன்னை சும்மா விடமாட்டேன். நீ எப்படி சந்தோஷமா இவன் கூட வாழ்கிறாய் என்று பார்க்கிறேன்? உன் அம்மா எப்படி இறந்தார் என்று உன் முட்டாள் கணவனுக்கே தெரியாத போது உனக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. அதை வைத்தே உன்னையும் உன் ஆசை கணவனையும் பிரிக்கிறேன்' என்று கங்கணம் கட்டிக்கொண்டாள்.

"எக்ஸ்கியூஸ்மீ, நீங்க பேசிகிட்டு இருங்க. எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு" என்று மிகவும் மரியாதையான பெண்ணைப் போல மன்னிப்பு கேட்டுக்கொண்டு மதுவை தேடிச் சென்றாள்.

அவர்களின் குடும்ப டாக்டர் யார் என்று தெரியும் என்பதால் அவரின் அறைக்கு வெளியே காத்திருக்க, செக் அப் முடிந்து வெளியே வந்த மது வை அப்போது தான் பார்ப்பது போல அவளிடம் நலம் விசாரிக்க, மது வெட்கத்தோடு விஷயத்தைச் சொன்னதும் உலகத்திலயே அதிக சந்தோஷப்படுபவள் போல தன் மகிழ்ச்சியை வெளிக்காட்டிவிட்டு, உச்சு கொட்டினாள்.



பீனா உச்சு கொட்டவும் மது என்னாச்சு என்று விசாரிக்க, அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, "மது இப்போ நான் எதுவும் சொல்ல முடித்த நிலையில் இருக்கிறேன். உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசணும். நீ உன் போன் நம்பரை எனக்கு கொடு. எப்போ, எங்கே சந்திக்கலாம் என்று சொல்கிறேன், அங்கு வந்ததும் சொல்கிறேன் ...' என்றாள் பூடகமாக.

மதுவுக்கு பீனாவின் குள்ளநரித்தனம் தெரியும் என்றாலும் என்ன முக்கியமான விஷயமாக இருக்கும் என்ற ஆர்வம் அதிகமாக, "யாரும் தான் இங்கே இல்லையே" என்றவளுக்கு நேரடியாக பதில் சொல்லாமல், "உன் அம்மா எப்படி இறந்தார்கள் என்று எனக்கு தெரியும். அது பற்றி தெரியணும்னா உன் நம்பரை கொடு... நான் அப்புறம் பேசுகிறேன்" என்று மெயின் சுவிட்சில் கைவைத்ததும், அதற்கு மேல் மது யோசிக்காமல் தன் நம்பரை கொடுக்க, முகுந்த் லதாவுடன் பேசிக்கொண்டு வரும் சத்தம் கேட்டது.

"நான் உன்னிடம் சொன்னதை உன் கணவனிடம் சொல்லாதே. அப்புறம் ஆபத்து உனக்கு தான்" என்று எச்சரித்துவிட்டு நகர்ந்தவளை பார்த்துக்கொண்டிருந்த மதுவின் குழப்ப முகம், ஓரக்கண்ணில் தெரிய அவளின் மனம் துள்ளாட்டம் போட்டது.

வீட்டுக்கு சென்றவள் குழப்பத்தின் உச்சியில் இருக்க, அவளை அதிகம் பீனா காக்க வைக்காமல்

சைலண்ட் வேலி பார்க்குக்கு வர சொன்னதும், தனியாக கார் எடுத்துக்கொண்டு செல்ல, அவளுக்காக காத்திருந்த பீனா விஷயத்திற்கு வராமல் அனுசரணையாக பேசவும், ஏற்கெனவே மனதிற்குள் இவள் பேச்சை கேட்டு இவ்வளவு தூரம் வந்தது தவறோ என்ற எண்ணம் முளை விட்டிருந்ததால் பொறுமையிழந்து. "எதுக்காக என்னை வரச்சொன்னே..." என்றாள் எரிச்சலுடன்.

'அவசரப்படாதே மது. இப்போ நான் சொல்ல போகிற விஷயத்தைக் கேட்டால் அப்புறம் உன் கோபம் என் மீது இருக்காது. யார் மீது பாயும் என்று நான் சொல்லவேண்டியதே இல்லை...'' என்று புதிர் போட்டாள்.

''உன் அம்மா இறந்ததிற்கு காரணம் அவர்களுக்கு திடீரென்று என்று வந்த நெஞ்சு வலி அல்ல, அந்த வலி வர காரணமாக இருந்த விஷயம் தான்'' என்று மேலும் புதிர் போட மதுவின் பார்வையில் எரிச்சல் அதிகமானது.

''ஓகே... ஓகே வெளிப்படையாக சொல்லி விடுகிறேன். உன் அப்பாவை ஆள் வைத்துக் கொல்லச் சொன்னது உன் பாட்டி என்ற உண்மை அவங்களுக்கு தெரிந்துவிட்டதால் தான் நெஞ்சுவலி வந்து இறந்துவிட்டார்கள்..." என்று சொல்லி முடிக்கவில்லை.

''போதும் நிறுத்து. இதற்கு மேல் நீ எதுவும் சொல்ல வேண்டாம். ஏற்கெனவே உன்னைப் பற்றி எனக்கு தெரியும். அப்படி இருந்தும் நான் வந்தது என்



தவறு'' என்று கண்களில் தீயுடன் எச்சரித்து அங்கிருந்து செல்ல முயன்றவளை தடுத்தாள்.

''எனக்கு தெரிந்த உண்மையை உனக்கு சொல்ல நினைத்தது என் தவறு தான். பாவம் எல்லோரும் சேர்ந்து உன்னை ஏமாற்றுகிறார்களே, உன்னை அந்த சதியிலிருந்து காப்பாற்றலாம் என்று நினைத்தால் நீ என்னவோ ரொம்ப பிகு செய்து கொள்கிறாய். இன்னொன்றும் தெரிந்து கொள் , உன் கணவன் உன் மேல் ஆசை கொண்டு உன்னை கல்யாணம் செய்துகொள்ளவில்லை. உன் சொத்தை அடைய தான் உன்னை திருமணம் செய்துகொண்டான்'' என்றவளை மது பதில் சொல்லாமல் பார்வையாலேயே எரித்தாள்.

அவளின் பார்வையை அலட்சியம் செய்து. "அவர் முதலில் என்னை தான் விரும்பினார். உங்களை அவர் விஷம் போல வெறுத்தார். அதை பல முறை என்னிடம் சொல்லியிருக்கிறார். நீங்கள் வர மாட்டீர்கள் என்று நினைத்திருந்தவருக்கு நீ திடீரென்று என்று வந்ததால் சொத்து எங்கேயும் வெளியே போய்விட கூடாது என்று உன் தாத்தா, உன் மாமா எல்லோரும் சேர்ந்து இந்த பிளான் போட்டு முகுந்திற்கு கட்டி வைத்து விட்டார்கள்.

பின்னே நீயே யோசித்து பார் உன்னை அந்த அளவிற்கு வெறுத்தவர் எப்படி மனம் மாறி உன்னை காதலிக்க முடியும் . இதென்ன சினிமாவா?'' என்று சொன்னதும் மது நம்பவில்லை என்றாலும், அவள் மனதின் ஓரத்தில் லேசாக சந்தேகம் துளிர் விட ஆரம்பித்தது. அவள் குழப்பத்தில் இருப்பதை

உணர்ந்த பீனா குழம்பின குட்டையில் எளிதாக மீன் பிடித்தாள்.

அவளை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே, ''உனக்கு நம்பிக்கை இல்லையென்றால் நீயே போய் உன் பாட்டியிடம் உன் அம்மா எப்படி இறந்தார்கள் என்று கேட்டுப் பார். அப்போது தெரியும் . இது உன் கணவனுக்கும் தெரியும். இதுவரை உன்னிடம் சொல்லாமல் மறைத்திருக்கிறான்'' என்று அவள் சொல்லி முடிப்பதற்குள்...

''போதும் இனி நீ எதுவும் பேசி நான் கேட்க தயாராக இல்லை. எனக்கு தெரியும் என் வீட்டில் யாரும் என்னை ஏமாற்ற மாட்டார்கள். அப்படி ஏமாற்ற வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. நீ நினைக்கிற மாதிரி யாரும் சொத்துக்காக எங்களை ஏய்க்கவில்லை. உண்மையை சொல்லப் போனால் எங்களை தேடி வந்து கொடுத்தார்கள். இது மாதிரி இனி ஒரு தடவை யாரிடமாவது ஏதாவது சிண்டு முடியற வேலை செய்யணும் என்று நினைத்தால் அப்புறம் நான் என்ன செய்வேன் என்று எனக்கு தெரியாது'' என்று சுட்டு விரலை காட்டி எச்சரித்துவிட்டு. விடுவிடுவென்று அங்கிருந்து சென்றவளை பார்த்தாள்.

''ச்சே சரியான அழுத்தக்காரி. நாம் சொன்ன விஷயத்தைக் கேட்டு அழுது ஆர்ப்பாட்டம் செய்வாள் என்று எதிர்பார்த்தால் நம்மையே திட்டிவிட்டு செல்கிறாளே திமிர் பிடித்தவள்'' என்று தன்னுடைய திட்டம் கெட்டுவிட்ட எரிச்சலில் வெளிப்படையாகவே வாய் விட்டு முணுமுணுத்தாள்.



அங்கிருந்து புறப்பட்ட மதுவின் நெஞ்சில் பெட்ரோல் ஊத்தி எரித்த மாதிரி நெஞ்சம் திகுதிகுவென்று எரிந்தது. பீனாவிடம் தன் சொந்தங்களை விட்டுக் கொடுக்க பிடிக்காமல் அவளை எச்சரித்துவிட்டு வந்தாலும் தன் அப்பா, அம்மாவை பிரித்தது இவர்கள் தான் என்று அவள் சொன்னதை நம்பவும் முடியாமல், நம்பாமல் இருக்கவும் முடியாமல் இருதலை கொல்லி எறும்பு போல தவிக்க, புயலாக வீட்டுக்குள் சென்றவள் நேராக மாடிக்கு சென்று கட்டிலில் படுத்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு நிதானமாக யோசித்தாள்.

ஆபிசிலிருந்து முகுந்த் வர மது படுத்திருப்பதை பார்த்ததும் அக்கறையோடு உடம்புக்கு ஏதாவது செய்கிறதா என்று விசாரித்தவனை மது ஆராயும் நோக்கோடு பார்த்தாள். அந்த கண்களில் பொய்மை இல்லை என்றதும் ஒரு பக்கம் நிம்மதியாக இருந்தாலும் மனதின் ஓரத்தில் சிறு சஞ்சலம் இருந்துகொண்டே இருந்தது. அதுவே சோர்வை அளிக்க முகுந்துக்கு பதில் சொல்லாமல் கண்களை மூடிக்கொண்டாள்.

அவளின் தலையை வருடி, ''ஓகே டா மது எனக்கு சென்னையில் ஒரு வேலை இருக்கு, ரொம்ப அவசரம். உனக்கு உடம்பு சரியாக இருந்தால் உன்னையும் அழைத்துக் கொண்டு போகலாம் என்று நினைத்தேன். நீ தூங்கி ரெஸ்ட் எடு. நான் போய்விட்டு நாளை மதியம் வந்துவிடுகிறேன்'' என்று அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டவனை பார்க்க கண்கள் கரித்துகொண்டு வந்தது.

இவ்வளவு மென்மையானவனிடமா பொய்மை இருக்கு என்கிறாள் என்று மனது வாதாடியது. ஆனால் இன்னொரு மனது முகுந்துக்கு தெரியாமல் முடிவெடுப்பது எந்த வகையில் சிறந்தது என்று இடித்துரைத்தது.

தன் பிரிவால் தான் மதுவின் கண்கள் கலங்குகிறது என்று நினைத்தவன் அவள் கண்களை துடைத்து, ''டோன்ட் பீ சில்லி. இதோ இருக்கிற சென்னையிலிருந்து நாளைக்கே வந்துவிடுவேன். இதற்கு போய் வெளிநாட்டுக்கு போகிற மாதிரி அழுகிறாய்'' என்று அவள் தலையில் லேசாக முட்டி கன்னத்தில் தன் இதழை பதித்துவிட்டு, ''சரியாக சாப்பிடு, நன்றாக தூங்கு. டாக்டர் தந்த மாத்திரையை சரியாக போட்டுக் கொள், உன்னால் முடிந்தால் மட்டும் ஆபிஸ் போ, இல்லையென்றால் திலீப்பிடம் சொல். அவன் பார்த்துகொள்வான்'' என்று ஆயிரம் முறை அறிவுறுத்திவிட்டு கதவை சாத்திக் கொண்டு சென்றான்.

மதுவுக்கு இப்போது பாட்டியிடம் பீனா சொன்ன விஷயத்தை கேட்பதற்கு முகுந்த் இல்லாது இருப்பதே நல்லது என்று தோன்றியது. முகுந்த் சென்றதும் கீழே இறங்கி சென்றவள் நேரே பாட்டியின் ரூமிற்கு செல்ல, நண்பகல் என்பதால் பிரபாதேவியும், பிரபாதேவிக்கு மருந்து கொடுத்து கொண்டிருந்த பாரதியும், மதுவை கண்டு ஆச்சரியமடைந்து வரவேற்றார்கள் .

பாரதியை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''பாட்டி எனக்கு உண்மை தெரிஞ்சாகணும், நீங்க



உண்மையான பதிலை சொல்வீங்க என்ற நம்பிக்கையில் தான் கேட்கிறேன்'' என்று முகம் இறுக நேரடியாக விஷயத்திற்கு வந்தவளை இருவரும் புதிதாக பார்ப்பது போல் பார்த்தார்கள். மது இதுவரை அந்த மாதிரி பேசியதே இல்லை என்பதால் பிரபதேவியின் வயிற்றில் புளியை கரைக்க ஆரம்பித்தது.

''என் அப்பாவை ஆள் வைத்து கொன்றீர்களா? அந்த விஷயம் தெரிந்து தான் என் அம்மாவுக்கு நெஞ்சு வலி வந்ததா?'' என்று பட்டென்று விஷயத்தைப் போட்டு உடைத்ததும் தாயும் மகளும் கரண்ட் கம்பியை தொட்டது போல அதிர்ந்தார்கள். எப்படி இவளை சமாளிப்பது என்று யோசிக்க, அதற்கு இடமே கொடுக்காமல் பாட்டியை கேள்வியால் நெருக்க இனிமேல் மறைக்க முடியாது என்ற கட்டத்திற்கு வந்தவர், கடகடவென்று எல்லா உண்மைகளையும் மதுவிடம் கொட்டிவிட்டார்.

தன் அப்பாவும், அம்மாவும் பாட்டியால் தான் இறந்தார்கள். தன்னிடம் எல்லோருமே உண்மையை மறைத்துவிட்டார்கள் என்று தெரிந்ததும் அதிர்ந்து போனவள், ஒரு நிமிடம் என்ன செய்வது என்று தெரியாமல் மூளை செயலிழந்து போனாள்.

பாரதி அவளின் நிலையை பார்த்து ஆதரவாக அவளின் தோளை தொட்ட அடுத்த நிமிடம் சிலைக்கு உயிர் வந்தது போல் அவரின் கையை தட்டிவிட்டவள், தீப்பிழம்பாக அவரை முறைத்துவிட்டு வேறு எதுவும் பேசாமல் அழுதுகொண்டே தன் அறைக்கு ஓடிப் போய் கதவை சாத்திக் கொண்டாள்.

வந்து கதவை தட்டியும் திறக்கவில்லை என்று சுதிருக்கு போன் செய்யலாம் என்று கீழே இறங்கும் சமயம் மது அறைக் கதவை திறந்து வெளியே வந்த மதுவின் கையில் பெட்டியை பார்த்ததும் அதிர்ந்து நின்றார்.

''என் அப்பா அம்மாவை கொன்ற இந்த வீட்டில் இருக்க எனக்கு பிடிக்கவில்லை. உங்களை எல்லாம் பார்க்கவே பிடிக்கவில்லை. என் வயிற்றில் இருக்கிற இந்த குழந்தையாவது நல்ல மனுஷங்க இருக்கிற வீட்டில் பிறக்கணும் என்று ஆசைப்படறேன். இனியும் இந்த வீட்டில் பச்சை தண்ணி குடித்தால்... அது என் அப்பா அம்மாவுக்கு செய்கிற துரோகம். நான் கிளம்பறேன்'' என்று அவரின் பதிலை எதிர்பார்க்காமல் கிளம்பியவளை தடுக்க முடியாமல் பாரதியும், பிரபா தேவியும் பிரமை பிடித்தவர்கள் மாதிரி நின்றார்கள்.

சிறிது தூரம் சென்று திரும்பி நின்று, ''என்னைத் தேடி யாராவது வந்தால் என்னை உயிரோடு பார்க்க முடியாது. நானும் சாகணும் என்று நினைத்தால் யாருக்கு வேண்டுமென்றாலும் போன் செய்து கொள்ளுங்கள்'' என்று ஒரு குண்டை தூக்கிப் போட்டுவிட்டு படியிறங்கினாள். முகுந்துக்கு போன் செய்ய கையில் போனை எடுத்தவர்... மது சொன்ன வார்த்தையில் ஆடி போய் கையிருந்த போனை நழுவ விட....பிரபாதேவியோ அதிர்ச்சியில் திக் பிரமை பிடித்து போய் அமர்ந்திருந்தார்.

தான் செய்த காரியம் எத்தனை வருடம் கழித்து இந்த குடும்பத்தை இப்படிப் போட்டு உலுக்குகிறதே என்ற அதிர்ச்சியில் உறைந்து போனார்.



காரில் செல்லும் போதே எங்கு செல்வது என்று தீர்மானித்தவள் ரிக்கிக்கு போன செய்து ஒரு பார்க்குக்கு வரச்சொல்ல, அவளின் குரலில் இருந்த கலக்கம் புரிந்து உடனே வந்து சேர்ந்தவனிடம், விஷயத்தை கூறி அழுதாள்.

அவனுக்கும் அதிர்ச்சியாக இருந்தது. ''உன் கோபம் எனக்கும் புரியுது. இருந்தாலும் முகுந்த் இல்லாத இந்த நேரத்தில் நீ இப்படி... அதுவும் கர்ப்பிணி பெண் அனாதையாக வந்தது தெரிந்தால் அவர் மனம் என்ன பாடுபடும்'' என்று சொல்லி நிறுத்தினான்.

கொதி நிலையில் இருந்த மது, ''நான் ஏன் அவரை பற்றி யோசிக்கணும்? எல்லா உண்மையும் தெரிந்து என்னிடம் சொல்லாமல் மறைத்திருக்கிறார். அப்போ அந்த பீனா சொன்னது போல் தானே நடந்திருக்கு. நான் இந்த சொத்தை கேட்கவே இல்லையே ரிக்கி. எதுக்காக எங்களை தேடி வந்து கொடுக்கணும், அப்புறம் அந்த சொத்து எங்கேயும் போகக் கூடாது என்று மனதுக்கு பிடிக்காத ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளனும்'' என்று ஆத்திரத்தில் பேச ஆரம்பித்தவள் சுய பச்சதபாத்தில் கொஞ்ச கொஞ்சமாக குரல் தழு தழுத்து கண்களில் நீர் முட்டியது.

அவள் அழுவது தாங்காமல், ''மது ப்ளீஸ் முதலில் அழுவதை நிறுத்து. இந்த மாதிரி நேரத்தில் அழக் கூடாது அது உன் குழந்தையை பாதிக்கும். உன்னை ரொம்ப ஸ்ட்ராங் பெர்சானலிட்டி என்று நினைத்தேன். யாரோ எதுவோ சொன்னார்கள் என்று அழுகிறாயே. எனக்கு என்னவோ முகுந்த் அப்படிப்பட்டவர் இல்லை

என்று தான் மனதில் படுகிறது. இதைப் பற்றி அப்புறம் பேசலாம் ... வா முதலில் வீட்டுக்கு போகலாம்'' என அழைத்தான்.

''இல்லை ரிக்கி, நான் வீட்டுக்கு வரவில்லை . இப்போ நான் தங்குவதற்கு நீ தான் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் இந்த ஊரில் வேண்டாம்'' என்று மேலும் அதிர்ச்சியூட்டிவிட்டு, 'நான் இங்கிருப்பது தெரிந்தால் என்னை சந்திக்க முற்படுவார்கள்... எனக்கு யாரையும் சந்திக்க விருப்பமில்லை... அதனால் தான் அவர்களுக்கு தெரியாத இடத்திற்கு போய்விட வேண்டும் என்று என்று நினைக்கிறேன் . உங்களால் முடிந்தால் உதவி செய்யுங்கள். இல்லையென்றால் நானே ஏதாவது ஏற்பாடு செய்துகொள்கிறேன்'' என்று உள்ளக் குமுறலோடு சொல்பவளை பார்க்க ரிக்கிக்கு பாவமாக இருந்தது.

அவளின் பிடிவாதம் தெரியுமென்பதால் இப்போதைக்கு முகுந்துக்கு வக்காலத்து வாங்காமல் இருப்பதே சாலச் சிறந்தது என்று எண்ணியவன், நண்பனுக்கு போன் செய்து மது வந்த காரை அவள் வீட்டில் விடுமாறு பணித்துவிட்டு, அவளை அழைத்துச் சென்றான்.

சோர்ந்து போயிருந்தவளை சாப்பிட வைத்தவன், ஊட்டியில் இருக்கும் தன் நண்பருக்கு போன் செய்து விவரத்தை கூறிவிட்டு அவளை அழைத்து கொண்டு கிளம்பினான். போகிற வழியில் தன் நண்பரை பற்றி கூறிக்கொண்டே சென்றான். ஊட்டியில் அவர் ஒரு பெரிய தொழிலதிபர். அவர் மனைவி இறந்ததிலிருந்து



அங்கேயே தங்கி, அங்கிருக்கிற பழங்குடி மக்களுக்கு உதவி செய்து கொண்டு வாழ்வதை கேட்டு மனது நெகிழ்ந்தது. அதே சமயம் தன் வீட்டில் நடந்ததை நினைத்ததும் கசந்தது.

ரிக்கி பேசுவதை கேட்டுக்கொண்டு வந்தவளை வீட்டில் ஏற்பட்ட அதிர்ச்சியோ அல்லது மசக்கையின் அசதியோ, தூக்கத்தில் ஆழ்ந்தவள் நண்பரின் வீட்டை அடைந்தபொழுது தான் எழுந்தாள் .

கதவை திறந்தவர் ஐம்பது வயது மதிக்க தக்க கம்பீரமான ஒரு ராணுவ வீரர் போல இருக்க, ''இவர் மிஸ்டர் சோமநாதன்'' என்று அறிமுகப்படுத்திவிட்டு, அவருக்கும் மதுவை அறிமுகப்படுத்தினான். சோமநாதன் கம்பீரமாக சிரித்து, ''வெல்கம் மை சைல்ட்'' என்று லேசாக குனிந்து வரவேற்க, அதை ஏற்றுக்கொண்ட பாவனையில் மதுவின் இதழில் லேசாக புன்னகை நெளிந்தது.

வீடு ரொம்ப நேர்த்தியாகவும், கலை நயமாகவும் அலங்கரிக்கப்பட்டு இருக்க அதை பார்த்துக்கொண்டே உள்ளே சென்றாள். சோமநாதன் அவர்களை உட்கார வைத்துவிட்டு இதோ வந்துவிடுகிறேன் என்று உள்ளே சென்றதும் ரிக்கியிடம், ''என்ன ரிக்கி,இவரை எப்படி உங்கள் நண்பர் என்கிறீர்கள். இவர் வயதும் உங்கள் வயதும் ஒத்துப் போகவில்லையே'' என்று மனதில் தோன்றிய'தை கேட்டாள்.

ரிக்கி அடக்க மாட்டாமல் சிரித்தான். பணியாள் டீ ட்ரேயை ஏந்திவர கூடவே வந்த சோமநாதன் ரிக்கியின் சிரிப்புக்கு காரணம் கேட்டுவிட்டு கூட அவரும் சேர்ந்து

சிரித்தார். ''ரிக்கியுடன் எனக்கு ஐந்து வருடமாகத் தான் பழக்கம்.ஆனால் அவனது தொழில் திறமைக்கு நான் அடிமை. இதோ இந்த வீடு அவன் கட்டிக் கொடுத்தது தான் . அப்படி பழக்கம் ஆனது தான். வெரி நைஸ் . எந்தப் பெண்ணுக்கு அதிஷ்டம் அடிக்கப் போகிறதோ'' என்று சிலாகித்தார்.

''போதும் சார், விட்டா இப்பவே ஒரு பெண்ணை பார்த்து கட்டி வைத்துவிடுவீர்கள் போலிருக்கு. கொஞ்ச நாளாவது நிம்மதியா இருக்கேனே'' என்று சிரித்தான்.

எல்லோரும் தேனீர் அருந்தியதும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்க... அவரோ மது அவரை எப்படி அழைப்பது என்று தடுமாறுவதை கவனித்துவிட்டு, ''ஜஸ்ட் கால் மீ அங்கிள், எதுக்கு தடுமாற்றம். இந்த வீட்டை உன் சொந்த வீடு போல் நினைத்துக்கொள். எது தேவையா இருந்தாலும் என்னிடம் சொல்'' என்று அவள் தலையை வருடிக் கொடுத்தார். அதன் பிறகு கொஞ்ச நேரத்திலே மதுவின் உற்சாகம் திரும்பிவிட, அவரிடம் கலகலப்பாக பேசினாள்.

அடுத்த நாள் காலையில் ரிக்கி மதுவிடம் சொல்லிவிட்டு புறப்பட்டுவிட, மதுவுக்கு மனது பாரமாக இருந்தது. தனக்குன்னு யாருமில்லையோ என்ற எண்ணம் தலைதூக்க கழிவிரக்கத்தில் கண்களில் கண்ணீர் கோர்த்தது. ஆனால் மனதின் வைராக்கியம், 'ஏன் இவர்கள் தான் என் சொந்தமா? இனிமே என் குழந்தை மட்டும் தான் எனக்கு. நான் ஏன் அழணும். தவறு செய்தவர்கள் அவர்கள் தானே' என்று மனது பிடிவாதமாக கேட்க, கண்ணீரை உள்ளிழுத்து லானில்



போடப்பட்டிருந்த பெஞ்சில் சோர்வாக அமர்ந்துக் கொண்டாள்.

கேரளாவில் முகுந்தின் வீடு அமளி துமளி பட்டது. சுதிரும், பூபதியும் விஷயத்தை கேள்விப்பட்டு வந்ததும் தலை சுற்றிப் போனது அவர்களுக்கு. சுதிர் உடனே முகுந்துக்கு போனில் விஷயத்தை கூற, பதறியடித்து ஓடி வந்தவனுக்கு தன் மனைவி வீட்டை விட்டு சென்றதற்கான காரணம் தெரிந்ததும் ரத்தம் கொதித்தது.

எல்லோரையும் முறைத்து, ''ம்ம்ம உங்க எல்லோருக்கும் விஷயம் தெரிந்தாலும் எங்களிடம் மறைத்து இருக்கிறீர்கள்... எவ்வளவு பெரிய துரோகம்'' என்று கொந்தளித்தான்.

''இல்லை முகுந்த், இந்த விஷயம் மஞ்சுவுக்கு தெரிய வந்த போது தான் எங்களுக்கும் தெரிந்தது. ஆனால் அந்த சமயத்தில் உங்கள் கல்யாணம் நடந்து முடிந்திருந்தது. அதனால் தான் உங்களிடம் சொல்ல வேண்டாம் என்று மறைத்தோம். மற்றபடி வேறெந்த எண்ணமும் இல்லை ...' என்றதை அவன் காது கொடுத்தே கேட்கவில்லை.

''போதும். இனி எதுவும் கேட்க தயாராக இல்லை. நீங்கள் செய்ய வேண்டியதை செய்து விட்டீர்கள். இப்போ மது வீட்டை விட்டு போய்விட்டாள். அதுவும் கர்ப்பிணி பெண். இப்போது எல்லோருக்கும் திருப்தியா?'' என்று கேட்டுவிட்டு, பிரபாதேவியின் அருகில் வந்து அவரை உறுத்துப் பார்த்தான்.

''உங்கள் மேல் எவ்வளவு மரியாதையும், பாசமும் வைத்திருந்தேன். ஆனால் நீங்கள் செய்த காரியத்தை

கேட்கும் போது எனக்கே என் மேல் வெறுப்பாக இருக்கிறது. உங்க பையனை நீங்களே கொன்று... மருமகளையும் சாகடித்து, அவர்கள் பெண்ணையும் வீட்டை விட்டு போக வச்சு... ச்சே இப்போ சந்தோஷமா? திருப்தியா? '' என்று பல்லை கடித்தவன், அதற்கு மேல் பேச விருப்பம் இல்லாதவன் கிடுகிடுவென்று மாடியேறி போய்விட்டான்.

அறைக்கு சென்றவன் ட்ரெஸிங் டேபிள் மேல் ஒரு கடிதம் இருக்க, அதன் கூடவே ஒரு விடுதலை பத்திரமும், வெள்ளை பேப்பரில் கையெழுத்தும் இருக்க... எடுத்து படித்தவன் சாட்டையால் அடிபட்டது போல் துடித்துப் போனான். அதை எடுத்துக்கொண்டு வேகமாக வெளியேறியவன் ரிக்கிக்கு போன் செய்து அவனிருக்கும் இடம் தேடி சென்றான். முகுந்த் எப்படியும் தன்னைத் தேடிவருவான் என்று எதிர்பார்த்திருந்த ரிக்கி, அவனுக்காக தன்னுடைய ஆபிசில் காத்திருந்தான்.

ரிக்கியிடம் வந்த முகுந்த் இறுகி போன முகத்தோடு எதுவும் பேசாமல் கடிதத்தை நீட்ட... கடிதத்தைப் படித்த ரிக்கிக்கு முகுந்தின் மனநிலை புரிந்தது. அவன் தோளை ஆதவராக தட்டியதும் அதுவரை அடக்கி வைக்கப்பட்டிருந்த உணர்வுகள் அணையுடைத்து வெளிவர முகுந்த் தொப்பென சோபாவில் அமர்ந்து முகத்தை மூடிக் கொண்டு அழுவதை தாங்காமல் அவனை தேற்றினான்.

''ப்ளீஸ் முகுந்த், அவள் ஏதோ கோபத்தில் நீங்கள் அவளை சொத்துக்காக ஏமாற்றிவிட்டீர்கள் என்று எழுதி



இருக்கிறாள். ஆனால் சீக்கிரமே புரிந்துக் கொள்வாள்'' என்றவனை பார்த்தான்.

''நான் எப்படி ரிக்கி அவளுக்கு சொல்லி புரியவைப்பேன்? நான் ஆரம்பத்தில் அவள் மேல் கோபப்பட்டது என்னவோ உண்மை தான். ஆனால் நாளாக நாளாக நான் அவள் மேல் வைத்த காதல் தான் ஜெயித்தது. என் பாட்டி செய்த காரியம் எனக்கு இப்போ தான் தெரிந்தது. நான் அவளை ஏமாற்றிவிட்டேன் என்று சொல்ல எப்படி மனசு வந்தது?'' என்று கண்ணில் வலியுடன் சொல்லிக்கொண்டே வந்தவன் தலையில் லேசாக தட்டிக்கொண்டு, ''ஐயோ இந்த கடிதத்தை பார்த்ததும் மதுவை பற்றி மறந்துவிட்டேனே, ரிக்கி எனக்கு நிச்சயமாக தெரியும், மது உங்களை தேடி வந்திருப்பாள். எங்கே உங்கள் வீட்டில் இருக்கிறாளா? நான் அவளை பார்க்கணுமே'' என்று கண்கள் கலங்க கேட்டதும் ரிக்கியின் மனம் பாகாய் உருகியது.

அவன் கையை ஆதரவாக அழுத்தி, ''அவள் இப்போது எங்கள் வீட்டில் இல்லை. அவளுக்கு கேரளாவில் இருக்க பிடிக்கவில்லை. வேறு எங்கேயாவது போகணும் என்று அடம் பிடித்தாள். அவளை ஒரு பாதுகாப்பான இடத்தில் கொண்டு போய் விட்டு இருக்கிறேன்'' என்றான் சங்கடமாக .

அதை கேட்டு முகுந்தின் முகம் மேலும் கசங்க, ''ப்ளீஸ் முகுந்த், நிச்சயம் மது உங்களை விட்டு போக மாட்டாள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். இப்போ கோபத்தில் இருக்கும் போது சொன்னால் எதுவும் ஏறாது... இன்னும் கொஞ்ச நாள் போகட்டும், காலமே அவளை மாற்றும்'' என்றான்.

''இல்லை ரிக்கி எனக்கு இப்பவே அவளை பார்க்கணும், ப்ளீஸ் என்னை மது இருக்கும் இடத்திற்கு அழைத்து போங்களேன்'' என்று கெஞ்சினான்.

ரிக்கிக்கு பாவமாக இருந்தாலும் 'இப்போது மது முகுந்தை பார்த்தாலும் இன்னும் கோபம் அதிகமாகுமே தவிர குறையாது. போதாதிற்கு என் மேல் ஆத்திரம் வரும். அப்புறம் அங்கிருந்தும் வெளியேறிவிட்டால் நிலைமை அதை விட மோசமாகிவிடும்' என்று யோசித்தவன், அதை மறைக்காமல் முகுந்திடம் சொல்லிவிட்டு, ''கவலைப்படாதீங்க நான் அழைச்சிகிட்டு போறேன். ஆனால் தூர இருந்தே பாருங்க. கொஞ்ச நாள் வெயிட் பண்ணுங்க. நான் எப்படியும் மதுவுக்கு புரியவைக்கிறேன்'' என்றவன், முகுந்தை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

ஊட்டியில்... சோர்ந்து போயிருந்த மதுவை பார்த்துவிட்டு சோமநாதன் அவளருகில் வந்து பேசி, அவள் மனதை திசை திருப்பினார். அன்று மாலையே டாக்டரிடம் அழைத்து சென்று அவள் உடல் நிலையை சோதித்துவிட்டு, அவளை தன் குழந்தை போல கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொண்டார். மதுவுக்கு அவரது பாசம் நெகிழ வைக்க, ஒரே நாளிலேயே அவரிடம் ஒட்டிக் கொண்டாள். அடுத்த நாள் ரிக்கி வரும்போது வீட்டில் வேலை செய்கிற பெண்ணோடு நடைபயில சென்றிருந்தாள்

முகுந்தை, சோமநாதனுக்கு அறிமுகம் செய்து விட்டு கொஞ்ச நேரம் பேசிவிட்டு கிளம்ப, முகுந்த் மதுவை பார்க்காமல் எப்படி கிளம்புவது என்று தயங்கி



நிற்பதை கண்டு சோமநாதன் அவன் முதுகை ஆதரவாக தட்டி, ''கவலைப்படாதே 'யங் மேன்'. மது இங்கே தான் பக்கத்தில்எங்கோ வாக்கிங் போயிருக்கிறாள், அவளுக்குத் தெரியாமல் பார்த்துவிட்டு போங்க. கொஞ்ச நாளைக்கு நீங்க அவள் கண்ணில் படவேண்டாம். உங்களைப் பார்க்காமல் அவளால் அதிக நாள் இருக்க முடியாது. நான் மதுவை என் பேத்தி மாதிரி பார்த்துகொள்கிறேன்'' என்றதும் முகுந்த் அவர் கைகளை பிடித்து நன்றி சொல்லிவிட்டு கிளம்பினான்.

போகும் வழியில் மது எதிரே வருவதை கண்டதும் ரிக்கி காரை ஓர் ஓரமாக நிறுத்த, மது வேலைக்கார பெண்ணோடு பேசிக்கொண்டு தங்கள் காரை கடந்து போகும் வரை பார்த்துக்கொண்டிருந்த முகுந்துக்கு அவளைப் பார்த்தும் பேச முடியாத தன்னுடைய நிலைமை மிகவும் கொடுமையாக இருந்தது. முகுந்த் கண்களில் ஏக்கம் வெளிப்படையாக தெரிய, ரிக்கி அவன் கையை ஆதரவாக அழுத்திவிட்டு காரை எடுத்தான்.

அடுத்து வந்த நாட்களில் ரிக்கி அடிக்கடி மதுவை போய் பார்ப்பதும், அவளிடம் கலகலப்பாக பேசுவதும் நடுநடுவே முகுந்தின் நிலைமையை பற்றி ஜாடைமாடையாக எடுத்துக் கூறுவதுமாக செல்ல, முகுந்தோ மது வீட்டை விட்டு போனதிலிருந்து யாரிடமும் பேசாமல் பேசா மடந்தை போல் நடமாடினான். மது எங்கே இருக்கிறாள் என்று வீட்டில் இருப்பவர்கள் கேட்டாலும் தெரியாது என்ற ஒற்றை வார்த்தையோடு நிறுத்திக் கொள்வான்.

மது சோமநாதனின் தேயிலை தோட்டத்திற்கு சென்று கணக்கு வழக்குகளை கவனிப்பதிலும், பழங்குடி மக்களுக்கு தேவையான அரசாங்க உதவிகளை பெற்று தருவதில் சோமநாதனுக்கு உதவியாக இருப்பதிலும், அவர்களின் குழந்தைகளுக்கு மாலை நேரத்தில் படிப்பு சொல்லிக் கொடுப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாலும், இரவின் தனிமையில் சில நாட்கள் அவள் தலையணை நனைய தான் செய்தது. அதுவும் வயிற்றில் குழந்தை தன் பிஞ்சுக் கால்களால் எட்டி உதைக்கும் போது அதை முகுந்திடம் பகிர்ந்து கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கம் அவளை வாட்டி வதைத்தது.

ஆனால் அடுத்த நிமிடமே அந்த ஏக்கத்தை ரப்பர் வைத்து அழிப்பது போல, தன் பெற்றோரை கொன்றதை நினைவில் கொண்டு வந்து மனதில் வைராக்கியத்தை வளர்த்துக் கொண்டாள் . இதற்கும் முகுந்துக்கும் சம்மந்தம் இருக்கிறதா? இல்லையா? என்று கூட மது கேட்டு தெரிந்து கொள்ள விரும்பவில்லை.

# 16

ரிக்கி முகுந்தின் பேச்செடுக்கும் போதெல்லாம் அதை வெட்டி விட்டு, வேறு திசை பக்கம் பேச்சை திருப்ப, அவனும்... சரி, விட்டுப் பிடிப்போம் என்று பொறுமையாக இருந்தான் .



இதற்கு நடுவில் ஒரு நாள் பீனா முகுந்தை பிரிந்து மது போய்விட்டாள் என்று தெரிந்துகொண்டவள் அவன் கம்பெனிக்கே வந்து, ''என்ன முகுந்த் உன் பொண்டாட்டி ஊரை விட்டே ஓடி போயிட்டாள் என்று கேள்விப்பட்டேன். ஐயோ பாவம்... ஓடிப் போனவளுக்கு பிறந்தவள் தானே... அது தான் இவளும் உன்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போய் விட்டாள்'' என்று 'வேண்டுமென்றே அவனை நக்கலடித்தாள்.

பல்லை கடித்த முகுந்த், ''வாட் நான்சென்ஸ், யார் மதுவை பற்றி இப்படி அபாண்டமா சொன்னது உனக்கு? இனி ஒரு தடவை அவளைப் பற்றி ஏதாவது பேசினால் மரியாதை இருக்காது, கெட் லாஸ்ட் ப்ரம் ஹியர்'' என்ற அவனது கத்தலை அலட்சியபடுத்தினாள் பீனா.

''ஒ... பொண்டாட்டியை விட்டுக் கொடுக்காம பேசறிங்களோ? ஹே எனக்கு எல்லாம் தெரியும்... ' என்று அலட்சியமாக சொன்னவளை உறுத்து விழித்தான்.

''எப்படித் தெரியும் என்று பார்க்கிறாயா?'' என்று கேலியாக கேட்டுவிட்டு அவன் முறைப்பை லட்சியம் செய்யாமல், 'நான் தான் உன் பொண்டாடியிடம் சொன்னேன். பெரிசா என்னிடம் உன்னை போல் தான் கத்தினாள். அப்புறம் ஏன் வீட்டை விட்டு ஓடிப் போனா...'' என்று முடிப்பதற்குள், முகுந்தின் கை அவள் கன்னத்தை பதம் பார்த்தது.

அடித்த வேகத்தில் ஒரு மூலையில் கன்னத்தை பிடித்துக் கொண்டு சுருண்டவளிடம், ''எவ்வளவு திமிர்

இருந்தால் செய்யறதை செய்துவிட்டு என்னிடம் வந்து திமிரா பேசுவே? நான் நினைச்சா உன் அப்பாவையும், உன்னையும் உள்ளே தள்ள முடியும். ஏதோ பழகின தோஷத்திற்கு விடுகிறேன். இனி ஒரு தடவை இந்த ஊரில் உன்னை பார்த்தேன்... கொலையே செய்துடுவேன் ஜாக்கிரதை...' என்று கண்ணில் கொலைவெறியுடன் உறுமிவிட்டு பெல் அடித்து பியூனை அழைத்து, 'இவளை வெளியே தள்ளு...' என்று உத்தரவிட்டான்.

முகுந்த் இப்படி பேசுவான் என்று எதிர்பார்க்காத பீனாவுக்கு சர்வமும் ஒடுங்கிப் போக, கன்னத்தை பிடித்துக்கொண்டே அந்த இடத்தை விட்டு பியூன் தள்ளுவதற்கு முன் அவளே கிளம்பினாள்.

மதுவின் ஏழாவது மாத வளைகாப்பு அன்று ரிக்கி சோமநாதனின் வீட்டிலேயே தன் அப்பா, அம்மா, பாட்டியுடன் சென்று கிராண்டாக செய்தவன், இனியும் மது முகுந்தை பிரிந்து இருப்பது சரி வராது என்று முடிவு செய்து முகுந்திற்கும் தகவல் கொடுத்தான். மதுவிற்கு வளைகாப்பு என்றதும் தன் வீட்டில் எவ்வளவு பெரிய விழா மாதிரி கொண்டாட வேண்டியதை யாரோ ஒருவர் வீட்டில் மிக எளிமையாக, அதுவும் கணவனுக்கு கூட தெரியாமல் நடக்கிறது என்றதும், முகுந்தின் மனது தூள் தூளாக உடைந்து போனது.

அதே சமயம் கேரளாவில் மதுவின் வளைகாப்புகாக வைர வளையல் மற்றும் நகை செட்டுகளை வாங்கி வைத்திருந்த பூபதி... தன் பேத்தி எங்கே இருக்கிறாள் என்று கூட தெரியாமல்... அந்த



நகைகளை வருடி ஊமையாய் அழுவதை தாங்க முடியாமல் போனது. போலீசில் ரகசியமாக மதுவை தேட ஏற்பாடு செய்யலாம் என்ற தந்தைக்கு, ''என் மனைவியைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம். அப்படி ஏதாவது செய்தால் நானும் இந்த வீட்டை விட்டு போய்விடுவேன். இதற்கு சம்மதம் என்றால் உங்களிஷ்டம்'' என்று கடுமையாக சொல்லிவிட, யாரும் எதுவும் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

சோமநாதனும் அவருக்கு தெரிந்த எல்லோரையும் அழைத்து பெரிய அளவில் விழாவை சிறப்பாக நடத்த, சிவகாமி அம்மாள் அவளுக்கு தங்க வளையல்களை அடுக்கவும், அதை தொடர்ந்து எல்லோரும் கண்ணாடி வளையல்களை அடுக்கி, நலங்கு வைப்பதை பார்த்துக் கொண்டிருந்த ரிக்கிக்கு, முகுந்தை நினைத்து வருத்தமாக இருந்தது.

வளைகாப்பு நல்லபடியாக முடிய, மதுவுக்கு ஏனோ அன்று முகுந்தின் நினைவு அதிகமாக வாட்ட, என்ன தான் கோபத்தை இழுத்துப் பிடித்தாலும் நாளாக நாளாக அந்த கோபம் மஞ்சள் வெயில் பட்ட பனித்துளி மாதிரி கரைந்து போனது.

வளைகாப்பு முடிந்து எல்லோரும் சென்றதும் தனிமையில் முகுந்தை நினைத்தபடி அமர்ந்தவளின் அருகில் வந்தமர்ந்த ரிக்கி, 'மது..' என்றழைத்தான் மென்மையாக.

அவனின் அழைப்பில் நிமிர்ந்தவளின் கண்களில் கண்ணீர் கரை கட்டியிருந்ததை துடைத்துவிட்டு, ''மது

நான் சொல்வதை கோபப்படாமல் பொறுமையாக கேட்பாயா?'' என்றான் வேண்டுதலாக.

மது சரி என்பதாக தலையசைத்ததும், ''மது, இப்போதும் உன் மனசில்... முகுந்த் உனக்கு துரோகம் செய்திருப்பார் என்று நினைக்கிறாயா? அவரின் காதல் உண்மையில்லை என்று நினைக்கிறாயா? எங்கே உன் நெஞ்சை தொட்டு சொல்'' என்றான் சவாலாக.

மது ஏற்கெனவே முகுந்தின் நினைவில் கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கி கொண்டிருக்க, இந்த சமயத்தில் ரிக்கியின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் தடுமாறிவிட்டு, பொதுவாக ''தெரியாது...'' என்றாள்.

''எனக்கு இந்த பதில் தேவையில்லை... என் கண்ணை பார்த்து சொல். முகுந்த் உன்னை ஏமாற்றி இருப்பார் என்று அப்போது நம்புகிறேன்'' என்று லேசான கோபத்தோடு கேட்க, அப்போதும் மது பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தாள்.

ரிக்கி சற்று அலுப்பாக, ''மது நீ புத்திசாலி பெண்ணென்று நினைத்தேன்... ஒருவரின் காதல் பொய்யானது என்றால் அது சீக்கிரமே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாதா...? முகுந்த் விஷயத்தில் நீ நினைப்பது தவறு என்று உனக்கு புரியவில்லையா? முகுந்திற்கு இந்த விஷயம் தெரியுமா? இல்லையா என்று ஒரு வார்த்தை அவரிடம் கேட்டாயா? கோர்ட்டில் கூட குற்றவாளிகளை விசாரித்த பிறகு தான் தண்டனை கொடுப்பார்கள். ஆனால் நீ இதை பற்றி முகுந்திடம் விசாரிக்காமல் அவரை பிரிந்து வந்து வாழ்ந்து



கொண்டிருக்கிறாய் . இந்த வாழ்க்கையில் உனக்கு என்ன சந்தோஷம் கிடைத்தது சொல்'' என்றான்.

''அப்போ முகுந்துக்கு இந்த விஷயம் தெரியாது என்று சொல்கிறீர்களா? இவ்வளவு பாசமாக இருந்த பாட்டி கூட பேரனிடம் உண்மையை சொல்லியிருக்க மாட்டார்களா?'' என்று அவனை திருப்பி கேட்டாள்.

''எக்ஸாட்லி மது... நீ சொன்ன மாதிரி தான் நடந்திருக்கு. ஏதோ கோபத்தில் பிரபாதேவி பாட்டி கோபத்தில் ஒரு வார்த்தை தவறான ஆளிடம் சொல்ல, அது வினையாக அமைந்து விட்டது. இதை எப்படி நியாயத்தின் பக்கம் பேசும் பேரனிடம் சொல்ல தைரியம் வரும். இதை யாரிடமும் சொல்ல முடியாமல் அவர்கள் எத்தனை வருடம் மனதில் போட்டு குமைந்து கொண்டிருந்திருக்கிறார்கள். இத்தனை வருடங்கள் கழித்து அதை பல்லவி அத்தையிடம் அன்று இறக்கி வைக்க... தற்செயலாக அதை கேட்ட மஞ்சு அத்தை இறந்தது பரிதாபமான ஒன்று தான்.

அதற்காக அவர்கள் மனதளவில் நிறைய தண்டனை அனுபவித்து விட்டார்கள். இது போதாது என்று நீயும் தண்டிக்கிறாய். அதுக்காக நான் அவர்கள் பக்கம் பேசுகிறேன் என்று நினைத்து விடாதே. உன் கோபத்தை தவறு என்று சொல்லவில்லை ... ஆனால் அதே சமயம் நீ முகுந்தை தவறாக நினைத்திருக்கிறாய் என்று தான் சொல்ல வருகிறேன் .

பாவம் முகுந்த். இந்த வளைகாப்பு அவங்க வீட்டில் கோலாகலமாக நடந்திருக்க வேண்டியது. இன்று அவர் இல்லாமல் நடந்து முடிந்திருக்கு. இதற்கு

மேலும் அவருக்கு என்ன தண்டனை தரப்போகிறாய்? யோசித்து நல்ல முடிவாக எடு. அதை கொஞ்சம் சீக்கிரமாகவே எடு'' என்றான் அழுத்தமாக.

''சாரி ரிக்கி, என்னால் எதுவும் இப்போ யோசிக்க முடியவில்லை. கொஞ்ச நேரம் என்னை தனியாக விடுங்கள்'' என்று பரிதாபமாக சொன்னதும், ''நோ ப்ராப்ளம், டேக் யுவர் ஓன் டைம், பட் அது நல்ல முடிவா மட்டும் இருக்கணும் . உன் முடிவுல தான் எல்லோருடைய சந்தோஷமும் அடங்கியிருக்கு'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்றான்.

அவன் சென்ற திக்கையே கொஞ்ச நேரம் வெறித்து பார்த்துவிட்டு, அவன் சொன்னதை யோசிக்க ஆரம்பித்தவளின் தோள் மேல் ஒரு கை விழ திடுக்கிட்டு திரும்பியவள் சிவகாமி அம்மாளை பார்த்ததும் பதட்டம் தணிந்து லேசாக புன்னகைத்தாள் .

ஆனால் அவளின் புன்னகை ஜீவனே இல்லாமல் இருப்பதை கண்டவர், அவளின் தலையை வருடி, ''மது செல்லம், ரிக்கி பேசியதை கேட்டுக்கொண்டு தான் இருந்தேன். ஏதோ தவறு நடந்துவிட்டது. அதை எப்படி சரி செய்யலாம் என்று யோசிப்பதை விட்டு பெரிதாக்குவதில் யாருக்கு என்ன லாபம் சொல் பார்க்கலாம். ரிக்கி முதலில் என்ன பிரச்சனை என்று எங்களிடம் சொல்லவில்லை. நேற்று தான் எல்லாவற்றையும் சொன்னான். கேட்டதிலிருந்து மனசே சரியில்லை. மஞ்சு இறந்த போது இருந்த கஷ்டத்தை விட, நீ வீட்டை விட்டு வெளியேறி இப்படி மாப்பிள்ளையை பிரிந்து வாழ்கிறாய் என்பது தான் மிகவும் வருத்தமாக இருக்கு.



நான் பார்த்த வரைக்கும் முகுந்த் மிகவும் நல்ல பிள்ளைமா... இதை நான் உனக்கு சொல்லவேண்டிய அவசியமே இல்லை. நீ அந்த பிள்ளை கூட வாழ்ந்தவள். எவளோ ஒருத்தி சொன்னாள் என்று நம்புகிறாயே, உன் மனசை வென்றவனை ஏன் உன்னால் நம்ப முடியாமல் போனது. அப்போ நீ உன் கணவனை உண்மையாக காதலிக்கவில்லையா?'' என்று நிறுத்த, மது அதிர்ந்தாள்.

''என்ன பாட்டி என்னை பார்த்து இப்படி சொல்றீங்க. நான் முகுந்தை மனசார நேசித்தேன். இன்னும் நேசித்துக்கொண்டு தான் இருக்கிறேன். உங்களால எப்படி என்னை பார்த்து எப்படி சொல்ல முடிகிறது. என் மனசை பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று படபடவென்று ஆத்திரத்துடன் பொரிய, அவளின் கோபத்தை சட்டை செய்யாமல் சிவகாமி அம்மாள் சாவகாசமான புன்னகையோடு அவளையே பார்த்தார்.

''உன்னை ஒரே ஒரு வார்த்தை தான் கேட்டேன். அதற்கே நீ இப்படி ஆத்திரபடுகிறாயே இதே மாதிரி தானே அவருக்கும் இருந்திருக்கும். உன் லெட்டர் படித்து எந்த அளவிற்கு துடித்து போயிருக்கும் அந்த பிள்ளை. அதை நினைத்து பார்த்தாயா? மனசு என்பது எல்லோருக்கும் ஒரே மாதிரி தான் மது. இது உன் வாழ்க்கை பிரச்சனை. குப்பையை கிளற கிளற நாற்றம் தான் அடிக்கும். அதை கிளறாமல் இருப்பது தான் வாழ்க்கைக்கு நல்லது. பெண்கள் மூங்கில் மாதிரி... அவர்களால் விறைத்து இருக்கவும் முடியும்,

புல்லாங்குழலாக வளைந்து கொடுக்கவும் முடியும். ஆனால்... எந்த எந்த சமயத்தில் எப்படி இருக்கணும் என்று உனக்கு நான் சொல்லித் தர தேவையில்லை. நான் என்ன சொல்ல வருகிறேன் என்று புரிந்து கொள்வாய் என்று நினைக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு வேறு எதுவும் பேசாமல் எழுந்து உள்ளே சென்றார்.

மதுவுக்கு முதன் முதலாக நாம் தவறு செய்துவிட்டோமோ, யார் மேலோ இருந்த கோபத்தை முகுந்தின் மீது காட்டிவிட்டேமோ? என்று தோன்றியதுமே, 'ஐயோம முகுந்த் எப்படி இருக்கிறாரோ? அவரை பார்க்கணுமே... எப்படி அவர் முகத்தில் முழிப்பது' என்று கலங்கி யாரிடமும் எதுவும் பேசாமல் தன் அறைக்கு செல்ல எத்தனிக்க அவள் அறையின் வாசற்படியில் கைகளை கட்டிக்கொண்டு முகுந்த் நிற்பதை கண்டதும் வியப்பில் விழிகள் விரிய, ஒரு கணம் இதயம் இனிமையாக தூக்கி போட, அடுத்த கணமே, 'ச்சே நாம் முகுந்தை பார்க்கணும் என்று நினைத்ததால் வந்த பிரமையாக இருக்கும்' என்று அவனை தாண்டி செல்ல முயன்றாள்.

தாண்டி சென்றவளின் கையை முகுந்த் பிடித்ததும் தான் இது பிரமையில்லை நிஜம் என்று உணர்ந்தவள் அதற்கு மேல் தாக்கு பிடிக்க முடியாமல், ''முகுந்த்'' என்ற கதறலோடு அவன் மார்பில் புதைய... கோபப்படுவாள், திட்டுவாள் என்று எதிர்பார்த்து இருந்தவனுக்கு மதுவின் கதறல் அதிர்ச்சியை தர, அவளை ஒரு குழந்தை போல அணைத்துக் கொண்டான் .



கொஞ்சம் கொஞ்சமாக மதுவின் அழுகை குறைந்து விசும்பல் மட்டுமே வர, தன்னிடமிருந்து விலக்கி ''ஐ அம் சாரி டா, நடந்த எதுவும் எனக்கு தெரியாது, நிச்சயம் நான் உனக்கு துரோகம் செய்யவில்லை மது'' என்று கண்கள் கலங்க கூறியவனின் வாயை தன் கையால் பொத்தினாள்.

''இல்லை முகுந்த். நான் தான் உங்களிடம் சாரி கேட்கணும், ஏதோ கோபத்தில் உங்களை பற்தவறாக யூகித்து அப்படி ஒரு லெட்டரை எழுதி வைத்துவிட்டேன் . சாரி முகுந்த்'' என்று மது வருதினாள்.

அவளின் வருத்தம் தாங்காமல், ''பரவாயில்லை மது, உன் நிலையில் யார் இருந்தாலும் இப்படி தானே செய்திருப்பார்கள். எனக்கு உன் மீது எப்பவும் கோபமே வராது. சின்ன குழந்தை தவறு செய்தால் அதை வெறுக்கவா முடியும். அந்த மாதிரி நீயும் எனக்கு ஒரு குழந்தைடா'' என்று அவளின் க்னனத்தில் முத்தமிட்டு மீண்டும் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொள்ள ,மது அவனின் அணைப்பில் சங்கமம் ஆனாள்.

அழுகையும் சமாதானமுமாக நிமிடங்கள் கரைய, ரிக்கியின் கைதட்டல் சத்தம் கேட்டு இருவரும் தங்கள் உலகத்தை விட்டு வெளியே வந்தார்கள். மது கண்களை துடைத்துக் கொண்டு வெட்கத்துடன் சிரிக்க, முகுந்த் ரிக்கியின் கையை பிடித்து, ''என் மதுவை பத்திரமா என்னிடம் திருப்பி தந்ததற்கு ரொம்ப தேங்க்ஸ் ரிக்கி. இதற்கு மேல் என்னிடம் வார்த்தை இல்லை'' என்று நெகிழ்ந்து போனான்.

''ஹே முகுந்த், இதற்கு எதுக்கு நன்றியெல்லாம். பார்க்க போனால் நாம் சோமநாதன் சாருக்கு தான் நன்றி சொல்லணும். அவர் தான் மதுவை பத்திரமாக பார்த்துக்கொண்டார்'' என்றான்.

''நிச்சயமா ரிக்கி, அவருக்கும் நான் கடமைப்பட்டு இருக்கிறேன்'' என்று கூறி அவரிடம் தன் நன்றியை தெரிவித்தான்.

இருவரும் ஒன்றாக சேர்ந்துவிட்டார்கள் என்று அறிந்ததும் சோமநாதன் மகிழ்ச்சியுடன், ''நீங்க ரெண்டு பேரும் எப்போதும் இதே போல் சந்தோஷமாக வாழவேண்டும் . எப்போதும் அடுத்தவர்கள் பேச்சை அவ்வளவு சுலபத்தில் நம்பக்கூடாது . எந்த பிரச்சனையாக இருந்தாலும் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள். பேச்சு தான் எப்போதுமே எல்லாவற்றிக்கும் ஒரு தீர்வை கொடுக்குமே தவிர, கோபமும் ஆத்திரமும் தீர்வை கொடுக்காது'' என்று அவள் தலையை வருடி சொன்னார்.

''உண்மை தான் அங்கிள், இனிமேல் அந்த மாதிரி நடக்காது'' என்று உறுதியளித்தவளின் முகத்தை வழித்து முத்தமிட்ட சிவகாமி அம்மாள், ''எனக்கு தெரியும் என் மது குட்டி சொன்னால் புரிந்து கொள்வாள் என்று. அதே மாதிரி புரிந்து இப்போ கணவனோடு உன்னை சேர்ந்து பார்க்கும் போது ரொம்ப சந்தோஷமாக இருக்குமா. இது தான் மஞ்சுவின் ஆசை கூட . நீங்கள் எப்போதும் இப்படியே சந்தோஷமாக இருக்கணும் '' என்று நெகிழ்ந்து போய் சொன்னதும் முகுந்தும் மதுவும் அவர் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினார்கள்.



முகுந்த் மதுவிடம், ''வீட்டில் எல்லோரும் உன்னை பார்க்காமல் ரொம்பவும் ஏங்கி போய் இருக்கிறார்கள். வீட்டுக்கு போகாலாமா உனக்கு ஏதும் ஹெல்த் பிரச்சனையில்லையேம'' என்று அனுமதி கேட்டதும், மது ரிக்கியையும், சோமநாதனையும் பார்த்துவிட்டு சம்மதம் சொன்னாள்.

சோமநாதனுக்கு மது பிரிந்து போகிறாள் என்று ஒரு பக்கம் வருத்தம் இருந்தாலும் அவள் கணவனோடு சந்தோஷமாக இருக்கப்போகிறாள் என்பதே அவருக்கு சந்தோஷத்தை அளித்தது. ஆனாலும் ''இன்று தான் வளைகாப்பு நடந்திருக்கு முகுந்த், இன்று ஒரு இரவு தங்கிவிட்டு நாளை காலையில் புறப்படுங்களேன்'' என்றார் வேண்டுதலாக.

அடுத்த நாள் மது, முகுந்துடன் புறப்பட, ''சாரி முகுந்த் உங்க எல்லோரையும் நான் ரொம்ப கஷ்டப்படுத்திவிட்டேன். தாத்தா பாவம், பாட்டியும் பாவம், ஏதோ தெரியாத செய்த ஒரு காரியத்திற்காக எந்தளவு வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது போதாது நான் வேறு அவர்களை மிகவும் வேதனைப்படுத்திவிட்டேன்'' என்று ஆயிரத்து ஓராவது முறையாக வருத்தப்பட்டாள்.

முகுந்த், ''ஹே மது இன்னும் எத்தனை முறைடா இதையே சொல்லி மன்னிப்பு கேட்பாய். இதில் யார் தப்பும் இல்லை. ஏதோ விதி நம் வாழ்க்கையில் விளையாடிவிட்டது. அவ்வளவு தான், நானும் கோபத்தில் அவர்களிடம் பேசுவதே இல்லை. அதுவும் அவர்களுக்கு வேதனையாக தான் இருக்கும். இப்போது

உன்னை பார்த்தாலே போதும். நான் பேசவில்லை என்ற வேதனை கூட போய்விடும்'' என்று சிரிக்க மதுவும் நிம்மதியுடன் சிரித்தாள்.

சுதிர் மதியம் சாப்பிட வீட்டுக்கு வந்தவர் பாரதியிடம், ''முகுந்த் எங்கே ...?' என்றார்.

''மது வீட்டை விட்டு போனதிலிருந்து அவன் எங்கே நம்மிடம் பேசுகிறான். அவன் எங்கே போகிறான்? எங்கே வருகிறான் என்று கூட சொல்வதில்லை. ம்ஹும் எப்படி இருந்த பிள்ளை. இப்படி அடியோடு மாறிவிட்டான். அவனை சொல்லி குற்றமில்லை. நாமும் அதற்கு காரணமாகிவிட்டோம்'' என்று பெருமூச்சு விட்டபடி அவருக்கு சாப்பாடு பரிமாற தொடங்க,

''மாமா, அத்தை எல்லாம் எங்கே? அவர்கள் சாப்பிட்டார்களா? திலீப் சாப்பிட்டானா?'' என்று கேட்டுவிட்டு ஒரு காலத்தில் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து பேசியபடி சாப்பிட்டோம். ஆனால் இன்று யார் சாப்பிட்டார்கள், யார் சாப்பிடவில்லை என்று கேட்டு தான் தெரிந்து கொள்ளவேண்டி இருக்கிறது. என்று தான் இதற்கு விடிவு காலம் பிறக்குமோ ?'' என்று அவரும் வருத்தபட்டார்.

'எல்லாம் ஒரு பெண்ணின் சாபம். ஒரு பாவமும் அறியாத பெண்ணை துன்புறுத்தி அமங்கலியாக்கின பாவம் தான் நம்மை இப்படி வாட்டி எடுக்கிறது. அப்பா, அம்மா செய்த பாவம் பிள்ளைகளை வந்து சேரும் என்று சும்மாவா சொன்னார்கள். அது தான் இன்று நாம் அனுபவிக்கிறோம். நாம் அனுபவித்தால் கூட



பரவாயில்லை, நம் மகனும் சேர்ந்து அல்லவா அனுபவிக்கிறான் அதை நினைத்தால் தான் வேதனையாக இருக்கிறது'' என்றார்.

''என்ன செய்வது. ஆனாலும் மேலும் மேலும் தெரியாமல் செய்த தவறுக்காக ஒருத்தரை எத்தனை முறை தான் தூக்கில் போடுவது. அத்தை ஏற்கெனவே பாதி உயிராக தான் இருக்கிறார்கள். இதில் மாமாவும், முகுந்தும் பேசுவதே இல்லை. அதுவே அவர்களுக்கு ஆயிரம் ஆயுள் தண்டனைக்கு சமம். இதற்கு மேலும் நாம் இதை பற்றி பேசுவது அநாகரிகம்'' என்று கூறிவிட்டு, ''சரி நான் போய் மாமாவையும், அத்தையையும் அழைத்து வருகிறேன்''என்று எழுந்து சென்றார்.

பாரதியும் அவரை பின் தொடர, கட்டிலில் சோர்ந்து போய் படுத்திருந்த பிரபாதேவியை எழுப்பி சாப்பிட அழைக்க, அவர் பதிலே சொல்லாமல் அப்படியே படுத்துகிடந்தார். பாரதி அவரருகில் சென்று அவரை தொட்டு, ''அம்மா எழுந்து வாங்க, எத்தனை நாளைக்கு தான் இப்படி அரை பட்டினி, கால் பட்டினி என்று கிடப்பீங்க. உங்களுக்கு உடம்பு வேறு சரியில்லை. சாப்பிட்டால் தானே வேளா வேளைக்கு மருந்துகள் சாப்பிட முடியும் '' என்று அக்கறையுடன் கூறினார்.

''ம்ம் நான் இனிமே மருந்து சாப்பிட்டு எதுக்கு என் உயிரை தக்க வைச்சிக்கணும்''. நான் செய்த கொடுமைக்கு எனக்கு நானே தண்டனை கொடுத்துக்கிறேன். யாரும் என்னை தொல்லை

செய்யாதீர்கள். என் மது செல்லம் என்றைக்கு இந்த வீட்டுக்கு வருகிறாளோ, அன்று நான் உயிரோடு இருந்தால் சாப்பிடுகிறேன். அதுவரைக்கும் எனக்கு எதுவும் வேண்டாம்'' என்று கண்களில் கண்ணீர் வழிய சொல்வதை கேட்க சகிக்காமல் பாரதியின் கண்களில் கண்ணீர் சுரந்தது.

சுதிர் அதற்கு மேல் என்ன சொல்வது என்று தெரியாமல் தவித்து விட்டு,பாரதியிடம் ''நீ வேறு அழுது அவர்கள் மனதை பலமிழக்க செய்யாதே. எப்படியாவது சமாதானம் செய். நான் போய் மாமாவை கூப்பிடுகிறேன்'' என்று அவரை தேடிச் சென்றார்.

பூபதியும் என் பேத்தியை பார்க்காமல் நான் சாப்பிட மாட்டேன் என்று அடம்பிடித்தார். ஏற்கெனவே சாப்பிடாமல் அவருக்கு சுகர் அதிகமாகியிருந்தது. பிரபாதேவி செய்த காரியத்தை அடிக்கடி நினைத்து பி.பி. எகிறி அவரை ஒரு நோயாளி மாதிரி ஆக்கியிருந்தது. அதை எடுத்து கூறி அவரை சாப்பிட வற்புறுத்தி அழைத்தும் பூபதி சின்ன குழந்தை மாதிரி அடம்பிடிப்பதைக் கண்டு, 'கடவுளே இவர்கள் இரண்டு பேரையும் எப்படி தான் சமாளிப்பதோ?' என்று மலைத்துப் போனார்.

வெளியே கார் சத்தம் கேட்கவும் சுதிரும், பாரதியும் ஒரே நேரத்தில் வெளியே வந்து வாசலுக்கு விரைந்தவர்கள், காரிலிருந்து இறங்கிய முகுந்த், காரை சுற்றிவந்து கதவை திறக்க, அதிலிருந்து மது இறங்குவதை கண்டதும் இருவர் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்ப் போட்ட மாதிரி பிரகாசமாகியது. பாரதி



ஓடிப் போய் மதுவை கட்டியணைத்துக் கொள்ள, மதுவும் அவரின் அணைப்பில் அடங்கினாள்.

பாட்டியையும், தாத்தாவையும் தேடி செல்ல, பேத்தியை கண்டதும் யானை பலம் வந்துவிட, கண்கள் பிரகாசமாக எழுந்து வந்து அவளை தழுவிக்கொள்ள, அவரின் கண்ணீரை துடைத்தவள், ''பாட்டி எங்கே தாத்தா? அவங்க எப்படி இருக்காங்க?'' என்று கேட்டாள்.

''அவளை பற்றி என்னிடம் கேட்காதே மது. எல்லா குழப்பத்திற்கும் காரணம் அவள் தான்'' என்று எரிச்சலுடன் சொன்னதும், '' இனிமே அவங்க மேலே கோபப்படாதீங்க. விதி அவங்களை அந்த மாதிரி பேசவைத்து, ஏதோ நடந்துவிட்டது. அதற்காக அவங்க நிறைய கஷ்டப்பட்டுட்டாங்க பாவம். இனி நீங்க அவங்களிடம் எப்போதும் போல ஒழுங்கா பேசணும். ஒருவரை மன்னிப்பது தான் உங்களை மாதிரி பெரியவர்களுக்கு அழகு. இது உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதே இல்லை'' என்றாள் .

அவள் பிரபாதேவிக்கு வக்காலத்து வாங்கி பேசுவதை கண்டு அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கி போக, ''ஆமாடா செல்லம் உனக்கிருக்கிற பெருந்தன்மை கூட எனக்கில்லாமல் போய்விட்டது. என்ன செய்வது வயசாகிவிட்டது அல்லவா, அது தான் மூளை மழுங்கிவிட்டது. இனிமே என் பேத்தி சொல்படியே நடந்துக்கிறேன். வா போய் உன் பாட்டியை பார்க்கலாம். அவளும் நீ போனதிலிருந்துசாப்பிடாமல் தான் இருக்கிறா''

என்றவர் பாரதியிடம், ''நீ போய் சாப்பாடு எடுத்து வைம்மா, நானும் மதுவும் உன் அம்மாவை அழைத்து வருகிறோம்'' என்று கூறியதும் பாரதி சந்தோஷத்தோடு சென்றார்.

''உன் உடம்பு எப்படிமா இருக்கிறது . உன் வளைகாப்பை நான் எப்படி எல்லாம் நடத்தணும் என்று கனவு கண்டேன் தெரியுமா? எங்கே அது நடக்காமல் போய்விடுமோ என்று பயந்தே போயிட்டேன்'' என்று கூறிக்கொண்டே வந்தவரின் கண்ணில் மதுவின் கையில் கண்ணாடி வளையலை கண்டதும், கேள்வியாக நோக்கினார்.

மது கொஞ்சம் குற்ற உணர்ச்சியுடன், ''ஆமாம் தாத்தா நேற்று தான் வளைகாப்பு நடந்தது'' என்றாள். பூபதியின் முகத்தில் ஏமாற்றம் தெரிய, ''அதனால் என்ன தாத்தா, உங்க ஆசைக்காக மறுபடியும் வளைகாப்பு செய்யுங்கள். நான் என்ன வேண்டாம் என்றா சொல்ல போகிறேன்'' என்று சமாதானமாக கூறியதும், மீண்டும் அவர் முகத்தில் மகிழ்ச்சி குடியேறியது.

இருவரும் உள்ளே செல்ல பிரபாதேவி மீண்டும் பாரதி தான் வந்திருக்கிறார் என்று எண்ணி திரும்பி கூட பார்க்காமல் விட்டத்தை பார்த்தபடி அமர்ந்திருக்க, கவலையிலே சரியாக சாப்பிடாமல், உடல் மெலிந்து, கன்னம் ஒட்டி போய் நிரம்பவும் வயதான தோற்றம் போல் இருந்த பாட்டியை பார்த்ததும் பரிதாபம் சுரக்க, ''பாட்டி...'' என்று அவரை கட்டி கொண்டாள்.



திடீரென்று மது எதிரில் வந்து தன்னை அணைத்துக் கொண்டதும் நம்ப முடியாத ஆச்சர்யத்துடன், அவளை தன்னிடமிருந்து விலக்கி, ''மதும...'' என்று கண்ணீர் வழிய அழைக்க, அவரின் கண்ணீரை துடைத்தாள்.

''ஆமாம் பாட்டி நான் தான்... உங்க பேத்தி தான். எனக்கு உங்க மேலே இப்போ எந்த கோபமும் இல்லை. போதுமா? எங்கே பழைய பாட்டியாய் சிரிங்க'' என்று சிரித்தபடி சொன்னாள்.

அவள் அப்படி கேட்டதும், அவர் இன்னும் உடைந்து போய், ''ஐயோ செல்லம் உனக்கு நான் எவ்வளவு பெரிய துரோகம் செய்திருக்கிறேன் . ஆனால் நீ என்னை எப்படி இவ்வளவு ஈசியாய் மன்னித்துவிட்டு என் மேல் எந்த கோபமும் இல்லை என்கிறாயே. இவ்வளவு நாள் நான் பட்ட கஷ்டத்தை விட இந்த வார்த்தை தான் என்னை செருப்பால் அடித்த மாதிரி இருக்கு'' என்று அழுதார்.

''என்ன தாத்தா பார்த்துகிட்டே நிற்கறீங்க, பாட்டியை சமாதானப்படுத்துங்க'' என்று உத்தரவிட்டதும், பூபதிக்குமே அவரின் அழுகை அவர் மனசை கரைய வைக்க, அவர் தோளை தொட்டு, ''இங்கே பார் தேவி. நம்ம மது நம்மிடம் திரும்ப வந்துவிட்டாளே. அப்புறமும் ஏன் அழுகிறாய்? நீ கஷ்டபட்ட தெல்லாம் போதும். நானும் உன்னை ரொம்ப வருத்திவிட்டேன். அழாதே. எல்லாத்தையும் மறந்து இன்றிலிருந்து ஒரு புது வாழ்க்கையை தொடங்குவோம்'' என்று அவரின் கண்களை துடைக்க,

அவர் கைகளை பிடித்துக் கொண்டு, ''என்னை மன்னிச்சுடுங்க'' என்று மீண்டும் ஆரம்பித்தார்.

''பாட்டி போதும் அழுகை. வாங்க சாப்பிடலாம். எனக்கு பசிக்குது'' என்றதும், பிரபாதேவி அரக்க பறக்க கண்களை துடைத்துக் கொண்டு, ''ஐயோ என் செல்லம் எப்படி இருக்கு என்று கூட கேட்காமல் என்னை பற்றியே பேசி கொண்டிருக்கிறேனே?'' என்று தன்னையே குற்றம் சொல்லிக்கொண்டு, அவள் வயிற்றை தொட்டு, ''என் கொள்ளு பேத்தி எப்படி இருக்கிறாள் மது ...?' என்னும் போதே அவர் கண்கள் ஆசையில் மின்னியது.

பூரிப்புடன் ''ம்ம்ம் உங்க பேத்தி சௌக்கியமா இருக்கிறா? இன்னும் இரண்டே மாதத்தில் உங்களை எல்லாம் பார்க்க வந்துவிடுவாள்'' என்றவளை ஆசையுடன் முத்தமிட்டார்.

சாப்பிட வீட்டிற்கு வந்த திலீப், மதுவை கண்டதும் ஒரு நிமிடம் கண்கள் கலங்கி அவளைப் பற்றி விசாரித்ததும், நீண்ட நாளைக்கு பிறகு மீண்டும் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட, அந்த இடத்தில் மீண்டும் குதூகலம் துள்ளி விளையாடியது. மது திரும்பி வந்துவிட்டாள் என்ற சந்தோஷத்தைக் கொண்டாட செய்திருந்த அடை பிரதமனை ஆளாளுக்கு ஒரு வாய் மதுவுக்கு அன்போடு ஊட்டிவிட, இவர்களையா நாம் பிரிந்து போனோம் என்று வருந்தினாள் .

சாப்பிட்டு முடிந்ததும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருக்க நீண்ட தூரம் பயணம் செய்தாதால் மது அமர முடியாமல் இடுப்பு வலியால்



அவதிப்படுவதை கண்டு பூபதி, அவ்ளை அழைத்துக்கொண்டு செல்ல சொல்ல முகுந்த் அவளை ஒரு குழந்தை போல மாடிக்கு தூக்கிக் கொண்டு சென்றான்.

மதுவுக்கு மேலே சென்றதும் வெட்கத்தில் முகம் சிவக்க, ''என்ன முகுந்த் எல்லோரின் முன்னாலே இப்படி செய்யறீங்களே'' என்று சிணுங்கினாள்.

அவளை இறக்கி விடாமலே, ''என்னை இவ்வளவு நாள் தவிக்க வைச்சதுக்கு இது தான் தண்டனை'' என்று அவள் மூக்கோடு மூக்கை உரச மது அவன் கழுத்தில் கையை கோர்த்து அணைத்துக் கொண்டாள்.

சிறிது நேரம் கழித்து அவளை இறக்கிவிட்டு அவள் வயிற்றை தொட்டு.''நம்ம மதுஜா எப்படி இருக்கா? டாக்டரிடம் ஒழுங்கா செக் அப் சென்றாயா?'' என்று விசாரிக்க, அவன் கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டு குழந்தை உதைப்பதையும் அப்போது ஏற்படும் அனுபவங்களையும் கண்கள் விரிய ஆச்சர்யத்துடன் சொல்வதை முகுந்த் கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு ரசித்து கொண்டிருந்தான்.

திடீரென்று, ''மது எனக்கொரு சந்தேகம்?'' என்றதும் கேள்வியாக அவனை பார்த்தாள்.

''உனக்கு குழந்தை பிறந்ததும் என்னை கவனிப்பியா இல்லை டீலில் விட்டுவிடுவியா... ?'' என்று வெகுவாக சீரியசாக கேட்க, அவன் கேள்விக்கு சிரித்துவிட்டு அவன் முடியை ஆசையுடன் கலைத்துவிட்டாள்.

''என் முதல் குழந்தையே நீங்க தானே. உங்களுக்கு அப்புறம் தானே நம்ம குழந்தை'' என்று குனிந்து அவன் இதழில் முத்தமிட, முகுந்த் சட்டென்று அவளை அணைத்து மூச்சு திணற முத்தமிட்டான்.

அவன் முத்தமிட்டு விலகியதும், ''என்ன முகுந்த் இப்படி செய்துடீங்க?'' என்று கொஞ்சலாக கேட்டாள்.

பாவமாக முகத்தை வைத்துக்கொண்டு, ''ம்ஹூம் இதை தவிர வேறு என்ன செய்ய முடியும்?'' என்றதும் அவனின் ஏக்கத்தை பார்த்து மது கலகலவென்று சிரித்துவிட்டு, ''இன்னும் ஐந்து மாதம் வெயிட் பண்ணுங்க. அப்புறம் உங்க இஷ்டம் போல என்னவேணா செய்யலாம்'' என்று கண்ணடித்துச் சொல்ல, இப்போது முகுந்துக்கு சிரிப்பு வர இருவரும் சேர்ந்து நகைத்தார்கள்.

